www.tamilarangam.net

# தமிழீழம் தந்த
# தந்தை செல்வா

## நூற்றாண்டு நினைவுகள்



**1898 - 1998**

கனடா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பட்டென மின்னிய புன்னகை புரிந்தவர்
பட்டென மெல்லிய சொற்களைச் சொரிந்தவர்
பட்டென மக்களின் மனங்களைக் கவர்ந்தவர்
பட்டென தமிழர்கள் போற்றிடும் உயர்ந்தவர்

# நல்லூர் குமரன் சாறி பலஸ்

**2387 EGLINTON AVE. EAST. SUIT #6**
**(1 st Floor) Eglinton & Kennedy)**
**SCARBOROUGH, ON. M1K 2M5**
**TEL: (416) 285-6797**
**FAX: (416) 281-9561**

**Branch:**
**1429 GERRARD STREET EAST, TORONTO**
**TEL: (416) 469-9800**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அண்ணலின்
# திருப் பாதங்களில்.....



தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர் பழந்தமிழ் ஈழந்தன்னை
மீள்விக்க -பைந்தமிழை வாழ்விக்க வந்து தோன்றி -
வரலாற்றை எடுத்துக் கூறி - கூறுற்று நின்ற தமிழர்
குலத்தையே இணைத்து வைத்து - நாமமது
தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்தோரின்
நலிவுநோக்கி - நாம் தமிழர், நமது இனம் தமிழ்
இனம், நமது மண் தமிழ் ஈழத் திருமண் என்ற தமிழ்
தேசிய உணர்வைத் தமிழனின் குருதியிலேற்றி -
தன்னல மறுப்பினாலும் ஈடிணையற்ற
தியாகத்தினாலும் - சிங்கள அரசுகளின்
அடக்குமுறைகளுக்கு எதிராக -
கலங்கா நெஞ்சுடன் களம்பல கண்டு - சிறை சென்று
- "சுதந்திரத் தமிழ் ஈழம்" என்ற
புனித இலட்சியத்துடன் வாழ்ந்த - அரசியல் ஞானி -
வாராதோ என வந்துதித்த எழுஞாயிறு

**கட்சி, பிரதேசம், சாதி, மதம், இனம், இயக்கம்,
வர்க்கம் ஆகிய பேதங்கள் கடந்த பெருந்தகை**

# தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம்

அவர்களின்

# திருப் பாதங்களில் இம்மலரினை காணிக்கையாக வைக்கின்றோம்

தந்தை செல்வா
நூற்றாண்டு விழாக் குழுவினர்
கனடா
30-05-1998

www.tamilarangam.net

# ஈழத் தமிழ்த் தேசியவாதத்தின் தந்தை



## திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் Q.C. அவர்கள்

## MR. S. J. V. CHELVANAYAGAM Q.C.

மழலையின் வரவு
31-03-1898

மாமலையின் சரிவு
26-04-1977

www.tamilarangam.net

# "தமிழ் ஈழம் தந்த தந்தை செல்வா"-நூற்றாண்டு நினைவுகள்
## தந்தை செல்வா நூற்றாண்டு விழாக்குழு
## (கனடாக் கிளை)

# Tamileelam Thantha Thanthai Chelva - Centenary Memories
## Centenary Celebration Committee (Canada Branch)

## மணம் தரு மலரின் இதம் தரு இதழ்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| எங்கள் தந்தை நாமம் வாழ்க | திரு. பி. எஸ். சூசைதாசன் | 3 |
| வாழ்த்துச் செய்தி | திரு. மு. சிவசிதம்பரம் | 4 |
| வாழ்த்துச் செய்தி | திரு. க. இராசாராம் | 5 |
| A Lawyer's Lawyer | Hon. Victor Tennekoon Q.C. | 8 |
| A peer in the Profession | Mr. Shiva Pasupati | 9 |
| மனோபலம் மிகுந்தவர் | அமரர். அ. அமிர்தலிங்கம் | 10 |
| இந்திய வம்சாவளித் தமிழரையும் | அமைச்சர். S. தொண்டமான் | 12 |
| தந்தை செல்வாவின் கூற்று | செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி | 12 |
| தமிழர் தாயகம் என்ற பதம் தந்த | பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை | 13 |
| மாற்றாரும் மதித்த மாமனிதர் | திரு. வி. ஆனந்தசங்கரி | 14 |
| பல்லாண்டுகளாய் நிலைத்திருக்கும் | திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் | 15 |
| ஈழத்துக் காந்தி செல்வநாயகம் | "கரிகாலன்" | 18 |
| சட்ட மேதையின் சமூக சேவைகள் | கலாநிதி. நீலன் திருச்செல்வம் | 21 |
| தமிழ் ஈழத் தத்துவமும் தந்தை செல்வாவும் | திரு. சா.செ. சந்திரகாசன் | 24 |
| தன்னிகரற்ற தலைவர் | மாவை சேனாதிராஜா | 26 |
| தமிழ் ஈழத்துக் காந்தி | அமரர். சட்டத்தரணி. எஸ். கே. மகேந்திரன் | 30 |
| தமிழரைத் தாங்கிய தலைவர் | கவிஞர். வி. கந்தவனம் | 31 |
| வீரகேசரி நாளிதழின் பார்வையில் | | 32 |
| திருமலையைக் காத்த திருமகன் | திரு. வீர. சுப்பிரமணியம் | 36 |
| Incidents in the life & Times of Mr. S.J.V. Chelvanayagam | Dr. A.J.Wilson | 41 |
| Interview of Mrs. Susilli Wilson (daughter of Mr. S.J.V.) | | 45 |
| மாமனிதர் இவரைக் கூட | திரு. பொன் சிவகுமாரன் | 48 |
| இருபதாம் நூற்றாண்டின் இணையிலா | பேராசிரியர். சி.க. சிற்றம்பலம் | 49 |
| அமரர். செல்வநாயகம் | ஆவரங்கால் க. சின்னத்துரை | 52 |
| The life and Times of S.J.V. | Mr. D.B.S. Jeyaraj | 54 |
| நினைவு நாள் கவிதை | "ஈழப் பித்தன்" | 62 |
| தமிழ்த் தேசியத்தை வளர்த்த தந்தை செல்வா | திரு.T.K. பரமேஸ்வரன் | 63 |
| Chelva - A. Unique Phenomenon | Mr. A. Kumarakuru (Lawyer) | 65 |
| "தந்தை"யர் நாடெனும் போதினிலே | திரு. கே. ரி. சண்முகராஜா | 67 |
| Some Reflections on the life and Times of S.J.V. | Mr. Santasilan Kadirgamar | 69 |
| எஸ். ஜே. வியை என் இறக்கைகளில் காணுங்கள் | அமைச்சர் M.H.M அஷ்ரப் | 72 |
| தந்தை செல்வா - சிலநினைவுகள் | மறவன்புலவு க. சச்சிதானந்தன் | 76 |
| மூதறிஞர் வாழ்வினில் முக்கிய நிகழ்வுகள் | வல்வை ந. நகுலசிகாமணி | 79 |
| ஒரு சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கு முகவுரை | "நக்கீரன்" | 82 |
| தந்தை செல்வாவுக்கு அஞ்சலி | திரு. ஆ. வேலுப்பிள்ளை | 85 |
| ஈழம் பெற்ற செல்வநாயகம் | திரு. கனக மனோகரன் | 87 |
| பெரியார் | திரு. நமு பொன்னம்பலம் | 96 |
| மீண்டும் பிறந்திங்கு வாருமையா | "திருமகன்" | 97 |
| நன்றி மலர் | | 144 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தந்தை செல்வா

இவர் யாருக்குத் தந்தை? எவர் இந்தச் செல்வா? மறைந்த இப்பெருமகனை ஈழத்தமிழினம் இன்றும் மனதில் இருத்தியும், நினைவில் நிறுத்தியும் வைக்கக் காரணங்கள் யாவை? இப்பெருந்தகைக்குப் பெருவிழா எடுத்தும், சிலை வடித்தும், இவரின் நினைவுகள் நின்று நிலைக்க இவருக்கு எண்பது அடி உயரத்தில் நினைவு ஸ்தூபியை அமைத்தும் நூற்றாண்டு விழா எடுத்தும் இவரைக் கௌரவிக்கிறதே ஏன்? எதற்காக?

"தந்தை செல்வா" என்ற சொற்பதங்களால் சுட்டப்படுபவரின் இயற்பெயர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஆகும். இவர் சாதாரணனாகவே பிறந்தார். சராசரி மனிதனாகவே வளர்ந்தார். ஆசானாகவே தன் தொழில் வாழ்வைத் தொடங்கினார்; தொடர்ந்தார். தூய போக்கும் தொலை நோக்கும் மதிநுட்பமும் வினைளத் திட்டமும் கொண்ட இவர், பின்னாளில் சட்டம் பயின்றார். சட்டத்துறையில் ஓர் ஒளிவிளக்காய் திகழ்ந்தார். இராணி அப்புக்காத்தும் ஆனார். ஆனால், வலிந்து வந்த உயர்நீதிமன்ற நீதியரசர் பதவியை ஏற்க மறுத்தார். தமிழர் நல்வாழ்விற்குத் தன்னையே அர்ப்பணித்தார்.

**'ஒற்றைக் குடும்பம் தன்னில் - பொருள்**
**ஓங்க வளர்ப்பவன் தந்தை"** இது ஒரு பாரதி பாடல்

உண்மைதான், இல்லங்களில் உள்ள தந்தைகள் வீட்டின் வறுமையைப் போக்கவே உழைக்கிறார்கள். ஆனால், தமிழர்களின் உள்ளங்களில் எல்லாம் உள்ள இத ் தந்தையோ இல்லின் வறுமையை அல்ல, இனத்தின் சிறுமையை - இனத்தவர் பகைமையை - இனத்தவர்க்கு இழைக்கப்படும் கொடுமையை விரட்டவும், அவர்கட்கு விடிவை - விடுதலையை - விமோசனத்தைக் காட்டவும் விழைந்ததால் தமிழினத்தின் தந்தை ஆனார். தந்தை செல்வா என்ற தகைமைக்கு உரியர் ஆனார்.

அரசியலில் ஈடுபட்டு நிறைய நிறைய உழைத்தவர்கள் நிறையப்பேர்கள். ஆனால் எங்கள் செல்வாவோ, நிதம் நிதம் உழைத்தார். நிறையவே உழைத்தார் தன் இனத்தவர்க்காக. இனிய அன்னைத் தமிழுக்காக; அவர் ஓடி ஓடி உழைத்தார். ஓய்வில்லாமல் உழைத்தார்; தனது உழைப்பபெல்லாம் கரைத்தார். தன் உடல் நலத்தைத் தான் கெடுத்தார் தமிழர் தாயக மீட்புப் பணிக்கு அனைத்தையும் அவர் அள்ளிக் கொடுத்தார்.

இனத்திற்காக எங்கள் செல்வா அவலம் உண்டதுண்டு; அடையுண்டதுண்டு; நோய் கண்ட துண்டு; எனின், தன் அயரா இனப்பணியில் அவர் என்றும் அலுப்புண்டதில்லை. எனவேதான் ஓர் ஈழப்புலவன்,

**'சத்தியமே உருவெடுத்த தத்துவ ஞானி - இவர்**
**தளர்ந்த உடல் ஈழத்திலே தமிழருக் கேணி"**

எனப் பாடி இப்பெரியவருக்கு மென்மேலும் பெருமை சேர்த்தான்.

உழைப்பிலே கடுமை; தொண்டிலே தூய்மை; சொல்லிலே உண்மை; உடையிலே எளிமை; வாழ்விலே நேர்மை என்றால் திரு. செல்வநாயகம் என்றுதான் பொருள்.

ஈழத்தமிழ்க் காவலர் சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களை இங்ஙனம் வர்ணித்தவர் இந்தியாவின் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள். அகிம்சா மூர்த்தியான இவரை ஈழத்துக்காந்தி என்று இந்தியத் தலைவர்களும் அழைத்தார்கள். ஈழம் வாழ் தமிழர்களோ தம் பேதங்களை மறந்து இவரைத் தங்கள் இனத்தின் தந்தையாக நினைத்தார்கள்; மதித்தார்கள்; துதித்தார்கள்.

**தந்தையாம் செல்வாவை நாமும் நினைப்போம்!**
**தாயாம் தமிழ் சிறக்க நாமும் உழைப்போம்!!**

***(கனடாவில் வருடந் தவறாமலும் உயர்ந்த தரத்திலும் கலைவிழாவையும் பேச்சுப் போட்டிகளையும் நடத்தி வரும் உடுப்பிட்டி அ.மி. கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினரான 'வானவில்"க் குழுவினர் இவ்வருடம் நடத்தும் பேச்சுப் போட்டியில் மேலே இடம் பெறும் கட்டுரையை விடயப் பொருளாக்கி தந்தை செல்வா அவர்களைக் கௌரவித்துள்ளார்கள்)***

www.tamilarangam.net

# எங்கள் தந்தை நாமம் வாழ்க

காலத்திற்குக் காலம் பல அரசியல் தலைவர்கள் தமிழர்கள் மத்தியில் தோன்றி மறைந்தாலும் தந்தை செல்வா அவர்களோ எமது காலத்தில் எம்மோடு வாழ்ந்து மறைந்த ஈடு இணையற்ற தமிழீழத் தலைவர். அன்பினால் இவர் எங்கள் எல்லோருக்கும் பாசமிகு தந்தையானார். அன்னாரின் நூற்றாண்டு விழாவினை கனடா வாழ் தமிழ் அன்பர்கள் அனைவரும் இன்று மனமகிழ்வோடு, இன உணர்வோடு கொண்டாடுகிறார்கள். கனடாவாழ் தமிழ் அன்பர்கள் யாவரும் இவ்விழாவில் கலந்து கொள்வதும் தந்தையின் நினைவாக இங்கு வெளியிடப்படும் நூற்றாண்டு நினைவு மலரில் கட்டுரைகளையும், கவிதை களையும் வரைந்திருப்பதும் அன்னார் எல்லார்க்கும் இனியவர் என்பதைக் காட்டுகிறது.

எங்கள் தந்தையின் நாமம் வாழ்க!
தந்தை செல்வாவின் புகழ் நின்று நிலை பெறுக!!

அன்பன்
பி. எஸ். சூசைதாசன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் – மன்னார்த் தொகுதி
தலைவர், தந்தை செல்வா நூற்றாண்டு விழாக் குழு
(கனடாக் கிளை)

www.tamilarangam.net

# தந்தை நூற்றாண்டு விழா வாழ்க!

**'தந்தை செல்வா'** என தமிழர்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் மூதறிஞர் சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் காலம் கடந்தும் கடல் கடந்தும் வாழுகின்ற ஒரு பெருமகன் ஆவார்.

அவருக்கு கனடா வாழ் ஈழத்தமிழர்களாகிய நீங்களும் ஒரு நூற்றாண்டு விழா எடுக்கிறீர்கள், மலரும் வெளியிடுகிறீர்கள் என்ற தகவல்கள் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியை தருகின்றன.

தந்தை அவர்கள் தீர்க்க தரிசனத்தோடு சிந்தித்து செயலாற்றத் தவறியிருந்தால் எங்கள் இனம் என்றோ பெரும் அழிவுகளுக்கு ஆளாகி விட்டிருக்கும்.

இலங்கையில் ஒரு மிக முன்னணிச் சட்டமேதையாக விளங்கிய திரு. செல்வநாயகம் அவர்கள் நிறைந்த வருமானம் தந்த தனது சட்டத் தொழிலை இனத்தின் சேவைக்காக கைவிட்டார். தனது நேரத்தையும், உழைப்பையும் தனது மக்களுக்காகவே செலவிட்டார்.

அரசியலில் நேர்மையைக் கடைப்பிடிப்பவர்கள் மிகக்குறைவு. அப்படி நேர்மையாக இருப்பவர்கள் அரசியலில் நிலைப்பது கடினமான காரியம் ஆகும். எங்கள் தலைவரான ஈழத்துக் காந்தி செல்வா அவர்களோ அரசியலில் நேர்மையும் கடைப்பிடித்தார். இறக்கும் வரையில் ஈழத் தமிழினத்தின் தலைவராகவும் நிலைத்தார்.

இத்தகைய ஒரு பெருமகனின் காலத்தில் வாழ்ந்ததையும் அவருடன் இணைந்து செயற்படக் கிடைத்த வாய்ப்பினையும் அவரது பணிகளை சிறிய அளவிலேனும் தொடர்ந்து செய்ய எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தையும் நான் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

அவருக்கு நீங்கள் எடுக்கின்ற விழா சிறப்பாக நிகழ்ந்தேற நானும் தனிப்பட்ட முறையிலும் தந்தை செல்வா நூற்றாண்டு விழாக் குழுவின் தலைவர் என்ற முறையிலும் வாழ்த்துகின்றேன்.

வாழ்க அவர் திரு நாமம்!

(ஒப்பம்) மு. சிவசிதம்பரம்
தலைவர்
தமிழர் விடுதலைக் கூட்டணி

www.tamilarangam.net

அலுவலகத் தொலைபேசி இல: 8523420
4940795
4941837
சாந்தோம் மேலைத் தெரு
சென்னை 600028
திகதி: 13-05-1998

க. இராசாராம் B.A.
முன்னாள் அமைச்சர்

தமிழர் தலைவர் மறைந்த பெரியார் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கனடாவில் உள்ள தமிழர்கள் கொண்டாடுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தந்தை செல்வா அவர்களும் அவர்தம் தளபதி திரு. அமிர்தலிங்கம் அவர்களும் என் இல்லத்திற்கு வந்த அந்த நாளை நான் என்றும் மறக்க முடியாது.

ஒல்லியான உருவம்; மெல்லியதான குரல்; எளிய உடை; ஆனால் வலிமைமிக்க கொள்கை; அகிம்சை வழியில் தமிழர்கட்கு தனி நாடு வேண்டும் என்ற வேட்கை; தமிழ் மொழி பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் உறுதி; தமிழன் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பதில் தளராத மன உறுதிப்பாடு; இத்தனையும் சேர்ந்த மொத்த உருவம் தான் தந்தை செல்வா அவர்கள்

அவரை ஈழத்துத் தந்தை என்றாலும் அவர் உலகிலுள்ள தமிழர்கள் அனைவருக்கும் அவர் தந்தை தான்.

தமிழர் உள்ளவரை அவர்தம் புகழ் வாழும்! வாழ்க தந்தை செல்வா!

அன்பன்

(ஒப்பம்) க. இராசாராம்

www.tamilarangam.net

# தந்தை செல்வா
# நூற்றாண்டு நினைவு விழாக் குழுவினர்

தலைவர்: பி.எஸ். சூசைதாசன் (முன்னாள் பா.உ, மன்னார்)
ஆலோசகர்: 'கரிகாலன்' (சட்டத்தரணி)

## நிதிக் குழு

திரு. எஸ். பி. சூசைதாசன்
திரு. கனக மனோகரன்
திரு. ந. நகுலசிகாமணி
திரு. த. மகேஸ்வரராசா
திருமதி. உமா நகுலசிகாமணி
திரு. ம. இராசகுலசூரியர்

## வரவேற்புக் குழு

திருமதி. மெரினா சூசைதாசன்
திரு. இலங்கையன் செல்வரத்தினம்
திருமதி. தயா ஜெயசிங்கம்
திரு. த. பரமநாதன்
திரு. ஆ. வேலுப்பிள்ளை
திரு. வே. நந்தீஸ்வரர்

## கலாச்சாரக் குழு

திரு. தம்பையா ஸ்ரீபதி
திரு. வீர சுப்பிரமணியம்
திரு. க. சி. ஜெயசிங்கம்
திரு. க. கதிர்காமநாதன்
திரு. உ. ரவீந்திரன்
திரு. ந. சு. ஸ்ரீதரன்

## உபசரிப்புக் குழு

திரு. நா. சிவலிங்கம்
திருமதி. பிறேமா மனோகரன்
திருமதி. ஜெயவாணி மகேஸ்வரராசா
திரு. ரி. ஸ்ரீதரன்
திரு. எஸ். துரைராசா
திரு. கே. செல்வம்

# பெரியவர் வாழ்வினில்...........

1949ம் ஆண்டு கட்சியை ஆரம்பித்த தந்தை செல்வா... ஊர் ஊராகப் போய்ப் பெரியவர்கள், பிரமுகர்களைக் கண்டு பேசிக் கஷ்டப்பட்டு கட்சி வளர்த்த காலகட்டம் அது

ஒரு சந்தர்ப்பத்தில் சட்டத்தரணி திரு. பரராஜசிங்கத்துடன் ஒரு சாவகச்சேரி உடையாரிடம் போயுள்ளார். அந்த உடையார் பொன்னும் மணியும் மட்டும் உடையவரல்ல. பொன்னம்பலவானேசரிலும் பக்தி உடையவர் பழுத்த சைவப்பழம். அவருக்கு ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களிலும் ஓர் இரண்டாந்தரப் பக்தி. பெரியவர் பெருமுயற்சி எடுத்தும் உடையார் பிடிவாதம் உடையவராகவே இருந்தாராம். முடிவாக அவர் சொன்னது.....

"நீங்கள் மோதகம். பொன்னம்பலம் ஐயா கொழுக்கட்டை. இரண்டுக்கும் உள்ளுடன் ஒண்டு தான். நான் ஏற்கனவே கொழுக்கட்டையைக் கையிலே வைத்திருக்கிறேன். அதைக் கீழே வைச்சிட்டு உங்கட மோதகத்தை கையில் எடுக்க என்ன அவசியம் இருக்கெண்டு சொல்லுங்கோ"

உடன் பதில் பகர்கிறார் தந்தை செல்வா "நீங்கள் ஒவ்வொரு நாயுளும் கோவிலுக்குப் போற ஒருவர். உங்களால கோவிலுக்கு காணிக்கையாகக் கொடுக்கக் கூடியதும் கோவில் பிரசாதமாக கிடைக்கக் கூடியதும் மோதகந் தானே?"

கிறிஸ்தவரான செல்வா அவர்களின் பதிலால் அந்த சைவ ஆசாரசீலர் அதிர்ந்து போய்விடுகிறார். மறுநாளே உடையார் திரு. பரராஜசிங்கம் ஊடாக பெரியவருக்கு தகவல் அனுப்புகிறார். முடிவு மோதகத்திற்கு சாதகமானது என்பது வாசகர்கட்குப் புரிந்திருக்கும். (ஆதாரம்: கனக மனோகரன்... தமிழோசை 22-04-93)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலர்க் குழு

திரு. த. மகேஸ்வரராசா
திரு. கனக மனோகரன்
திரு. (வல்வை) ந. நகுலசிகாமணி
திரு. க. முத்துலிங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# A Lawyer's Lawyer

**The Tribute made from the Bench of the Supreme Courts on 13.5.1977 by Hon. Victor Tennekoon, Chief Justice of Sri Lanka.**

The judges of the Supreme Court would like to join you in paying tribute to the later Mr. S. J. V. Chelvanayagam and in expressing our deepest sympathies to his widow and other members of his family.

Mr. Chelvanayagam had in the last thirty years or so, built himself into the structure of our national life. It is perhaps true to say that his departure has left bereaved not merely the members of his family but also the members of a whole community.

But we are assembled here to remember Chelvanayagam, the lawyer. Many tributes to him have appeared in the newspapers and other journals from men of eminence. Your tribute to which we have listened today, contain a worthy summation of Chelvanayagam's career in the law and the characteristics which took him to the top of the profession.

Having started as a teacher he moved on to law. He started practice in the Court of Requests which has in the past provided to many lawyers unrivalled source of experience on which to build up a successful career. When he moved on to the District Court, in due course, he became one of the leading lawyers there. He was a man of great forensic skill. He found no need to make a spectacle of the case he was appearing in for the amusement and encouragement of an uninitiated gallery. Nor was he anxious to provide headlines for the newspaper reporters. He was indeed a lawyer's lawyer. He had a deep knowledge of legal principles, and analytical mind and such a command of the language as to enable him to express himself simply but forcefully and convincingly. He set for himself rigorous standards of hard work and devotion to duty. His courtesy to witnesses and opposing counsel was proverbial.

He practised in the courts in an age when it was the fashion to bully witnesses in cross-examination. Chelvanayagam set an example of courtesy and dignity. He was indeed the picture of a gentleman in search of truth.

His death however creates no impact on the calendars of the courts in which he used to practise. That is of course because from nearly 30 years ago he gradually withdrew from his very lucrative practice in order to devote his full time to promote and fight for the interests of the Tamil-speaking people. Added to this was the fact that he was greatly handicapped by illness during the evening of his life. I make no reference to Mr. Chelvanayagam's skill as a political leader and parliamentarian. They will, I am sure, receive recognition in other places and in other ways. Suffice it to say that his success as a lawyer was only a small facet of a career which had its full flowering in another sphere.

As a lawyer, Mr. Chelvanayagam will be remembered and honoured as a great model for civil lawyers practising in the highest or the lowest courts of this country. As a politician, his death has been like a great tree falling. It has left his friends and supporters surprised to see how bare the landscape is without him.

Our deepest sympathies go out to Mrs. Chelvanayagam and the other members of the family in their great loss.

In response to your request, I would order that a copy of today's proceedings be forwarded to Mrs. Chelvanayagam.

www.tamilarangam.net

# A Peer in the Profession

**The Tribute paid on behalf of the Bar of the Supreme Courts on 13.5.1977 by Mr. Shiva Pasupati, Attorney General of Sri Lanka**

The last few months have witnessed the demise of peers in the profession, men who were independent, courageous and forthright, men who were destined to be leaders.

Samuel Velupillai Chelvanayagam was born at the turn of the century. He graduated in Science in 1918. He spent a short but turbulent period as a teacher at St. Thomas College and later at Wesley College. He projected his personality even at that young age. He would accept nothing unless he was convinced that it was correct. He therefore turned to a profession which would provide ample scope for his dedication to his work and to his principles. He had little choice but to turn to law and so he was called to the Bar in 1924, having worked in the Chambers of the late Mr. Francis de Zoysa. Bereft of patronage, he had to make his modest beginnings in the Court of Requests. The extraordinary qualities he possessed - patience, hard work and an unruffled temperament combined with incisiveness and intelligence led him from success to success, from the Court of Requests to the District Court, from the District Court to the Appellate Courts. He was made Queen's Counsel on 31st May 1947. Judges before whom he appeared learnt never to question the correctness of what he said on the facts of any case and never failed to give weighty consideration to his relevant, precise and persuasive presentation of his case.

He gave more than his share to help the legal profession to be regarded in this country as a noble and a learned profession. Those who had the privilege to have worked in his Chambers often recall with warm affection the patience he always displayed to instil in them a sound grasp of legal principles and, more important, an unswerving adherence to principles in their conduct in the profession. He never missed an opportunity to help a junior to build confidence in himself and many a diffident junior looked to him for support.

He never craved for wealth and was satisfied with modest reward. When he ventured into the realm of politics, he took with him that rare characteristic of being able to inspire trust and confidence in persons who sought his services. The unprecedented mass of humanity from every walk of life who gathered to pay their respects at his cremation will for ever be a silent reminder that as in law, so in politics, people will never forget those who never betrayed the trust that they had reposed.

Might I request that a copy of the minutes of these proceedings be conveyed to the members of the bereaved family, one of whom is with us in the profession.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனோபலம் மிகுந்தவர்! மக்கள் உள்ளங்களில் நிறைந்தவர்

## அமரர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்

*(இலங்கை நாடாளு மன்றத்தில் 6-9-1977 அன்று தந்தை அவர்கட்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் படுகையில் எதிர்க்கட்சி முதல்வர் பதவி வகித்த அன்னார் நிகழ்த்திய அஞ்சலி உரை இங்கு இடம்பெறுகிறது.)*

சபாநாயகர் அவர்களே,

கௌரவ வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலி அவர்கள் முன் மொழிந்த அனுதாபத் தீர்மானத்தை யொட்டிச் சில வார்த்தைகள் கூறுவதை நான் ஒரு பெரிய பேறாகக் கருதுகிறேன். என்னுடைய 19ம் வயதிலிருந்து கடந்த 30 ஆண்டுகளாக என்னுடைய தலைவராக, அரசியல் வழிகாட்டியாக யாரைக் கொண்டேனோ, வாழ்க்கையின் சகல துறைகளிலும் யாருடைய முன் மாதிரியை நான் பின்பற்ற வேண்டுமென்று கருதினேனோ அவரைப்பற்றி என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூறும் சந்தர்ப்பம் இந்தச் சபையிலே இனி எப்பொழுதும் கிடைக்கமாட்டாது.

திருவாளர் செல்வநாயகம் அவர்கள் இந்நாட்டிலுள்ள எல்லோரும் அறிந்தது போல் மிகவும் மெலிந்த தோற்றம் உள்ளவராக விளங்கினார்; நோய்வாய்ப்பட்டவராக இருந்தார். ஆனால், அவருடைய உடல் வலிமை குறைந்திருந்தாலும் அவருடைய உள்ளம் இரும்புபோல் கெட்டியாயிருந்தது. அவருடைய மனோபலம் வேறு எந்தப் பலவீனத்தையும் தாங்கும் சக்தி படைத்ததாக இருந்தது. அவ்வித மனோபலத்தால், தாம் நடக்கச் சக்தியற்ற நிலையிற்கூட இந்நாட்டிலுள்ள 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களுடைய உள்ளத்திலே தமக்கென ஒரு தனி இடத்தைப் பெற்ற உத்தம தலைவராக அவர் விளங்கினார்.

திருவாளர் செல்வநாயகம் அவர்களுடைய சட்ட மேதாவிலாசத்தைப் பற்றி, சட்டத்துறையில் அவர் பெற்றிருந்த தனி ஆற்றலைப் பற்றி எனக்கு முன் பேசிய கௌரவ வர்த்தக அமைச்சர் எடுத்துச் கூறினார். திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் எப்படிக் குற்றவியல் சட்டத்துறையில் தனிச் சிறப்புப் பெற்று விளங்கினாரோ அதுபோல இந்நாட்டின் சொத்துரிமைச் சட்டத்துறையில் திருவாளர் செல்வநாயகம் தமக்கென ஓர் உன்னத இடத்தைப் பெற்றிருந்தார். இந்நாட்டின் சட்ட அறிக்கை நூல்களிலே அவர் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் வாதாடிய எண்ணற்ற வழக்குகளின் விபரங்களை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. சட்டத்துறையில் தமக்கென்று ஒரு தனி இடத்தை வகுத்துக் கொண்ட அவர் 1947ம் ஆண்டிலே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் உறுப்பினராக இந்தச் சபையில் பிரவேசித்தார். அன்று தொடக்கம் சட்டத்துக்கு இரண்டாவது இடத்தைக் கொடுத்து தமது சமூகத்துக்காக உழைக்கும் பணிக்கு முதலிடம் கொடுத்து, தாம் சட்டத்துறையில் திரட்டிய செல்வம் அனைத்தையும் தமது இனத்துக்காக அர்ப்பணித்து, தமது உடல் நலத்தையும் இழந்து, தமது கடைசி மூச்சு வரைக்கும் தமிழ் இனத்தை வாழ வைத்து வழிகாட்டிய உத்தமராக அவர் விளங்கினார். அவருடைய விரோதிகளிற்கூட அவரது அப்பழுக்கற்ற நேர்மையைப் பாராட்டாதவர்கள் இருக்க முடியாது. அரசியலில் அவரிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட ஒரு பாடம் எந்த நேரத்திலும் நேர்மையைக் கைவிடாது, இராஜதந்திரம் என்ற பேரில் தில்லுமுல்லுகள் செய்யாது சொன்ன சொல்லை எப்பொழுதும் காப்பாற்றி நடக்க வேண்டும் என்பது தான்.!

சபாநாயகர் அவர்களே, எனக்கு இன்று போல் ஞாபகமிருக்கிறது, 1964ம் ஆண்டு இந்தச் சபையிலே நிகழ்ந்த ஒரு சம்பவம் அன்றைய அரசாங்கத்துக் கெதிராக அப்போது எதிர்க்கட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்து நாமும் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குக் கையெழுத்து வைத்திருந்தோம். அன்றைய அரசாங்கத்திலிருந்து ஓர் அமைச்சரும் ஏனைய சிலரும் எதிர்க்கட்சிக்கு மாற அரசாங்கம் வீழ்ச்சியடையக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டது. அப்பொழுது பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் சிலர் எங்களை அழைத்து எங்கள் கோரிக்கைகளைத் தருவதாகவும் அந்த தீர்மானத்துக்குச் சார்பாக வாக்களிக்க வேண்டாம் என்றும் எங்களைக் கேட்டுக் கொண்டார்கள். இந்தச் சபைக்குள் நாம் வந்து தலைவர் செல்வநாயகம் அவர்களிடம் அதுபற்றிச் சொன்னோம். அவர் சொன்ன ஒரே பதில், "நாம் வாக்குக் கொடுத்துவிட்டோம், நாம் கொடுத்த வாக்கை மீறி எந்தக் கட்டத்திலும் நாம் நடக்க மாட்டோம், எதைத் தருவதாகக் கூறினாலும் நாம் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கவே வேண்டும்" என்பதாகும். அவருடைய பதிலை நாம் அந்த அமைச்சர்களுக்குக் கூறினோம்.

சபாநாயகர் அவர்களே, நான் இதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் கூறுகிறேன் என்றால் அரசியலில் இந்த விதமான நேர்மை மிகவும் குறைவு. சந்தர்ப்ப வாதம் மலிந்துவிட்ட ஒரு நாட்டிலே நேரத்துக்கு ஏற்ற விதமாக எதையும் கூறலாம், எதையும் செய்யலாம், சொன்ன சொற்களை மாற்றலாம், கொடுத்த வாக்கைக்

www.tamilarangam.net

காற்றில் பறக்க விடலாம் என்றெல்லாம் கருதக்கூடிய அரசியல்வாதிகள் நிறைந்திருக்கும் இந்த நாட்டிலே அவர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக திருவாளர் செல்வநாயகம் அவர்கள் விளங்கினார்கள் என்பதை அவருடன் முப்பது வருடங்களாக நெருங்கிப் பழகியவன் என்ற முறையில் இந்தச் சபையிலே கூறி வைக்க விரும்புகின்றேன். நேர்மையுடன் நுண்ணறிவு படைத்தவராகவும் அவர் விளங்கினார். எந்த விடயத்தையும் தெளிவாக அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரும் குணம் அவரிடமிருந்தது. தமது நுண்ணறிவின் பலனாக இந்நாட்டின் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் சித்தாந்தத்தையே அவர் வகுத்து கொடுத்துச் சென்றிருக்கிறார். அவரோடு கருத்தில் மாறுபட்டவர்களும் அவருடைய நேர்மையை எவ்வளவு தூரம் மதிக்கிறார்களோ அதேபோல தமிழ் இனம் அவரைத் தனது அரசியல் தந்தையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தச் சபையிலே தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினராக இருக்கும் நாம் பதினேழுபேரும் அவர் காட்டிய வழியில் நடப்பதாக மக்கள் முன்னிலையில் உறுதி கூறித் தான் இங்கு வந்திருக்கிறோம் என்பதை இந்த இடத்தில் நாம் கூறிவைக்க வேண்டும். இந்த உலகில் அவர் இல்லாவிடடாலும் எங்களை வழிநடத்துவது அவர் விட்டுச் சென்ற இலட்சியமாகும்; அவர் காட்டிச் சென்ற பாதையாகும்.

அந்த விதமான ஓர் உத்தம தலைவரைத் தமிழ் பேசும் இனம் இன்று இழந்து தவிக்கிறது. அவரை அறிந்தவன் என்ற முறையில் நான் ஒன்று கூற வேண்டும். இப்பொழுது நிலவுவதுபோன்ற ஒரு சூழ்நிலையில் சிறிதும் கலங்காத ஒரு நிலையை நாம் அவரிடம் காணலாம். அவரைப்போல ஒரு பற்றற்ற வாழ்க்கையை வாழ எங்களால் முடியாவிட்டாலும் அவர் காட்டிய அந்த இலட்சிய மார்க்கத்தில் நாம் செல்வோம் என்பதைத்தான் நாம் எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறோம்.

சபாநாயகர் அவர்களே, அவர் இரண்டு முறை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதை வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார். அவர் தடுப்புக் காவலில் மாத்திரம் வைக்கப்படவில்லை. மட்டக்களப்புச் சிறையில் ஒரு வாரம் சாதாரண கைதியாக, தண்டனை விதிக்கப்ட்ட கைதியாக, சிறைக்கைதிகள் அணியும் உடையை அணிந்து அங்கு இருந்தார். இந்தவிதமாக இந்தியாவிலே அண்ணல் காந்தி காட்டிய மார்க்கத்தில் இலங்கை அரசியலில் நடந்த ஒரு தலைவர் இருந்தார் என்றால் அது மறைந்த திருவாளர் செல்வநாயகம் அவர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஈழத்தின் காந்தியாக மக்கள் அவரைக் கருதுகிறார்கள்; தமிழ் இனத்தின் தந்தையாக கருதுகிறார்கள்.

இந்த நாட்டிலே ஒரு சிறந்த சட்டமேதையாக, சட்ட உலகம் மதிக்கின்ற ஒரு நேர்மையாளனாக, நெறியாளனாக, உத்தமனாக, மனித குலத்தைக் காப்பாற்றக் கூடிய ஒருமாண்புமிகு தலைவனாக அவர் விளங்கினார். அவரை இழந்து தவிக்கும் அவரின் அருமைத் துணைவியாருக்கும் புத்திரர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவர் விட்டுச் சென்ற இயக்கமான தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பிலும் அவருடைய சிஷ்யனாக அரசியலில் நடந்தவன் என்ற முறையில் என் சொந்த கோதாவிலும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



www.tamilarangam.net

# இந்திய வம்சாவளித் தமிழரையும் இதயபூர்வமாக நேசித்தவர்

**அமைச்சர் திரு. எஸ். தொண்டமான்**

**தலைவர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்**
**முன்னாள் தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி**

சபாநாயகர் அவர்களே, காலஞ்சென்ற திருவாளர் செல்வநாயகம் அவர்கள் தமிழ் இனத்தின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவர். அவர் 1947ஆம் ஆண்டு தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினராக இந்தப் பாராளுமன்றத்துக்கு வந்தார். அப்பொழுது நான் இலங்கை இந்தியக் காங்கிரஸின் தலைவராக இச்சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தக் காலத்தில் தான் பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது அதை ஏற்க மறுத்து தந்தை செல்வநாயகம் தாம் அங்கம் வகித்த கட்சியிலிருந்து விலகி தனியாகப் பிரிந்து தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். அதன்பின் 1952ஆம் ஆண்டு அந்தக் கொள்கை அடிப்படையில் அவர் தோல்வி கண்டாலும் கூட தோல்வியைக் கண்டு பயந்து விடாது அயராது உழைத்து தமிழ் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று, தமிழ் மக்களின் தந்தையாக, தலைவராகக் கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ் மக்களை வழிநடத்திச் சென்றார்.

சபாநாயகர் அவர்களே, நான் முன்பு கூறியது போல, இந்திய வம்சாவளியினர் சம்பந்தப்பட்டவரை அவர்களுடைய பிரஜா உரிமை மறுக்கப்பட்ட பொழுது அவர் அதை எதிர்த்து தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த காலகட்டத்தில் தமிழரசுக் கட்சி தமிழினத்தின் மொழி உரிமை போன்ற உரிமைகளுக்காகப் போராடும் நிலை ஏற்பட்டபோதும் அதற்காக முழு நேரத்தையும் செலவழிக்கும் சூழ்நிலை ஏற்படட போதும் பெரும்பான்மைச் சமுதாயத்தோடு ஒத்து வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர் பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். அதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முனைந்தார். ஆனால், அரசியல் தலைவர்கள் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டார்கள். அதன் பின் அவர் டட்லி சேனாநாயக்காவோடு ஒப்பந்தம் செய்து அதன் மூலம் இந்நாட்டில் எல்லோரும் ஒற்றுமையோடு வாழப் பாடுபட்டார். ஆனால் பெரும்பான்மைக் கட்சியைச் சேர்நதவர்கள் அதையும் கைதவற விட்டார்கள். இச் சூழ்நிலையில்தான் அவர் தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம், இந்நாட்டிலுள்ள தமிழர்களை ஒன்று சேர்த்து அகிம்சை அடிப்படையில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் அதற்காகத் தமது வாழ்க்கையையும் அர்ப்பணித்தார். எதிர்கட்சி முதல்வர் சொன்னது போல, அப்பேர்ப்பட்ட தலைவரின் அகிம்சா வழியைப் பின்பற்ற அவர் எந்த இலட்சியத்துக்காகப் பாடுபட்டாரோ அதே இலட்சியத் துக்காகப் பாடுபட தமிழ் இனம் முனைந்திருகிறது. அவர் உலகத்தை விட்டு மறைந்தாலும் அவர் காட்டிய வழியே தமது சொந்தவழியாக இருக்கும் என்று தமிழ் இனம் கூறுகிறது.

இந்நிலையில் எனது சார்பிலும் எனது ஸ்தாபனம் சார்பிலும் இந்த அனுதாப வார்த்தைகளைச் சொல்லி, அவருடைய பிரிவு தமிழ் இனத்துக்கு மட்டுமல்ல, தேசத்துக்கும் தவிர்க்க முடியாத ஒரு பெரிய இழப்பு என்று கூறி, அவருடைய மறைவால் வாடும் துணைவி யாருக்கும் பிள்ளைகளுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்து எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

***(இலங்கை நாடாளு மன்றத்தில் 06-09-1977 அன்று இடம் பெற்ற இன்னோர் இரங்கலுரை இதுவாகும்)***

# தந்தை செல்வாவின் கூற்று தீர்க்கதரிசனமானது

**செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**

மாமனிதர் என்ற நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்ந்து விட்டார் தந்தை செல்வா. அவருடைய நூற்றாண்டு விழா தெய்வ விழாவாக அமைகிறது. தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற அவரின் கூற்று தீர்க்க தரிசனமானது. அவர் எவருக்கும் தீங்கு விளைவிக்கா சாத்வீகமான வாழ்க்கையை வாழ்ந்தார்.

***(1998ம் ஆண்டு பங்குனி மாதத்தில் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்ற தந்தை செல்வா நூற்றாண்டு விழாவில் இடம் பெற்ற சொற்பொழிவின் அகழ்வு இங்கே இடம் பெறுகின்றது)***

## சுதந்திரன் பத்திரிகை

1958 ஆனியிலும், 1961 சித்திரையிலும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள். அக் காலங்களில் சுதந்திரன் பத்திரிகைக்கு "சீல்" வைப்பதன் மூலம் சிங்கள இனவெறி அரசுகள் அதற்கு வாய்ப்பூட்டுப் போட்டிருந்தன..... சுதந்திரன் ஆசிரியர்களாக காலத்திற்குக் காலம் இருந்தவர்களும் கைதாகி, விசாரணைக்கு ஆளான சம்பவங்கள் பல உள.

www.tamilarangam.net

# "தமிழர் தாயகம்" என்ற பதத்தை முதலில் பயன்படுத்தியவர் தந்தை செல்வாவே!

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**(யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர்)**

தமிழர் தாயகம் என்ற பதத்தை எம் தமிழ் மக்கள் மத்தியில் முதலில் பயன்படுத்தியவர் தந்தை செல்வநாயகமே ஆவார். வடக்கு கிழக்கு மாகாணம் தமிழர் தாயகம் என்பதை என்றோ வலியுறுத்திய தந்தை செல்வாவின் கூற்றினை இன்று அனைவருமே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழினம் ஒரு தேசிய இனம்; சுயாட்சியுடன் வாழத் தகுதியுடைய தமிழர்கள் சுயஉரிமை பெற்ற இந்த நாட்டில் வாழுகின்ற ஏனைய மக்களோடு சரி சமமாக வாழவேண்டும் என்பதை 1950களிலேயே எடுத்துரைத்தவர் தந்தை செல்வா.

தந்தை செல்வா அரசியலுக்கப்பால் தமிழினத்தின் ஏகோபித்த தலைவனாக, விடிவெள்ளியாக திகழ்ந்தார். வடக்கு, கிழக்கு மலைநாடு என்ற பிரதேச வேறுபாடுகளை மறந்து எல்லோரையும் ஒன்றுபடுத்தியவர் அவர்.

சகல விடயங்களிலும் இதயசுத்தியுடன் செயற்பட்டமையினால் தமிழ் மக்களின் நெஞ்சில் இன்றும் அவர் வீற்றிருக்கின்றார். அரசியலுக்கு அப்பால் ஈழத்தமிழர்களுக்கான இறைதூதனாக தந்தை செல்வாவைக் கண்டோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்று செல்வா அன்று சிந்தித்தார். இன்று செல்வா விரும்பியதையும் விடக் கூடுதலாக மூன்று பல்கலைக்கழகங்களும் இரு கல்லூரி வளாகங்களும் நிறுவப்பட்டுள்ளன.

இன்று வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைந்திருப்பதற்கு வித்திட்டவர் தந்தை செல்வா. அன்னார் தமிழ் மொழி நிர்வாக மொழியாக்கப்பட வேண்டும் என்று அன்று வாதிட்டார். இன்று தமிழ் மொழி நிர்வாக மொழியாக நடைமுறையில் இல்லாது விட்டாலும் சட்டரீதியாக அமுல் செய்யப்பட்டுள்ளது.

***(யாழ்மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் 1998ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற தந்தை செல்வா நூற்றாண்டு விழாவிற்கு தலைமை வகித்து அவர்கள் ஆற்றிய உரையின் பிழிவு இங்கே இடம் பெற்றுள்ளது. அங்கே நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் பற்றிய விபரங்கள் கிடைத்திலது)***



**பாரதப் பிரதமர் திரு. ஜவகர்லால் நேருவோடும் அவரது புதல்வியான பிந்நாள் பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியுடனும் காணப்படுபவர்கள் தந்தை செல்வாவும் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம் அவர்களும்**

www.tamilarangam.net

# மாற்றாரும் மதித்த மாமனிதர்!

**திரு. வீ. ஆனந்தசங்கரி (முன்னாள் பா.உ)**
**துணைத்தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி**

தந்தை செல்வா ஒரு சிறந்த பேச்சாளர். அவரை எதிர்த்தவர்களில் நானும் ஒருவன். அவருக்குக் கோபம் வந்ததை நான் ஒருபோதும் கண்டதில்லை. அவர் எவரையும் ஏசியும் இருக்க மாட்டார். எந்தவிதமான தீய செயல்களிலும் அவர் ஈடுபடவில்லை. எவருக்கும் தலைவணங்காத அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கூட தந்தை செல்வாவின் தலைமையை ஏற்று தமிழர் விடுதலைக்கூட்டணியில் இணைந்து கொண்டவர்.

அவருக்கு எதிரிகள் கிடையாது. நாடாளு மன்றத்திற்கு அவர் வருகின்றபோது சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரது கார்க்கதவைத் திறந்து நாடாளுமன்றம் வரையும் அவரது கைகளைப் பிடித்து அழைத்து வருவதுண்டு.

இலங்கையின் வரலாற்றிலே ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக அவர் பேச எழுந்த பலசந்தர்ப்பங்களில் அமைச்சர்கள் கூட அவருக்கு விட்டுக் கொடுத்த சந்தர்ப்பங்கள் தந்தை செல்வா காலத்தில் தந்தை செல்வாவிற்கு மட்டும் இடம் பெற்றதுண்டு.

இலங்கையில் மரணமான ஒரு தலைவருக்கு 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள் என்றால் அது தந்தை செல்வாவுக்கு மட்டும்தான்.

தந்தை செல்வாவின் சமஷ்டி தத்துவத்தை அன்று நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது.

அறவழியில் - அஹிம்சை வழியில் வடக்கு கிழக்கு மாகாண மக்களை அணிதிரட்டி அரசின் அடக்குமுறைகளை எதிர்த்தவர் அவர். தந்தையின் தலைமைத்துவத்தில் 1958ம் ஆண்டு காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்பட்டபோது குண்டர்கள் அடித்தார்கள். உதைத்தார்கள். ஆனால் அவர் தலைமையில் போராடிய தொண்டர்களே அஹிம்சை காத்து அசையாது போராடினார்கள். அன்றுதான் இலங்கைத் தமிழர்களின் இரத்தம் சிந்திய வரலாறு முதன்முதலாக எழுதப்பட்டது.

தந்தை செல்வா விட்டுச் சென்ற இலட்சியப் பாதையை நாம் விட்டு விலக முடியாது. அப் பெருமகன் மெதுவாக நடந்தார்; மெதுவாகப் பேசினார். ஆனால் இலட்சியத்தில் உறுதியான வைரமாக இருந்தார்.

இந்நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாதவரையில் தமிழ், முஸ்லீம் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் நிம்மதியாக வாழமுடியாது. தற்போது நாம் ஆயுத கலாசாரத்தில் சிக்கித் தவிக்கின்றோம்.

***(1998ம் ஆண்டு பங்குனி மாதத்தில் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்ற தந்தை செல்வா நூற்றாண்டு விழாவில் இடம் பெற்ற சொற்பொழிவின் அகழ்வு இங்கே இடம் பெறுகின்றது)***

# பெரியவர் வாழ்வினில்............

**ஒரு காலத்தில் சுதந்திரன் பத்திரிகையின் முகவராக இருந்தவர் திரு. உமாபதிசிவம். இவர் கீரிமலை கருகம்பானை வாசி. இவர் பெரியவருக்கும் தமிழரசுக் கட்சிக்கும் பெரு விசுவாசி. ஆனால் முற்கோபி. கோபம் கொண்டு விட்டால் உருத்திரத் தாண்டவமே ஆடுவார்.**

**ஒருசமயம் ஒரு நிர்வாகப் பிரச்சினை ஏற்பட ஸ்தாபன ஊழியர்களை வேலை செய்யவிடாது தடுத்து நிறுத்திவிட்டு தந்தைக்குத் தகவல் கொடுக்கிறார் உமாபதி. தந்தை காலதாமதம் செய்து பார்த்தார். "உமபதி" அவர்களோ தணிவதாக இல்லை.**

**சாவகச்சேரிச் சட்டத்தரணி திரு. பரராஜசிங்கத்துடன் புறப்பட்டு காரில் சுதந்திரன் காரியாலயத்திற்கு வருகிறார். "உமாபதி" கால்களை அகற்றி வைத்துக் கொண்டு வீரபாகுதேவன் பாணியில் நின்றிருக்கிறார். பெரியவர்..."உமாபதி இன்னும் கோபமாக இருக்குதோ?" பரா "சேர் ..அப்படித்தான் தெரியுது". பெரியவர் உமாபதியிடம் போகவில்லை. காரியாலய வாயிலில் போடப்பட்டிருந்த முந்திரிகைப் பந்தலுக்குப் போய் அதையே நெடுநேரம் பார்த்தபடி இருந்தார். பின்னர் .... "பரா முந்திரிகை பழுத்துக் கொண்டிருக்கு. ஒரு பழம் பிடுங்கிச் சாப்பிட ஆசையாய் இருக்கு. உமாபதி அதுக்குச் சம்மதிக்குமோ என்று கேளுங்கோ என்றாராம். "பரா" அதைக் கேட்க உமாபதி உடைந்துபோய் விடுகிறார். அழவும் ஆரம்பிக்கிறார். தந்தையிடம் ஓடிப்போய்.... ஐயா...என்னைக் கொடுமைக்காரன் எண்டு நினைச்சிட்டீங்களோ. இது உங்கட சொத்து. ஏன் என்ர அனுமதி கேக்கிறீங்கள்?" என்று கேட்டுள்ளார்.**

**அணைத்து, அவரை ஆசுவாசப்படுத்தப் பெரியவருக்கு நெடுநேரம் எடுத்ததாம். அதன் பின்னர் நிர்வாகப் பிரச்சினை பேசித் தீர்ப்பதில் பெரியவருக்குப் எந்தப் பிரச்சினைகள் இருக்கவில்லையாம்.**

**சாணக்கியனான் தந்தை செல்வா அவர்கள் உமாபதி அவர்களின் பலவீனமான பகுதியை (Achilles heel ஐ) குறி வைத்துத் தாக்கியதால் அவரைச் சுலபமாக வெற்றி கொண்டார். அன்று"உமாபதி" அவர்களுடன் நேரில் கதைக்க முற்பட்டிருந்தால் அவர் தந்தை அவர்களைத் தனது சொற்களால் நோகடித்திருப்பார். பின்னர் அதற்காகவும் அழுதிருப்பார். (இறுதிவரை தந்தையுடன் நெருக்கமாக இருந்த திரு. உமாபதி அவர்கள் தான் 1976ல் தந்தையையும் அழைத்து வந்து யாழ் நீதிமன்றில் சட்டமறுப்புப் போராட்டத்திலும் பங்கெடுத்தவர்)**

**தகவல் சட்டத்தரணி திரு. பரராஜசிங்கம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பல்லாண்டுகளாய் நிலைத்திருக்கும் பவித்திரமான நினைவுகள்

மங்கையர் திலகம் திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

தந்தை செல்வாவிற்கு விழா எடுக்கிறோம். மலரும் வெளியிடுகிறோம்.ஒரு கட்டுரை ஒன்றைத் தாருங்கள் என்று தம்பி கனக. மனோகரன் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு கேட்டார். எழுதி அனுப்பினேன். மீண்டும் என்னைத் தொடர்பு கொண்டு "அக்கா நீங்கள் தந்தை செல்வாவின் வாழ்வில் முக்கிய நிகழ்ச்சிகளை உள்ளடக்கும் அவருடைய வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை அனுப்பியிருக்கிறீர்கள். இதை எத்தனையோ பேர் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் அவரின் வாரிசாக அவராலேயே அங்கீகரிக்கப்பட்ட அண்ணர் அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவி. உங்களில் பெரியவர் பிள்ளைப் பாசத்தையே கொண்டிருந்தவர். நீங்கள் தந்தை செல்வா அவர்களைப் பற்றி அடுத்தவர் அறியாத விடயங்களை எங்கள் வாசகர்களுக்கு தர வேண்டும். அதையே எங்கள் மலர்க்குழு உங்களிடம் எதிர்பார்க்கிறது" என்று அன்புக்கட்டளை இட்டார். இந்நிலையில் என் நினைவில் இன்றும் நிலைத்து நிற்கும் சம்பவங்களை அசை மீட்டு எழுத முற்படுகிறேன்.

நான் எனது திருமணம் நடக்கும் வரையில் நான் ஒரு அரசியல் கூடாரத்தின் தாவாரத்தில் கூட ஒதுங்கியவள் அல்ல. எனது கணவர் என்னை மணம் முடிக்க முன்னரே அரசியலுக்கு முற்றுமுழுதாக வாழ்க்கைப் பட்டிருந்தார். எங்கள் திருமணப் பதிவு இடம்பெற்ற தினத்தில் எனக்கு மட்டும் இரகசியமாக சொல்லிவிட்டு அடுத்தவர் யாருக்கும் அறிவிக்காமல் ஒரு அரசியல் கூட்டத்திற்குப் போய் வந்தார். 1949 மார்கழியில் உருவாகி 1952ல் இடம்பெற்ற தேர்தலில் படுதோல்வி கண்டிருந்த தமிழரசுக்கட்சி மிக வேகமாக வளரமுற்பட்ட காலகட்டம் இது. ஆனால் தமிழரசுக் கட்சி பல இடங்களிலும் காடைத் தனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. கிழக்கிலுங்கூட மட்டுநகரில் பகுத்தறிவியக்கப் பணிமனை கொழுத்தப்பட்டது, பலர் தாக்கப்பட்டனர். கல்முனையிலும் களுதாவளையிலும் கூட்டங்களைக் குழப்பினார்கள். மண்டூர் போன எங்கள் தந்தையும், எனது கணவரையும் திருப்பி அனுப்பி யிருந்தார்கள். எனினும் தளராது தந்தை செல்வா அவர்களும் மற்றைய தலைவர்களும் முழுமூச்சுடன் கட்சியைக் கட்டி எழுப்புவதில் ஈடுபட்டிருந்தனர். என்கணவர் தொடர்ச்சியாகப் பிரசாரக் கூட்டங்களில் பங்கு கொண்டார். பெரும்பாலும் சாமத்தில்தான் வீடு திரும்புவார். வீட்டில் தனியாக இருக்கும் நான் கவலைப்படுவேன். கண்ணீர் விடுவதும் உண்டு. கூட்டங்களைக் குறைக்கும்படியும் காலதாமதமின்றி வீடு வரும்படியும் கேட்டு அவருடன் சண்டையிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

அவர் வரும்வரையில் நான் பயந்தபடி இருப்பேன். நான் பயப்பட்டதற்கு நியாயமான காரணங்கள் இருந்தன. தமிழரசுக் கட்சியின் பிரதான எதிரியாயிருந்த தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தங்கள் கட்சியின் வீழ்ச்சிக்கு என் கணவரின் பேச்சாற்றல்தான் பிரதான காரணம் என்று கருதினார்கள். அவரைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தும் ஒரு சிலருக்கு இருந்ததுண்டு. உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். ஒரு சமயம் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற ஒரு கூட்டத்திற்கு அவரை அழைத்துப் போவதற்காக அவ்வூரைச் சேர்ந்தவர்கள் ஆறு கார்களைக் கொண்டு வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களின் சம்பாஷணை களிலிருந்து பின்வரும் விடயங்களைத் தெரிந்து கொண்டேன். பிற்காலத்தில் தமிழரசுக் கட்சிக்கும் அதன் பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் பிரதான தளமாக விளங்கியதோடு அமரர் திரு. இராஜலிங்கம் அவர்கள் உடுப்பிட்டிப் பா.உ ஆக வழிவகுத்து வரலாற்றுப் புகழ் கொண்ட வல்வெட்டித்துறை அக்காலத்தில் காங்கிரஸ் கோட்டையாக விளங்கியது. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களின் தீவிர விசுவாசி சிலரும் வல்வையில் இருந்தார்கள். அவர்களிற் சிலரால் என் கணவருக்கு உயிராபத்து ஏற்படலாம் என்று கருதினார்கள். எனவேதான் எந்தக் காரில் அவரை அழைத்துச் செல்கிறோம் என்று தெரியாமல் இருப்பதற்காக ஆறு கார்களைக் கொண்டு வந்தார்கள். அப்படி வந்திருந்தவர்களில் ஓவிய ஆசிரியர் பாலசுப்பிரமணியம், தமிழரசு இராமண்ணா ஆகிய இருவரையும் இன்றும் என்னால் நினைவுபடுத்த முடிகிறது. இதைக் கேட்க எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்!

அப்போது நான் இருபது வயதும் நிரம்பாத இளம்பெண். இவ்விடயங்கள் எனக்கு பெரிய கவலையையும் கலக்கத்தையும் ஏற்படுத்தின. அப்போது தந்தை செல்வா அவர்கள் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவார்கள். அவர் இசைத்துறையில் நாட்டம் மிகுந்தவர். நான் சங்கீதம் படித்தவள் என்பது அவருக்கு கூடிய சந்தோஷத்தைக் கொடுத்தது. அடிக்கடி சங்கீதம் சம்பந்தப்பட்ட விடயங்களையே என்னோடு கதைப்பார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்போடு பாடக் கேட்பார். நானும் தயக்கத்தோடு பாடுவேன். பாராட்டிவிட்டு போவார். அவரிடம் என் பயத்தை வெளிப்படுத்தி நான் அழுததுண்டு. அப்போதெல்லாம் அவர் ஆறுதல் சொல்வார். உன் கணவருக்கு எதுவும் நடக்காது. அவர் பெரிய தலைவனாகி தமிழினத்திற்கு வழி காட்டுவார் என்று கூறிய தீர்க்கதரிசனம் மிக்க வார்த்தைகளை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

பின்னர் தந்தை செல்வாவும் அமரர் வன்னியசிங்கமும், என் கணவரிடம் என்னை தனித்து வீட்டில் விட்டுவிட்டு வரவேண்டாம். கூட்டங்களுக்கு வரும்போது அழைத்து வருங்கள் என்று ஆலோசனை கூறினார்கள். அதற்கமைய என் கணவரும் என்னை அழைத்துச் செல்ல ஆரம்பித்திருந்தார். ஒரு சமயம் ........ தந்தை அவர்கள் என்னை வற்புறுத்திப் பாட வைத்துவிட்டார். அதன் பின்னர் .....ஒலிபெருக்கியில் என் பாட்டைப் பாராட்டிவிட்டு .... "அமிர்தலிங்கத்திற்கு யாராவது பாடினால் பிடிக்காது நீ கத்தித் தொலை என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார். மனைவியின் பாட்டு பிடிச்சிருக்குது, ரசித்துச் சிரிக்கிறார்" என்று கூறிக் கேலி செய்தார்.

என் கணவர் இளைஞனாகவும் வாலிப முன்னணிக்குத் தலைவனாகவும் இருக்கையில் 54ம் ஆண்டில் பிரதமராய் இருந்த சேர். ஜோன் கொத்தலாவலைக்கு யாழ். மாநகர முன்றலில் வைத்துக் கறுப்புக் கொடி காட்டி அடிவாங்கி இரத்தக் காயத்திற்கும் ஆளானார். அப்போது எங்களுக்குத் திருமணம் நடந்திருக்கவில்லை. நிச்சயதார்த்தம் மட்டும் முடிவடைந்திருந்தது. உன் மனைவி எப்படி இதைத் தாங்கிக் கொள்ளுவா என்று கேட்டுப் பரிவோடு என் கணவருக்குத் தந்தை அவர்கள் ஆறுதல் கூறினாராம். பின்னர் என்னையும் தேடி வந்து தேறுதல் வார்த்தைகள் சொன்னார்.

அவர் ஒரு சந்தர்ப்பத்தில் எனது தந்தையாரிடம் "அமிர்தலிங்கம் உங்கள் மகளைத் தனக்கேற்ற மனைவியாக மாற்றிவிடுவார். இன்னும் சில நாட்களில் அரசியல் மேடையில் பாடமட்டுமல்ல பேசவும் வைப்பார்" என்று குறிப்பிட்டார். ஆனால் தந்தையின் இந்த வார்த்தைகள் எனது தந்தையாருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. ஆபத்து நிறைந்த அரசியலுக்கு என் கணவர் தன்னை அர்ப்பணித்து இருந்தது அவருக்கு உடன்பாடாய் இருக்கவில்லை. எனவே என்னைப் பெற்ற தந்தை என்னைவிட்டு சற்று விலக ஆரம்பித்தார். ஆனால் எங்கள் இனத்தின் தந்தையோ எனக்குப் பாசப்பரிவு மிக்க பிதாவாக மாற ஆரம்பித்தார்.

தந்தை அவர்கள் தமிழினத்திற்குக் காட்டிய பாதை அஹிம்சைப் பாதை. அவரது பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே எப்பொழுதும் அஹிம்சை வழியையே நாம் பின்பற்றி நடக்க வேண்டும் என்று வலியுறுத்துவார். மேலும் "நாம் ஒரு சிறுபான்மை இனம். வன்முறை எமக்கு ஏற்ற பாதை அல்ல" எனக் கூறி "வாளெடுத்தவன் வாளால் மடிவான்" என்ற பைபிள் வாசகத்தையும் கூறத் தயங்குவதில்லை. காந்தியடிகள் காட்டிய அஹிம்சைவழி சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை கொண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை மண்டியிடச் செய்தது என்று அவர் குறிப்பிடுவது வழக்கம்.

மேடையிலே அவரைப் பற்றி நான் அதிகம் பேசிவிட்டால் என்னைத் தன் அருகில் அழைத்து இனிமேல் இப்படிச் செய்ய வேணடாம் என்று சொல்வது அவருடைய இன்னோர் இயல்பு. அடக்கம் நிறைந்திருந்த தந்தை ஒருபோதும் புகழை விரும்பியவரல்ல.

1961ம் ஆண்டு சத்தியாக்கிரகம் நடைபெறுகை யில் தமிழரசுக்கட்சி சட்டவிரோதமான ஒரு பிரத்தியேக தபால்சேவை ஆரம்பித்து நடத்தியது. அப்போது என் கணவர், திரு. சிவசிதம்பரம், அமரர் துரைரத்தினம் போன்றவர்கள் தபால் விநியோகிப்பவர்களாக (Post Peon) வேலை செய்தனர். சித்திரை மாத வெய்யிலின் கொடுமை பற்றிச் சொல்லவா வேண்டும்?

வேர்த்துப் புழுங்கியதால் என் கணவர் என்னிடம் இருந்த துண்டை வாங்கித் தன் வியர்வையைத் துடைக்க முற்பட்டார். நான் அதை வாங்கி அவரது நெற்றி வியர்வையை ஒற்றி எடுக்க முற்பட்டேன். அதனைப் பார்த்த தந்தை செல்வா .. "அமிர்தலிங்கத்தின் மனைவி எங்களைப் பொறாமைப் பட வைக்கின்றா" என்று பகிடி பண்ணிப் பலரையும் சிரிக்க வைத்தார்.

இது பெரியவருடைய பெருங்குணங்களில் ஒன்று. தான் பெரியவன், மூத்தவன், படித்தவன் என்ற பெருமை அற்றவராக மற்றவர்களுடன் பழகுவார். பகிடிகள் விடுவார். பரிவோடு சுகதுக்கங்களில் பங்கு கொள்ளுவார்.

எங்கள் மூத்த மகன் காண்டீபன் மீது பலவகைக் குற்றங்களை சுமத்திப் பொலீசார் தேடி வலைவிரித்த நேரம் அவனைப் பாதுகாக்க இங்கிலாந்துக்கு என் கணவரது நண்பர் ஒருவரிடம் அனுப்பி வைத்தோம். அவன் இங்கிலாந்து வந்ததும் கைதானான். முதன்முதலில் அரசியல் புகலிடம் கேட்ட எங்கள் பிள்ளைக்காக தந்தையவர்கள் தானாக முன்வந்து எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களது சம்மதத்தையும் கையெழுத்துக்களையும் கேட்டுப் பெற்று இங்கிலாந்திற்கு அனுப்பி உதவினார். 74ம் ஆண்டில் எமது இளைய மகன் பகீரதனை அவர் அடிக்கடி கட்சிக் காரியாலயத்தில் பார்த்துவிட்டார். நீங்கள் கவனமாகப் படிக்கவேண்டும் எல்லோரும் குடும்பமாக அரசியலுக்கு வரவேண்டாம். படிப்பை முடித்தபின் அதன்பின் பார்த்து நீ விரும்பியபடி செய்யலாம் என்பார்.

ஒரு சமயம் என்னையும் என் கணவரோடு தந்தை செல்வா மலையகத்தில் இருந்த தனது தேயிலைத்தோட்ட வீட்டுக்கு அழைத்துப் போயிருந்தார். அது தேயிலைத் தோட்டத்திற்கு நடுவில் அமைந்திருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு அழகான பங்களா. தேயிலைத் தோட்டத்தை சுற்றிப் பார்க்கவும் தேயிலை எப்படித் தயாரிப்பது என்பதையும் எமக்குக் காட்டவும் தனது மனேஜரை ஏற்பாடு செய்திருந்தார். தந்தை அவர்களுக்கு நல்ல முறையில் தேநீர் எப்படித் தயாரிக்க வேண்டும் என்பது நன்கு தெரியும். ஆனால் அந்த வீட்டையும், தோட்டத்தையும் சுதந்திரன் பத்திரிகையில் வந்த நட்டத்தைத் தீர்க்க அவர் விற்க வேண்டியதாயிற்று. தோட்டத்தின் பெரும் பகுதி ஸ்ரீமாவோ அம்மையாரால் சுவீகரிக்கப்பட்டும் இருந்தது.

தந்தை செல்வா அவர்கள் சிங்கள "சிறீ" எதிர்ப்புப் போராட்டத்தில் மட்டக்களப்பில் பங்கு கொண்டு ஒரு வாரம் சிறை சென்றார். 1958 சித்திரையில் சிங்களச் சிறியை அழித்ததால் திருமதி. கோமதி வன்னியசிங்கம் அம்மையாரும் நானும் வேறு சில பெண்களும் கைதாகி, நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டதுடன் மறியல் தண்டனையையும் அனுபவித்தோம். தந்தை அவர்கள் பெண்களாகிய நீங்களும் போராட முன்வந்திருப்பது உற்சாகம் தருகிறது. நீங்களே இப்போது மங்கையர்க்கு அரசி ஆகிவிட்டீர்கள். இனி மேல் விடுதலை பெறுவது கஷ்டமல்ல என்றுகூறி எங்களை உற்சாகப்படுத்தினார்.

17-04-1961 அன்று சத்தியாக்கிரகம் முறியடிக்கப் பட்டு தந்தை அவர்கள் உட்பட பல தலைவர்களும் தொண்டர்களுமாக எழுபத்துநால்வர் கைதாகினர். அதை ஒட்டி கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பெண்மணியாக நானிருந்தேன்.

கைதாகிய நாங்கள் பலாலி கொண்டு செல்லப்பட்டிருந்த வேளையில் என்னில் பிள்ளைப் பரிவு கொண்டிருந்த பெரியவர் அந்த இடத்தில் பொறுப்பாக இருந்த உயர் இராணுவ அதிகாரியிடம் ஒரே ஒரு பெண்ணைக் கைது செய்திருக்கிறீர்கள். அவர் ஒரு இளம்பெண். அவரது பாதுகாப்பில் போதிய கவனம் எடுங்கள் என்று கூறியதையும், அவனும் அவருக்கு மிகுந்த மரியாதை செய்ததோடு அப்படியே செய்வதாக உறுதி அளித்ததையும் நினைத்துப் பார்க்கிறேன்.

என் மகன் பாலகனாக இருந்த காண்டீபனைப் பிரிந்து சிறையிருந்த எனக்குப் பாசப்பரிவோடு தந்தை அவர்கள் தான் அடிக்கடி ஆறுதல் சொல்வதுண்டு. எங்களுக்கு எல்லாம் அடிக்கடி அறிவுரைகள், ஆலோசனைகளைச் சொல்வதன் மூலம் பெரியவர் சிறைச்சாலையை ஒரு தவச்சாலையாக - ஒரு பகுத்தறிவுப் பாசறையாக மாற்றியிருந்தார். ஆறுமாதங்கள் நாங்கள் அடைபட்டிருந்தோம். நோய்வாய்ப்பட்ட தந்தை தடுப்புக்காவலிலிருந்து சிகிச்சைக்காக இங்கிலாந்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

1975ல் அளவெட்டியில் நடந்த ஒரு கூட்டத்தில் "என்னுடைய காலத்திலில் இல்லாவிட்டாலும் அமிர்தலிங்கம் காலத்திலாவது தமிழுரிமை கிடைக்கும் என தந்தையவர்கள் பேசியபோது என் கணவர் குறுக்கிட்டு இல்லை! இல்லை!! தந்தையின் காலத்தில் நாம் பெற்றுவிடுவோம் சுதந்திரத் தமிழீழம் என்பதை சொல்லித் தந்தையின் நெஞ்சை நெகிழ வைத்தார் எனது கணவர். முப்பது வருடங்கள் தந்தை அவர்கட்கு அரசியலில் உறுதுணையாக இருந்தார். பின்னர் பன்னிரெண்டு வருடங்கள் அவரது தூயபணிகளைத் தொடர்ந்தார். இன்று இருவரும் இல்வுலகில் இல்லை. தந்தைக்கு எடுக்கின்ற விழாவில் வெளிவரும் மலருக்கு ஒரு இதழ் தந்திடும்படி பணித்த மலர்க்குழுவினருக்கு நன்றி கூறுகின்றேன். என் கணவருடன் இணைந்து தந்தையின் வழிநடந்து நான்பெற்ற அறிவும் அனுபவமும் அதிகம். இன்று தனிமையில் வாழும் என் இதயத்தில் இந்தப் புனிதரைப் பற்றிய நினைவுகளும் பவித்திரத்தன்மையோடு இறுதிவரை பாதுகாக்கப்படுவது நிச்சயம்.!



**பேரறிஞர் அண்ணா அவர்களின் இல்லத்தின் முன் அமரர் இராசரத்தினம், டாக்டர் ஜனார்த்தனம், மணவைத்தம்பி ஆகியோருடன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "ஈழத்துக் காந்தி" செல்வநாயகம்

**கரிகாலன்**

மார்ச் மாதம் 31ம் தேதி (31-3.1998) "தமிழ்த் தந்தை" என்றும் "ஈழத்து காந்தி" என்றும் "பெரியவர்" என்றும் இலங்கைத் தமிழர்களால் போற்றப்படும் தலைவன் பிறந்த நூற்றாண்டு நிறைவுநாள்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஈழத்தமிழர் வரலாறு உணர்ச்சியும் கிளர்ச்சியும் கலந்து உருவான ஒரு காவியம். சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை (எஸ். ஜே. வி) செல்வநாயகம் என்பது அந்தக் காவியநாயகன் பெயர். கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஈழத்தில் எழுச்சி கொண்டுள்ள தமிழ் தேசியவாதத்தின் தந்தை இவர். பெரியவர் செல்வா தலைமையில் 1976 மே மாதம் யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் முதன் முதலாகப் பிரகடனப் படுத்தப்பட்ட "தனித் தமிழ் ஈழக் கோரிக்கை" இலங்கை அரசியலில் போராட்டமயமான ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தது. ஈழத் தமிழரின் உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் இன்று ஏற்பட்டிருக்கும் தீவிரப் போக்கையும் பயங்கரமான பரிமாணங்களையும் செல்வா நிச்சயமாக எதிர்பார்த்திருக்க முடியாது.

1977ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு மாதத்திற்கு முன்பாகவே செல்வா மறைந்து விட்டார். ஆயினும், தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து அமோக வெற்றியீட்டி, நாடாளுமன்றத்தில் தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக விளங்கியது. 1983 ஜூலை மாதம் இலங்கையில் அரங்கேறிய தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து தமிழரின் அரசியல் வாழ்வை தீவிரவாதிகளான ஆயுதப் போராளிகள் சுவீகரித்துக் கொண்டதும் இதனால் மிதவாதிகளும், ஜனநாயக வாதிகளும் ஓரங்கட்டப்பட்டதும் தனிக்கதை. எனினும், தீவிரவாதிகளும், மிதவாதிகளும் செல்வாவைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழருக்கு இனவுணர்வை ஊட்டியவர் என நிதானவாதிகளும் தம் நெஞ்சங்களில் விடுதலை வேள்வித்தீயை மூட்டியவர் என தீவிரவாதிகளும் இவரைப் போற்றுகின்றனர்.

1948ஆம் ஆண்டு இலங்கை அரசு தோட்டத் தொழிலாளர்களான சுமார் பத்துலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் சட்டத்தின் மூலம் ரத்துச்செய்தது. இதனால் இவர்களின் பிரதிநிதிகளாக நாடாளு மன்றத்திலிருந்த ஏழு எம்.பி.க்கள் பதவியிழந்தனர். (இன்று அமைச்சராயிருக்கும் தொண்டமான் அவர்களுள் ஒருவர்). நாடாளுமன்றத்தில் இச்சட்டத்துக்கு ஆதரவாகத் தாம் சார்ந்திருந்த கட்சி வாக்களித்தபோது, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வா சட்டத்தை எதிர்த்து வாக்களித்துவிட்டு கட்சியிலிருந்து வெளியேறி "தமிழரசுக் கட்சி"யை நிறுவினார். இந்தியாவில் அமைந்துள்ளது போல சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையில், தமிழர் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்து தனி மாநிலமாக்க வேண்டும் எனக் கோரினார்.

"கண் உள்ளவர்களே! பார்த்துக்கொள்ளுங்கள்". இன்று இந்திய வம்சாவழித் தமிழனுக்கு இழைக்கப்படும் அநீதி நாளை இலங்கைத் தமிழனுக்கு எதிராகவும் நடக்கும். சிங்களப் பேராதிக்கப் பிரளயத்தை இன்றே தடுத்து நிறுத்தவேண்டும் என செல்வா தீர்க்கமாக எச்சரித்தார். "இந்தியாக்காரன்" என நிந்திக்கப்படும் தமிழனும் இலங்கைத் தமிழனும் உறவாலும், உணர்வாலும் ஒன்றுபட்டவனே என்ற புதிய மந்திரத்தை இலங்கைத் தமிழர்களுக்கு உணர்த்தினார்.

தமிழரசுக்கட்சிக்கு கருவிலேயே கண்டம். 1952ம் ஆண்டுத் தேர்தலில் கட்சி தோற்கடிக்கப்பட்டது. பெரியவரே காங்கேசன்துறைத் தொகுதியில் தோல்வியுற்றார். அரசாங்கச் சார்புப் பத்திரிகைகள் "சமஷ்டிக்கு சாவுமணி" என கொட்டை எழுத்துக்களில் தலைப்பிட்டு கொக்கரித்தன. செல்வாவைப் பொறுத்தவரை, கட்சி சந்தித்த முதல் தேர்தல் ஒரு தத்துவத்தின் பிரசவ வேதனை. ஆயினும், வடக்கு மாகாணத்தில் கோப்பாய்த் தொகுதியில் வன்னியசிங்கமும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் இராஜவரோதயமும் ஈட்டிய வெற்றிகள் வேதனையின் மத்தியிலும் நிகழ்ந்த சாதனைகள். தளர்ந்துவிடாது தம் பணியைத் தொடர்ந்தார். அடுத்து நடைபெற்ற 1956ம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தமிழர்களின் தனிப் பெரும் கட்சியாக வெற்றிபெற்றது. 1974ல் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பரிணமித்தது.

செல்வா சட்டத்துறையிலும் சாதனைகள் புரிந்து கொழும்பிலுள்ள உச்ச நீதிமன்றத்திலும் புகழ்பெற்ற வழக்கறிஞர். இதனால் பிரிட்டிஷ் மகாராணியால் வழங்கப்படும் Queen's Counsel என்ற தகைமை பெற்றவர். விருதுபெற்ற வழக்கறிஞராயினும், தமிழர் உரிமைக்காக சாத்வீக முறையில் சட்ட மறுப்பு போராட்டங்களில் ஈடுபட்டு சிறைவாசம், தடுப்புக் காவல் என விழுப்புண் பட்டவர். இலங்கை அரசியல் களத்தில்

www.tamilarangam.net

காந்தீய நெறியில் கிளர்ச்சிகளை அறிமுகப்படுத்தியவர் என்பதால் "ஈழத்து காந்தி" என்ற சிறப்புப் பெயருக்கும் உரியவர். ஒரு தடவை இந்தியப் பிரதமர் நேருவின் இலங்கை வருகையின்போது விமான நிலையத்தில் வரவேற்க வந்த செல்வாவை (அன்றைய) பிரதமர் பண்டாரநாயக்கா, அடிக்கடி காந்தீயக் கிளர்ச்சியை நடாத்தி என்னை மிரட்டுகிறவர் இவர் என்று வேடிக்கையாகக்கூறி நேருவுக்கு அறிமுகம் செய்தார்.

செல்வா மேற்கொண்ட போராட்டங்களுக்கு "கல்கி" இதழ்மூலம் ராஜாஜியும், "திராவிடநாடு" இதழிலும் தி.மு.க. மகாநாட்டுத் தீர்மானங்களிலும் அண்ணாவும் தார்மீக ஆதரவு தந்திருக்கிறார்கள். இதற்கு மேலாக, சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தது.

இலங்கைத் தமிழர்கள் பிரதேச பேதங்களினால் பிளவுண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தான் - மட்டக்களப்பான் - வன்னியான் என இவர்களுக்குள் பரஸ்பர அவநம்பிக்கைகள். "மண்ணின் மைந்தர்கள்" போன்ற பிரதேச கோஷங்களுக்கும் துவேஷத்துக்கும் குறைவில்லை. சிங்கள ஆட்சியாளர் தமிழர்களைக் கூறுபோட்டு, துவேஷத் தீயை வளர்த்து குளிர் காய்ந்தனர். பிளவுகளை அகற்றி தமிழரை ஒரு கொடியின் கீழ் ஓரணியில் திரட்டி வலிமையான ஒரு சக்தியாக உருவாக்கியவர் பெரியவர் செல்வா.

இந்த அபூர்வ மனிதரின் தலைமையில் இன்னோர் அற்புதமும் நிகழ்ந்தது. இலங்கைத் தமிழர்களில் 85 சதவீதத்தினர் இந்துக்கள். பெரியவர் செல்வா ஒரு கிறிஸ்தவர். தமிழ்நாட்டை அண்மையில் விகாரப் படுத்தியுள்ள மத வெறி ஈழத்தமிழ் சமுதாயத்தில் இல்லை. அங்கு, தமிழரின் சகோதரத்துவ உணர்வுகளை மதமாச்சரியங்கள் ஆக்கிரமிக்கவில்லை. இதனால், தந்தை செல்வா எந்த மதத்தவர் என தமிழர் எவரும் கவலைப்பட்டதில்லை. அவரை இறுதிவரை தம் தலைவனாக ஏற்று அபிமானத்துடன் ஆராதித்தனர். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக செல்வா போராட்டங்களை நடாத்துவதும், அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து உறுதிமொழிகள் தந்து உடன்படிக்கைகள் செய்வதும், பின் அவற்றை மீறுவதும் இலங்கைப் பிரதமர்களுக்கு கைவந்த கலை. 1957ல் (ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையான) பிரதமர் பண்டாரநாயக்காவுடனும் 1960ல் தாய் சிறிமாவுடனும், அடுத்து 1965ல் பிரதமரான டட்லி சேனநாயக்காவுடனும் பெரியவர் செய்த ஒப்பந்தங்கள் எழுதிய மை உலர்வதற்கு முன்பாகவே மீறப்பட்டன. சிங்களத் தலைவர்களால் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டதாலும் தமிழரின் குறைந்தபட்ச கோரிக்கைகளைக்கூட சிங்களத் தலைவர்கள் நிராகரித்ததாலும் நிதானவாதியான செல்வா பிரிவினைக்கு துணிந்தார். தமிழ் ஈழக் கோரிக்கையை முன்மொழிந்தார்.

1972ம் ஆண்டு சிறிமா அரசு தமிழர்களின் உரிமைகளை மேலும் கட்டுப்படுத்தும் விதத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்கியபோது தமிழரின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக தமது நாடாளுமன்றப் பதவியை ராஜினாமா செய்து காங்கேசன்துறையில் இடைத்தேர்தலைச் சந்தித்தார். மீண்டும் அமோகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஈழத் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு இந்தியத் தலைவர்களின் தார்மீக ஆதரவைத் திரட்டுவதற்காக 1972ம் ஆண்டு பெப்ரவரி மாதம் செல்வா அமிர்தலிங்கம் அவர்களுடன் இந்தியா வந்தார். கலைஞர், ஈ.வே.ரா. பெரியார், காமராஜர், காயிதே மில்லத், ம.பொ.சி. உட்பட பல தமிழ்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். அடுத்து பிரதமர் இந்திரா காந்தியைச் சந்திப்பதாக ஏற்பாடு. மிரண்டுபோன இலங்கை அரசு டெல்லியிலிருந்த இலங்கைத் தூதர்மூலம் அச்சந்திப்பைத் தடுத்து நிறுத்திவிட்டது. பெரியவர் செல்வா சிறிய விபத்தினால் மூளைநரம்பு பாதிக்கப்பட்டு 1977 ஏப்ரல் மாதம் 26ம் திகதி மறைந்தார். அவர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது அவரைப் பரிசோதிப்பதற்கென நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தியை சென்னையிலிருந்து விசேஷமாக அனுப்பி வைத்தவர் அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.

இலங்கை அரசியலில் நேர்மையும் கண்ணியமும் மிக்க ஒரு தலைவராக சிங்களத் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவர் செல்வா. அவர் மறைந்தபோது நாடாளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய ஜெயவர்த்தனா உட்பட அனைத்து சிங்களத் தலைவர்களும் பெரியவரின் தூய்மையான அரசியல் வாழ்வைப் பாராட்டிப் பேசினர். அமைச்சர் அத்துலத் முதலி பேசும்போது - "செல்வநாயகம் மலேசியாவில் ஈப்போ நகரில் பிறந்தவர். மலேசியாவிலேயே மிகவும் சுத்தமான நகரம் ஈப்போ. அவரின் அரசியல் வாழ்வு சமகால அரசியல்வாதிகளிடம் காண முடியாதவாறு பரிசுத்தமாக விளங்கியது புதுமையல்ல" என்றார்.

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என முன்பு இந்திய சுதந்திரப் போருக்கு கட்டியம் கூறினார் நாமக்கல் கவிஞர். தமிழர் உரிமைகளைக் காக்க பெரியவர் செல்வா சத்திய யுத்தத்தை தொடங்கினார். திவ்வியமாக ஆரம்பித்த அறப்போர் திசைமாறியதற்கு சிங்கள மக்களே பொறுப்பாளிகள். காந்தீய நெறியில் தொடங்கி இன்று ஏ.கே. 47 துப்பாக்கிகள், ஏவுகணைகள், கனரக பீரங்கிகள் என பிரணமித்துள்ளது. வேலுப்பிள்ளை செல்வநாயகம் முதல் வேலுப்பிள்ளை பிரபாகரன் வரை, போராட்டப்பாதையில் தமிழரின் நீண்ட பயணம் இன்னும் முடியவில்லை; முடிவதாகவும் இல்லை. ஆயிரக்

www.tamilarangam.net

கணக்கானோர் யுத்தகளத்தில் செத்து மடிந்திருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர் உற்றார் உறவினரையும் வீடு வாசல்களையும் இழந்து அகதிகளாயுள்ளனர். யுத்தம் தொடர்கிறது. விதவைகள், அனாதைகள், அகதிகள் ஆகியோரின் எண்ணிக்கை நாளாந்தம் பெருகிறது. இந்த யுத்தத்தை காலத்தின் கொடுமை என்பதா? கடவுளின் சாபம் என்பதா?. அங்கு அவலவாழ்வை நடாத்தும் தமிழர்கள் பாவப்பட்ட ஜென்மங்கள். மறைவதற்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் “தமிழரை இனி கடவுள்தான் காக்க வேண்டும்” என்றார் செல்வா. விரக்தியில் கூறினாரா அல்லது விஷயம் அறிந்துதான் கூறினாரா?

பெரியவரே! தமிழ் மக்களை ஆகர்ஷித்த பெருமைக்கு உரியவரே! “அரசியல் என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்” என்ற கூற்றை தங்கள் தூய்மையும் வாய்மையும் நிறைந்த அரசியல் வாழ்வு பொய்யாக்குகிறது.

தாங்கள் வாழ்ந்த நாட்களில் வாழ்ந்து, தங்கள் காலடிச் சுவடுகளைப் பின்பற்றி நடந்தோம் என்பது எமக்கெல்லாம் பெருமை சேர்ப்பது. மாணவனாக, மாலை வேளைகளில் கொழும்பு மாநகரில் தங்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து தங்களைத் தரிசித்தேன் - தங்கள் வார்த்தைகளைக் கேட்டேன் - தாங்கள் பணித்த ஏவல்களைச் செய்தேன் என்பவைகள் என் இனிய அனுபவங்கள். அந்த அனுபவங்கள் மிகவும் பவித்திரமானவை.



**1947ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற அமரர்கள் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், த. வன்னியசிங்கம் ஆகியோர் தங்கள் ஆதரவாளர்கள் சிலருடன் காட்சி தருகிறார்கள்.**

www.tamilarangam.net

# சட்டமேதையின் சமூக சேவைகள்

கலாநிதி. நீலன் திருச்செல்வம் (பா.உ)
(ஜனாதிபதி சட்டத்தரணி)

தந்தை செல்வா அவர்கள் தமது சொந்த ஜனசமூகத்தினால் இத்துணை ஆழமாகப் பூஜிக்கப்பட்டவரும், நாட்டினுள் பல் வேறு அரசியல் அபிப்பிராயம் கொண்டோரினதும் பரந்த மரியாதையும், மெச்சுதலையும் பெற்றவருமான வேறொரு தலைவரைக் காண்பது அரிது.

எனது தந்தையர் திருச்செல்வமும், இலங்கை நிர்வாக சேவையில் கடமையாற்றிய எனது சிறிய தந்தையார் இராஜேந்திராவும் மலேசியாவில் இருந்து இலங்கைக்கு வரக் காரணமாக இருந்தவர் திரு. செல்வநாயகம் அவர்கள். இலங்கை வந்தபின்னர் ஒரு காலகட்டத்தில் அவர்கள் இருவரும் பரி. தோமஸ் கல்லூரியில் விடுதி மாணவர்களாக இருந்தார்கள். அந்த நேரத்தில் வெஸ்லிக் கலலூரியில் கணித ஆசிரியராக இருந்து கொண்டு சட்டப்படிப்பை முடித்திருந்த தந்தை செல்வா வழக்கறிஞர் சங்கத்தில் இணைய அனுமதி பெற்றிருந்தார். ஓர் ஆசிரியர் என்ற வகையில் அவர் கனிவு மிக்கவர், மற்றவர் நலனைச் சிந்திப்பவர். கண்டிப்பானவர். ஆயினும் அடக்கியாழும் தன் மையற்றவர் என்று மாணவர்கள் கூறுவதுண்டு. அவர் பின்னர் விஞ்ஞானப் பிரிவின் தலைவராகவும், விடுதியின் சிரேஷ்ட ஆசானாகவும் விளங்கினார். அவர் எனது தந்தைக்கும் சிறிய தந்தைக்கும் பாதுகாவலராக விளங்கினார். புறக்கோட்டை நூல் நிலையத்திற்கு அடிக்கடி செல்லுமாறு அவர்களை அவர் உற்சாகமூட்டினார்.

செல்வநாயகம் மத ஆராதனைகளில் ஒழுங்காகக் கலந்து கொள்ளும் பக்தி உணர்வுள்ள கிறிஸ்தவராக விளங்கியதோடு, தமது மதத்தின் உயர்வான கோட்பாடுகளை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு முயற்சி செய்தார். அவர் மது அருந்துவதுமில்லை, புகை பிடிப்பதுமில்லை. ஆயினும் உடை விடயத்தில் அளவுக்கதிகமான அக்கறை காட்டுபவராக விளங்கினார். 20களின் ஆரம்பத்தில் வெஸ்லிக் கல்லூரியில் தேசிய உடையை அணியத் தொடங்கிய போது, பெரும் சலசலப்பு ஏற்பட்டது. அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் எளிமையும், சிக்கனமும் இலங்கின. வயலின் பழகிக்கொள்வதற்குப் பெருமுயறசி எடுத்ததோடு, வெளியிடங்களில் இருந்து வருகைதரும் கர்நாடக இசைக்கலைஞர்களின் கச்சேரிகளுக்கும் சென்றார். வெனிஸ் நகரத்து வணிகன் நாடகத்தில் போர்ஷியாவின் பாத்திரத்தை ஏற்று நடித்தார். ஒரு விளையாட்டு வீரரென்று பெரிதாக எதுவும் கூறமுடியாத போதிலும் கிரிக்கெட்டில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்

செல்வநாயகம் ஒரு பிரபலமான சட்டக் குடும்பத்தை சேராதவராக இருந்தபோதிலும் சட்ட உயர்வாழ்கைத் தொழிலில் விரைவாக முன்னேறினார். உயர்வாழ்கைத் தொழில் மற்றும் வியாபார ஸ்தாபனங்களோடு அவர் கொண்டிருந்த தொடர்புகள் மிகவும் குறைவானவை. அவர் பிரான்சிஸ் டி சொய்சாவின் பணி அவையில் கருமமாற்றினார். குடியியல் சட்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்ததோடு அக்காலத்து வழமைக்கேற்ப கொழும்பு விண்ணப்ப நீதிமன்றத்தில் தமது தொழிலை ஆரம்பித்தார். இந்நீதிமன்றம் அக்காலத்தில் சீ.நாகலிங்கம், என். நடராஜா, மற்றும் வீ.எல்.பரி.சீ.ஸ்வான் என்போரின் ஆதிக்கம் விளங்கும் ஒன்றாகவிருந்தது. அவர்கள் அனைவரும் பின்னர் உயர்நீதிமன்ற நீதிபதிகளாக உயர்வுபெற்றனர். திரு. செல்வநாயகம் அவர்களிடம் கூர்மையாக, ஆழ்ந்து பகுத்தாய்வு செய்யும் மூளை, சட்டக்கோட்பாடுகள் மற்றும் எண்ணக் கருக்கள் குறித்த சிறந்த விளக்கம் என்பவை இருந்ததோடு, அர்ப்பன உணர்வு மற்றும் கடின உழைப்பு என்பனவும் நிறைந்திருந்தன. சுருக்கமும், தெளிவும், நேர்த்தியும் மிக்க சட்டவாத வரைவுகளைத் தயாரிப்பதில் பிரத்தியேகத் திறமை அவருக்கிருந்தது. அவரது சட்டவாதங்கள் பகட்டான உரைகளாகவோ, வார்த்தை ஜாலங்கள் மிக்கதாகவோ இருக்கவில்லை. அவரது மொழி எளிமையானதும் ஒளிவுமறைவற்றதுமாகும். சாட்சிகளுக்கும், ஏன், தம் எதிராளிகளுக்குக்கூட உரிய கௌரவத்தையும் மதிப்பையும் வழங்குவதற்கு அவர் என்றுமே தவறியதில்லை. அவரது வழக்குரைத்தலில் அன்னார் பெற்றிருந்த வல்லமைக்காகவும் அவரது சமர்ப்பணங்களில் இடம்பெற்றிருந்த நியாயபூர்வத் தன்மைக்காகவும் பிறர் அவரை மதித்தனர். அவர் நீதிமன்றத்தைக் தவறாக வழிநடத்த மாட்டார் என்பதாலும் அவர் ஒரு வழக்கின் தொகுப்புரையை நிகழ்த்தும்போது நீதிபதிகள் ஒரு சொல் தவறாமல் அதைக் குறித்துக் கொள்வார்கள் என்று பலர் கூறியுள்ளனர். 1947இல் அவர் அரசரின் வழக்குரைஞர் (King's Counsel) ஆகினார். செல்வநாயகத்தின் அரசியற் பிரவேசம் சிந்தித்து வேண்டுமென்று எடுக்கப்பட்ட முடிவு என்பதைவிட, அது ஒரு தற்செயல் நிகழ்வு என்றே கூறலாம். அவரது சகபாடிகள் பலரும் செய்தது போன்று அவரும் தமது உயர் வாழ்க்கைத் தொழிலில் தொடர்ச்சியாக ஈடுபட்டுழைத்து உயர்நீதிமன்றத்தில்

www.tamilarangam.net

மேலும் உன்னத ஸ்தானத்தைப் பெற்றிருக்க முடியும். அவருக்கு அதைவிட ஓர் உயர்வான அழைப்பு அமைந்திருததமையாலும் ஆரம்பத்தில், சோல்பரி ஆணைக்குழுவின் கலந்துரையாடல் வாதங்கள் இடம்பெற்ற போது, தமிழ்க் காங்கிரசில் இணைந்து, தனது சமூகத்தின் அரசியல் பாதை மற்றும் எதிர்காலத்தோடு தம்மை இனங்காட்டும் ஒருவரானார் தமிழ்க் காங்கிரசுடனான அவரதுஉறவு சிறிது காலமே நீடித்தது. 1948 இல் மலையக தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை தொடர்பில் அபிப்பிராய பேதங்கள் எழுந்தமையால் சீ.வன்னியசிங்கம், மற்றும் ஈ.எம்.வி. நாகநாதன் ஆகியோரர்களுடன் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறினார். அவர் உருவாக்கிய சமஷ்டிக் கட்சியும், அதன் தொடர்ச்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணியும் வட- கிழக்கு அரசியலில் ஏறக்குறைய மூன்று தசாப்த காலம் ஆதிக்கம் வகித்தன.

திரு. செல்வநாயகத்தை அவரின் சமகாலத்தவர் களிடமிருந்து பிரித்துப் பிரகாசிக்க வைத்தவையும், வட- கிழக்கில் வாழ் தமிழ் மக்களின் உள்ளங்களில் அரசியல் சிந்தனை மற்றும் உணர்வு அலைகளை ஆதிக்கஞ் செலுத்த வைத்தவையுமான குணாம்சங்கள் எவை? முதலாவதாகத் தாம் நம்பிக்கை வைத்த அரசியல், அரசியற் கோட்பாடு மற்றும் இலட்சியங்கள் என்பவை குறித்த அவரின் பூரண அர்ப்பண உணர்வாகும். அவர் தன் செல்வத்தை, உயர்தொழில் வாழ்க்கைப் பணியை, உடல் சேமநலத்தைத் தியாகம் செய்ததோடு, பிற்காலத்தில் "பார்க்கின்சன்" வியாதி அவரைப் பயங்கரமாக வருத்திய போதும் அவர் சமத்துவத்தையும் நீதியையும் நிலைநாட்டத் துடித்த ஒரு சமூகத்தின் தளர்ச்சியுறா மனோபலத்தை உலகுக்குப் பறைசாற்றும் சின்னமாக விளங்கினார். "இந்த மெலிந்து, ஒட்டியுலர்ந்து, இளைத்துக் களைத்த தோற்றம் கொண்ட, நடப்பதற்கே பலமற்ற, பலமாகப் பேசவும் திரானியற்ற மனிதனின், மலையளவு முக்கியம் வாய்ந்த பண்பு, தோல்வியை ஏற்காமையாகுமென்றும், தொடர்ச்சியான தோல்விகள், ஏமாற்றங்கள் மத்தியிலும் என்றுமே விரத்திப் பரிதவிப்பு நிலையை அண்ட விடாமை ஆகுமென்றும்" ஆயர் குலேந்திரன் அவருக்கப் புகழாரம் சூட்டினார். அவர் மேலும்"காற்று நிலையாகப் பயங்கர வேகத்தில் வீசிய பொழுதும் இந்தச் சுவாலையை அணைக்க முடியவில்லை; அது அணையப் போகும் சிறு தடுமாற்றத்தைக் கூடக் காண்பிக்கவில்லை" என்று மேலும் கூறியுள்ளார். இரண்டாவது, அரசியல் மற்றும் தார்மீக விழுப்பங்களுக்கு அவர் வழங்கிய முக்கியத்துவமாகும். திரு. செல்வநாயகம் ஒரு வாக்குறுதியை வழங்கினாரென்றால், எத்தகைய எதிர்ப்புகளும் பிரச்சினைகளும் ஏற்படினும் அதை அவர் காப்பாற்றியே தீருவார் என்பதில் அவரது அரசியல் எதிரிகள்கூட விசுவாசங் கொண்டிருந்தனர். எனவேதான் அவர் 1958 இலும் 1956 இலும் செய்து கொண்ட இரு பிரதான உடன்படிக்கைகளும் பின்னர் கைவிடப்பட்டபோது தனிப்பட்ட முறையில் அவருக்கும், மற்றவர்களுக்கும் அது பெரும் ஏமாற்றமளிப்பதாக இருந்தது. ஆயினும், அரசியல் குரோதம், மனக்கசப்பு என்பவை அவரது வாழ்வில் இடம்பெறாத விடயங்களாகும். ரொஷான் பீரிஸ், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அவரைப் பலமுறை சிறையிலடைத்தமை, தடுப்புக்காவலில் வைத்தமையை நினைவுபடுத்தி, இந்த அனுபவங்கள் அவரைக் கசப்புணர்வு கொள்ள வைக்கவில்லையா என அவரிடமே வினவினார். ஒரு திடமான "இல்லை" என்பதே அவரின் பதிலாகவிருந்தது. "கசப்புணர்வினால் எந்தப் பலனும் ஏற்படுமென்று நான் எண்ணவில்லை. கசப்புணர்வு கொள்வதில் அர்த்தமில்லை. கசப்புணர்வின்றித் துன்பத்தை அனுபவிப்பது எனக்குப் பழகிப்போன விடயமாகும்" என்று மேலும் தெரிவித்தார்.

மூன்றாவதாக, திரு. செல்வநாயகம் ஒரு பல்லின பாங்கான குடியியல் நிர்வாகத்தின் அரசியலமைப்பு அத்திவாரங்கள் குறித்த, வாழ்வாதாரமான முக்கியத்துவம் வாய்ந்த, கருத்துக்களுக்கு வடிவம் கொடுப்பதில் அதி முக்கிய புத்திஜீவிப் பங்களிப்பை நல்கினார். சமநிலைப்படுத்திய பிரதிநிதித்துவத்துக்கான வலியுறுத்தல் என்பதிலிருந்து விலகிச் சென்று அவர் அரசை மீள் வரைவிலக்கணம் செய்தும், மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையில் பயனுறுதியுள்ள வகையில் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துவதுமான ஒரு அரசியலமைப்புச் சட்டத்துக்கான தேவை குறித்துத் தெளிவாக எடுத்துரைத்தார். அதிகாரப் பகிர்வு குறித்த இக்கருத்துக்கள் பின்னர் ஏற்பட்ட பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் மற்றும் டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம் என்பவற்றுள் ஒன்றிணைப்புச் செய்யப்பட்டன. அவை 1980 இல் ஏற்பட்ட மாவட்ட சபைக்கும், 1987இல் இடம்பெற்ற அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்துக்கும் உத்வேகமளித்து வழி சமைப்பவையாகவும் விளங்கின. அவை, 1995 ஆகஸ்ட் பிரேரணைகளிலும், மற்றும் 1996 சட்ட வாசகத்திலும்கூட மிகப் பயனுறுதியுள்ள வகையில் வெளிவந்துள்ளன. திரு. செல்வநாயகம் மொழிச் சமத்துவம், சமமான வாய்ப்புக்கள், மற்றும் பூரணமான, பயனுறுதிமிக்க தனிநபர் குடியியல், அரசியல் உரிமைகளை நிலைநாட்டுதல் என்பவற்றுக்கு ஆழமான முக்கியத்துவமளித்துச் செயற்பட்டார். இவ்விடயத்திற்கூட, நாம் சிங்களத்துக்கும் தமிழுக்கும் அரசகரும மொழிகள் என்ற வகையில் சம அந்தஸ்து, ஆங்கிலம் இணைப்பு மொழியென்ற வகையில் அதற்குரிய, அங்கீகாரம் என்பவற்றுக்காகப் போராடியுள்ளோம்.

இறுதியாக, அஹிம்சை, அரசியலமைப்பு ரீதியான மாற்றம், அரசியல் போராட்டம் என்பவற்றில் அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை காரணமாக திரு. செல்வநாயகம் முக்கியத்துவம் பெறுகிறார். அஹிம்சை அவரது அரசியல் விசுவாசத்தின் உயிர் மூச்சாக விளங்கியது. அவர் தேசியப் பிரச்சினையில் ஒரு சமாதானமான, நிலையான தீர்வை எட்டுதல் அரசோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எப்பொழுதும் தயாராகவே இருந்தார். 1956 இல் சத்தியாக்கிரக இயக்கம் பலாத்காரமாகவும், கொடூரமாகவும் அடக்கப்பட்டமை, 1961 இலும் அதன் பின்னரும் இடம் பெற்ற ஏனைய ஒடுக்குமுறை நடவடிக்கைகள் என்பன ஜனநாயக அரசியல் என்னும் மாயை அகல்வதற்கும், வேறு போராட்ட வடிவங்களுக்குத் தம்மை அர்ப்பணித்த சக்திகளின் தோற்றத்துக்கும் வழி சமைத்தன. திரு. செல்வநாயகம் வயதில் குறைந்த தமது சகபாடிகளினதும் ஆதரவாளர்களினதும் பொறுமை யின்மை மற்றும் அமைதியீனம் ஆகியவற்றிற்கு முன்னால் தமது கொள்கை, நம்பிக்கை என்பன குறித்த நிலையான திடசித்தத்தை வெளிப்படுத்தினார். அவரது நூற்றாண்டு விழா நிகழும் வேளையில் அவரது வாழ்வும் பணியும் தொடர்ந்து நினைவு கூரப்படுவது பொருத்தமானதாகும். திரு. செல்வநாயகம் குறித்துப் பேசுகையில் முன்னாள் பிரதம நீதியரசர் விக்டர் தென்னக்கோன் Q.C. பின்வருமாறு குறிப்பிட்டார். "ஒரு அரசியல்வாதியென்ற வகையில் அவரின் மரணம் ஒரு பாரிய விருட்ஷம் சாய்ந்தது போன்றிருக்கிறது. அவரது நண்பர்களும், ஆதரவாளர்களும் அவரில்லாத சுற்றாடல் எத்துணை வெறுமையானது என்று உணர்ந்து கவலை கொள்கிறார்கள்.



**26.07.1957 அன்று பண்டா-செல்வா ஒப்பந்தத்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படம். செல்வா அவர்களுடன் அமரர்கள் டாக்டர் நாகநாதன், த. வன்னியசிங்கம், வி. ஏ. கந்தையா, ஆகியோரும் திருவாளர் வி. நவரத்தினம் அவர்களும் காணப்படுகிறார்கள்**

www.tamilarangam.net

# தமிழீழத் தத்துவமும் தந்தை செல்வாவும்

சா. செ. சந்திரகாசன் (சட்டத்தரணி)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் சட்டச் செயலாளர்
தலைவர் - ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் (தமிழ்நாடு, இந்தியா)

சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களை எமது தந்தை என்பதைவிட தமிழீழத் தத்துவத்தின் தந்தை என்பதே சாலப் பொருந்தும்.

ஏனெனில் அவருடைய வாழ்க்கை முழுவதுமே தமிழீழத் தத்துவத்தின் பரீட்சார்த்தக் களமாகவே விளங்கியது.

இந்திய தேசப் பிதா மகாத்மா காந்தியடிகளைப் பற்றிச் சொல்லுவதுண்டு. அவருடைய வாக்கைவிட வாழ்க்கை தான் இந்திய மக்களுக்கு வழிகாட்டியது என்று. இந்திய விடுதலைக்கான சத்திய சோதனைதான் அவருடைய வாழ்க்கை என்றும் கூறுவார்கள். அது போலத் தமிழீழத் தத்துவத்தின் சோதனைக் களமாகத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார் தந்தை செல்வா.

இத்தனைக்கும் அவர் பிறந்தது மலேசியாவில் உள்ள ஈப்போ நகரில்.

படித்தது சட்டத்தரணியாவதற்கு.

பார்த்தது ஆசிரியப் பணியும், சட்டத்தரணித் தொழிலுமேயாகும்.

ஆனால் அவர் வாழ்ந்தது தமிழீழத் தத்துவத்திற்கு என்றானது.

அத்தத்துவம் இவரைச் சுவீகரித்துக் கொண்டதா? இவர் அத்தத்துவத்தைச் சுவீகரித்துக் கொண்டாரா? என்று சொல்ல முடியாத அளவுக்கு அவருடைய வாழ்க்கையோடு அது இரண்டறக் கலந்துவிட்டது.

தேசிய விடுதலை என்பதை மண்ணின் மைந்தர் (Son of the soil) கோட்பாட்டுடன் இணைத்து, "ஒரு மண்ணின் உழைக்கும் வர்க்கமே அதன் தேசிய விடுதலையை வென்றெடுக்க முடியும்" என்று வரலாற்று அறிஞர்கள் கூறுவதுண்டு. தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்றிருக்கும் பல்வேறு நாடுகளை நோக்கினும் பெரும்பாலும் அது உண்மையாக இருப்பதையே காண்கிறோம்.

இலங்கையிலோ, தமிழ் மக்கள் அதிலும் குறிப்பாக வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் உத்தியோக வர்க்கமாகவே இருந்ததை மறுக்க முடியாது. அதனால்தான் "கோழி மேய்க்கிறதென்றாலும் கோர்ணமேந்தில் மேய்க்க வேண்டும்" என்பது போன்ற பழமொழிகள் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன. இதற்கு முழு இலங்கைத் தீவையும் நோக்க சிங்களப் பகுதி செழிப்பானதாகவும், தமிழ்பகுதி அதனுடன் ஒப்பிட வறட்சியானதாகவும் உள்ள பூகோள அமைப்பும் ஒரு காரணமாகும்.

அத்துடன் இலங்கையை ஆக்கிரமித்த ஐரோப்பிய அரசுகள் அங்கே தங்கள் மொழியில் நிர்வாகத்தை நடத்த உள்நாட்டு உத்தியோக வர்க்கத்தைத் தேடிய பொழுது, தமிழ் மக்கள் எளிதாக அம்மொழிகளைக் கற்றுக்கொண்டு, சிங்களவரோடு ஒப்புநோக்கத் தமக்கிருந்த வறட்சித் தன்மையை அரசு உத்தியோகங்கள் மூலம் நிறைவு செய்து கொண்டனர்.

என்றாலும், அவர்களுடைய ஐரோப்பிய மொழியறிவும், அரச நிர்வாகத் திறனுமே சிங்களவரையும் முந்திக்கொண்டு ஐரோப்பிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் உத்வேகத்தை அவர்களிடம் தோற்றுவித்தது. இவ் விதமாக இலங்கைத் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தொடக்கி, சிங்களவர்களுக்கும் அந்த எழுச்சியைத் தமிழர்களே ஊட்டினார்கள்.

அதன் பயனாக இலங்கைககுக் கிடைத்த சுதந்திரம் சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்றும், தமிழர்கள் இரண்டாம்தரக் குடிமக்களே என்றும் சிங்களவர்களால் அர்த்தப்படுத்தப்பட்டது.

இந்நிலையில்தான் தந்தை செல்வா அவர்கள் இணைப்பாட்சிக் கோரிக்கையை முன்வைத்து, இலங்கையின் மரபுவழித் தமிழீழத் தாயகத்தில் தமிழரசு தோன்றவும், முழு இலங்கையைப் பொறுத்தவரை தமிழீழம், ஸ்ரீலங்கா இரண்டும்கூடிய இணைப்பாட்சி நிலவவும், உலகம் தமிழர்களின் கோரிக்கையை ஒப்புக்கொள்ளவும் வழிவகுத்தார்.

மலையகத் தமிழர்களுடைய வாக்குரிமையும், குடியுரிமையும் அநியாயமாகப் பறிக்கப்பட்டபோது, மொத்தத் தமிழர்களையும் ஓரணியில் திரட்டி இந்திய ஆதரவுடன், தமிழ்த்தேசிய உரிமைகளை இலங்கையில் வென்றெடுத்திட தந்தை செல்வா மேற்கொண்ட முயற்சியின் போது எல்லாத் தமிழ்த் தலைவர்களும் ஒன்றுபட்டு நின்றிருந்தால் சிங்களப் பேரினவாதம் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கமாட்டாது. தமிழினத்தையே பூண்டோடு அழித்துவிடுவோம் என்கிற அளவுக்கு பூதாகார வடிவம் பெற்றிருக்கமாட்டாது.

இதிலிருந்து தமிழர்கள் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டித்தான் மொழியுரிமை, குடியுரிமை, பிரதேசவுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் தமிழீழத் தத்துவம் தந்தை செல்வாவால் கவனமாகக் கட்டியெழுப்பப்பட்டது. பெரும்பாலும் அரச ஊழியத்தையே நம்பியிருந்த ஒரு சமுதாயத்தை, தேசிய விடுதலைக்கு அணியப்படுத்திய அதிசயமும் இலங்கை மண்ணில் தந்தை செல்வாவால் படைத்துக் காட்டப்பட்டது.

www.tamilarangam.net

சாதி வாரியாக, மத வாரியாக , பிரதேச வாரியாகப் பிரிந்து கிடந்த தமிழ் மக்களை தந்தை செல்வாவின் தமிழீழத் தத்துவமே ஒன்றுபடுத்தி, ஒரே மனிதனைப் போல் எழுந்து நிற்கச் செய்தது. அந்த எழுச்சிதான் இன்று தமிழர்களுக்கு அரணாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

அதே நேரம் காலங்காலமாகத் தமிழர்கள் மத்தியில் தத்துவங்கள் தோற்றுப்போனதற்கு நம் தமிழர்களிடமிருந்த தனிமனித வழிபாடும் ஒரு காரணமாகும்.

ஆனால் செல்வாவைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சியிலானாலும் சரி, தமிழர் விடுதலைக் கூட்டணியிலானாலும் சரி, தன்னைப் புகழ்ந்து துதிபாட வருவோரிடம் "என்னைப் பார்க்காதீர்கள், எனது தத்துவததைப் பாருங்கள், தனிமனிதர் போகலாம், வரலாம். தத்துவம் நிலையானது. அதன் வெற்றிக்குப் பாடுபடுங்கள்" என்றே சொல்லிக் கொண்டிருந்தார்.

என்னையொத்த சொந்தக் குடும்பத்தவரிடம்கூட "தந்தை என்பதற்காகவோ, சகோதரன் என்பதற்காகவோ வேறு சொந்தபந்தத்திற்காகவோ எனது கட்சியை நீங்கள் ஆதரிக்க வேண்டாம். நான் முன்வைத்துள்ள தத்துவத்தைப் புரிந்து கொண்டு அதை ஆதரியுங்கள், அதையே நான் விரும்புகிறேன்" என்பார். அதே நேரத்தில் மானுடநேயம், மனிதாபிமான நோக்கில் அனைவரையும் அவர் ஒரு சீராகவே நேசித்தார். ஒரு நிறையாகவே மதிப்பார்.

அதனால்தான் அவருடைய கொள்கைகளை நஞ்சென வெறுத்த சிங்களத் தலைவர்கள் கூட அவரை மதித்தனர். சிங்கள மக்களும் அவரை நேசித்தனர்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்த காந்தியடிகள், ஆங்கில மக்களை நேசித்தார். அதனால் ஆங்கில மக்களும் அவரை நேசித்தனர். ஆங்கிலத் தலைவர்கள் எல்லாம் அவரை மதித்தனர். இந்த மாண்பு செல்வாவிடமும் இருந்தது. அதனால்தான் அவர் மறைந்த போது சிறீமாவோ, ஜெயவர்த்தனா போன்ற அனைத்துக்கட்சித் சிங்களத் தலைவர்களும் முந்திக் கொண்டு அவருக்கு இறுதி மரியாதை செய்யத் திரண்டு வந்தனர். சிங்கள மக்களும் அவருக்காகக் கண்ணீர் சிந்தினர்.

இக்குணமும், நலமும் தமிழீழத் தத்துவத்தை முன்னெடுக்கின்ற அனைவருக்கும் வந்தாக வேண்டும். அப்போதுதான் உலக அரங்கில் தமிழீழத்திற்கான ஆதரவைப் பெருகச் செய்ய முடியும்.

அடுத்து இந்திய தேசத்தந்தை காந்தியாரின் வாழ்க்கையிலிருந்து, ஈழத்தந்தை செல்வாவின் வாழ்க்கையும் நமக்கு ஒரு படிப்பினையைச் சொல்லிக் கொண்டிருப்பதைத் தமிழ் மக்கள் உணர வேண்டும்.

இந்திய சுதந்திரத்திற்காகக் காந்தியடிகள் மேற்கொண்ட பாதை சமாதான - சாத்வீக - சத்தியாக்கிரகமாகும்.

அதனை

"கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தமொன்று ..........." என்று வருணிப்பார்

நாமக்கல் கவிஞர்.

ஆனால், காந்தியார் காலத்திலேயே அதனை நம்பாத, ஒப்புக்கொள்ளாத தலைவாகளும் இந்திய விடுதலைப் போராட்டக் களத்தில் இருந்தனர். நேதாஜி, சுபாஷ் சந்தரபோஸ் போன்ற தலைவர்கள் ஆயுதப் போரின் மூலமே இந்திய விடுதலை சாத்தியம் என்றனர்.

அதற்காக இந்தியாவுக்கு வெளியே இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி, இரண்டாவது உலகப் போரின் போது பிரித்தானியப் படைகளை விரட்டியடிக்க நேதாஜி மேற்கொண்ட வேகத்தையும் தியாகத்தையும் குறைத்து மதிப்பிட முடியாது. எனினும் அது பலனளிக்கவில்லை. காந்தியார் வகுத்த பாதையில் தான் இந்திய சுதந்திரம் கைகூடியது. இன்னும் அயர்லாந்து, லிபியா, எத்தியோப்பியா போன்ற பல தேசிய விடுதலைப் பேராட்டங்களிலும் கூட, அத்தேசிய விடுதலைக் கோட்பாட்டை உருவாக்கியவர், அதற்காக வகுத்த பாதையில் தொடர்ந்து சென்றுதான் விடுதலையைச் சாத்தியமாக்கியிருக்கின்றனர். தமிழ் மறை தந்த திருவள்ளுவரும்,

"செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்"

என்று இதையே எடுத்தோதியுள்ளார்.

அதாவது "ஒரு செயலைச் செய்கின்றவன் செய்ய வேண்டிய முறை, அந்தச் செயலின் உண்மையான இயல்பை அறிந்தவனுடைய கருத்தைத் தானும் ஏற்று, அம்முறையில் செய்வதாகும்" என்று கூறுகிறார்.

ஈழத்தை அடைய அதன் உண்மையான இயல்பறிந்த ஈழத் தந்தையின் கருத்தை - பாதையைக் கடைப்பிடிப்பதும் இன்றியமையாதது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்த அவருடைய நூற்றாண்டு நிறைவு விழாவில் ஈழத்தமிழ் மக்கள் எல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டியது இதுவாகும்.

***(இக் கட்டுரையாளர் தந்தை செல்வா அவர்களின் கனிஷ்ட புதல்வர். இன்று இந்தியாவில் வாழும் ஈழத்தமிழ் அகதிகளின் நலன்களைக் கவனித்து வரும் இவர், இலங்கையில் கொழும்பில் வாழ்ந்த வேளையில் அரசியல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருந்த நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களின் வழக்குகளை பொறுப்பேற்று நடத்தியவர் என்பது குறிப்பிடத் தக்கது.)***

www.tamilarangam.net

# தன்னிகரற்ற தலைவர் தந்தை செல்வா

**மாவை சேனாதிராசா**

தமிழகத்திலே ஈ.வே.ரா.பெரியார், "தந்தை", "பெரியார்" என்ற அழைபெயர்களில் பிரபல்யம் பெற்றிருந்தார். பிரபலமாயிருந்தார். ஈழத்திலோ திரு. செல்வநாயகம் அவர்கள் "தந்தை", "மூதறிஞர்", "ஈழத்துக் காந்தி", "தந்தை செல்வா" என்ற பதங்களால் அன்போடும் பெருமதிப்போடும் தமிழ் பேசும் மக்களால் அழைக்கப் பெற்றார்.

அவர் மெலிந்த உருவமானாலும், நிலைகுலையாக் கொள்கை உறுதிபடைத்தவர். மென்மையாகப் பேசு பவராயினும் வலிமைமிக்க வார்த்தைகளையும், சத்தியம் நிறைந்த வாதங்களையும், இலட்சியம் பொதிந்த கருத்துக்களையும் மக்கள் முன் வைத்தவர்.

தன் சொந்த வாழ்விலும், அரசியல், பொது வாழ்விலும் அவர் நேர்மையும், விலைபோகாத வீரமும், நீதிக்குப் போராடும் குணாம்சமும், எடுத்த கருமத்தில் அயரா உழைப்பும் மாற்றாரிடத்திலும் அவர் மதிப்பை உயர்த்தி வந்தன.

அன்னார் தன் உழைப்பையெல்லாம் மக்கள் விடிவுக்குப் பயன்படுத்தினார்; மக்கள் விடுதலைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். அந்த மக்கள் மனங்களை வென்றார். மக்கள் தலைவரானார். தமிழினத்தின் "தந்தை" யானார். மக்கள் தலைவனாக இருபத்தைந்து ஆண்டுகள் களத்தில் நின்றார். அவர் தான் மூட்டிய விடுதலைக் தீயிலே புடம் போட்ட தங்கமானார். மக்கள் இதயங்களில் தெய்வமானார். அவர் நூற்றாண்டு நிறைவிலும் " எங்கள் தந்தை செல்வா" என்ற ஆத்ம இராகம் இதயங் களிலிருந்து அலையாக எழுகின்றது. எம்மை வழிநடத்தி நிற்கின்றது.

"தந்தை செல்வா எம்மைக் கைவிடமாட்டார்" என்ற நம்பிக்கை தமிழ் பேசும் மக்களிடத்தில் நிறைந்திருந்தது. கொள்கையிலே பிடிவாதக்காரன் ஆனால் மற்றவர் களையும், மாற்றுக் கருத்துக்களையும் மதிப்பதிலே அவர் மாணிக்கம், மக்களை வழிநடத்துவதிலே அவர் பாரதத்தின் தருமர். மக்கள் விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்ததிலே அவர் மகாத்மா. விடுதலை வீரர்கள் இதயத்திலோ அவர் அணையாவிளக்கு.

தந்தை செல்வா நல்ல கிறிஸ்தவனாக விளங்கினார். இருப்பினும் இந்துப்பண்பாடுகளையும் பின்பற்றி வாழ்ந்தார். அனைத்து மதத்தவர்களும் அவரை மதிக்க வாழ்ந்தார். மேலைநாட்டு நாகரிகம், ஆங்கில அறிவு அவரைக் கிட்டியிருந்தாலும் தந்தை செல்வா தன் சொந்த மண்ணின் கிராமியப்பழக்க வழக்கங்களையும் பின்பற்றியதோடு நல்ல எளிய தமிழில் தன் ஆற்றலையும் வெளிப்படுத்தும் திறமையும் பெற்றிருந்தார். தன் திருமண வைபவத்திலும் சரி தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்திய முக்கிய வேளை களிலும் சரி தமிழர் அணியும் வேட்டி, சால்வை, சட்டை என்பவற்றையே அணிந்தார். தான் ஒரு "நாட்டுப் புறத் தமிழன்" என்ற அடையாளத்தை வெளிப்படுத்துவதில் அவர் என்றுமே தயக்கம் காட்டியதில்லை.

கொழும்பு வழக்கறிஞர்கள் சிலரும், செல்வந்தச் செருக் குடையோரும் அவரை யாழ்ப்பாணத்துப் பனங்கொட்டை என்று வர்ணித்தனர். செல்வாவும் தான் யாழ்ப்பாணத்தான், தெல்லிப்பளை நாட்டுப்புறத்தான் என்பதை ஏற்றுக் கொண்டார். தமிழரை வழி நடத்திய கொழும்புத் தலைமைத்துவம் நாட்டுப் புறத்துக்கு மாறிய காலகட்டம் தந்தை செல்வாவுடன் ஆரம்பித்தது.

அதனாற் போலும் 1950களில் கொழும்புச் சீமான்களும் வழக்கறிஞர் சிலரும் தமிழரசுக் கட்சி எப்போ வளர்ந்து, எப்போது பயன்தரப்போகிறது" என்று தந்தையிடம் கேலியாகக் கேட்டபொழுது "இப்போது தான் பனங்கொட்டை நாட்டியிருக்கிறேன், அது வளர்ந்து பயன்தரத்தான் போகிறது" என்று உறுதியாகப் பதில் சொன்னார்.

1930களின் பின் மொழி, இன அல்லது பிரதேச அடிப்படையிலான தலைமைத்துவம் உருவாகியது எனலாம். 1934ல் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் சட்டசபைக்குத் தேர்தெடுக்கப்பட்டதிலிருந்து தமிழ்த் தலைமைத்துவம் புத்துயிர் பெற்றது. 1944ல் தமிழ்க் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட பொழுது திரு. செல்வநாயகம் அவர்களும் காங்கிரசில் இணைந் திருந்தார். துணைத்தலைவராக விளங்கினார். 1947 பொதுத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினராகத் திரு. செல்வநாயகம் தெரிவு செய்யப்பட்டார்.

1947 நவம்பர் 20ம் நாள் இங்கிலாந்து குடியேற்றநாட்டு அமைச்சருக்கு ஒரு தந்தியை தமிழ்க்காங்கிரஸ் அனுப்பியது. இப்பொழுதுள்ளது போன்ற ஒற்றையாட்சி அரசாங்கத்தைத் தமிழர்கள் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தகுந்த மாற்றுமுறை இல்லாத காரணத்தால் நாங்கள் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை 'கோருகின்றோம்" என்று கூறப்பட்டிருந்தது.

1947 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்க்காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு யாழ் நகரில் அளிக்கப்பட்ட வரவேற்பில் ஒற்றையாட்சியில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காதுவிட்டால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய இணைப்பாட்சி முறையை தமிழ் மக்கள் கோர வேண்டிவரும்" என தந்தை செல்வா திட்டவட்டமாத் தெரிவித்தார்.

"இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. எல்லோரும் கொண்டாடுவோம் வாருங்கள்" என்று ஒரு பிரேரணையை நாடாளுமன்றத்தில் அன்றைய பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா சமர்ப்பித்தார். ஆனால் அந்தப் பிரேரணை மீது 03-12-47ல் அன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய திரு. செல்வநாயகம் அவர்கள், .......... அரசாங்கத்தில் பங்கு கொள்வதென்பது என்ன விலைகொடுத்தும் அமைச்சரவைக்குள் நுழைந்து கொள்வதற்கல்ல. மொழியடிப்படையில் வேறுபட்ட பிரிவினர் இருந்தால் அவர்களது அரசியற்பலம் அந்த நாட்டின் அரசாங்கத்தில் தெரியக் கூடியதாயிருக்க வேண்டும். அல்லது நாட்டின் அரசாங்கத்திலோ, எதிர்க்கட்சியிலோ அல்லது பொதுவான ஆட்சி அமைப்பிலோ தனது அரசியற்பலத்தை உணரவைக்க முடியாத அத்தகைய பிரிவினருக்குச் சுதந்திரம் என்பது இருக்க முடியாது. எனவே, சுதந்திரக் கொண்டாட் டத்தில் பங்குபற்ற மாட்டோம்" என அறிவித்தார்.

பின்னா, இந்தியக் குடியுரிமைச் சட்டமூலத்தின் மீது 1948 "டிசம்பர் பத்தாம் நாள் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தந்தை செல்வநாயகம் அவர்கள், "இன்று இலங்கைத் தமிழரை இச்சட்டமூலம் நேரடியாகத் தாக்கவில்லை, ஆனால் மொழிப்பிரச்சினை கிளம்பும் பொழுது நாம் எங்கே நிற்கிறோம் என்பது தெரியும். இந்தியக் குடியுரிமைச் சட்டத்தைத் தொடர்ந்து வரப்போவது ஆட்சி மொழி தொடர்பான சட்டமாகத்தான் இருக்கும். அத்துடன் நின்றுவிடுவார்கள் என்று கூறமுடியாது. இச்சட்ட மூலத்தை நான் எதிர்க்கிறேன். எல்லோரும் சேர்ந்து இதனை எதிர்க்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

திரு. செல்வநாயகம் அவர்களைத் "தீர்க்கதரிசி" என மக்கள் நெஞ்சார மெச்ச வைத்த வைரமணிகள் இவைகள் இவை போன்ற இன்னும் பலவாம். தந்தை இந்த இரு இச்சட்ட மூலங்களை எதிர்த்தார். எதிர்த்து வாக்களித்தார். எதிர்ப்பு இயக்கத்தையே தொடங்கினார். எட்டு ஆண்டுகளின் பின் 1956 ஆனி 5ம் நாள் "சிங்களம் மட்டும் ஆட்சி மொழிச்சட்டமூலம்" நாடாளுமன்றத்தில் வந்தபொழுது, தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம் நிரூபணமாகியது. மக்கள் தந்தை செல்வாவின் தலைமையில் அணிதிரண்டனர்.

தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்த தந்தை அவர்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்பே தமிழினத்தின் சிறுபான்மை மக்களின் பொது எதிரி என வர்ணித்தார். சிங்களத் தலைவர்களின் நேர்மையீனத்தை அறிந்த தந்தை, "அரசியலில்" நம்ப நட, நம்பி நடவாதே" எனும் கோட்பாட்டைக் கடைப்பிடித்து வந்தார்.

"பல்வேறு தேசிய இனங்கள் வாழும் நாட்டிற்குக் கூட்டாட்சி முறையே சிறந்தது" என்று வாதிட்ட தந்தை செல்வநாயகம், இலங்கைக்கான தேசியக் கொடியாகச் சிங்கக் கொடியை அரசு அறிவித்தபோது "அது சிங்கள மன்னரின் கொடியே ஆகும். பல்வேறு இனங்கள் வாழும் நாட்டின் தேசியக் கொடியாக ஒரு இனத்தவரின் கொடியைக் கொண்ட நாடு உலகில் வேறில்லை" என 1949இல் இடம்பெற்ற முதல் மாநாட்டிலேயே கண்டனம் செய்தார்.

இலங்கை நாட்டில் அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களையும், அக்கொள்கையையும் 1949 லேயே தந்தையவர்கள் தீவிரமாக எதிர்த்தார். "கல்லோயாத் திட்டத்தின் கீழ் நீர் பாய்ச்சப்படும் பிரதேசம் தமிழ்ப் பேசும் பகுதியாகிய கிழக்கு மாகாணமேயாகும். தமிழ்ப்பேசும் மக்களின் இப்பிரதேசத்தில் அரசாங்கம் சிங்கள மக்களைக் குடியேற்றத்திட்டமிட்டுள்ளது. தடுப்பாரின்றி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் சில ஆண்டுகளுக்கிடையில் இந்நாட்டில் தமிழ்ப் பிரதேசமே இல்லாதொழியும்" என முதல் மாநாட்டில் அன்றே எச்சரித்தார்.

1957ல் பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் "திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படும்" என்றும் "நிலங்கள் பகிர்ந்தளிக்கும் உரிமை மாநில அரசுக்கே உண்டு" என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்று அவ்வொப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தமிழ்ப் பிரதேசங்களும் தமிழ்பேசும் மக்கள் உரிமைகள் காப்பாற்றப்பட்டிருக்கும்.

சிங்களப் பேரினவாத சக்திகளின் சதிவலைகளில் வீழ்ந்து விடாமல் தமிழ்ப் பிரதேசத்தையும் தமிழ் மக்களையும் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபடுத்தினார் தந்தை செல்வா.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்திஜி கடைப்பிடித்த வழிமுறைகளையும் உபாயங்களையும் தந்தை செல்வநாயகம் பின்பற்றி வந்துள்ளமையை நாம் அணுகி ஆராய வேண்டும்.

1956 ஆனி 5ல் சிங்களம் ஆட்சி மொழிச்சட்ட மூலம் வந்தபொழுது அதனை எதிர்த்து கொழும்பு காலிமுக மைதானத்திலே தந்தை செல்வா சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடக்கினார். முதன்முறையாக சத்தியாக்கிரகிகளுக்கெதிராக வன்முறை ஏவிவிடப் பட்டது. தந்தை செல்வா பொறுமையை இழக்கவில்லை.

1957 ல் சிங்கள ஆட்சி மொழியில் சின்னமாக "சிங்கள ஸ்ரீ" தமிழ்ப் பிரதேசங்களில் நுழைக்கப் பட்டபோது தந்தை செல்வா எதிர்ப்பியக்கத்தைத் தொடங்கினார். தென்னிலங்கையில் இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டது. மட்டக்களப்பில் கைது

www.tamilarangam.net

செய்யப்பட்ட தந்தை செல்வா நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார். கைதி உடையில் சிறையில் தந்தை செல்வா தவமிருந்தார்.

1961ல் அன்றைய அரசு தமிழ் மாநிலங்களில் சிங்கள ஆட்சி நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தபோது ஐந்து தமிழ் மாவட்டங்களிலும் மக்களைத் திரட்டி மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார் தந்தை. தமிழ்ப் பிரதேசங்களில் அரசு செயலிழந்தது. அந்நிலையில் அன்றைய ஆட்சி பீடம் அவசர காலச்சட்டத்தைப் பிரகடனப்படுத்தி தமிழ்த் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்ததோடு இராணுவத்தை ஏவிச் சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் அடக்கியது. இவை கசப்பான வன்ம உணர்வுகளை மக்களிடம் ஏற்படுத்தியதெனலாம்.

தந்தை செல்வா நடத்திய மக்கள் இயக்கத்தையும், காந்திய - அஹிம்சை போராட்ட நெறிமுறைகளையும் மதிப்பீடு செய்வோமானால், துன்பத்தை அதிகம் தாங்குபவர்களே இறுதியில் வெறறி பெறுவர்" எனும் சிந்தாந்தத்தில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தமையை அறிந்து கொள்ளலாம்.

தந்தை செல்வா நடத்திய இத்தகைய போராட்டங்களின் பயனாகவும், தமிழ் முஸ்லீம் மக்களின் ஒற்றுமையினாலும், பிரதமர் பண்டாரநாயக்கா 1957லும், பிரதமர் டட்லி சேனநாயக்கா 1965லும் தந்தை செல்வாவுடன் அரசியல் உடன்படிக்கைகளைச் செய்யும் நிர்ப்பந்தங்களுக்கு ஆளானார்களா.

இவ்வுடன்படிக்கைகள் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இன்றும் அடிப்படை அம்சங்களாகக் கொள்ளப்படுகின்றன.

1987ல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரே மாநில நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. அதிகாரப் பகிர்வுக்கான அடிப்படைச் சட்ட வரைவுகள் அரசியலமைப்பின் 13வது திருத்த சட்டத்தினால் இடம்பெற்றன. தமிழும் சிங்களத்துடன் சமஉரிமையுள்ள ஆட்சிமொழியாக அரசியலமைப்பில் 16வது திருத்தத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவை முழுமையான தீர்வாக இல்லை எனினும் ஒரு சமஷ்டி அரசியலமைப்புக்கான திறவுகோலாக அமைந்தன. இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் 1995 ஆகஸ்ட் 3ம் நாள் முன்வைத்த இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம், 1987ல் கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட 13வது அரசியலமைப்புத் திருத்தம், 16வது திருத்தம் என்பவைகளுக்கு மேலும் முன்னேற்றகரமான முன்மொழிவுகளை கொண்டிருந்தன. மாநில-மத்திய அரசுகளுக்கிடையிலான அதிகாரப் பகிர்வுத்திட்டம் மேலும் தெளிவானதாகவும் திட்டவட்டமானதாகவும் வரையப்பட்டுள்ளதுடன் இப்பொழுதுள்ள "ஒற்றையாட்சி அரசியலமைப்பு வரைவு ஒழிக்கப்பட்டு கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படைத் தன்மைகளை கொண்ட அரசியலமைப்பு வரைவு ஏற்படவும் வழிவகுத்துள்ளமை குறிப்பிடத் தகுந்த முன்னேற்றமாகும். இப்பிரேரணைகளில் தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களின் தன்னாட்சி உரிமை, வடக்கு - கிழக்கு மாநிலத்தில் வாழும் தமிழ்ப்பேசும் மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப் பட்டிருப்பின் இன்னும் முன்னேற்றகரமான தாயிருந்திருக்கும். எவ்வாறெனினும் இனப்பிரச் சினைக்கான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு 1995 "ஆகஸ்ட்" 3ம்நாள் பிரேரணைகள் மேற்கொண்டு பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு நல்ல அடிப்படைகளாகக் கொள்ளலாம்.

1949ல் தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம் மிக்க தலைமையுரையையும், 1951 மற்றும் 1956 திருமலை மாநாட்டுத் (தமிழரசுக் கட்சி) தீர்மானங்களையும், தந்தை செல்வாவுடன் சிங்களத் தலைவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்களையும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் 1995 ஆகஸ்ட் 3இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவின் பிரேரணைகளையும் ஆழ்ந்து நோக்குவோமாயின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளிலும், முன்மொழிவுகளிலும் படிமுறையான, முன்னேற்றகரமான பரிணாம வளர்ச்சி ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

தந்தை அவர்கள் 1972 ஐப்பசி 2ம் நாள் இலங்கையின் புதிய அரசியலமைப்பை எதிர்த்து நாடாளுமன்றப் பதவியைத் துறந்தார். மீண்டும் 1975 பெப்ரவரி6ம் நாள் நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிட்டார். "தமிழ் மக்கள் இழந்த சுதந்திரத்தை மீட்க வாக்களியுங்கள்" என்று காங்கேசன்துறைத் தொகுதி மக்களிடம் கேட்டார், பெரு வெற்றியடைந்தார். நாடாளுமன்றத்திலும் "தமிழ் மக்கள் தாம் இழந்த சுதந்திரத்தை மீட்க ஆணை தந்துள்ளனர்" என அறிவித்தார்.

1972ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த புதிய அரசியலமைப்பு தந்தை செல்வாவிடத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இராஜதந்திரோபாயமும் தீர்க்க தரிசனமும் நிறைந்த தந்தை செல்வா, தமிழ் மக்களின் விடுதலைக்கு இந்தியாவின் ஆதரவு அவசியம் எனக்கருதி திரு. அமிர்தலிங்கம் அவர்களையும் அழைத்துக் கொண்டு இந்தியா சென்றார். இந்தியத் தலைவர்களிடம் ஆதரவு தரக் கோரினார். அமோக ஆதரவையும் பெற்றார்

தமிழினம் விடுதலை பெறவேண்டுமானால் தமிழ்மக்களை ஒன்று திரட்ட வேண்டுமென்று கருதிய தந்தை செல்வா 1976ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்.

www.tamilarangam.net

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் நிறைவேறிய "சுதந்திரத் தமிழீழம்" நிறுவுந் தீர்மானத்தை அவசர காலச்சட்டத்தையும் மீறி பிரசாரம் செய்தார்கள் என்ற காரணத்தால் இராஜத்துரோகக் குற்றம்சுமத்தி திருவாளர்கள் அமிர்தலிங்கம், வ.ந.நவரத்தினம், துரைரத்தினம், கா.பொ.இரத்தினம் அவர்களுக்கெதிராக அரசு "ரயல் - அட் - பார்" (Trial - at - Bar) நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அந்த வழக்கில் தந்தை செல்வா தலைமையில் திருவாளர்கள் ஜீ.ஜீ.பொன்னம்பலம், திருச்செலவம், புள்ளேநாயகம் உட்பட அறுபத்தேழு வழக்கறிஞர்கள் தமிழ் மக்கள் சார்பில் வாதாடினர்; ஒற்றுமை வென்றது.

தமிழ்ப் பேசும் மக்கள் தனியான ஒரு தேசிய இனம். அந்தத் தேசிய இனத்திற்குத் தனது அரசியல் எதிர் காலத்தை தீர்மானிக்கின்ற சுயநிர்ணய உரிமை உண்டு என்று தந்தை செல்வா நீதிமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றுகளிலும் வாதாடினார், அதற்காக தன்னை அர்ப்பணித்து உழைத்தார்.

தமிழ்ப் பேசும் மக்கள் தமக்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், இலங்கையில் மத்திய கூட்டாட்சி அரசின் அங்கமாகத் தன்னாட்சி செய்யவும், வேண்டுமானால் பிரிந்து சென்று சுதந்திர அரசை நிறுவவும் உரிமை உள்ளவர்கள் என்பதை தந்தை செல்வா மக்கள் மன்றத்திலே நிரூபித்தார்

தமிழ் மொழி அழிந்தால் தமிழ் இனம் அழிந்து விடும்; தாயகத்தை இழந்தால் தமிழர் தேசிய இன அடையாளத்தை இழந்து விடுவர்: தமிழ் வாழவேண்டுமானால் தமிழ் ஆழவேண்டும்; தமிழன் வாழவேண்டுமானால் தமிழன் தன்னைத் தானே ஆளவேண்டும் என்ற கோட்பாடுகளில் தமிழ்த் தேசிய வாதத்தைக் கட்டி எழுப்பியவர் தந்தை செல்வா.

பேரழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் போர் முடிவுக்கு வரவேண்டுமெனில் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பும் சுயகௌரவங்களும் உத்தரவாதப் படுத்தப்படக் கூடிய ஒரு தீர்வு ஏற்பட்டாக வேண்டும். அத்தகைய தீர்வுகள் தந்தை செல்வா அவர்கள் எடுத்த தீர்மானங்களின் அடிப்படையில்த்தான் ஏற்படமுடியும் என்கின்ற அளவிற்கு அவர் விட்டுச் சென்ற தத்துவங்கள் வாழ்கின்றன; எங்களுக்கு வழிகாட்டுகின்றன.

***(இக் கட்டுரையாளர் இளமையிலிருந்து தந்தை செல்வா அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்பவர். தமிழினத்திற்காக தடியடிகள், தடுப்புக்காவல்களையும், சித்திரவதைகளையும் சந்தித்தவர். இவர் ஒரு முன்னாள் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது)***



**1972ம் ஆண்டு இந்தியாவிற்கு ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டும் நோக்கத்துடன் மேற்கொண்ட அரசியல் பயணத்தின்போது அமரர். அ. அமிர்தலிங்கம் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி ஆகியோருடன் தந்தை செல்வா காணப்படுகின்றார்**

www.tamilarangam.net

# தமிழ் ஈழத்துக் காந்தி

## அமரர் சட்டத்தரணி எஸ்.கே.மகேந்திரன் M.A

எம் மண்ணின் மகத்துவத்தை என்றும் எண்ணி நிற்கின்ற என் இனிய தமிழ்நெஞ்சங்களே!

இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் பெரும் தலைவராக தமிழர் தந்தையென்றும் ஈழத்துக் காந்தியென்றும் மூதறிஞர் என்றும் போற்றிப் பேசப்பட்ட பெரும் தலைவராக முப்பது ஆண்டு களுக்கு மேலாக முத்தமிழர்கள் கொண்டாடிய திருவாளர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் பூதவுடல் தகனமாகி இம் மாதத்தோடு பதினைந்து ஆண்டுகள் கடந்தோடி விட்டன. தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று சொல்லி தமிழ்த்தேசிய இனத்தை தட்டியெழுப்பிய தலைவர் திரு ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் பாதையில் அரசியலில் புகுந்த தந்தையவர்கள் பத்து லட்சம் மலையகத் தமிழரின் குடியுரிமையும் வாக்குரிமையும் ஐக்கிய தேசியக் கட்சியினரால் பறிக்கப்பட்ட போது அதை எதிர்த்து தனி வழி கண்டு இலங்கையின் அரசமைப்பு ஒற்றையாட்சியமைப்பாக இல்லாமல் சோவியத் ரஷ்யா, கனடா, இந்தியா, சுவிற்சர் லாந்து போன்ற நாடுகளைப் போன்று சமஷ்டி அரசமைப்பாக அமைய வேண்டுமென்று குரல் கொடுத்து 1949இல் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தார்.

கட்சியை ஸ்தாபிக்கும் போது அவரோடு சேர்ந்து செயற்பட்ட கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், திருமலைஜோதி என்.ஆர்.ராஜவரோதயம், டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன், தமிழ ரசு மூளை என்று வர்ணிக்கப்பட்ட திரு வ.நவரத்தினம், தள பதி அ.அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் என்றுமே இலங்கை தேசிய நீரோட்டத்தில் கலக்காது தமிழ்த் தேசியவாதத்தைக் கைக் கொண்டமையை நோக்கும் போது எத்தகைய இலட்சிய இதயம் கொண்டோரோடு இவர் இணைந்திருந்தார் என்பதை நாம் அறியலாம்.

1950களில் தன் கட்சி செயலாளரான வ.நவரத்தினம் எழுதிய ஆங்கில நூலை சர்வதேச மகாநாடுகளில் தவள விட்டதன் மூலம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை முதன் முதலில் தரணிக்கு எடுத்துச் சொல்ல வழிவகுத்தவர் இவர். 1961ம் ஆண்டு முழுத்தமிழினத்தையும் திரட்டி சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தி தமிழ்ப்பகுதிகளில் சுமார் நான்கு மாத காலத்திற்கு அரச இயந்திரத்தை முடக்கியமையும் 1956ம் ஆண்டு நடைபெற்ற திருமலை யாத்திரையும் தமிழரசு தபாற் கந்தோரை சத்தியாக்கிரக காலத்தில் நடத்தி தமிழரசு முத்திரையை வெளியிட்டு போட்டியரசை நடத்தியமையும் இவரது தலைமையின் முத்தாரங்களாகக் கணிக்கப்பட்டது.

ஒரு கிறிஸ்தவராகப் பிறந்து கிறிஸ்தவராக வாழ்ந்த போதும் இந்துக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட தமிழினத் திற்கு தலைமை தாங்கியதன் மூலம் மதமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் மக்கள் நம்பிக்கையைப் பெற்ற பெருந்தலைவர் என்ற பெருமையைப் பெற்றவர் மூதறிஞர் தந்தை செல்வநாயகம். 1970 நடுப்பகுதியில் இலங்கையின் சுதந்திரதினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக புத்தளம் பெரிய பள்ளிவாசலில் புகுந்த பொலிசார் அங்கு தொழுகை யில் இருந்த முஸ்லிம்களைத் தாக்கி சிலரை சுட்டுக் கொன் றார்கள். ஸ்ரீமாவோ அரசின் இந்த அராஜகத்தை எந்த ஒரு முஸ்லிம் தலைவரும் கண்டிக்காத அளவுக்கு பாராளு மன்றத்தில் உரையாற்றியதன் மூலம் முஸ்லிம்களும் தமிழர் களின் அங்கமே என்று முரசறைந்த முத்தான தலைவர் தந்தை செல்வநாயகம்.

தென்தமிழீழமான அம்பாறை, மட்டக்களப்பு வீதிகளில் பயணம் செய்கின்ற போது வீதிகளின் இருமருங்கும் நிறைந்திருக்கும் நெல்வயல்களில் நெல்மணிகள் பூத்துக் குலுங்குவதை காணும் போதெல்லாம் இவற்றை நாம் இழக்க முடியுமா என்று என் போன்ற இளைஞர்களைப் பார்த்து இடைக்கிடை கேட்பதன் மூலம் தமிழர் பிரதேசங்களில் தான் வைத்திருந்த மாறாத பற்றையும் காதலையும் பறைசாற்றிய பெரும் தலைவர் தந்தை செல்வா.

ஆயிரமாயிரம் இளைஞர்கள் இன்று தமிழீழ வேட்கை மீதூரப் பெற்று தம் உயிர்களை களப்பலி கொடுத்ததோடு மாத்திர மல்ல இன்றும் தமிழ் மண்ணுக்காய் இரத்தம் சிந்த சித்தம் கொண்டு நிற்கிறார்கள் என்றால் அதற்கு மூலகாரணம் 1975ம் ஆண்டு யாழ்ப்பாண கச்சேரி வளவில் அவர் செய்த தமிழீழ பிரசங்கம் தான் என்றால் அது மிகையல்ல. வண்டமிழர்க்கு தண்டமிழ் ஈழம் தேவையென்பதைக் கூறி அது வில்லங்கமான காரியம் என்றும் சொன்னதன் மூலம் தமிழீழம் அமைப்பதற்காக மக்கள் பல தியாகங்களை செய்ய வேண்டியிருக்குமென்பதை அன்றே கோடிட்டுக் காட்டிய தலைவர் அவர்.

1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஸ்ரீமாவோவின் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்கப் போகிறது என்று தெரிந்ததும் சோல்பரி அரசமைப்பு குப்பைக்கூடைக்குள் போடப்பட்டு புதிய சிங்களக் குடியரசு அமைப்பு உருவாகுமென்பதையும் அதன் விளைவாக தமிழினம் பன்மடங்கு இன்னல்களுக்கு முகம் கொடுக்குமென்பதையும் புரிந்து கொண்டு தமிழர்களை இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்ன தீர்க்கதரிசி தந்தை செல்வா. தந்தையின் தீர்க்கதரிசனம் இன்று நிதர்சன மாகி விட்டதை கடவுளை நம்பிக் கொண்டு காலம் கழித்து தமிழீழத்தில் துயரக்கடலில் நிற்கின்ற நம் உடன்பிறப்புக்களின் நிலை எடுத்துக் காட்டுகின்றது.

குடியரசின் அரசமைப்புக்கு தமிழர்களின் ஒப்புதல் இல்லை யென்பதைக் காட்டுவதற்காக தன் காங்கேசன்துறை பாராளு மன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததன் மூலம் பதவியை விட தமிழின நலனே தனக்கு முக்கியமென்று காட் டிய மூதறிஞர் இவர். தந்தையவர்களை இலங்கைத் தமிழர் கள் மாத்திரமல்ல அனைத்துலக தமிழர்களும் நேசித்தார்கள் என்பதை அவர் மரணச் செய்தி கேட்டதும் திராவிட முன்னேற் றக்கழகம் ஆற்காடு வீராசாமி, பா.உ.சண்முகம் ஆகியோரை யும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அன்றைய அமைச்சர் நாஞ்சில் மனோகரனையும் தமிழீழத் திற்கு அனுப்பி அனுதாபம் தெரிவித்ததையும் தமிழ்கூறும் நல்லுலகம் அனுப்பி வைத்த அனுதாப செய்திகளும் எடுத்துக் காட்டு கின்றன. இலட்சோப இலட்சம் மக்கள் கதறியழ பல்லாயிரம் மக்கள் முன்னிலையில் உயிர் தமிழுக்காய் வாழ்ந்த தந்தை யினுடல் தீக்கிரையான யாழ்ப்பாண முனியப்பர் கோயில் முன்றலில் அவர் நினைவுச்சின்னம் அமைத்து தமிழர்கள் தந்தை மீது தாம் கொண்ட பாசத்தைக் காட்டினார்கள்.

தமிழீழத்தில் தமிழர்களை நிம்மதியாக வாழ வைப்பதே தந்தையவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும் என்று கூறி தந்தையின் ஆத்ம சாந்திக்காகவும் அவரின் ஆசிக்காகவும் பிராத்தித்து விடைபெறுகிறேன் நன்றி வணக்கம்.

(அமரர் சட்டத்தரணி எஸ்.கே.மகேந்திரன் எம்.ஏ. அவர்களால் வெளியிடப்பட்ட மண்மாருதம் சி.டி. இழைத்தட்டில் இருந்த அவரது பேச்சில் இருந்து எடுத்து பிரசுரிக்கப்படுகிறது)

www.tamilarangam.net

# தமிழரைத் தாங்கிய தலைவர்!

**கவிஞர் வி. கந்தவனம்**

தந்தை செல்வா தமிழீ ழுத்தவர்
சிந்தை கவர்ந்த செம்மனத் தலைவர்!

ஈழத்துக் காந்தி ஆழத்து முத்துச்
சுதந்திர வித்து சுகந்தரு சொத்து!

சிங்கள மக்களும் செந்தமிழ் மக்களும்
தங்கள் தங்கள் தனித்துவம் பேணிக்
கூட்டர சாட்சியிற் குறைவற வாழ்தலை
நாட்ட விழைந்த நடைமுறைச் சித்தர்!

சித்தம் தெளியா ஆளும் இனத்தவர்
பித்துப் பிடித்துப் பெருஞ்சதிர் கொள்ளச்
சத்தியம் தருமம் சனநா யகமென்(று)
உத்தம நெறியில் ஒற்றுமை பேணிப்
பாங்குறத் தமிழரைத் தாங்கிய தலைவரைத்
தாங்குவர் என்றும் தமிழர்
தேங்கிய சரித்திரச் சிறப்புக ளோடே!



www.tamilarangam.net

## வீரகேசரி நாளிதழின் பார்வையில்.............

# தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழா



இலங்கைத் தமிழினம் காலத்துக்கு காலம் பல தமிழ் தலைவர்களைப் பெற்று வந்துள்ளது. அந்த வரிசையில், சமகால அரசியல் நீரோட்டத்தையும் தமிழினத்தின் போராட்ட வரலாற்றையும் முன்வைத்து நினை வோட்டத்தை மீட்டும்போது மனத்திரையில் நீங்காது நிலைத்திருப்பவர் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களே!

சிங்களப் பெரும்பான்மை வாதம் நாட்டில் வேரூன்றி சிறுபான்மை மக்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டு, தமிழ் இனம் ஓரங்கட்டப்படுவதை தீர்க்கதரிசனத்தோடு உணர்ந்து அவற்றுக்கு எதிராக போர்க்கொடி தூக்க வைத்தவர் அவரே! தமிழினம் தன்னை மறந்து வாழ்ந்த காலத்தில் சூழவிருக்கும் ஆபத்துக்களை பட்டோலை போட்டு எடுத்துச் சொல்லி விடுதலை உணர்வுகளை உரமூட்டியவரும் அவரே.

வடக்கு, கிழக்கு, மலையகம் என்று கூறுபட்டுக்கிடந்த தமிழ் மக்களை தட்டியெழுப்பி, இனத்துக்கு வரக்கூடிய ஆபத்தை முன்கூட்டியே எடுத்துச் சொல்லி அரசியல் ரீதியாக ஒன்றுபட வைத்தவரும் இவரே! சத்தியாக் கிரகம் என்றும் வீதி மறியல் ஆர்ப்பாட்டம் என்றும் அண்ணல் மகாத்மா காந்தி காட்டிய அஹிம்சை வழிப்போராட்டத்தை தொடக்கி, தமிழ் மக்கள் மத்தியில் இன எழுச்சிக்கும் விழிப்புணர்வுக்கும் வித்திட்டவரும் அவரே! அவர் இன்று உயிருடன் இருந்திருப் பாரேயானால் எதிர்வரும் மார்ச் 31ம் திகதி தமது நூறாவது பிறந்த தினத்தை கொண்டாடியிருப்பார்.

தமிழினத்தின் தந்தை என்றும் தீர்க்க தரிசி என்றும், எல்லோராலும் அன்பொழுக அழைக்கப்பட்ட இவருக்கு, அவர்பால் அன்பு கொண்ட தமிழ் பெருமகன்மார் ஒன்றுகூடி நாடளாவிய ரீதியில் நூற்றாண்டு விழாவை கொண்டாட முடிவு செய்திருப்பது காலத்தின் தேவைமட்டுமல்ல வரவேற்கப்பட வேண்டியதுமாகும்.

நாடு இன்று பரந்துபட்ட அளவில் துப்பாக்கிக் கலாசாரத்தில் மூழ்கி விடுபட முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றமை கண்கூடு. இந்த நிலையில் நமக்கு முன்னே இருந்த அரசியல் தலைவர்கள் எவ்வாறு நாட்டின் அரசியல் பரிபாலனத்தை நாட்டு நடப்புகளை அநாவசியமான உயிர் இழப்புகளுக்கு இடமளிக்காமல், வாழு, வாழவிடு என்ற கோட்பாட்டை அடிநாதமாகக் கொண்டு மக்களை நெறிப்படுத்தி வாழ்ந்து காட்டினார்கள். வாழ வைத்தார்கள் என்பதனை அந்தப் பெரியாருக்கு விழாவெடுத்து நினைவு கூருவது வரவேற்கப்பட வேண்டியதே.

தந்தை செல்வா என்றுமே சொல்லின் செல்வராக விளங்கவில்லை. சிறிது பேசி, பெரியகாரியங்களைச் செய்யும் செயல்வீரனாகவே திகழ்ந்தார். "நம்பிக்கை மலைகளையே அசைக்கும் விசுவாசமுள்ளவராய் இரு என்ற விவிலிய வாசகங்களையே அவர் அடிக்கடி கூறுவதுண்டு. கொள்கைகள் வேறுபட்டிருந்தாலும் மாற்றாரும், மதித்துப் போற்றும் பண்புள்ள, படாடோபமற்ற தலைவராக அவர் விளங்கினார்.

மலையக தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட போது "இன்று அவர்களுடைய கழுத்து அறுக்கப்படுகிறது. நாளை நமக்கும் இதே கதி தான்" என்று தீர்க்க தரிசனத்தோடு அன்றே கூறியவர். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற ஒரு நாட்டில், ஒற்றை ஆட்சி தொடருமானால், அது ஓரினத்தின் வாழ்வுக்கும் மற்றைய இனங்களின் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் என்று உணர்ந்து இணைப்பாட்சித் தத்துவத்தை முன்வைத்தவர். ஆனால், அன்றைய ஆட்சியாளர்கள் அதற்கு செவிமடுக்க மறுத்துவிட்டனர். தமிழினம் தொடர்ந்தும் ஏமாற்றப்படும் இனமாக வாழ்வதை அவர் விரும்பவில்லை. சலுகைகளை கெஞ்சிப் பெறலாம். உரிமைகளைக் கேட்டுப் பெறலாம். விடுதலையை ஒன்றுபட்டு போராடித்தான் பெறமுடியும் என்று உணர்த்தியவர்.

இது கடந்த கால வரலாறு இன்று அனுபவித்து வரும் துன்ப துயரங்களுக்கு விடிவு எப்போது என்று தமிழினம் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாற்றையும் செயற்றிறனையும் இளைய பரம்பரையினர் மத்தியில் நூற்றாண்டு விழாக்கள் மூலம் பறைசாற்ற முன்வந்திருப்பது நொந்து போயிருக்கும் நெஞ்சங்களுக்கு ஓரளவாவது ஒத்தடம் கொடுப்பதாக இருப்பதோடு வாழ்வில் தெம்பையும் ஏற்படுத்துவதாயிருக்கும். எனவே நூற்றாண்டு விழா வெற்றிகரமாக நடைபெற சம்பந்தப்பட்ட சகலரும் ஒத்துழைப்பு வழங்குவது வரவேற்புக்குரியதாகும்.

*(18-02-1997 அன்று வீரகேசரியில் வெளிவந்தது)*

www.tamilarangam.net


கணனி போல் நினைவு கொள் ஆற்றல் மிகுந்தவர்!
கணம் எனும் களம் எனில் கலங்கிடா திருந்தவர்!!
இனம் படு துயரினில் இவர் ஆழ்ந்து தோய்ந்தவர்!
கனம் மிகு செல்வா மிகு கண்ணியம் மிகுந்தவர்!!

கனடாவாழ் தமிழர் எடுக்கின்ற
தந்தை செல்வா நூற்றாண்டு விழா சிறக்க
வாழ்த்தும்

Computek
INSTITUTE OF TECHNOLOGY

SCARBOROUGH CAMPUS
2390 Eglinton Ave. East, Suite 248
Scarborough, ON M1K 2P5
Tel: (416) 285-9941

ETOBICOKE CAMPUS
222 Dixon Rd. Suite 306
Etobicoke, ON. M9P 3S5

www.tamilarangam.net


தமிழின்
சுத்தம், சுகம், சுகந்தம்
அத்தனையும் இங்கே

நாளொன்றுக்கு 24 மணித்தியாலங்கள்
ஒரு கலைப்பட்டாளம் கண்ணியமாய் நடத்தும்
இலக்கியப் போராட்டம்! அத்துடன் இலட்சியப் போராட்டம்!!

கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**CANADIAN THAMIL BROADCASTING CORPORATION**

**86 LAIRD DRIVE (REAR) TORONTO, ON. M4G 3V1**

**(416) 429-2374, (416) 429-5688, (416) 429-5237, (416) 429-7512**

**VOICE: (416) 429-5290**

**FAX: (416) 429-7654**

**www.ctbc.com**

# C. T. B. C.

www.tamilarangam.net

# INTERNATIONAL INSURANCE FINANCIAL SERVICES
# BROKERS

⇒ We represent oldest, largest, leading, well managed, mutual and stock insurance companies

⇒ We shop around, the BEST for our clients needs, affordability and choice.

## We arrange all type of Insurance

⇒ எம்மால் சகலவித காப்புறுதிகளும் உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில், நியாயமான விலையில், உத்தரவாதத்துடன். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம், ஒழுங்கு செய்து வழங்கப்படும்

⇒ **ஆயுள் காப்புறுதிக்கு விசேட ஆலோசனைகள் உண்டு**

| | |
|---|---|
| • Life Insurance All kinds | • ஆயுள் காப்புறுதி |
| • Commercial | • வர்த்தகம் |
| • Auto | • வாகனம் |
| • Disability | • வலது குறைந்தோர் |
| • Home | • வீடு |
| • Travel | • பிரயாணம் |
| • Industrial | • தொழிற்சாலை |
| • Mortgage | • அடமானம் |
| • Education | • கல்வித் திட்டம் |
| • Mutual Funds | • முதலீட்டுத் திட்டம் |
| • Segregated Funds | • நிதி சேமிப்புத் திட்டம் |
| • Health | • சுகாதாரம் |
| • RRSP | • ஓய்வூதியம் |
| • Investments | • மூலதனம் |


**A. Veluppillai**

*(Insurance Broker)*

காப்புறுதி ஆலோசகர்

**சர்வதேச காப்புறுதி நிதிச்சேவை**

*call or write - VEL*

**அழையுங்கள் - வேல்**

2190 Warden Ave. Suite # 203
*(Warden & Sheppard)*
Scarborough, Ont., M1T 1V6

**Tel: (416) 499-9596**

**Fax: (416) 499-9382**


**Life Section Under International Insurance and Property Section Under BST Insurance**

**Twelve Continuous Years in Canadian Insurance Industry**

கனடாவில் 12 வருட காப்புறுதி அனுபவமுள்ள தமிழரின் ஸ்தாபனம். எப்பொழுதும் சிறந்த சேவைகள் உங்களுக்கு உண்டு. சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருமலையைக் காத்த திருமகன்

(திரு.வீர சுப்பிரமணியம், முன்னாள் திருமலை நகராட்சிமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளரும்)

திருகோணமலையை ஆள்பவன் முழு உலகையும் ஆள்வான் என்ற கருத்தை பிரான்சு நாட்டின் சக்கரவர்த்தி ஆயிருந்த நெப்போலியன் கூறியதுண்டு. இங்கிலாந்தின் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் ஒரு சமயம் கோபமாக தனது செயலாளரிடம் திருகோணமலை பற்றி அறிந்திராத உங்களுக்கு எனக்குச் செயலாளராயிருக்க தகுதி கிடையாது என்று கூறினாராம்.

இத்தகைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணலையை முன்னணி நாடுகள் பல தமது ஆதிக்கத்தில் கொண்டு வருவதற்கு பிரயத்தனம் செய்தன. செய்கின்றன.

தீர்க்கதரிசனம் நிறைந்த எம் தந்தை செல்வா அவர்கள் தமிழர்களின் தலைநகராகவும், பெரும் சொத்தாகவும் திருமலையைக் கருதியதோடு வாழ்நாள் முழுவதும் அதற்கே முதன்மை இடத்தைக் கொடுத்தார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தையும் அவர் அங்கு அமைக்கப்பாடுபட்டார்.

சுதந்திரத்திற்காகவும், உரிமைக்காகவும், இன விடுதலைக்காகவும் பல்வேறுநாடுகளில் பல விடுதலை வீரர்கள், தீர்க்கதரிசிகள், தியாகிகள் வாழ்ந்துள்ளார்கள். வாழ்கின்றார்கள். தமிழர்கள் மத்தியில் தீர்க்கதரிசியாக வாழ்ந்து, இழந்த தமிழ் மக்களின் உரிமைக்காக சாத்வீக முறையில் போராட்டங்களை நடத்தி வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தாயகம் என்னும் தனித்துவத்தை யாவரும் அறியச் செய்தவர் பெரியார் தந்தை செல்வா அவர்களே. அப்பெரியாருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நடத்துவதை நினைவு கொள்வது காலத்தின் தேவை. அது எம் கடமையுமாகும்.

நான் கல்லூரியில் படித்த காலத்தில் தமிழரசுக் கட்சியின் கொள்கையினால் கவரப்பட்டவனாக இருந்தும், முழுமையாக அதன் அரசியல் பணியில் இணைந்து கொண்டது, திருமலை ஜோதிஆகிய திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்களின் தேர்தல் காலத்தில் தான். திருமலை ஜோதி இராஜவரோதயம் அவர்கள் திருமலை மண்ணைக் காப்பாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் தமிழர் குடியேற்றங்களை ஏற்படுத்தி செயற்படுத்திய முறைகளையும் எண்ணிப் பார்க்கிறேன். தந்தை செல்வநாயகம் அவர்கள் திருமலைக்கு பல தியாகங்களைச் செய்யக்கூடிய ஒருவரைத் தீர்க்க தரிசனத்துடன் அன்று தெரிவு செய்ததையும் 1958 முதல் 1961 வரை அவரை தமிழரசுக் கட்சியின் தலைவராக வைத்திருந்து திருமலை மண்ணை மகிமைப் படுத்தியதையும் அவரது நூற்றாண்டு விழா வேளையில் நினைக்கிறேன்; நெஞ்சம் பூரிக்கிறேன்.

தந்தை செல்வா அவர்களின் வழிகாட்டலில் திரு. இராஜவரோதயம் அவர் செய்த அளப்பரிய சேவையின் சாட்சியாக அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், வரோதயநகர் (அலெக்ஸ் தோட்டம்), நடராசு நகர், கன்னியா குடியேற்றம், பாலையூற்று, பன்குளத்தில் உள்ள விவசாயக் குடியேற்றம், கோபாலபுரம் (நிலாவெளி), இப்படியானவைகளும் இன்னும் பல சிறுசிறு குடியேற்றங்களும் நிறுவப்பட்டன. இன்றும் திருகோணமலையைத் தமிழர் பூமியாக தலைநிமிர்ந்து நிலைத்து நிற்க வழிவகுத்திருப்பது இந்தப் பாரிய குடியேற்றங்கள் தான். இவற்றைச் செய்த மேதையைத் தமிழினத்திற்கு இனங்காட்டிய தலைவரின் நூற்றாண்டில் நினைவு கூருவது அவரைத் திருமலைக்கு தேர்ந்தெடுத்த தந்தை செல்வாவின் புத்திக் கூர்மைக்கும் இனங்காணும் தன்மைக்கு நாம் சூட்டும் புகழாரமாகும்.

இன்று திருகோணமலை நகராட்சி மன்ற எல்லைக்குள் அதன் இதயமாக விளங்கும் உவர் மலைப் பிரதேசம் 30 வருடங்களுக்கு முன்னர் காடு. இவ்விடத்தை தமிழர்களின் வதிவிடமாக்குவதற்கு நாம் முன்னின்று செய்த போராட்டம் மிகவும் நீண்டது. பலர் பலமுறை கைது செய்யப்பட்டு நீதி மன்றங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டனர். நாங்கள் கைது கண்டு கலங்காது தொடர்ந்தும் போராட்டம் நடத்தியதனால் அரசாங்க நிர்வாகத்தினரும் அரச பாதுகாப்பு படைகளும் களைத்துச் சலித்தனர். அந்தக் காலத்தில் தேசிய அரசாங்கத்தில் தமிழரசு கட்சியினர் இணைந்திருந்தனர். எம்மில் சிலரோ இப் போராட்டத்தின் தன்மையை அறியாது அக்கறையின்றி மெத்தனமும் காட்டினார்கள். இதன்விளைவாக அவர்களுக்கு எதிராகவும், நாம் செயற்பட வேண்டி வந்தது. இதனை அறிந்து என்னை கொழும்பிற்கு அழைத்து எமது போராட்டத்தின் முழு விபரத்தையும், தந்தை அவர்கள் அறிந்தார், அதன் பின் 'எக்காரணம் கொண்டும் உங்கள் போராட்டத்தை கைவிட வேண்டாம். உங்கள் உறுதியில் தான் இதன் வெற்றி தங்கியிருப்பதாகவும் கூறி என்னை உற்சாகப்படுத்தினார். அத்துடன் இது விடயமாக தான் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறி அனுப்பி வைத்தார். பின்னர் அவரது முயற்சி வெற்றி யளித்ததுடன் இன்று அந்த உவர்மலைப் பிரதேசம் தமிழ் மக்கள் வாழும் இடமாக அமைந்துள்ளது. அன்று தந்தை அவர்கள்

www.tamilarangam.net

எமக்கு ஆதரவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து திருமலைப் பிரதேசத்தின் முக்கியபகுதியை தமிழர்களின் உடமை ஆக்கினார். இல்லையேல் கறையான் புற்றில் கருநாகங்கள் புகும் நிலை அங்கும் ஏற்பட்டிருக்கும்.

வரலாற்றுப் புகழ் பெற்ற கோணநாயகன் குடி கொண்டிருக்கும் திருக்கோணேஸ்வரர் கோயில இருக்கும் பகுதியையும். அதன்பாபநாசத் தீர்த்தம் உள்ளடக்கிய பகுதியை புனிதநகராகப் பிரகடனம் செய்ய வேண்டுமென திருகோணமலை நகராட்சி மன்றமும் மற்றும் திருகோணமலைக் குளக்கோட்டன் இந்து இளைஞர் மன்றமும் நிறைவேற்றிய தீர்மானங்களைச் செயல் வடிவம் கொடுக்க அன்று தேசிய அரசில் தமிழரசுக் கட்சி சார்பில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு மு. திருச்செல்வம் அவர்கள் ஊடாக மந்திரிசபையின் அங்கீகாரம் பெறுவதற்கு எடுத்த முயற்சியும், மாவட்ட மசோதாவுக்கு அங்கீகாரம் பெறுவதற்கு எடுத்த முயற்சியும் தோல்வி கண்டதினால் தேசிய அரசிலிருந்து திரு. திருச்செல்வம் அவர்களை விலகும்படி கட்சி பணித்தது. திருமலை பிரதேசத்தைக் காப்பாற்ற இதயசுத்தியுடன் தந்தை அவர்கள் செயற்பட்டாரென்பதை உறுதிப் படுத்தும் சான்றுகள் இவைகளாகும்.

அன்று தொட்டு இன்றுவரை அரசியலில் தன்னை உள்ளன்புடன் நேசித்தவர்களுக்காக தந்தையும் தமது சொத்துக்களை சுகங்களை குடும்ப பந்தங்களை இழந்துள்ளார்கள். தந்தை அவர்கள் தமிழர்களின் வாழ்வுக்காக் அனைத்து சொத்துக்களையும் இழந்து தரித்திர நாயகனாகினார். இவர் சுகபோகமும் கௌரவமும் தான் வாழ்வென்று எண்ணாமல் தமிழன் வாழ்வுதான் முக்கியமானது என்று கருதினார். தன்னைத் தேடிவந்த நீதியரசர் பதவியை ஏற்க மறுத்தார். இவரை பலமுறை அமைச்சர் பதவியை ஏற்கும்படி ஆட்சி அமைத்தவர்கள் கேட்டபொழுதும் அதனைத் திரும்பிப் பார்க்காத தீர்க்க தரிசி இவராலார்.

எங்கள் தந்தை அவர்கள் தமிழர்களின் சுதந்திரத திற்காக தனது சுகங்களை துறந்து துறவி நிலையில் வாழ்ந்த திருமகன். தமிழரசுக் கட்சி ஆரம்பித்த காலத்தில் தேயிலைத் தோட்ட அதிபதி யாகவும், பெரும் செல்வச் சீமானாகவும் இருந்த இப் பெருமகன் தன் வாழ்வின் கடைசி காலங்களில் மிகக் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. ஆனால் இந்த ஈழத்துக்காந்தி அவர்கள் இறுதிவரையும் உறுதிமிக்க பிடிவாதம் கொண்ட ஒரு இலட்சிய வாதியாகவே வாழ்ந்து எமக்கு வழிகாட்டியுள்ளார்.

கடைசிகாலத்தில் தமிழ் இனத்தை நோக்கி இவர் கூறிய வார்த்தைகள் 'தமிழ் இனத்தை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'. தமிழ் மக்கள் வருங்காலத்தில் சொல்லமுடியாத இன்னல்களுக்கு உள்ளாகி அழியப்போகிறார்கள் என்பதை தீர்க்க தரிசனத்தோடு தெரிந்து கொண்டு தான் கடவுளே காப்பாற்று என்று கூறியுள்ளார்.

தந்தை அவர்கள் முன்னின்று நடத்திய போராட்டங்கள் எல்லாவற்றிலும் முன்னிலைப் போராட்டவாதியாக அவரே இருந்தார். எதையும் தாங்கும் இதயத்துடன் முன்னின்று தண்டனைகளையும் தீர்ப்புக்களையும் ஏற்றுக் கொண்டார். அவரது இலட்சியங் களை பின்பற்றுபவர்கள் அந்த தியாகச்சுடரின் வாழ்க் கையை எண்ணிப் பார்க்க வேண்டியதும் அவரின் கோட் பாடுளைப் பின்பற்ற வேண்டியது மிக அவசியம்.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா'. இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம் கருகத்திருவுளமோ
எண்ணமெல்லாம் நெய்யாக எம்முயிரிலுள் வளர்த்த
வண்ண விளக்கிது மடியத்திருவுளமோ'
என்று கலங்க வைத்துவிடக் கூடாது.

ஐந்து நாடுகள் கேட்டு. ஐந்து நகரங்கள் கேட்டு. ஐந்து கிராமங்கள்கேட்டு முடிவில் ஐந்து வீடுகள் கேட்டு கௌரவர்கள் கொடுக்க முன்வராத காரணத்தால் பாண்டவர்கள் போர் தொடுக்க வேண்டிவந்தது. தமிழர் களுக்கு சமஷ்டி ஆட்சி பிரதேச ஆட்சி மாவட்ட ஆட்சி போன்றவற்றை தமிழ் அரசுக் கட்சியும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கேட்டும் அறவழிகளில் போராடியும் எதையும் கொடுத்திட சிங்களப் பெரும்பான்மை அரசுகள் இணங்கவில்லை. பாண்டவர்கள் ஐந்து வீடுகளைக் கேட்டும் கிடைக்காத நிலையில் அடுபோர் தொடுத்தனர். அங்ஙனமே எங்கள் இளவல்களும் குருஷேத்திரப் போரைத் தொடங்கியுள்ளனர். பாரதப் போரிலும் உண்மையும் நீதியும் வென்றது. தமிழீழப் போரும் அநீதிகட்கும் அடக்குமுறைகட்கும் எதிரானது. எனவே அதுவும் வெல்லும். அதில் ஐயம் இல்லை.

தந்தை அவர்களின் தமிழீழக் கனவுகள் நிச்சயம் நனவாகும்.

'தர்மத்தின் வாழ்வதனை சூதுகவ்வும்!
தர்மம் மறுபடியும் வெல்லும்.'!!



தந்தை அவர்களின் அருகில் நிற்பவர்கள் அமரர் ந. இ. இராஜவரோதயம் அவர்களும் திருகோணமலை வாழ் தமிழரசுக்கட்சித் தொண்டர்களும்

www.tamilarangam.net

# 40

**ஆண்டுகள் வர்த்தக துறையில் முன்னோடிகள்**

**7 வருடங்களில் கனடா வாழ் தமிழ் மக்களின் மனதில் நம்பிக்கை, நாணயம் என்ற நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்.**

## மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்



## துரித பணமாற்றுச் சேவை

**M.KASIPPILLAI & SONS INC.**

**3228 EGLINTON AVE. E, SUITE #3,**
**SCARBOROUGH, ON M1J 2H6.**

- வவுனியா
- கொழும்பு
- சிங்கப்பூர்
- சென்னை

**TEL:(416)267-8221**

www.tamilarangam.net

## INCIDENTS IN THE LIFE AND TIMES OF MR. S.J.V. CHELVANAYAKAM

**Alfred Jeyaratnam Wilson**, Ph.D(L.S.E), D.Fc(Econ.), London

I think that an anecdotal essay on Mr. S.J.V. Chelvanayakam will serve as a useful backdrop to his Life and Times. Mr. Chelvanayakam's political life it might be recalled that I had carefully documented and analysed in my S.J.V. Chelvanayakam and the Crisis of the Sri Lankan Tamil Nationalism: A Political Biography the entirety of his political life, published by C. Hurst and Company in London in 1994.

Mr. Chelvanayakam was born in Ipoh in the year 1897. His father, Mr Viswanathan Veluppillai was a business man and his mother, Harriet Annamma Kanapathypillai, a lady from a well established and socially well reputed family. In 1901, Mr. Chelvanayakam made the historic journey from Malaysia to Tellippalai along with his siblings, two brothers and a sister. Only his brother survived to the age of 85. He had his early schooling at Union College, Tellippalai and later at St. Thomas's College, Mount Lavinia. In 1918, Mr. Chelvanayakam sat and passed the degree of Bachelor of Science of the University of London. Then he taught at St. Thomas's and later at Wesley College, Colombo. Shortly after he graduated, he made one last trip to Ipoh where he met with his father. That meeting I guess was quite traumatic for Mr. Chelvanayakam. He had no occasion to refer to his father in his later life but I think the absence of a father in the home especially in his growing years left a big hole in his life. Mr. Chelvanayakam then planned on a legal career. He had grown up against a backdrop when Britain was in the heyday of Victorian imperialism. This does not imply that he became that nineteenth century misfit, the oddity we now call a Victorian gentleman. To a fair extent however Mr. Chelvanayakam was influenced by Victorian values, his transparent honesty, his innate conservatism and his strict observance of a Christian way of life. He was however also a born nationalist and always true to the Tamil culture he acquired in his growing years. He learned carnatic music and was reported to sing carnatic songs. He was going to be a full time teacher and a lawyer, a hard experience which made him later observe that "the law is a jealous mistress." At this point, Mr. Chelvanayakam sought the advice of eminent judges and legal practitioners on the practicality of his joining the legal profession. At also this time rumour had it, and I cannot vouch for its truth, Mr. Chelvanayakam's horoscope was cast by a locally well known astrologer. Said the astrologer, "you will have a successful life but nothing that you acquire will be easy. You will have to labour very hard and everything will be like building brick upon brick." In 1927, Mr. Chelvanayakam married Emily Grace Barr kumarakulasinghe who belonged to the distinguished Barr family whose members had served both the Dutch and British as administrative chiefs. Emily Grace was the younger daughter of the legendary Barr family. She was brought up in great comfort and kindness

www.tamilarangam.net

unbounded. It used to be said that Emily Grace's father indulged her, only to be indulged after marriage by her fairly well to do and up and coming husband. Mr. Chelvanayakam negotiated his own marriage by taking Emily Grace as his bride in exchange for his cousin Suhirtham marrying Emily Grace's brother, the physician Dr. J.S. Barr Kumarakulasinghe. Shortly after the marriage, it used to be said that Mr. Chelvanayakam's family gained from the marriage because he was a "mere lawyer" whereas Emily Grace's brother was a qualified physician. Fate was to disprove this.

In appearance Mr. Chelvanayakam at this time was a fairly tall man of a light complexion, somewhat timid-looking, lean and spare in his physical build, characteristics which led the first prime Minister D.S. Senanayake in later years when he was asked why he had not invited Mr. Chelvanayakam to be one of his ministers to say that he "feared lean and hungry looking men."

One of the eminent judges advised Mr. Chelvanayakam for a fair length of time telling him why he should not enter the legal profession. Mr. Chelvanayakam patiently listened to all that the judge told him, went back to his home and decided to proceed with his legal studies. He had not paid attention to any of what Mr. Justice Soertz had told him.

Mr. Chelvanayakam was always truthful in his appearance before judges. No one could fault him. That is why Chief Justice H.E. Tennekoon in paying Mr. Chelvanayakam a tribute on the occasion of his death said " a great tree had fallen" and that "he was in fact a lawyer's lawyer."

Mr. Chelvanayakam was absolutely honest. On one occasion he was not prepared with his case. The lawyers seated beside him prompted him to plead that he had been sick and was therefore not ready and in this way obtain a postponement. Mr. Chelvanayakam stood up when his case was called and he pleaded "my lord I have not prepared my case. I ask for a postponement." He was granted it without much fuss. One of Mr. Chelvanayakam's besetting sins was that he readily trusted those Sinhalese leaders who gave him false assurances.

Mr. Chelvanayakam was one of the last King's Counsel created by the British imperial judiciary which required very high credentials and absolute quality before being conferred with the singular honour. This was in the year 1946 the year before the British pulled out. Mr. Chelvanayakam's ambition at this time was to become a judge of the Supreme Court. Shortly before he launched his Federal party, the Chief Justice at the time, Sir John Howard obviously on the prompting of the Prime Minister, D.S. Senenayake, offered Mr. Chelvanayakam a seat on the bench. The offer was made a second time and Mr. Chelvanayakam declined



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

the honour. By then he had come to the realisation that his primary duty was to the Tamil people.

Mr. Chelvanayakam had a circle of close friends in the legal fraternity. Mr. P. Navaratnarajah, Queen's Counsel, was one. Mr. James Paranavitane, and Messrs K. Mathiaparanam and K.T. Chittampalam were three others with whom he frequently consorted. So was Mr. N. Sinnetamby popularly referred to as Bonser Sinnetamby (after a former Chief Justice). It might be appropriate to relate a piece of correct advice that Mr. Chelvanayakam gave Mr. Sinnetamby. The latter in January 1956 had grown weary of UNP governments constantly ignoring his just claims to the Supreme Court bench. Mr. Sinnetamby wanted to send in his papers for retirement. Mr. Chelvanayakam asked the learned district judge to hold his horses for a while. Then in April 1956, Mr. Bandaranaike came into office as Prime Minister and he realised the injustice done to Mr. Sinnetamby and had him elevated to the Supreme Court. Sir Edward Jayatileke was yet another close friend. Jayatileke chided Mr. Chelvanayakam for "wasting his money on politics." Mr. Chelvanayakam insisted that he had done the right thing and when pressed by Jayatileke stated that "someone had to stick his neck out and so it was he".

Mr. Chelvanayakam was a loving father and a good family man. When my wife and I told him that we planned to go to Canada, he was very unhappy that he would not see much of his daughter. I was requested by Chandrahasan to convey to him the good news that he had passed his law course. Mr. Chelvanayakam was very pleased and remarked "I feel as if I have given away my youngest daughter in marriage".

It was Sir Edward who facilitated the inaugural talks leading to the conclusion of the Bandaranaike-Chelvanayakam Pact of July 1957. Sir Edward was disappointed with Mr. Bandaranaike conceding the demands of the Federal Party. He was a little out of touch with the island's change to independence. Mr. Chelvanayakam believed in the political leaders with whom he did business. With Mr. S.W.R.D. Bandaranaike, Mr. Chelvanayakam had a common past. When both of them were attending Saint Thomas's College, Mr. Chelvanayakam told me that every Sunday morning, he (Mr. Chelvanayakam) went to church for Sunday worship, by his side was always Mr. Bandaranaike. When Mr. Bandaranaike was negotiating the B-C Pact of hallowed memory, Mr. Bandaranaike told Mr. Chelvanayakam at one stage, "Chelva when we complete these talks, you and I must go by helicopter to Jaffna." When the B-C Pact was in its last stages, Mr. Chelvanayakam and Dr. Naganathan went to meet Mr. Bandaranaike at his Rosmead Place residence. In the course of the conversation, Mr. Bandaranaike said, "only my wife(Sirimavo) understands my difficulties." On another occasion when Mr. Chelvanayakam went to Temple Trees after the B-C Pact had been abrogated, Mr. Bandaranaike came downstairs in his night


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

pyjamas and in the course of their discussion, Mr. Bandaranaike shed a few tears, wiped his face and told Mr. Chelvanayakam , "soon we will be rioting, your people and mine, and I cannot imagine where it will all end." At the debate on the State of Emergency, on 3 June 1958 Mr. Bandaranaike made the following uncharitable assessment of Mr. Chelvanayakam:

> He is surely one of the most dangerous types of human beings in the world, quite in his own way sincere, in his own way an idealist but having no idea whatsoever of reality and the practical side of things. Very dangerous people, such people. They are capable of deluding themselves completely, capable of deluding others too.

When Mr. Bandaranaike was assassinated, I asked Mr. Chelvanayakam for his views on the tragedy. He replied that "Mr. Bandaranaike was a clever politician. He went one step below the Senanayakes in courting the common people." At first he (Mr. Chelvanayakam) said he was "grief-stricken." But then on further thought he added : "he (Mr. Bandaranaike) was a man of no convictions."

In the Law Library, Sir Lalita, more remembered as Louis Rajapakse once observed to Mr. Chelvanayakam, "I say Chelva, why are you fighting against the Sinhalese. After all we are all from the same racial stock." Came the ready retort from Mr. Chelvanayakam, "of me there can be some doubt but of you Louis there can be no doubt" (Rajapakse belonged to the Salagama caste, a caste group of Tamils from South India whom the Dutch brought to work their cinnamon plantations.)

Mr. Chelvanayakam was a brave man ready for any eventuality. When Justice K. D. de Silva dismissed his election petition against Mr. S. Natesan and imposed punitive costs on Mr. Chelvanayakam, I thought he would be shattered. He came up with the ready reply "good generalship is only manifested in times of adversity." When the BC Pact was abrogated and I asked him what he then planned to do, he replied that "his party was ready to meet any situation."

He lived an austere and unostentatious life, freely giving all his earnings to the Tamil cause.

## பெரியவர் வாழ்வினில்............

புத்தரைத் துணைக்கழைத்து பெரியவர் ஒரு பௌத்த பிக்குவை மடக்கி, அடக்கிய சம்பவம் இது......

இரத்தினசார தேரோ என்ற பிக்கு வித்தியோதயாப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளனாக இருந்தார். அவர் டெயிலி மிரரில் எழுதிய இலங்கையின் இனப் பிரச்சினை பற்றிய கட்டுரையில் வலிந்து திரு.செல்வநாயகம் அவாகளை வம்பிற்கு இழுக்கிறார்; சொல்லம்புகள் தொடுக்கிறார். பெரியவர் அளித்த பதில்களும் அதே "டெயிலி மிரர்" நாளிதழில் பிரசுரமாகின்றன. அடுத்து அந்தப் பிக்கு தரங்கெட்ட தாக்குதல்களை ஆரம்பிக்கிறார்.

பெரியவர் இறுதியாக எழுதியது "உங்கள் தரமான குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் பதில் தந்துவிட்டேன். உங்கள் தரத்திற்கு இறங்கி என்னால் இதற்கு மேல் பதில் தரமுடியாதுள்ளது. எனவே " சந்திரனைப் பார்த்தபடி துப்புங்கள். உங்கள் எச்சில் உங்கள் முகத்திற்கே வரும் என்ற புத்தர் பெருமானின் பழமொழியை உங்கட்கு நினைவூட்டி இம்மடலை முடிக்கின்றேன்...."

அதன் பின் தேரோ எழுதத் துணியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Interview of Mrs. Susili Wilson
## (Daughter of Mr. S. J. V. Chelvanayagam)

Mrs. Susili Wilson, wife of Professor A. J. Wilson, and daughter of Late Leader Mr. S. J. V Chelvanayagam, was interviewed at her residence in Toronto by Mr. Kanaha Manoharan (Attorney-at-Law) on behalf of the Organizing Committee for Thanthai Chelva Birth Centenary Celebrations to be held in Toronto on May 30, 1998. Present at the interview were Dr. A. J. Wilson and Mr. P. S. Soosaithasan, ex-M.P. for Mannar.

Manoharan: Good Evening, Mrs. Wilson.
Mrs. Wilson: Good Evening.

Manoharan First of all, on behalf of the Organizing Committee of the Centenary Birthday Celebrations of our Late Leader, Mr. S. J. V. Chelvanayagam, let me thank you for agreeing to spare some of your valuable time for this interview.
Mrs. Wilson: You are welcome.

Manoharan: The professional and political life of your late father is like an open book.. Those are well known to every Sri Lankan. Also, many articles on those topics will be appearing in our Centenary Souvenir for the information of our younger generation of Canadian Tamils and other expatriate Tamils living in other countries. But, the same cannot be said of his private or family life. Not very many people know about his family life. Could you please tell us about your family - your mother, yourself, and your siblings.
Mrs. Wilson: Thank you for taking the time to ask me about my father and my family. Till my father started getting interested in Tamil politics, we were a typical family of that period. He was busy making his way in the legal profession, while my mother was busy with the home and the children. We are a family of five: one girl and four boys, and I am the eldest in the family. We kept our mother busy.

Manoharan: What was your mother's reaction and/or affiliations to the political party your father founded. What part did she play in his political activities and achievements which spanned a period of over three decades?
Mrs. Wilson: When my father started considering going into politics, there was a great deal of discussion around the dinner table. That was where all our family discussions took place, and it was the only time my father was available for conversation. My mother, of course, voiced her worries and concerns, but once my father had made up his mind, she supported him wholeheartedly. She was intuitive and was able to warn him and advise him on many an occasion. She discussed all his political moves with him. But, he always made his own final decisions.

Manoharan: This is nothing personal, but many of us would like to know what our leader's children are doing at present, and how they are faring in life. Could you tell us a bit more about yourself on the academic side.
Mrs. Wilson: I obtained an Economics (Hons) degree at the University of Ceylon. I also have a Post Graduate Diploma in Librarianship, and A.L.A (London). I have worked in various positions in many different countries, and the last one was as Associate Head of The Cataloguing Department at the University of New Brunswick, where my husband was the Chairman of the Department of Political Science. I have two


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Mrs. Wilson: Once my father got involved in politics. he had very little time for his family. Except at the dinner table, as I have mentioned earlier, we hardly saw him. Our house was open to all. People came and went all the time.

Manoharan: Even after becoming senile and sickly, your father continued with his political activities. Didn't your mother, you, or your siblings try to prevail upon him to give up active politics?

Mrs. Wilson: We tried. But, he never listened to us. In regards to his political activities, he was always adamant.

Manoharan: What do you hope the path your children would take - following the foot- steps of their grandfather and enter politics, or follow their father's footsteps and become academics?

Mrs. Wilson: My children are busy building their lives in Canada. While they are aware of my family and its involvement in Tamil politics, they are also removed from it because they have been here so long. They are in the legal and medical professions, and I do not know if they will later in life go into politics as my father did.

Manoharan: This is very personal, and you may not answer it if you don't like. Pandit Jawaharlal Nehru was also a respected leader. He opposed when his daughter Indra fell in love with Feroz Gandhi and wanted to marry him. Was your's an arranged marriage or a love match. If it was your own choice. how did your father react to it?

Dr. Wilson: (Intervening) We met each other. Spoke with each other. Liked each other. And. decoded to marry.

Mrs. Wilson: But, we had the consent of my father.

Manoharan: One last question. This is also a very personal one. If you have any reservations. you need not answer it. You should also pardon me for asking it in the presence of your husband. You are the daughter of the most venerated political leader of Sri Lankan Tamils. At the same time, you are the wife of a world renowned political scientist. Do you take more pride in being the daughter of a noble political leader, or as the wife of an eminent scholar?

Mrs. Wilson: eh ...

Dr. Wilson: It is obvious. She asserts more pride in being the daughter of a father who is held in high esteem by our community.

Manoharan: Thank you for agreeing to our request to take part in this interview. It was a pleasure and honour having you here as part of our centenary remembrance of your father's birth. Thanks again, and we wish you and your family all the best


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாமனிதர் இவரைக் கூட.........

வேலுப்பிள்ளை பெற்றமகன்
வேதமாகின்றார் – தமிழ்
ஈழத்திற்கு அவரே இனிய
உயிருமாகின்றார்
சூழும்கடல் இலங்கைத்தீவில்
தமிழர் வாழவே
ஈழம்தனி நாடெனவே
உயிலைத் தருகின்றார்

ஈப்போ நகரில் பிறந்தபோதும்
ஈழம் வருகிறார்
தமிழ் காப்போம் எனக் கூறியங்கு
தமிழ் அரசு தருகிறார்
வாய்மை பேசி வாழ்வதாலே
மகா "ஆத்மா" ஆனவர்
வலிமை மிக்க தம்பிகளை
வரலாற்றில் தருபவர்

மென்மையாகப் பேசிப் பேசி
மேனி நொந்தவர் –சிலர்
வன்மை கொண்டு சாடினாலும்
மௌனம் கொண்டவர்
மண்ணில் வாழும் மல்லிகையாய்
வாசம் கொள்பவர்
விண்ணில் வரும் பிரபா போல்
ஒளிகள் தருபவர்

ஈழக்காந்தி இவரென்று
உரைக்க லாகுமோ?.
"தந்தை செல்வா" பெயரென்பதே
எமக்கு பெருமையல்லவா!
மாமனிதர் இவரைக் கூட
மாவீரர் என்று தான் – நாளை
தமிழ் ஈழம் கூட வாழ்த்துப் பாடுமே!

பொன் சிவகுமாரன்
(KIPLING)

www.tamilarangam.net

# இருபதாம் நூற்றாண்டின் இணையிலாக் கதாநாயகன்

**பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்**
**தலைவர் - வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.**

திரு.சா.வே.வி. செல்வநாயகம் அவர்கள் எல்லோராலும் "செல்வா" என அன்புடன் அழைக்கப் பட்டவர். தமது சிறப்பான வாழ்வாலும், ஈட்டிய சாதனைகளாலும் "தந்தை செல்வா" எனப் போற்றப் பட்டவர். இதனால் தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் ஒரு ஒப்பற்ற இடத்தினைப் பெற்றுவிட்டார் என்பதற்குச் சான்றாக அமைவது தான் நடை பெற்றுக் கொண்டிருக்கும் "மூதறிஞர் செல்வா" அவர்களின் நூற்றாண்டு விழாக்களாகும்.

நம்மவர் மத்தியில் நூற்றாண்டு விழா கண்ட அரசியல் தலைவர்கள் மிக அரிதே. இதனால் இவ்விழா ஒரு தனிச்சிறப்பான இடத்தினைப் பெறுகின்றது. அதுமட்டுமன்றி இன்றைய கட்டத்திற்றான் தந்தையின் சிந்தனையில் உருவாகிய சுயாட்சித் தமிழரசுடன் கூடிய சமஷ்டி முறை பற்றிப் பல்வேறு வாதப் பிரதிவாதங்களும் நடைபெறுகின்றன. முன்பெல்லாம் சமஷ்டி என்றால் பிரிவினைதான் என்று கற்றவர் கூட்டத்தினரும், கட்சிகளும் தூஷித்த காலம்போய் புரையோடி நிற்கும் நமது இனப்பிரச்சினைக்கு, அதுவும் தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கு விடிவாக இது அமையமாட்டாதா என அங்கலாய்த்துத் தீவிரமாக இது பற்றிச் சிந்தித்துச் செயலாற்றும் காலமாகவும் இக்காலம் அமைந்துள்ளது.

நம்நாட்டுப் பிரதமர்களாலும் பிற அரசியல்வாதிகளாலும், மிகக் கடினமான ஆனால் ஆழமான மனிதரென்றும், எச்சந்தர்ப்பத்திலும் எதற்கும் விலைபேசமுடியாத மாமனிதன் என்றும் வர்ணிக்கப்பட்ட இவர் யார்? இவர்தான் நமது அன்புக்குரிய "பெரியவர்" செல்வநாயகம் அவர்கள். 1944இல் தமது 45வது வயதில் அரசியல்வாதியாக மாறி இறுதியில் 1977ல் யாழ்ப்பாணத்தில் மரணத்தைத் தழுவும் வரை தமிழ் மக்களின் விடிவிற்காக உழைத்த பெருந்தகை தலைவர் செல்வநாயகம் ஆவர்.

பார்வைக்கு மெலிந்து நலிந்த உடல். ஆனால் உறுதியான உள்ளமும், ஆழ்ந்த சிந்தனைச் சிறப்பும் உடையவர். மிகவும் எளிமையாக வாழ்ந்த இவர் உயர்ந்த கோட்பாட்டை உடையவர். இதய சுத்தியே காரியசித்திக்கு வழிவகுக்கும் எனத் திடமாக நம்பியவர். சுருங்கக் கூறின் வள்ளுவர் கூறியது போல்

**'குணநலன் சான்றோர் நலனே பிறநலம்**
**என்நலத்து உள்ளது உம் அன்று"**

தமது வாழ்க்கையின் பிற்பகுதியில் நோயால் பீடிக்கப்பட்டிருந்தும் தாம் கொண்ட இலட்சியங் களுக்காக, தம்மை நம்பிய சமுதாயத்திற்காக, தமது சுகபோகங்களை மட்டுமன்றித் தாம் தேடிய சொத்துக்களையும் அர்ப்பணித்த மாமனிதன்.

இவர் ஒரு பிரபல சட்டத்தரணி. தமது அறிவால், ஆற்றலால், ஆளுமையால் திரு. செல்வநாயகம் அவர்கள் சொன்னால் அது சரியாகத் தான் இருக்கும் என நீதிபதிகளும் அங்கீகரிக்கும் வண்ணம் மிதமாகப் பேசி, ஒரு கண்ணியம் மிக்க கனவானாக அங்கீகாரம் பெற்றவர். இவரது இத்தகைய கண்ணியம், நாணயம் அரசியலிற்கூட இவருக்கு ஒரு ஒப்பற்ற இடத்தினைக் கொடுத்தது. உண்மையிலே நம்நாட்டு அரசியல் அகராதிக்குக் "கண்ணியம்" "நாணயம்" ஆகிய பதங்கள் அந்நியமானவை என்றாலும் இவ் அரசியல்அகராதியில் இதனை இடம்பெறச் செய்த பெருமை தலைவர் செல்வநாயகத்திற்கு உண்டென்றால் இது வெறும் புனைந்துரையன்று.

இத்தகைய கண்ணியம் மிக்க தலைவரின் நீண்ட அரசியற் பயணத்தையும், சிந்தனைகளையும் அவர் ஆரம்பகால உறுப்பினராக இருந்த அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், இவர் ஸ்தாபித்த இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, இணைந்த தமிழர் ஐக்கிய முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகிய ஸ்தாபனங்களின் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. சத்தியத்தின் நித்தியத்தினை நம்பிய ஒரு கர்மயோகியின் நீண்ட பயணத்தின் பல்வேறு கட்டங்களே மேற்கூறிய அமைப்புக்களாகும். இவரின் இத்தகைய பயணம் சுதந்திர இலங்கையில் தமிழ் மக்கள் நடந்து வந்த பாதையின் வரலாறாகவும் அமைந்துவிட்டது என்று கூறினால் மிகையாகாது. அது மட்டுமன்றி இக்கால கட்டத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளின் பரிணாம வளர்ச்சியையே செல்வாவின் நீண்ட பயணம் குறிக்கின்றது என்று துணிந்து கூறிவிடலாம்.

காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய "தந்தை செல்வா" உகந்தவரானார். அவரின் நாணயம், "கண்ணியம்", "வாழ்க்கை முறை" பலரது மதிப்பையும் பெற்றதாக இருந்தது. மதத்தால் கிறிஸ்தவராக இருந்தாலும்கூட இந்துக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட தமிழ் மக்களின் தலைமைப் பதவியை ஏற்க அவரின் தனிப்பட்ட குணாதிசயங்கள் மட்டுமன்றி அக்காலச் சூழலும் அவருக்குக் கிடைத்த "தளபதிகளும்" முக்கிய காரணமாக விளங்கின. தமிழ்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களைப் பொறுத்தமட்டில் கடந்த நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயத்தின் பரம்பலால் இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் இந் நூற்றாண்டில் மறையத் தொடங்கியது. கிறிஸ்தவர்கள் இந்துக்களுடன் சமய சம்பந்தமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக கூடிய அளவுக்குத் தமிழ்த் தொண்டில் தம்மை அர்ப்பணிக்கத் தொடங்க இந்துக்கள் - கிறிஸ்தவர்கள் ஆகியோர் தமிழ்ப் பணியில் இணைந்தனர். தமிழ்ப்பணியில் இணைந்த இவர்கள் செல்வாவின் தலைமையினை ஏற்றது ஆச்சரியமன்று.

முக்கியமாக வடக்கே தலைவர் வன்னியசிங்கம், சு. நடராசா, வி. நவரத்தினம், வி. ஏ.கந்தையா, சி. கதிரவேற்பிள்ளை, வி. தர்மலிங்கம், வி.என்.நவரத்தினம் போன்றவர்களும், கிழக்கே இராஜவரோதயம், ஏகாம்பரம், இராஜமாணிக்கம் போன்றவர்களும், கொழும்பில் ஈ.எம்.வி நாகநாதன், மு. திருச்செல்வம் அவர்களும் தந்தைக்கு உறுதுணையாக நின்றவர்கள். தந்தையின் அரசியற் பாதையில் இயக்கத்தை வழிநடாத்திச் சென்ற தலைவர் அமிர்தலிங்கத்துடன் தலைவர் மு. சிவசிதம்பரத்தின் இணைவு தமிழ் மக்களின் போராட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தினைக் குறித்து நின்றது. உண்மையில் தலைவர் அமிர்தலிங்கத்தின் தலைமை ஒரு துடிப்புள்ள இளஞ்சமுதாயத்தினையே தந்தையின் இயக்கத்தில் சங்கமிக்க வைத்துவிட்டது. கரிகாலன், ஈழவேந்தன், கவிஞர் காசிஆனந்தன், மாவை சேனாதிராசா போன்றோர் மட்டுமன்றி இன்றைய தீவிரவாதத் தலைவர்களும் இவரின் வழிவந்தவர்களே.

இத்தகைய பின்னணியிற்றான் தந்தையின் அரசியல் தலைமைத்துவம் முதன்மை பெற்றது. தமிழரின் வரலாறு, பாரம்பரியம், சுதந்திரப்போராட்ட காலத்தில் பெரும்பான்மைச் சமூகத்தவரின் நடவடிக்கைகள், பிரித்தானிய அரசின் கண்மூடித்தனங்கள், சிறுபான்மையினர் மத்தியிற் காணப்பட்ட ஒற்றுமையீனம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்ட அவர் இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு இருவழிகள் உள என்றார். ஒன்று சரணாகதி. இது கோழைக்குரிய நெறி. மற்றறையது தமிழர் ஒரு இயக்கத்தைத் தொடங்கித் தமது தனியான தேசிய இனத்தன்மையைப் பாதுகாக்கப் போராடுவது. இது தான் ஒரு வீரனுக்கு உரிய நெறி என்றார். இப்போராட்டம் கூடச் சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் சாத்வீக நெறியாக இருத்தல் வேண்டும் என்பதையும் அவர் கண்டிப்பாக நம்பினார். காரணம் இவ்வழிதான் இன்னல்கள் குறைந்த வழி. ஜனநாயக நாட்டில், பின்பற்றப்பட வேண்டிய நாகரிகமான நெறி துர்அதிஷ்டவசமாக, பௌத்த தர்மம் தழைக்கும், இத்தர்ம தீபத்தில் இந்நெறி உள்வாங்கப்படாததாற்றான் இன்று வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் இரத்த ஆறு ஓடுகிறது. எனினும், தென்பகுதி அரசியலில் இன்று நடைபெறும் வன்முறை அரசியல் தந்தையின் அஹிம்சைநெறியின் அவசியத்தை ஆட்சியாளர்களுக்கே இன்று உணர்த்தி உள்ளது.

நிற்க, 18.12.1949இல் மருதானையிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர்களின் சங்க மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற தந்தை கூறிய வார்த்தை இதுதான்.

“யாம் கோருவது இதுதான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும் ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து இரண்டுக்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஷ்டி அரசு இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம், பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானால் இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாகின்றது.”

தமிழ்மொழி அழியாதிருப்பதற்குச் சுயநிர்ணய உரிமை உள்ள தமிழர் தாயகம் தான் தீர்வு என்பதைச் செல்வா தீர்க்க தரிசனமாக உணர்ந்திருந்தார். இத்தகைய நோக்குடன் தான் தமிழரசுக் கட்சியின் சின்னமாக “வீடு” தேர்ந்தெடுக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கு விடுதலையை, வீடு பேற்றைக் கொடுப்பதும் இவ்வீடு தான் என்பதும் தமிழரசுக் கட்சியை உருவாக்கிய சிந்தனைச் சிற்பிகளின் கருத்துப் போலும்.

மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதை எதிர்த்து, தமிழ் மக்களின் நலன்களுக்குப் போராட உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி சிறுபான்மை இனமக்களின் ஓரங்கமாக, முஸ்லீம் மக்களையும், அவர்களின் அபிலாஷைகளையும் தன்னுடன் இணைத்துப் போராடத் தவறவில்லை. வடகிழக்குத் தமிழ்பேசும் மாநிலத்தில் அம்பாறையை மையமாக வைத்த சுயாட்சி உரிமை கொண்ட முஸ்லீம் மாநிலம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்பதில் பெரியவர் செல்வநாயகம் அக்கறையும் கரிசனையும் காட்டியிருந்தார்.

நமது இனத்தின் வரலாற்றில் “போராட்டம்” என்ற சொல்லைப் புகுத்திய பெரியவர் நமது இலட்சியத்தினை அடைய எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்பதையும் 14-4-1951இல் திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது தேசிய மகாநாட்டில் பின்வருமாறு சுட்டிக் காட்டத் தவறவில்லை.

“இவ்வியக்கத்திற் பணிபுரியும் ஊழியர்களாகிய நாம், நம் தலைமுறையிலேயே நமது கோரிக்கை கைகூடுமென்று விசுவாசிக்கிறோம். எம்தலைமுறையிற் கைகூடாவிடினும், நாம் இப்போரை நடத்தி எமக்குப் பின்வரும் சந்ததியாரின்கையிற் கொடுப்பது எமது கடன். எம் பின்னே அரும்பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்த பட்சத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாகவாகினும் இருப்போமாக”

www.tamilarangam.net

சமஷ்டி ஆட்சி கோரிய தந்தை ஈற்றில் தமது கோரிக்கையை நிறைவேற்றப் பலவாறு மாறி மாறி வந்த அரசாங்கங்களுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளும், ஒப்பந்தங்களும் பலனளிக்காது போக, 1949இல் தாம் கூறிய தமிழருக்குரிய இரு வழிகளில் ஒன்றாகிய சுதந்திரத் தமிழரசை நிறுவுவதே தமிழருக்குரிய ஒரே ஒரு வழி எனப் பாராளுமன்றத்தில் கூறி வெளியேறியமை இந்நாட்டுஅரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். 1949இல் மிகத் தீர்க்க தரிசனத்துடன் அவர் கூறியதும் இதுதான்.

"மொழிவாரி இனங்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவுகள் பல தடவைகளில் யுத்தத்தில் முடிந்து, பெரிய தேசிய இனங்களும் மோதிக் கொள்ள நேரிட்டதுண்டு. இவ்வித சச்சரவுகளை நீக்குவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட பூரண சுதந்திர அரசுகளை அமைப்பது. இதிலும் மிகத் தீவிரங் குறைந்ததான மற்றைய வழிமொழிவாரிச் சுயாட்சி மாகாணங்களை அமைத்து, அவற்றை இணைக்கும் ஒரு மத்திய அரசாங்கத்தையுடைய சமஷ்டி அரசை ஏற்படுத்துவதே" தந்தையின் மறைவு போராட்டத்தின் வடிவத்தையும் மாற்றிவிட்டது. இளஞ்சக்தி தந்தையின் அபிலாஷைகளை நிறைவேற்ற ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்டுவிட்டது. இன்றும் தொடர்ந்து போராடுகிறது. இளைஞர் கொட்டிய, கொட்டும் இரத்தம் நமது விடிவிற்கு வழிவகுக்குமா? இவர்களின் உயிர் தியாகங்களுக்குப் பலன் கிடைக்குமா??

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது நமது வரலாற்றில் தந்தையின் அரசியல் வாழ்வு இந்நூற்றாண்டில் நிறைவுடன் வாழ்ந்த இந்நூற்றாண்டு கண்ட கதாநாயகன் வரலாறே ஆகும். கடந்த நூற்றாண்டின் கதாநாயகன் நல்லைநகர் ஆறுமுகநாவலரே எனக் கொண்டால் இந்நூற்றாண்டின் கதாநாயகனாகப் பெரியார் செல்வநாயகத்தைக் கொள்ளலாம்.

கடந்த நூற்றாண்டில் மேலைத்தேய கலாசாரம் நமது கலாசாரத்தின் ஆணிவேரைப் பிடுங்கி எறிய முற்பட்டுச் செயற்பட்டது. இக்காலத்திற்றான் இந்துக்களின் "சீர்திருத்தச் செம்மல்" என இலங்கைச் சட்ட சபையில் போற்றப்பட்ட நாவலர் பெருமான் தோன்றி பிற்காலத் தமிழ் இயக்க வாதிகளுக்கெல்லாம் முன்னோடியாக நின்றுதமது கலாசாரப் பாரம்பரியத்தைச் சிதையாது பாதுகாத்து நின்றார். நாவலர் ஐயா அவர்கள் மேற்கு நாட்டுக் கலாசாரத்தின் தாக்கத்தினால் நமது கலாசாரம் சிதையாது பாதுகாத்தார்.

நமது தந்தையவர்கள் செயற்றிறன் இன்றித் திக்கற்று நின்ற இனத்திற்குத் திசைகாட்டியாய் நின்று, அது தனது தேசியத் தனித்துவத்தைப் பாதுகாக்க வழி சமைத்தது மட்டுமன்றித் தன் பின்னர் வரும் சந்ததியினரும் இவ்விலட்சியத்தை இறுகப் பற்றி நிற்க வழி அமைத்து தமிழ்த் தேசியத்தின் பிதாவாகிவிட்டார்.



**17.04.1961 அன்று தமிழரசுக்கட்சி மேற்கொண்டிருந்த சத்தியாக்கிரகம் முறியடிக்கப்பட்ட பின்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தந்தை செல்வா அவர்கள் கடும் நோய்வாய்ப்பட்டிருந்தார். வைத்தியத்திற்காக இங்கிலாந்து புறப்பட்ட செல்வா அவர்கள் பொலிஸ் காவலுடன் விமான நிலையம் கொண்டு செல்லப்படுகையில் எடுக்கப்பட்ட படம் இது.**

www.tamilarangam.net

# சிந்தனையாளர் — அரசியல்ஞானி — அகிம்சாவாதி

# அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

**ஆவரங்கால் க.சின்னத்துரை**
**(முன்னாள் அமைப்பாளர், கோப்பாய் தொகுதி)**

1898ம் ஆண்டு மலேசியாவில் பிறந்து தமது தாயகமான தெல்லிப்பளையில் வாழ்ந்து, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து, பிரபல நியாயவாதியாகி, இராணி அப்புக்காத்தாகி, நேர்மையுடன் செயலாற்றிய தந்தை அவர்கள் அரசியலுக்கு வந்தது தமிழ்மக்கள் செய்த தவப்பயன் என்றே கூற வேண்டும்.

தந்தை அவர்களுடைய தன்னலம் இல்லாத தியாகசிந்தை அவரின் உடன்பிறப்பான நேர்மை, நிதானம், இலட்சியப்பற்று, அரசியல் மதி நுட்பத்துடன் கூடிய தீர்க்கதரிசனம் அன்னாரை பெரும் தலைவராக உயர்த்தியது.

தந்தையவர்களின் முதலாவது போராட்டம் 1956ம் ஆண்டு ஆனி மாதம் 5ம்திகதி சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்த அன்று பாராளுமன்றத்தின் எதிரில் இடம்பெற்றது. சத்தியாக்கிரகம் செய்யப் போகின்றோம் என அரசுக்கு முன்னறிவித்தல் கொடுத்தார். பாராளுமன்றத்தைச் சுற்றி 14 அடி உயரத்திற்கு முட்கம்பி வேலி அடித்து உள்ளுக்குள் இருந்து கொண்டு சட்டத்தை நிறைவேற்றினார்கள். தந்தையவர்களின் தலைமையில் 300க்கு மேற்பட்டவர்கள் வடக்கு கிழக்கில் இருந்து வந்தவர்கள் உட்பட பங்கு கொள்ள பாராளுமன்றத்திற்கு எதிரில் அகிம்சைப் போர் நடந்த பொழுது அதில் பங்கு கொண்ட பலர் தாக்கப்பட்டார்கள். தலைவர்கள் பலரும் தாக்கப்பட்டனர். திரு அமிர்தலிங்கம் அவர்கள் தலையில் காயப்பட்டார்கள். நாடு முழுவதும் தமிழ்மக்கள் தாக்கப்பட்டார்கள். இந்த நிகழ்வு இனக் கலவரம் ஒன்றிற்கு வழிகோலியது. அதனால் ஈழப் போராட்டம் உலக அரங்கிற்கு வெளி வந்தது. இதுவே ஈழத்தமிழ் இனத்தின் முதலாவது உரிமைப் போராட்டம் ஆகும்.

அதைத் தொடர்ந்து சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. 1958ம் ஆண்டு சிங்கள ஸ்ரீயை மோட்டார் வாகனங்களில் இடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. தமிழ் பகுதிகளுக்கும் அதை அமுல்ப் படுத்தியது.

அதை எதிர்த்து தந்தையவர்கள் மட்டக்களப்பிலே சிங்கள ஸ்ரீ பொறித்து வந்த பஸ்வண்டியை மறித்துச் சிங்கள ஸ்ரீயை அழித்து தமிழ் ஸ்ரீயைப் பொறித்தார். பொலிசார் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். அதைத் தொடர்ந்து தொண்டர்கள் 300 பே[ர்] வரை வடக்கு கிழக்கு எங்கும் தமிழ் பொறித்ததற்காக[க்] கைது செய்யப்பட்டு சிறை சென்றார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிராக அன்றைய இனவெறியர[சு] 1961ம் ஆண்டில் பல நடவடிக்கைகளை எடுத்தது[.] அவற்றை எதிர்த்து கத்தியின்றி இரத்தமின்றி அகிம்[சை] வழியில் தந்தை அவர்கள் யாழ்ப்பாணக் கச்சேரியி[ல்] ஆரம்பித்து வைத்த சத்தியாக்கிரகப் போர் விரிவடை[ய] வடக்கு கிழக்கில் அன்றிருந்த ஐந்து மாவட்டங்க[ளி]லுள்ள அனைத்து அரசாங்க அலுவலகங்களும் 5[?] நாட்கள் ஸ்தம்பிதம் அடைந்தன. அதைத் தொடர்ந்[து] தமிழரசுத் தபால் சேவை தந்தை அவர்களால் ஆர[ம்]பித்து வைக்கப்பட்டது. தமிழரசு முத்திரை ஒட்டிய கடி[த]ங்கள் அனுப்பப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அரசாங்கம் அவசர கால நிலை[மை]யைப் பிரகடனப்படுத்தி சத்தியாக்கிரகத்தை முறியடித்[து] தலைவர்களைக் கைது செய்து பனாகொடை இராணு[வ] முகாமில் தடுப்புக்காவலில் ஆறு மாத காலம் வை[த்]து வைத்து வாட்டி வதைத்தது. தந்தை அவர்கள் திரும்பி வந்து தமிழ்மக்கள் மத்தியிலுள்ள பெரும் குறைபாடா[ன] தீண்டாமைப் பிரச்சனையை அகிம்சை வழியில் தீர்ப்பத[ற்]காக கிராமங்கள் தோறும் பாத யாத்திரை நடத்தி இ[வ்]விடங்களில் சமபந்திப் போசனம் போன்ற நடவடிக்கை[க]களில் ஈடுபட்டார். அங்கு நடைபெற்ற கூட்டங்களி[ல்] பேசும் போது நாங்கள் எங்களுடன் வாழும் ஒரு பகு[தி] மக்களை அடக்கி சம உரிமைகளைக் கொடாம[ல்] ஒதுக்கி வைத்துக் கொண்டு எங்களை அடக்கி வைத்[தி]ருக்கும் சிங்கள மக்களிடம் போய் எங்கள் உரிமைக்கா[க] எப்படி வாதாட முடியும் என்று விளக்கங்களைக் கொடு[த்]த்து மக்களை உணர வைத்து ஒன்றுபடுத்தினார்.

இதன் ஒரு அங்கமாக உரிமை மறுக்கப்பட்டிருந்[த] மக்களின் பிரதிநிதியாக திரு ஜி.நல்லையா அவர்க[ள்] செனட்சபைக்கு தெரிவு செய்யப்பட வழி வகுத்தா[ர்]. தந்தை அவர்களும் கோப்பாய் கோமான் வன்னியசிங்க[ம்] அவர்களும் இணைந்து மேற்கொண்ட முயற்சியினா[ல்] இலங்கைப் சமூகக் குறைபாடுகள் தடுப்புச் சட்ட[ம்]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது.

தந்தையவர்கள் இனப்பிரச்சனையைத் தீர்க்க மாறி மாறி வந்த இரண்டு அரசாங்கங்களுடனும் ஒப்பந்தங் களைச் செய்தார். அந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ளச் செய்தார். ஆனால் இரண்டு ஒப்பந்தங் கை-ளயும் சிங்கள அரசாங்கங்கள் ஒரு தலைப்பட்சமாக நிரா கரித்தன. அத்தோடு சிங்கள மொழியைத் திணிப்பதிலும் தீவிரம் காட்டின. சிங்களத்துடன் பௌத்த மதத்தையும் திணிக்கும் நோக்குடன் புத்தூர், அல்வாய், கதிரிப்பாய் போன்ற மூன்று இடங்களில் பௌத்த பாடசாலைகளை உருவாக்கி சிங்கள ஆசிரியர்களை நியமித்ததும் அதற்கு எதிராக தந்தை அவர்கள் சட்ட மறுப்பாக அந்தப் பாடசாலை களுக்கு அருகில் புதிய தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்து அரசின் சிங்களத் திணிப்பு முயற்சியை வெற்றிகரமாக முறியடித்தார்.

அரசாங்கம் 1972ம் ஆண்டு புதிய அரசியல் அமைப் பைக் கொண்டு வந்தது. அதை எதிர்த்த தந்தை யவர்கள் ஆற்றிய உரையில் தமிழ் பேசும் மக்கள் இதுவரை ஐக்கிய சமஷ்டி இலங்கையில் சுயாட்சிப் பிரிவான தமிழரசையே கோரி வந்தனர். சிங்கள மக்களும் அரசாங்கங்களும் எமது நியாயமான கோரிக்கைகளை நிராகரித்து விட்டார்கள் என்று கவலையுடன் தெரிவித்தார்.

அதன் பின்னர் 1972ம் ஆண்டில் குடியரசு அரசியல மைப்பை எதிர்க்குமுகமாக அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவி துறக்க வேண்டுமென்ற கோரிக்கை கோப்பாய் மகாவளவில் நடந்த செயற் குழுக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது. அப்பொழுது தந்தையவர்கள் இப்பொழுது தான் மட்டும் பதவி துறப்பதென்ற தீர்மானத்தை முன் வைத்தார். அத் தீர்மானத்தின்படி தந்தையவர்கள் பதவியைத் துறந்து அரசுக்கு சவால் விட்டு தமிழ்மக்கள் அரசியல மைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நிருபிக்க காங்கேசன்துறை இடைத்தேர்தலை உருவாக்கி தந்தையவர்கள் தமிழ்ஈழத்தை நோக்கி பயணத்தை தானே ஆரம்பித்து வைத்தார்.

தமிழ்மக்களிடையே இருந்து வந்த கட்சி வேறுபாடு களை நீக்குவதற்காக நீண்டகாலமாக எதிரும் புதிரு மாக இருந்த அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களை யும் அவரது தமிழ்க்காங்கிரஸ் கட்சியையும் தனது அரசியல் அமைப்புடன் இணைத்து ஒற்றுமையுடன் செயற்பட விரும்பினார். ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர் களுடன் தனக்கிருந்த நெடுநாள் பகையை மறந்து, அவருடைய இல்லத்திற்கு தானே தேடிச் சென்று அவரு டன் பேசி ஒற்றுமை ஏற்படுவதற்கு வழி கோலினார். தமிழின த்தின் வரலாற்றிலேயே அனைத்து மக்களையும் ஒன்று திரட்டிய பெருமை இவரையே சாரும்.

காங்கேசன்துறை இடைத்தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றார். 1976ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பாராளுமன்றம் சென்று சரித்திரப் பிரசித்தி பெற்ற உரையை நிகழ்த்தினார்.

அவ்வுரையில் 'இலங்கையில் இருவேறு நாட்டினர்களான சிங்களவர்களும் தமிழர்களும் சுயநிர்ணய உரிமை உடை யவர்களானதால் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தமிழ் மக்களால் அளிக்கப்பட்ட தீர்ப்பு விடுதலை பெற்ற ஒரு இறைமையுள்ள மத சார்பற்ற சமதர்ம நாடான தமிழ் ஈழத்தை அமைப்பதற் குரிய ஆற்றலுரிமையாக ஏற்றுக் கொள்வதென இப் பேரவை தீர்மானிக்கிறது' என்று குறிப் பிட்டார்.

இத்தீர்மானம் பாராளுமன்றப் பதிவேட்டில் பதியப்பட்டு ள்ளது. அனைத்து த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர் களும் இதனை அங்கீகரித்தார்கள். அதன்பின்னர் முக்கிய தலைவர்கள் உட்பட அனைத்து பாராளுமன்ற உறுப்பி னர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் தந்தையவர்கள் இதுவரை நாம் அகிம்சை வழியிலேயே நடந்தோம். இனி இளைஞர்கள் எப்படி நடப்பார்கள் என்பதை எம்மால் உறுதி கூற முடியாது. இதற்கு சிங்கள அரசாங்கங்களே பொறுப்பாகும் என்றும் கூறிப்பிட்டார்.

அவர் நமது இனம் தமிழ்இனம், நமது மண் தமிழ்மண் என்று கூறி, தமிழ்த்தேசிய உணர்வைத் தமிழரின் குருதி யிலேற்றினார். இவர் தனது ஈடுஇணையற்ற தியாகங்கள் புரிந்தார். கலங்கா நெஞ்சுடன் காந்திய வழியில் கலங்கா நெஞ்சுடன் களம் பல கண்டு முப்பதாண்டுகளாக மூச்சு விடாமற் பணியாற்றினார். இறுதியில் தமிழ்பேசும் மக்களை ஓரணியில் திரட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார். அதில் பல கோணங்களி லும் செயற்பட்ட தலைவர்களையும் இளைஞர்களையும் இணைத்து செயற் பட வழிகோலிய இவர் ஒரு தீர்க்கதரிசி, அரசியல்ஞானி, நேர்மையான பணியாளர், சிந்தனைவாதி. அமரர் எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் நூற்றா ண்டு விழாவை கனடா வாழ் தமிழ்மக்கள் சிறப்பான முறையில் நடத்து கின்ற இச் செயற்பாடுகள் சிறக்கவும் இது புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமையவும் வாழ்த்துகின்றேன்.

www.tamilarangam.net

S.J.V. CHELVANAYAKAM 100TH BIRTH ANNIVERSARY

# THE LIFE AND TIMES OF S.J.V.CHELVANAYAGAM

**D.B.S. Jeyaraj**

On September 6th 1977, Lalith Athulathmudali then Minister of Trade said in the Sri Lankan Parlament "*Samuel James Velupillai Chelvanayakam was born in Ipoh..........Ipoh is known as the cleanest City in Malaysia. Perhaps it was in the fitness of things that Mr. Chelvanayakam's life was marked by a cleanliness unknown in contemporary politics.*" Athulathmudali was speaking on the vote of condolence for SJV Chelvanayakam then. JR Jayewardene who was then Prime Minister also spoke on the vote of condolence for the FP and later TULF leader. He said "*I have not met anyone in my community or any other community who said that Mr. Chelvanayakam would let you down*" These sentiments were merely endorsing what veteran journalist Mervyn de Silva had written in 1963 "*For all his physical frailities he is known as the uncrowned King of the North. Chelvanayakam's antagonists will willingly testify to his integrity*".

The above - mentioned comments emerging from the "ranks of Tuscany" are truly rare in the field of politics. It is very seldom that a politician particularly if he is successful gets praised for integrity and honesty. But then the recipient of that praise whose Birth Centenary is being commemorated now was no ordinary man.Leaving the country of his birth at a young age he became an important political figure in his own Country.Born and bred as a Christian he became the most prominent leader of the a community where the majority were Hindus.

**Childhood**

Samuel James Velupillai Chelvanayakam was born 100 years ago in Ipoh Malaysia on 31st March 1898. His Birth centenary year concluded last March.. Hailing from Thellippalai in Jaffna, SJV's father Visvanathan Velupillai was a businessman in Malaysia. SJV's mother Harriet Annamma's maiden name was Kanapathipillai. When Chelvanayakam was four years of age the family with the exception of his father moved back to Thellippalai so that the children could obtain a good education.SJV a protestant christian attended Union College Thellippalai,St.John's College Jaffna and finally St.Thomas's College Mt.Lavinia(located at Mutwal then)Later his first cousin Anandanayagam became Warden of the same institution. At STC Chelvanayakam was a contemporary of SWRD Bandaranaike with whom he was to cross swords politically many a time later.

**Profession**

Chelvanayakam first graduated as an external student of the London University. He got a B Sc. He then began teaching at St.Thomas's College Mt.Lavinia. Later he moved to Wesley College as a teacher.This was because Warden Stone of STC doubted the bona fides of SJV when requesting for leave to attend to his sick brother.He resented the aspersions cast on his integrity. While teaching he pursued studies in law and soon enrolled himself as an Advocate of the Supreme Court. He confined himself to Civil matters mainly and built up a lucrative practice. He became a respected civil lawyer and took silk in due course.

**Marriage**

In 1927 he married Emily Grace Barr Kumarakulasinghe the daughter of RR Barr Kumarakulasinghe the "Maniaghar"(Administrative Chief) of Thellippalai. He donned the Tamil national dress Verti and Salvai at his wedding instead of western attire as was customary of the Elite then This act was illustrative of his deep and abiding regard for Tamil culture and his ability to differentiate between the norms imposed on Asian Christianity by Western hegemony and the authenticity of the cultural milieu that he was born into.

**Tamil Culture**

Chelvanayakam's love for the Tamil language and Tamil culture was not an artificiality constructed for political purposes. It was more a deep-seated natural emotion.It must be remembered that SJV had no desire to enter into politics until the mid - forties whereas his demonstrated affinity towards Tamil culture was manifested from his very young days.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Even before entering politics he would always refer to himself as a man from Jaffna.He made it a point to see that his children in Colombo visited Jaffna during holidays so that they would appreciate and be aware of Tamil culture. He wore the Verti at home as far as possible. Except on legal or official business or at mixed social gatherings he always conversed with fellow Tamils in Tamil.Although not a scholar he was also familiar with ancient Tamil literature. Chelvanayakam was also extremely appreciative of Carnatic music and Bharatha Natyam.

**Christianity**

Subsequent developments where TULF was lured by the "Old Fox" into a complaisance that active participation in parliamentary democracy would yield positive results in the matter of racial conciliation led the Tamil freedom movement astray. The acceptance of the office of the Leader of Opposition, though done with good intentions, had the unforeseen effect on the leadership losing the confidence of the youth and incurring their distrust and animosity.

Periavar said in public platforms that "self-rule" of the Tamils may not be achievable during his life-time; but it will become a reality during the life-time of Mr. Amirthalingam. He reposed great confidence in the indefatigable vigour and unflinching courage of Amir, the ill-fated leader whose memories induce tears in our eyes.

Two incidents are vivid in my mind to remind me of Amir's astounding courage. On the 4$^{th}$ of February, 1974 (or 1975), when twenty policemen jumped out of their van and pulled the triggers threatening to shoot some youths (at the entrance to the party office), Amir rushed forward, snapped his shirt buttons, showed his bare chest and shouted, "Shoot, we are not afraid." The policemen withdrew on the persuasion of Mr. Kathiravetpillai, M.P. On another occasion at Karadipokku near Paranthan, after a black-flag demonstration, when the youths were attacked by a policeman with the butt of his gun, Amir pursued him, wrestled with him, and prevented further attack, when Mr. Sivasithamparam and I were helplessly looking on. He is an irreparable loss to the Tamil nation.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'தந்தை'யர் நாடெனும் போதினிலே......!

**கே. ரி. சண்முகராஜா (வீணைமைந்தன்)**

உங்கள் பார்வையில் தந்தை செல்வாவைப் பற்றி எழுதுங்கள் என அன்புக்கட்டளை கிடைத்த வேளையில்...... இமயத்திற்குப் பொன்னாடை அணிவிக்க என்னால் எப்படி முடியும் என ஒரு கணம் திகைத்து நின்றேன்.

பொன்னாடை அணிவிக்க என்னால் முடியாது தான். ஆனால் அந்த ஆடையை நெய்யும் மேதாவிகளுக்கு உதவுகின்ற பணியாட்களுள் ஒருவனாகப் பணிபுரியவேனும் வாய்ப்புக் கிட்டியதே என மட்டற்ற மகிழ்ச்சி ஒரு புறம்.

நூற்றாண்டுத் தலைவனுக்கு அவர் காலத்தில் வாழ்ந்து அரை நூறாண்டு தாண்டிவிட்ட சாமான்யன் சாமரம் வீசும் பாக்கியம் பெற்றதால் மனதில் குதூகலிப்பு ஒரு புறம்!

தமிழீழத் தந்தையே!

நீங்கள் நாடாளுமன்ற அத்தாணிமண்டபத்தில் முதன் முதல் காலடி வைத்த நாற்பத்தியேழில் உங்கள் இராஜதானியான காங்கேசனூர்த் தாய் என்னைத் தமிழ் மண்ணில் தவழவிட்டாள்!

உங்களது இராஜ்ஜியத்தில் நானும் ஓர் பிரஜை எனப் பிரகடனம் செய்யப்பட்டபோது நீங்கள் தமிழீழ மக்களின் மன்னனாகப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டதாக எனது நினைவுத் திரையில் ஓர் காட்சி நிழலாடுகிறது.

அப்போது அரசியல் பிதாமகர், தனிப்பெருந் தலைவர் என்று உங்களால் ஒரு காலத்தில் மதிக்கப் பெற்ற அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் நாடாளுமன்ற அரியாசனத்தில் உங்களருகே வீற்றிருந்து செல்வா.... செல்வா..... என்று அழைத்து மகிழ்வுடன் உரையாடிய காட்சியையும் மீண்டும் தமிழீழ வரலாற்றின் பக்கங்களைப் புரட்டும் போது பார்த்து மகிழ்கின்றேன்.

யார் கண்பட்டுத்தான் உற்ற நண்பர்கள் இருவரும் எதிரும் புதிருமாய் ஆனீர்களோ?

தமிழர்களின் பலத்தைப் பலவீனப்படுத்திய சேனநாயகச் சூழ்ச்சிக்கு அந்த அரிமா நிகர் தானைத் தளபதி மயங்கிப் போன சதியை என்னவென்று சொல்வது!

எல்லாளனை வீழ்த்த கைமுனு கையாண்ட சூழ்ச்சிபோல் அல்லவா ஆகிவிட்டது உங்களையும், ஜீ.ஜீயையும் பிரித்த வரலாறு!

"இலங்கைக் குடியுரிமைச் சட்டம்" (THE CEYLON CITIZENSHIP ACT) "இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம்" (THE INDIAN PAKISTANI RESIDENTS CITIZENSHIP ACT) என்னும் கொடிய நோய்களை அறிமுகப்படுத்திய சிங்கள ஏகாதிபத்திய சேனநாயக்கா அரசுக்கெதிராக முரசு கொட்டிய வீரனே! உன் நாடாளுமன்ற முதல் முழக்கம் இப்போதும் வரலாற்று ஏடுகளைப் புரட்டும் போது என் காதில் ஒலிப்பது போல் உணர்கிறேன்.

பொன்னும் பொருளும் இந்த மண்ணிலே குவிந்து கிடக்கிறது, வாருங்கள், வந்து அள்ளிச் செல்லுங்கள் என்று ஏமாற்றி அழைத்து வரப்பட்ட இந்தியத் தமிழர்களின் இரத்தத்தை உறிஞ்சி இலங்கையில் இரப்பருக்கும் தேயிலைக்கும் அந்த அப்பாவி ஏழைகளை உரமாக்கி அவர்களை வெறும் கொத்தடிமைகள் ஆக்கியதுதான் அவர்களுக்குக் கிட்டிய பேரின்ப வாழ்வு!

பஞ்சையாய், பராரியாய் வாழ்ந்தாலும் பரவாயில்லை இந்த மண்ணுக்கு வளம் சேர்த்தவர்களை "நாடற்றவர்களாக விரட்டியடிக்கப் பார்க்கிறீர்களே.......! இது இன்று இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு! நாளை இந்த மண்ணின் வாழையடி வாழையாக வாழும் எங்களுக்கும் தான் என்பதனை அறிய அதிக நேரம் தேவையில்லை.... என்று இன்று எமது தாயக மண்ணில் நடக்கும் போராட்டத்தின் தாற்பரியத்தை அன்றேயுணர்ந்து பேசிய அரசியல் தீர்க்கதரிசியே!

உன் தன்மானத்திற்கும் தமிழுணர்விற்கும் சுதந்திர தாகத்திற்கும் தலை வணங்குகின்றேன் ஐயா!

"....... YOU ARE NOW HITTING AT THE WEAKEST SECTION OF THE TAMILS. YOU ARE HITTING AT THE INNOCENT AND WEAK THAT ARE LABOURING IN THE CHILL AND THE COLD OF THE PLANTATIONS PRODUCING YOUR WEALTH. WE WILL KNOW WHERE WE STAND... WHEN OUR TURN COMES NEXT..... WE WILL KNOW WHEN THE NEXT PIECE OF LEGISLATION IN THIS SERIES COMES......THE ONE DEALING WITH OUR LANGUAGE"

1949ம் ஆண்டு சேனநாயக அரசு நிர்வாகத்தின் அநீதியான செயலைக் கண்டு கொதித்தெழுந்து பேசிய வரலாற்று வரிகள் சிலவற்றைத்தான் மேலே நான் குறிப்பிட்டுள்ளேன்.

நெப்போலியனின் நெஞ்சுறுதியும் - காந்திஜியின் பொறுமையும் ஞானமிகுந்த துறவிகளிடத்துத் தோன்றுகின்ற தீர்க்கதரிசனமும் கொண்ட அறம் பிறழாத் தலைவர் நீங்கள்.

உங்களைத் தூற்றியவர்களும் - கேலிசெய்தவர்களும் - ஏமாற்றிய அரசியல்வாதிகளும் விதி வலியால் எப்படியெப்படியோ தண்டிக்கப்பட்டார்கள். புத்தபிரான் கூட அவர்களைக் காப்பாற்ற மறுத்துவிட்டார்

www.tamilarangam.net

அறம் பிழைத்த அரசியலார்க்கு அதுவே கூற்றுவனாயிற்று! இந்துக்களும் - இஸ்லாமியர்களும் - கிறிஸ்தவர்களும் - பௌத்தர்களும் இந்த நாட்டில் (இலங்கையில்) ஒருவரைத் தலைவராக மதித்தார்கள் என்றால் அது நீங்கள் ஒருவர்தான்!

தீட்சண்யமிகுந்த பார்வையாலும் - தகாத உள்நோக்க மெதுவுமற்ற சப்தமில்லாத சிரிப்பாலும் அரசியல் எதிரிகள் கூட உங்களிடம் வசப்பட்டுவிடும் விந்தை புதிரான ஒன்று!

தாங்கள் ஈழத் தமிழினத்தின் "தந்தை" என்ற கௌரவம் பெற்றமை எங்கள் காலத்தில் "சத்திய புருஷர்" நீங்கள் தான் என்பதை உறுதிப்படுத்து வதாயிற்று!

எங்கள் தொகுதியிலே பெரியவர்கள் பேசிக்கொள்வார்கள். "இந்த முறை நீங்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள்? "வேறு யாருக்கு! என்ரை வாக்கு கிழவனுக்குத்தான்!"

பேசிக் கொள்பவர்களும் முதியவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால் தந்தை செல்வாவைக் கிழவனென்று விழிப்பார்கள்.

காரணம் இத் தந்தை இளைஞர்களுக்கும் தந்தை, முதியவர்களுக்குந் தந்தை.

தந்தைக்குத் தந்தை! தமிழீழத் தமிழர்களின் தந்தை!

எனக்கு வாக்களிக்கும் வயது வந்ததும் எனது முதலாவது வாக்களிப்பு உங்களுக்கென்று சொல்லிக் கொண்ட நினைவுகள் ஜனநாயக மன மகிழ்வை இன்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன.

"நாங்கள் சாகும்வரை எஸ்.ஜே.விக்குத்தான் வாக்களிப்போம்" இப்படிக் கூறிய பல நூறு மக்களை நான் நேரில் சந்தித்திருக்கிறேன்.

இப்படியொரு பற்றுதல் - ஒட்டுதல் வேறு எந்தத் தலைவருக்கும் கிட்டியதில்லை!

மக்கள் தலைவனாக மக்களின் மனதில் எப்படி இடம் பிடிப்பது என்பதை மற்றவர்கள் உங்களுடன் பழகித்தான் புரிந்து கொள்ளவேண்டும்.

நீங்கள், ஒரு ராணி அப்புக்காத்து. ஆனால், வழக்குகள் பேசுவதை மட்டுமே கடமை எனக் கொண்டிருந்த ஒருவர் அல்ல.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடியதாலும், வழக்காடியதாலும் உங்களுக்குக் கிடைத்த வெகுமானம் தடுப்புக்காவல் - சிறைவாசம்!

சிறைச்சாலைகளை மாங்குயில் கூவும் பூஞ்சோலைகளாக நினைக்கவைத்த புரட்சியாளர் நீங்கள்! தந்தையே! அன்று நீங்கள் காட்டிய தீவிரம் அரை நூற்றாண்டு கடந்து இன்று தீச்சுவாலையாகக் கொழுந்துவிட்டெரிகின்றது.

நீங்கள் பாதம் பதித்து பவனிவந்த தமிழ் மண்ணிலே உங்கள் பிரஜைகள் உரிமையுடன் வாழமுடியாதவர்களாக அப்புறப்படுத்தப்படுகிறார்கள்; அகதிகளாக்கப் படுகிறார்கள்.

ஆனாலும் அந்த மண்ணின் அசல் வித்துக்கள் விளை நிலத்து உரம் போன்று விடுதலைக்கு உரமாகியுள்ளார்கள்!

விடுதலை வேங்கைகளாகக் களம் பல கண்டு காற்றையும் விண்ணையும் சாடி வெற்றி முழக்க மிடுவதும் ஒரு புறம் நடக்கிறது!

கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் புரியக் காட்டித் தந்த உங்கள் பாதை புனிதமானது!

புல்லர்களுக்குப் புரியுமோ புனிதம் என்றால் என்னவென்று!

கசாப்புக் கடையிலே கற்பூர வாசனை எடுபடாது. உங்கள் கனவும் தமிழர் நம் வாழ்வும் வேறல்ல! பாதையைக் கொஞ்சம் மாற்றியுள்ளோம். பயணம் நெடியது! தியாகங்கள் அளப்பரியது! எங்கள் விடுதலைக்கு விலை அதிகம் தான்! பேரம் பேசாமல் உங்கள் பிள்ளைகள் களம் புகும் காட்சிதனை வானிருந்து பாருங்கள்.! வெற்றிக்கனி பறிக்க வாழ்த்துங்கள்.!

உங்கள் காலத்தில், உங்கள், கனவு- உங்கள் இலட்சியம் நிறைவேறவில்லையென்று நீங்கள் ஆதங்கப் பட்டிருக்கலாம்.

ஆனாலும் ஒரு வித நம்பிக்கையுடன் - நிம்மதியுடன் உங்கள் ஆத்மா பிரிந்தது!

உங்கள் பிள்ளைகள் அந்த நம்பிக்கை நட்சத்திரத்தை அடையாளம் கண்டு அணிதிரண்டு நிற்கிறார்கள்!

உங்களை ஈழத்தின் காந்தி என்பார்கள். வாழ்ந்தவரை எந்தக் கோட்சேயாலும் உங்கட்குக் குறி வைக்க முடியவில்லையே! இது எப்படி?

நீங்கள் தமிழ் ஈழத்தின் தந்தையல்லவா!

சத்தியம் - நேர்மை - தன்னலமற்ற சேவை - தன்மானமிக்க துணிவு - தமிழ் மக்களிடத்துக் கொண்ட பாசம்..... இவையாவும் உங்களிடம் குடிகொண்டிருந்த காரணத்தால் தங்கள் இறுதி யாத்திரையில் இலட்சக் கணக்கில் தங்கள் மைந்தர்கள் பங்கு கொண்டனர்.

முப்பது நாள் காரியத்தின் பின் மறந்துவிடக்கூடிய சாதாரண மனிதரல்ல நீங்கள்!

எங்கள் தமிழீழத் தந்தை நீங்கள்!

இந்த நூற்றாண்டிலும் சரி தமிழர்கள் தொடர்ந்து வாழும் அடுத்தடுத்த நூற்றாணடுகளிலும் சரி எங்கள் தந்தையர் நாடென்னும் போதினிலே ஒரு சக்தி பிறக்க வைத்த பெருந்தகையே உம்மைப் போற்றிடுவோம்! தொழுதிடுவோம்.

என்றென்னும் இனத் தந்தை தங்களை நினைத்துப் பூரித்து மகிழ்ந்திடுவோம்!

www.tamilarangam.net

# Some Reflections on the Life and Times of S.J.V. Chelvanayakam

(100$^{th}$ Birth Anniversary Commemoration)
Extracts of a speech made on 31 March 1997 in Colombo

**Santasilan Kadirgamar**
Meiji Gakuin University
Tokyo, Japan

My earliest recollections of the revered and much respected leader Samuel James Velupillai Chelvanaykam go back to 1947. It was that historic, glorious and memorable day in world history, August 15, 1947 - when India became free. The occasion was the opening ceremonies of an exhibition and carnival at Union College, Tellippalai, under the principalship of Mr. I.P.Thurairatnam. Mr. Chelvanaykam unfurled the tri-coloured flag of Independent India and delivered a short speech. He was at that time in the midst of the election campaign and was a candidate for the KKS seat which he won with a comfortable majority a few days later, launching a long, eventful and in some respects a controversial political career which is now history. Nevertheless, so far as this country is concerned, an unfinished history.

Several years later, when my family lived at Tellippalai, where my father was pastor of the CSI Church (the members of the Chelvanayakam family were members of this church), I had the privilege of being one of the volunteers working for Mr. Chelvanayakam. We were then students in the university entrance classes at Jaffna College. As students of government and politics, we had read and studied federalism. One of the popular books then was a text book written by A. Jeyaratnam Wilson, then a young, bright and upcoming Assistant Lecturer in the University of Ceylon. Among the 40 students in the HSC hostel at Jaffna College, only two of us (V.Kanapathipillai - presently Dr. V.Kanapathipillai of the Dept. of History, Peredeniya University and I) were supporters of the FP. We were both from Tellippalai and worked for the FP. We lost, and when we returned to the hostel, the rest of the students welcomed us with a big hoot. They were mostly students in the science classes, were totally ignorant of the ABC of politics and were under the misconception that federalism was a division of the country and would adversely affect their prospects of employment in the rest of Ceylon. Many of them today are abroad and are passionate Tamil nationalists - rather latecomers to the world of politics. These then are some of the ironies of contemporary history!

Later, I had the privilege of interacting closely with several members of the FP/TULF from the 1950s. As a student of Jaffna College I came to know Mr. Amirthalingam and continued to have a personal relationship right until his sad demise. I learnt Tamil politics in diligently listening to his speeches when he was the star attraction at the 1952 election meetings. He was not only an eloquent speaker in English and Tamil, but was also an outstanding debater with a thorough grasp of the facts and issues. I must confess at this juncture that I was a political opponent of Mr. Amirthalingam and the FP in the Vaddukoddai electorate in the 1960 March/July and the 1965 elections - being an active supporter of the left movement, the LSSP and CP at that time. This change occurred during my period in the University of Ceylon. Mr. Amirthalingam of



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

course won these three elections with ease. I may add that when I finally decided to vote for him in the 1970 election he lost his seat, placing me always on the losing side! On one occasion in 1970, I asked him whether he had made any serious mistake in his political career. He admitted that in 1957 much against the advice of his respected leader(Mr. Chelvanayakam) he decided to erase the Sinhalese 'Sri' on the number plates of the buses that had been sent to Jaffna, replacing them with the Tamil 'Sri'. This, as is well known, created further anti-Tamil tension in the country. Every delegation I took to him came back impressed with his political acumen and openness. The SCM delegation composed of Sinhalese Christian and Buddhist students that called on him after the 1977 riots came back utterly impressed with his life style, the hospitality of his home and his intellectual flair. These students confessed to me that in their own electorates in the South they dare not step into an MP's house and raise the kind of question they raised and have the kind of frank discussion they had with him, in spite of the fact that he was at that time Leader of the Opposition. One meeting with him was enough to dispel the negative image that had been tenaciously cultivated by the vicious campaign that had been carried out against him by extremists in the South. This was true of not only Mr. Amirthalingam but of several parliamentarians of the FP/TULF - their way of life and easy accessibility. This quality perhaps was imbibed from their leader.

I intend to focus today on Chelvanayakam's role as a peace-maker. While he was firmly committed to the legitimate rights of the Tamil-speaking peoples, he had both the vision and the commitment to compromise in the larger interests of the whole country. This approach is clearly evident from his earliest speeches. In fairness to him and his place in history, in the context of the adverse propaganda carried out against him, it is but right that we highlight his role as peace-maker. His speeches- choice of words and expressions - were that of a moderate, statesmanlike, and I believe consciously drafted to provide space for more compromise. The resolution placed before and adopted by the first National Convention held in Trincomalee in 1951 is a good example. The resolution was not worded in belligerent and confrontational language. On the contrary, the tone is one of moderation and conciliation, reflecting the values of the vast majority of the people of this country.

The Bandaranaike-Chelvanayakam Pact as it has popularly become known is a tribute to the vision and statesmanship of these two great leaders. Concise and to the point it laid the basis for all future negotiations leading to agreements, accords and proposals. Both Chelvanayakam and Bandaranaike exhibited their extra-ordinary negotiating skills and a capacity for compromise, in what was and continues to be a complex and intricate problem. Every subsequent agreement or proposals placed before the people of this country derive their basic and fundamental principles from this Pact. These include the Dudley Senanayke - Chelvanaykam Pact of 1965, the Development Councils Act No. 35 of 1980, Annexure 'C' of 1983, the Indo-Sri Lanka Agreement of 1987, and the Devolution Proposals now before the country.

The B-C Pact incidentally was one of the shortest among these pacts and agreements, less than three pages. It must be said in fairness to both statesmen that they sincerely desired a solution within the parameters and limitations that their



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

politics imposed on them. It is now possible to discern a continuity in the approach of the Federal Party and the subsequent TULF in consistently sticking to the principles as enunciated in the B-C Pact. On the other hand one can also discern a similar trend in the SLFP, now the major partner in the Peoples Alliance under the leadership of Chandrika Bandaranaike Kumaratunge. One must however admit that the two governments led by Mrs. Bandaranaike made little or no effort to seek a solution on the principles laid down by Mr. Bandaranaike . The Dudley-Chelva Pact couched in different terms sought to establish a framework for a solution. It however fell far short of the principles enshrined in the B-C Pact. The subsequent UNP leadership ignored even this limited advance made by their party at great cost to the country, until forced by powerful forces both internal and external to arrive at the Indo-Sri Lanka Agreement of 1987. Four issues figured in the B-C Pact. The Official Language question and the question of Citizenship for the up-country Tamils have been legally resolved though on matters of implementation fall far short of the expectations of the Tamil people. The unresolved issues are those of Regional autonomy and the matter of land settlement schemes.

In seeking to establish an autonomous unit on a linguistic basis, Chelvanayakam was focusing on an issue that had relevance in the whole of South Asia. We have seen in the period after the Trincomalee resolution the map of India redrawn and in 1971 the birth of Bangladesh. In India the Constituent assembly refused to endorse proposals for constituting states on a linguistic basis. Nehru was initially opposed to the concept of linguistic states on the grounds that such a provision would endanger India's unity and integrity. He was forced to revise his position in 1953 when the Telegu-speaking state of Andhra emerged as the first such state. The Commission Constituted to Reorganise States in the Indian Federation while reiterating that the Union of India was the basis of their nationality conceded the criterion of language as the basis for constituting a state. We would do well to remind ourselves at this juncture that autonomy is desirable even in the absence of linguistic, religious and cultural homogeneity. It is increasingly being realised in the contemporary world that there is a vital need for autonomy to guarantee democratic rights to the vast masses of people. This is the position taken-up by the left movement and human rights and peoples movements.

The big question facing us 20 years after the passing away of SJVC is - What now? - will his aspiration and vision for the people of this country ever be realised. Will we have Peace with Justice which we can accept with honour and self-respect? Can we hope this will be realised in the 50th year after decolonisation in Lanka and even as we celebrate the hundredth birth anniversary of Samuel James Velupillai Chelvanayakam.

www.tamilarangam.net

# எஸ். ஜே. வி.யை என் இறக்கைகளில் காணுங்கள்!

எம். எச். எம். அஷ்ரஃப்
(ஜனாதிபதி சட்டத்தரணி)
துறைமுக அபிவிருத்தி, சமூகசேவைகள்,
புனர்வாழ்வு, புனர்நிர்மான அமைச்சர்
தலைவர் - அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ்

வானத்து அமரர்களே
வாசல் கதவுகளை திறவுங்கள்; எங்கள்
மானத்தை காப்பதற்காய் ஒரு பெரும்
மனிதனை மீண்டும் ஒரு தடவை
அழைத்துச் செல்ல வந்துள்ளேன்; வழிவிட்டு
அவருக்கு சோபனங்கள் கூறுங்கள்!

வானத்தின் பூந்தோட்டமே!
வர்ண மலர்களினால்
துரிதமாய் ஓர் ஏணியை அமைத்திடுக!
என் இறக்கைகளில் அவரை
ஏற்றிச் செல்வதற்கு வந்துள்ளேன்— மலர்
ஏணியில் இறங்கி, விரைவில் அவரை பூமிக்கு
அழைத்துச் செல்ல அனுமதி தாருங்கள்.
வானத்து அமரர்களே! உங்கள்
வாசல் கதவுகளை திறவுங்கள்!
வானத்து மரங்களே! இலங்கைப்
பூமியில் உங்கள் புகழை உயர்த்திய
தானைத் தளபதியின் கட்டளையை கேளுங்கள்!

இந்த அன்புத் தலைவனின் இனிய
பிறந்த நாளிது!
நூறாண்டு பிறந்த நாளிலாவது நாங்கள்
நினைத்தவரை அழைத்துச் செல்ல வந்துள்ளோம்!
வானத்து மரங்களே வாழ்த்துக்கள் பாடுங்கள்!
என் இறக்கைகளில் அவரை
ஏற்றிச் செல்வதற்கு வந்துள்ளேன்!

செத்த மனிதர்களை நினைவூட்ட நாம்
சிரார்த்த தினங்களில் சில வேளைகளில் கூடுவோம்!
வாழும் மனிதனை,
ஒவ்வோர் ஆண்டும் பிறந்த நாள்
வாழ்த்துக்களால் அலங்கரிப்போம்!
செத்துவிட்டார் இம்மனிதரென
சிந்தித்ததனால், எம் நாடும்
செத்துக் கொண்டிருக்கிறதே! எம்
சிந்தனை எல்லாம் தவறென தெளிந்தவுடன்
அவரின்னும் வாழ்வதைப் புரிந்து கொண்டே
அவரையிப் பிறந்த நாளில்
வாழ்த்தி வரவேற்க காத்திருக்கின்றோம்.
இனி, எம்நாடும் புத்துயிர் பெற்று
வாழத்தான் போகிறது

ஆகவே, வழிவிட்டு எம்மை
வாழ்த்தியே அனுப்புங்கள்.
வானவர்களே! உங்கள்
வாசல் கதவுகளை திறவுங்கள்
என் இறக்கைகளில் அவரை
ஏற்றிச் செல்லும் பாக்கியத்தைப் பாருங்கள்!

பூமி, இங்கு ஒரு புதிய தூதுவனாய்
என்னை இந்த இறக்கைகளுடன்
அனுப்பி வைத்துள்ளது ஒரு
புதுச் செய்தியும் கூடவே.
ஆகவே,
வானத்து அமரர்களே! உங்கள்
வாசல் கதவுகளை திறவுங்கள்!
ஓய்வெடுத்தது போதாதென்று சாட்டுச் சொல்லி
அவரை உங்களுடன்
வைத்துக் கொள்ளவா பார்க்கின்றீர்கள்!

ஓயாமல் உழைப்பவர்கள்!
அதல பாதாளத்தில்
வீழ்ந்து கிடக்கும் மானிடத்தை
உயர்த்தி விடுவதற்காய் கை கொடுப்பவர்கள்!
மரமாகி நிழல் தருபவர்கள்!
மனச்சாட்சியை யார்க்கும்;
எதற்குமே அடகு வைக்காதவர்கள்!
எல்லோரும் ஒரு நாள் சாய்ந்திடுவர்தான்!!
எனினும் மீண்டும்
அவர்கள் ஒரு நொடியில் உயிர் பெறுவர்!
அதன் பின் ஓய்வே இல்லாத
ஓர் உலகில் சதா உலா வருவர்;
ஓய்வேயில்லாத மரங்கள், சாய்ந்து மீண்டும்
விதையாகி, காயாகிக் கனிதந்து சாய்வதைப் போல்!
முடிவேயில்லாத தொடர் கதையின்
காவியத் தலைவனை
என் இறக்கைகளில் ஏற்றிச் செல்ல வந்துள்ளேன்
வழி விட்டு அனுப்பி வையுங்கள்!
வானத்து அமரர்களே!
உங்கள் வாசல் கதவுகளை திறவுங்கள்!

இறந்த பின்பும் உயிர் வாழும்
சிறந்த மனிதனை அழைத்துச் செல்ல வந்துள்ளேன்!

www.tamilarangam.net

அவரையென்
சிறகுகளின் மீது ஏற்றுங்கள்!
வீண் சாட்டுச் சொல்லி என் நேரத்தை
விரயமாக்கி விளையாடாதீர்கள்!
அழைத்து வாருங்கள் அந்த
அகிம்சையின் உருவத்தை!
ஏற்றுங்கள் என் வெள்ளி இறக்கைகளில்!
வானத்து பூந்தோட்டமே!
வர்ண மலரேணியை ஆயத்தமாக வைத்திடுக!

சரிகை வேட்டியின் சரசரப்புக் கேட்கிறது!
சந்தனப் பொட்டின் வாசனை மூக்கில் கமழ்கிறது!
வானவர்களே! வழி விடுங்கள்;
வடிவான தேவதைகளே,
கூடி நின்று, ஏன் அவரை
நாணிக் கூச வைக்கின்றீர்கள்?
பூமியின் தூதுவர்கள் இல்லாத நேரம் பார்த்து
உங்கள்
பொல்லாத லீலைகளைக் காட்டுங்கள்!

புதிய மாப்பிள்ளை போல் வருகின்றார்!
கூன் நிமிர்ந்து, உடலின்
குறைகள் எல்லாமே மறைந்து
வருகின்ற அந்த வடிவழகன் யாரய்யா?

வானவர்களே! உங்களுக்கும் அவரா தலைவர்?
ஆகையால்தானா வழி அனுப்பி வைக்க
தாமதம் காட்டுகிறீர்கள்?
பூமியில் இருந்து உங்களுக்கு
புதிய வெளிச்சங்களை அவர் தருவார்!
ஆனால், இலங்கைக்கு அவரின் தேவை
உடனடியாக இருக்கிறது.
சந்திரிகா (பண்டாரநாயக்க) குமாரதுங்கா
அமைக்க விரும்புகின்ற சமாதான வீட்டின்
அத்திவாரக் கல்லை, நடுவதற்கு
அவரை நீங்கள் அனுப்பி வைக்கக் கூடாதா?
ஆகவேதான் கேட்கின்றேன்!
ஏற்றுங்கள் இந்த இளம் நதியை!
என் இறக்கைகள் எனும் கப்பலில்!
அதைக் கொஞ்சமும்
சிந்தாமல் எடுத்துச் செல்லுகின்றேன்;
இரத்தக் கறைகளினை கழுவித் துடைப்பதற்காய்!
பூமிக்கு உடனே அவர் தேவை; அவருள்ளமெனும்
கரையாத
புனித சவாக்காரத்தினால்
வட, கிழக்கில் படிந்துள்ள அழுக்குகளைக் கழுவி
அகற்றுவதற்காய் ஓடோடி வந்துள்ளேன்!
முழு நாடுமே இருள் போக்க, அந்த
முழுமதியை தேடுவதால்; நூற்றாண்டு
பிறந்த நாள் விழாப்பூண்டு, வீதிகளில்
ஆடுதற்கும், பாடுதற்கும் ஆரம்பித்தோம்.
அவரைக் கண்டதும்; பூமியில் காய்கள் கனியும்!
மொட்டுகள் விரியும்!
விட்டிலும், நெருப்பில் விழாமல் முதிர்ச்சிபெறும்!
அவர், மூச்சுப்பட்டதும்
செத்துக் கொண்டிருக்கும் இதயமும் சிலிர்க்கும்!
புத்துணர்வு பெறும்!
பகை மறந்து சிரிக்கும்!
சீரான ஒரு மலர்ப்பூங்காவாக விரைவிலவை மாற்றும்!
அங்கே சமாதான வண்டுகள் ரீங்காரம் செய்யும்!
சத்தியப் பிரகடனங்களின் சப்தத்தின்
அதிர்ச்சியினால் உங்கள் வானுலகம்
அத்தனையும் அலறும்! எங்கள் ஆதரவை நாடும்!

ஆகவே, அவரை
அழைத்துச் செல்ல உதவுங்கள்!
என் இறக்கைகளில் அவரை
ஏற்றுங்கள்; இலங்கையில் ஒரு சமாதான
இசைக்கச்சேரி நடத்திவிட்டு,
மீண்டும் அவரை என்
இறக்கைகளில் ஏந்தி வந்து, உங்களிடம்
ஒப்படைப்பேன்;
இது சத்தியம்; அவர் வழியில், நான் கருவுற்று;
தவம் செய்து வளர்த்தெடுத்த
விருட்சங்கள் மீது சத்தியமாக!

வானவர்களே!
வாழும் மனிதர்களை, நீங்கள் மட்டும்
சொந்தமாய் வைத்திருக்க
உங்களுக்கு உரிமையில்லை!
அவர்கள் வேண்டும் போதெல்லாம் வெளியே சென்று
பூமியில் உலாவர
அனுமதியும் தேவையில்லை!
அது, அவர்களுக்கும் உரிமை என்பதனை
அறிந்து கொள்ளுங்கள்!

வாழும் மனிதரின் வருகை
இங்கு குறைவென்பதால்
வானவர்களே! அவர்களின் வரப்பிரசாதங்களை
நீங்களுமா மறந்து நிற்கின்றீர்கள்?
உரிமைகள் மறுக்கப்படும் இடங்களில்,
உறுமிச் சீறுகின்ற சிங்கமொன்றை
அதற்காகத்தான் தோந்தெடுத்து, பூமி உங்களிடம்
அனுப்பிவிட்டு ஒரு பதிலை எதிர்பார்த்து நிற்கின்றது!
இல்லையென்றால் போர் முழக்கம் செய்வதற்காய்!!

www.tamilarangam.net

ஆகவே உங்கள்
கணக்கு இங்கு பலியாது
காரியத்தில் இறங்குங்கள்!!
வானத்தின் வாசல்களை உடனேயே திறவுங்கள்!
மறுக்கப்பட்ட உரிமைகள் மட்டுமல்ல
மறைக்கப்பட்ட உரிமைகள் மட்டுமல்ல
மறந்துவிட்ட உரிமைகளையும் தான்
அடிக்கடி நினைவூட்டாவிட்டால்
எல்லாவற்றையும் சேர்த்து;
பொல்லாதவர்கள், பூமியில் புதைத்து விடுவார்கள்!
அத்துடன், நீதி, நேர்மை, உண்மை, சத்தியம்...
என்று, அத்தனை உயர்ந்த பண்பையும்
எரித்தும் புதைத்தும் விடுவார்கள்! அந்த
புதைகுழிகளையும் கூடவே மறைத்தும் விடுவார்கள்!
வானவர்களே நீங்கள் மட்டுமென்ன
இவ்விதிக்கோர் விலக்காயிருத்தல் கூடுமோ?

ஆகவே தான், வாழும் மனிதனின் வருகையால்
மீண்டும் ஒரு தடவை அவன்
வாழ்ந்த மண்ணின்
சீரையும் சிறப்பையும் உயர்த்திட
பூமிக்குள்ள உரிமையை
வலியுறுத்த வந்துள்ளேன்!
வானவர்களே வழிவிடுங்கள்!!
என் இறக்கைகளில் அவரை
ஏற்றிச் செல்ல உதவுங்கள்!

ஐயா, ஆயிரம் கோடி வந்தனங்கள்
ஏறிக்கொள்ளுங்கள்
என் இறக்கைகளிலே!
என்னை, அடையாளம் தெரிகிறதா உங்களுக்கு?
புத்தளத்து பள்ளிக்குள் முஸ்லிம்கள் தலைகளை
பொலிஸாரின்
பித்தளைக் குண்டுகள் பிளந்தபோது, அன்று
பாராளுமன்றத்துள் பேசியது நினைவுண்டா?
நிச்சயம்,
அப்போது, பல்லாயிரம் முஸ்லீம் இளைஞர்களின்
உள்ளம் ஒவ்வொன்றிலும் உங்களுக்காக ஒரு
உவகைப் பூ மலர்ந்தது!
அந்தப் பூக்கள் சருகான போது
விழுந்த விதைகளை எடுத்து
விதைத்து, வளர்த்து, மரமாக்கி தினமும்
உரம் போடும் உழவன் நான்!
உங்களை அழைத்துச் செல்லும்
உயர் பணியை நிறைவேற்ற
இங்கு நான் வந்துள்ளேன்.!!

வாருங்கள் ஐயா, வந்து என் இறக்கைகளில் அமருங்கள்!

மலரேணி காத்திருக்கிறது!
மெதுவாக அதில் உங்களை அமர்த்தி
இலங்கைக்கு அழைத்துச் செல்வேன்!

இறங்குங்கள் ஐயா,
இதோ இலங்கைக்கு நாம் வந்து விட்டோம்!
பார்த்தீர்களா? எங்கு பார்த்தாலும்
ஆயுதங்களால் வேலி அமைத்திருக்கிறார்கள்!
எமது பார்வைகளும் கூட ஆயுதமாய் ஆனதையா!
பழைய பாராளுமன்றக் கட்டிடத்தை பாருங்கள்! – அதன்
பக்கத்தே பண்டாரநாயக்க சிலையையும் காணுங்கள்!
அந்த, சிலையைப் பாதுகாக்கவும் வீரர்கள்!! இந்தச்
சீர்குலைவை யாரிடம் சொல்வதையா?
மலையைச் சிலை செய்யும் மனிதர்கள் மறுபுறத்தில்
மடிந்து துடித்துச் சிதறுவதையும் பாருங்கள்!
இந்த வேதனைகளை,
தாங்க முடியாத காரணந்தான்
தந்தையே, உங்களை அழைத்து வந்தேன்!

ஐயா என்ன இது...
நீங்களும் அழுவதா? – கூடாது!
இங்கே நடக்கும் இன்னல்களைக் கண்டு,
மனம் நொந்து
நீங்கள் கண்கலங்கவும் கூடாது!
இருண்டதொரு பாதாளக் குகைக்குள்
வந்ததெப்படியெனும் வரலாறும் மறந்தவராய்
வெளியேறி ஓடும்
வழியும் தெரியாதவராய்
வெளிச்ச மேற்றவும் புரியாதவராய்
உங்களைத் தேடி இந்நாடு துடிக்கிறது!
தேற்றி விட்டுச் செல்லுங்கள்!!

பட்டுச்சரிகை வேட்டி, சந்தனப் பொட்டும் வைத்து
தாம்பூலம்
போட்ட பொக்கு வாய்க்குள்ளிருந்து
பிறந்து வரும் புன்னகையைக் காண்பதற்கும்,
கண்டு அதன் களிப்பில் எம் துயர்களை மறந்து
சிலிர்த்து குதூகலிப்பதற்கும்
பிறந்த நாள் விழா ஒன்று செய்துள்ளோம் பாருங்கள்!

பிறந்த நாள் குழந்தையே! ஒரு தடவை
சிரித்து எம்மனங்களினைச் சந்தோஷப்படுத்திடுக!
ஐம்பது ஆண்டுகட்கு பின்பு
இந்த நாடு, மீண்டும் நீங்கள்
காட்டிச் சென்ற வழியில், சமாதானத் தாள்களில்
புதுக்கவிதையொன்றை
தீட்டிக் கொண்டிருக்கிறது!

www.tamilarangam.net

'பேரினவாதம்' என்பதற்குப் பொருள் தந்த
பேராசிரியனே! உங்களையொரு
பைத்தியக்காரன் என்று, சொன்ன
இந்த இலங்கைத் திருநாடு அதையின்று மறந்து
"அப்படிச் சொன்னவாகளைத்தான்
இத்தனை காலமும்
மன நோய் விடுடுதியில்
வைத்திருக்க வேண்டும்"
என்ற, ஒரு, குற்ற ஒப்புதலையும்
செய்து கொண்டிருக்கிறது!
அதுமட்டுமன்றி

இந்தநாடு பேரினவாதத்திற்கு
புது இலக்கணங்களும்
கூறிக் கொண்டிருக்கிறது!
இந்த நாட்டை குட்டிச் சுவராக்கிய
பேயும் அது தான்!
பிசாசும் அது தான்! என்று, அடையாளமும் கண்டிருக்கிறது.
தமிழ், முஸ்லிம் பேரினவாதங்கள் எனும்
புதிய பிசாசுகளும் இப்போது
பித்துப் பிடித்து அலைவதால்
அத்தனை பேய்களுக்கும் மடைவைத்து
வெட்டி துண்டாடி,
விளையாடி மண்ணில் புதைக்க வந்துள்ள
சித்தம் தெளிந்தவர்கள்தான்
உங்களுக்காய் ஒரு சிறு விழாவை எடுக்கின்றோம்!
கண்டு களியுங்கள்! – உங்கள்
கண்கள் இனிக் கலங்கவே கூடாது!!

ஐயா! பெரியவரே!
"எல்லாமே எல்லோருக்கும்
எப்போதும் கிடைக்காது!!'
என்கின்ற உண்மையை எடுத்து ஓதுங்கள்!
போது மென்ற மனத்துடன்
பொறுமையுடன் முன்செல்ல
கர்த்தரிடம் உங்கள்
கரங்களை உயர்த்தியே பிரார்த்தியுங்கள்!
உங்கள்
கண்ணீரின் திவலைகளைத் துடையுங்கள்!!

நீங்கள் மட்டுமல்ல
நாங்களும் தான்
நூற்றாண்டு நூற்றாண்டுகாலம்
பூமியில் மட்டுமல்ல,
வானத்திலும் வாழ்ந்து இந்த வையகத்தை
வென்று வலம் வர வாழ்த்துங்கள்!!

ஐயா! உங்களைக் கண்டதும்
இப்பூமியில்
காய்கள் கனிவதைப் பாருங்கள்!
மொட்டுக்கள் அவிழ்வதைப் பார்த்து
முறுவலியுங்கள்!
உங்களைக் கண்டதும்
விட்டில்களும் நெருப்பில் விழாமல்
முதிர்ச்சி பெறுவதைப் பார்த்து
ஆறுதல் அடையுங்கள்!
உங்கள் மூச்சுப்பட்டதும்
செத்துக் கொண்டிருக்கும் இதயங்களெல்லாம்
சிரிக்கும் ஒலிகளைக் கேளுங்கள்! அவை
சீரான ஒரு மலர்ப் பூங்காவாய்
மாறுவதையும் காணுங்கள்!
சமாதான வண்டுகள் அங்கே
சத்தியப் பிரமாணங்கள் செய்யும்
சப்தங்களையும் கேளுங்கள்!
அந்தச் சப்தங்களின் அதிர்ச்சியினால்
வானம் அலறுவதைப் பாருங்கள்!
நம் வருகையால் தேறத் துடிப்பதையும் காணுங்கள்

ஏறுங்கள் ஐயா,
என், இறக்கைகளைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்!
ஏறுங்கள் ஐயா
என் இறக்கைகளைப் பற்றி பிடித்துக் கொள்ளுங்கள்!

இதோ மீண்டும்
வான உலகுக்கு வந்து விட்டோம்!

வானவர்களே !வானத்தின்
வாசல் கதவுகளை திறவுங்கள்!
எஸ்.ஜே. வியை என்
இறக்கைகளில் இருந்து மெதுவாக இறக்குங்கள்!
தேவதைகளே உங்கள்
தெவிட்டாத லீலைகளை
இனி வேண்டுமெனில் அவரிடமும்
காட்டுங்கள்!!
மரங்களே வாழ்த்துங்கள்!
மலர்களே சொரியுங்கள்!!

## காணிக்கை !

ஒவ்வொரு மனிதனையும்
இறைவனின் அதி
உயாந்த படைப்பாய்
காணும் வல்லமை பெற்ற
ஒவ்வொரு உள்ளத்துக்கும்
இக் கவிதையென் காணிக்கையே!

www.tamilarangam.net

# தந்தை செல்வா - சில நினைவுகள்

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**
**(செயலாளர், தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு, யாழ்ப்பாணம்)**

கொழும்பில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் அதன் தலைவர் திரு.கோடீஸ்வரன் ஊடாக சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்தும், அரசு ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டும் என்ற ஆணையை எதிர்த்தும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர். அவர்களுக்காக மூத்த வழக்குரைஞர் திரு. மு. திருச்செல்வம் (பிந்நாள் உள்ளூராட்சி அமைச்சர்) துணை வழக்கறிஞர் திரு. சர்வானந்தா (பிந்நாள் பிரதம நீதியரசர்) இருவரும் சென்னைக்கு வந்து, அங்கிருந்த மூத்த வழக்கறிஞர் திரு. நம்பியாரிடம் சட்ட ஆலோசனை பெற வேண்டியிருந்தது.

1963ம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னையில் நடக்கவிருந்த பட்டமளிப்பு விழாவுக்காக நான் வரவிருந்தேன். அரசின் விதிமுறைகள் என்னைத் தடுத்தன. அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் மற்றும் என். கியு. டயஸ் ஆகிய இருவரும் ஸ்ரீமா பண்டாரநாயக் காவின் அணுக்க ஆலோசகராயிருந்த காலம் சாதாரண குடிமக்கள் எவரும் அன்னியச் செலவாணி பெறுவதும் விமானச்சீட்டு வாங்குவதும் குடியகல்வு அனுமதி பெறுவதும் முடியாத காலம்.

சங்க உறுபபினர் சிலர் சென்னைக்கு இந்த வழக்கறிஞர் இருவரையும் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியத்தையும் அழைத்து செல்லுமாறு என்னிடம் கேட்டு நானும் ஒப்புக் கொண்டேன். பட்டமளிப்பு விழாவுக்கெனக் கேட்டு மறுக்கப்பட்டிருந்த நிலையில், அப்பொழுது தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. நாகநாதன் பயண ஆவணங்களுடன் என்னையும் அழைத்துக் கொண்டு அன்னியச் செலவாணி ஆணையரிடம் சென்றார். நியாயங்களை எடுத்துக் கூறினார். ஆணையர் ஒப்பவில்லை. திரு. நாகநாதன் நாற்காலியிலிருந்து எழுந்தார். உரத்தசத்தமிட்டு ஆங்கிலத்தில் பேசிக்கொண்டே ஆணையரின் மேசையைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார். அவர் பேசிய வேகத்திலும் நடந்த வேகத்திலும் ஓரிருமுறை மேசையைத் தட்டிய வேகத்திலும் நானும் ஆணையரும் திகைத்தோம். ஆணையர் என்னிடமிருந்த ஆவணங்களைப் பெற்று நீங்கள் சென்னைக்குப் போகலாம் எனக்கூறி ஒப்பமிட்டார். திரு. நாகநாதன் தணிந்து, அமர்ந்து, கையைநீட்டி, ஆணையரின் கையைப்பிடித்துப் பலமாகக் குலுக்கி, நன்றி சொல்லிவிட்டு, எனது தோளில் கையைப் போட்டபடி ஒடுக்கமான மரப்படிக்கட்டுகளின் கீழே இறங்கி வந்தார்.

அவரது காரில் ஏறி நேரே திரு. செல்வநாயகம் அவர்களின் வீடு சென்றோம். என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார். சென்னைக்கு இவர் போகிறார். திருவையும் மற்றவர்களையும் தேவையான இடங்களுக்கு அழைத்துச் செல்வார் எனக் கூறினார். திரு. செல்வநாயகம் என்னைப் பார்த்தார். அவர் கண்கள் என்னுள் ஊடுருவின. மெல்லிதாகப் புன்னகைத்தார். எதுவும் பேசாமல் நின்றார். நாங்கள் இருவரும் விடைபெற்றுக்கொண்டு வெளியேறினோம்.

தந்தை செல்வாவுடன் முதல்முதலில் நேருக்கு நேர் அறிமுகமான நிகழ்ச்சி எனக்கு அதுதான். அப்பொழுது எனக்கு வயது 21. நாச்சிமார் கோவிலடியிலும் யாழ். முற்றவெளியிலும் பலமுறை அவர் பேசும் கூட்டங்களுக்கு சிறுவயதினனாக நான் சென்று இருக்கிறேன். காற்று வேகமாக வெட்ட வெளியில் வீச, ஒலிவாங்கியில் காற்றின் கரகரப்புடன் இணைந்து அவர் பேசியவை எனது காதுக்குள் இன்றும் ஒலிக்கின்றன. மென்மையும் உறுதியும் சுருக்கமும் கொண்ட அவர் உரைகள் என்னை அப்பொழுது கவர்ந்தன. தந்தை செல்வா பேசும் கூட்டங்களுக்கு எனது தந்தையார் என்னை அழைத்துச் செல்வார். என்தந்தையாருக்கு அவரின் கொள்கைகள் ஏற்றனவாக இருந்தன. 1947ல் திரு. பொன்னம்பலம், திரு. செல்வநாயகம், திரு. குமாரசுவாமி ஆகிய மூவரும் கைதடியில் கூட்டம் நடத்திய பொழுது திரு. குமாரசுவாமி சார்பில் என் தந்தையார் அவர்களை வரவேற்றுப் பேசியிருக்கிறார். கைதடிக் கிராமசபையில் என் தந்தையார் உறுப்பினராக இருந்த காலத்தில் அவருக்கு இவர்களின் தொடர்பு இருந்தது.

1966இல் திரு. மு. திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலத்தில் ஒரு மாதம் அவருக்கு அணுக்கச் செயலாளராகப் பணிபுரிந்தேன்; அக்காலத்திலும் பின்பும் திரு. திருச்செல்வத்துடன் தந்தை செல்வா இல்லத்திற்கு அடிக்கடி சென்றுவருவேன். 1970களில் தொடர்ச்சியாகக் கொழும்பில் தங்கியிருந்த காலங்களில் சுதந்திரன் இதழில் கட்டுரைகள் எழுதுவேன். 1970களில் அனைத்துலக நீதியாணைக் குழுவுக்குத் தமிழரின் அவலநிலை பற்றி புத்தக அளவிலான நீண்ட கட்டுரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றைத் தந்தை செல்வா அனுப்பியிருந்தார். அக்கட்டுரையைத் தமிழில் மொழிபெயர்த்தேன். சுதந்திரன் வெளியீடாக அந்த நூல் வெளிவந்தது.

1975ல் தேர்தல் தொகுதிகள் வரையறுக்கும் ஆணைக்குழு அமைந்தது. வடக்கே அச்சுவேலியில் ஒடுக்கப்பெற்ற தமிழ் மக்களுக்காகத் தனித்தொகுதி அமைக்க வேண்டும் என்ற கருத்தைத் தமிழசுக் கட்சியினர் உலவவிட்டுக்கொண்டிருந்தனர். தமிழரசுக் கட்சி சார்பில் ஆணைக்குழு முன் திரு செல்வத்தம்பு சாட்சியம் அளிக்க இருந்தார். இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலாளராக இருந்த நானும், எனது நண்பர் திரு. ஞானானந்தனும் திரு. செல்வநாயகம் வீட்டுக்குப் போனோம். சாதி அடிப்படையில் தொகுதி வரையறைகள் வேண்டாம் எனவும், ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் பின்தங்கிய வகுப்பினரையே வேட்பாளராகத் தமிழரசுக் கட்சி அனுப்பலாம் என்றும், அதன்மூலம் பின்தங்கிய வகுப்பினர் பலருக்குத் தேர்தல் வாய்ப்புக் கிட்டும் என்றும், ஒரு குறிப்பிட்ட தொகுதியை மட்டும் ஒதுக்கினால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சமூகச் சூழலில் மேலும் புதிய சிக்கல்களை அரசியல் மூலம் கொண்டுவர வாய்ப்பிருக்கும் எனவும், நமது வேறுபாடுகளைச் சிங்கள-பௌத்தர் பயன்படுத்தி ஊடுருவ இத்தொகுதி உதவும் என எடுத்துரைத்தோம். நாங்கள் கொடுத்த கடிதத்தை அவர் படிக்கும்போது பலமுறை அவரது கைக்குட்டையால் வாயைத் துடைத்தபடியிருந்தார். நோயையும் பொருட்படுத்தாது படித்தார். நாங்கள் கூறிய கருத்தில் அவருக்கும் உடன்பாடு இருப்பதாகக் கூறினார். "செல்லத்தம்பு விடம் இதைச் சொல்கின்றேன். அவர் உங்கள் கருத்தையும் கவனத்தில் கொண்டு தமிழரசுக் கட்சி சார்பில் சாட்சியம் அளிப்பார்" என எம்மிடம் உறுதியளித்தார். தேர்தல் வரையறையின்போது சாதியடிப்படையில் தொகுதிகள் அமையவில்லை என்பது மட்டுமல்ல, அடுத்த வந்த தேர்தலில் பின்தங்கிய வகுப்பினர் சிலர் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்டனர்.

1974ம் ஆண்டு அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுத் தொடக்கநாள் நிகழ்ச்சிக்குத் தந்தை செல்வாவை நாங்கள் அழைத்திருந்தோம். அவர் வந்து முன்வரிசையில் அமர்ந்து தொடக்க நிகழ்ச்சியைச் சிறப்பித்தார். தந்தை அவர்கள் அறிஞர்களை மதிக்கத் தெரிந்தவர் மட்டுமல்ல, அவர்களை அரசியலுக்கு அப்பால் நின்று கணிக்கவும் தெரிந்தவர்.

அதே ஆண்டு ஒருநாள் அதிகாலை வேளையில் யாழ்ப்பாணம் தொடர்வண்டி நிலையத்தில் வந்திறங்கினேன். முதல்வகுப்பு அறையில் தந்தை செல்வாவின் முகம் தெரிந்தது. அருகே சென்று அவர் வைத்திருந்த சிறிய பெட்டியை வாங்க முயன்றேன். உடல் நலிவுற்றிருந்த அவர் தனியாக வந்திருந்தார். அப்பொழுது தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து அரசுக்குச் சவால் விட்டிருந்த நேரமது. தேர்தலை நடத்தித் தன்னைத் தோற்கடிக்குமாறு அரசிடம் கூறியிருந்தார். பெட்டியை வாங்கி அவரை அழைத்துச் சென்று அவர் தங்கும் இடத்தில் விட்டுச் செல்ல விரும்பினேன். அவரை அழைத்துச் செல்ல நிலையத்துக்கு யாரும் வரவில்லை. பெட்டியையும் தரமறுத்த அவர், மெதுமெதுவாக அரக்கி அரக்கி நடந்து வந்தார். முதல்வகுப்பு பெட்டியின் வாசலில் நின்றபொழுது பெட்டியை கேட்டு வாங்கினேன். கைத்தாங்கலாக அவரை இறக்கிவிட்டேன். எங்கு போகிறீர்களோ அங்கு அழைத்துச்செல்கின்றென் என்றேன். என்னைப் பார்த்தார். மென்மையாகச் சிரித்தார். பெட்டியைத் திரும்பவும் வாங்கிக் கொண்டார். தொடர்வண்டி நிலையப் புறவாயிலை நோக்கி மெதுவாக நடக்கத் தொடங்கினார். பயணிகள் அனைவரும் விரைந்து வெளியேறினர். மேடையில் இவர் தனியே நடக்க, நான் மட்டும் பின்தொடர்ந்து செல்கிறேன். அவர் திரும்பி என்னைப் பார்த்து தன்னுடன் வரவேண்டாம் எனச் சைகையால் கூறுகிறார். நான் விடாமல் அவரைத் தொடர்ந்து செல்கின்றேன். பயணச் சீட்டை வழியில் காட்டிவிட்டு வெளியே வந்து படிகளில் இறங்க முயன்றபொழுது பெட்டியை நான் வாங்கிக் கொண்டேன். கைத்தாங்கலாக அவரைப் பிடித்துக் கொண்டு இருவரும் சேர்ந்து படிகளில் ஒவ்வொன்றாக மெதுவாக இறங்கினோம். கீழே ஐந்தாறு வாடகைக் கார்கள் நின்றன. முதல் நின்ற வண்டிக்கு அழைத்துச் சென்றேன். எங்கே போகிறீர்கள் எனக் கேட்டேன். றெஸ்ட் கவுசுக்கு என்றார். பின்கதவைத் திறந்து பெட்டியை உள்ளே வைத்துவிட்டு அவரை மெதுவாக ஏற்றி இருக்க வைத்தேன். முன்கதவைத் திறந்து ஏறப் போனேன். அவர் வேண்டாம் என்றார். கையைக் காட்டினார். நான் மீண்டும் ஏறப்போக, பிடிவாதமாக வேண்டாம் வேண்டாம் எனச் சொன்னார். ஓட்டுனரை அழைத்துச் செலவைக் கொடுக்க முயன்றேன். கையசைத்து என்னை அழைத்தார். என்னிடம் காசு இருக்கிறது. நான் கொடுப்பேன். நான் தனியே போவேன். நீங்கள் வரவேண்டாம் எனக் கார் ஜன்னல் வழியே என்னிடம் உறுதியாகச் சொன்னார். அவரை வழியனுப்பிவிட்டு நேரே வீட்டுக்குப் போகும் வழியில் தொலைபேசியில் கொழும்பிலுள்ள திரு. திருச்செல்வம் (கியூ.சி) அவர்களிடம் நடந்ததைக் கூறினேன. றெஸ்ட்

www.tamilarangam.net

ஹவுசில் தனியாக இருக்கிறார். என்னையும் வரவேண்டாம் என்றுசொல்லுகிறார். என்ன செய்யலாம், எனக் கேட்டேன். நான் பார்த்துக்கொள்கிறேன் என்று திரு. திருச்செல்வம் சொன்னபின்புதான் வீடு சென்றேன். அந்தக் காலத்தில் அவருக்கு இணையான ஒரு தலைவரை ஈழத்தமிழர்கள் பெற்றிருக்க வில்லை. அவர் மிக எளிமையான இயல்புகள் கொண்டவராய் இருந்தார்.

1977 ஏப்ரல் 25ம் நாள் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அலுவலகப் பணியாகச்சென்று கொண்டிருந்தேன். யாழ்ப்பாணம் மருத்துவமனையில் நோயுற்று நீண்ட காலமாகப் படுக்கையிலிருந்த தந்தைசெல்வாவின் நிலைமைமோசமாகி வருவதாக நாளிதழ்கள் செய்தி வெளியிட்டிருந்தன. மறுநாள் அவர் மறைவுச்செய்தியை யாழ்ப்பாணத்தில் இருந்த போது தெரிந்து கொண்டேன். மருத்துவமனைக்கும் தெல்லிப்பளைக்கும் வீரசிங்கமண்டபத்துக்கும் நான் சென்று வந்தேன். வீரசிங்கமண்டபத்தில் திரு. அமிர்தலிங்கம் இருந்தார். தந்தை செல்வாவிற்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்று அவரிடம் சொன்னேன். அவர் உடனே ஒப்புக் கொண்டார். பேராசிரியர் நேசையாவிடம் பேசுங்கள் என என்னை அனுப்பினார். மண்டபத்தின் பின் வரிசையில் பேராசிரியர் நேசையாக அமர்ந்திருந்தார். திரு. அமிர்தலிங்கம் சொன்னதை அவரிடம் சொன்னேன். அவரும் ஒத்துக்கொண்டார். உங்கள் தலைமையில் ஒரு குழு அமையும். இப்பொழுதே நிதி சேர்க்கத் தொடங்கலாம் என்றேன். ஒப்புக் கொண்டார்.

தந்தை செல்வா நினைவுச் சின்னக் குழுத்தலைவர், பேராசிரியர் நேசையா "நினைவுச் சின்ன நிதி ஒருரூபாய் என எழுதி, ஐம்பதாயிரம் சீட்டுகளை விவேகானந்தா அச்சகத்தில் அச்சிடுவித்தேன். அன்றிரவே 100 தொண்டர்கள் வரை திரட்டினேன். பேராசிரியர் நேசையா சீட்டு விற்பனையைத் தொடக்கி வைத்தார். முற்றவெளியில், யாழ்-பொதுநூலகத்திற்கு வடக்கே, தந்தை செல்வாவின் உடலைத் தீயிலிட முன்பு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் நினைவுச் சின்னத்திற்காக 32 ஆயிரம் ரூபாய்கள் சேர்ந்திருப்பதாகத் திரு. அமிர்தலிங்கம் அறிவித்தார். விரைந்து செயற்பட்டு, நிதியைச் சேகரித்து கணக்கையும் காசையும் எஞ்சிய சீட்டுகளையும் பேராசிரியர் நேசையாவிடம் ஒப்படைத்துவிட்டுக் கொழும்பு திரும்பினேன்.

1977 ஆடி மாதத்தில் எனக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. தந்தை செல்வா நினைவு அறங்காவல்குழு அமைத்திருப்பதாகவும், பேராசிரியர் நேசையா தலைவராகவும், திரு. மு. சிவசிதம்பரம், திரு. அ. அமிர்தலிங்கம் இருவரும் உபதலைவர்களாகவும் என்னைச் செயலாளராகவும் திரு. கதிரவேற்பிள்ளை பொருளாளராகவும் திரு. நடராஜா திரு. சந்திரஹாசன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் இக்குழு அமைந்துள்ளதாக என்னிடம் தெரிவித்தனர். என்னுடைய ஒப்புதலைப் பெறாமலேயே என்னைச் செயலாளராக்கினர்.

தந்தை செல்வா தொடர்பான சில நிகழ்வுகளைப் பின்னோக்கி நினைவில் கொண்டேன். தந்தை செல்வாவின் உயர்ந்த அரசியல் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட என் தந்தையாரைப் பின்பற்றினேன். தந்தை செல்வாவின் உரைகளைக் கேட்டேன். அவருடைய பணிகளில் உதவியாக இருந்தேன். அவர் இறந்தபின்பு அவர் நினைவு அறங்காவல்குழுச் செயலாளராகப் பணிபுரிந்தேன். 27 அடி ஆழத்தில் அடித்தளம் அமைத்து 98 அடி உயரமான நினைவுச் சின்னத்தை அவருக்குஅமைக்கும் பணிகளில் ஈடுபட்டேன். அவர் நினைவைப் போற்றும் ஏனைய நிகழ்வுகளை நடத்தினேன். அன்னாருடைய வாழ்வுடனும் பின்னும் மிகக்குறுகிய காலம் பணிசெய்து மகிழ்ந்ததை நெஞ்சார நினைவுகூருகிறேன்.

www.tamilarangam.net

# மூதறிஞர் வாழ்வினில்..... முக்கிய நிகழ்வுகள்

**வல்வை ந. நகுலசிகாமணி**

தந்தை செல்வா என நாம் எல்லோரும் அன்புடன் அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் 1898ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி மலேசியா ஈப்போ நகரில் பிறந்தார்.

1927ம் ஆண்டு தென்இந்தியத் தேவாலயத்தில் பார் குமாரகுலசிங்கம் மகள் எமிலிகிறேஸ்ற்கும் செல்வா அவர்கட்கும் திருமணம் நடைபெற்றது.

தந்தை செல்வா தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளராக 1947 ம் ஆண்டு போட்டியிட்டு பாராளுமன்றம் சென்றார். ஒரு தடவையல்ல மும்முறை சுப்பிரீம் கோர்ட் நீதியரசர் பதவி வழங்கப்பட்டிருந்தும் அதனை மறுத்து விட்டு தமிழ் மக்களுக்கு சேவைபுரிய அரசியலுக்கு வந்திருப்பவர் உங்கள் வேட்பாளர். நானோ ஒரு கிறிமினல் அப்புக் காத்து. அவரோ சிவில் அப்புக்காத்து. "கிறிமினல் அப்புக் காத்தாகிய இந்தப் பொன்னம்பலம் சில சமயம் தவறு செய்ய வும் கூடும். ஆனால் சிவில் அப்புக்காத் தாகிய செல்வ நாயகமோ என்னையும் கூட தவறு செய்யாது தடுக்கக் கூடியவர்". இவ்வாறு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவரது அரசியல் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவரை அறிமுகம் செய்த வண்ணம், தந்தை அவர்கள் தனது அரசியல் வாழ்வை அப்பழுக்கு இல்லாமல் இறுதி வரை நடத்தினார்.



**ஆழிக்குமரன் பாக்கு நீரிணையை நீந்திய வேளையில் வல்வையில் இடம் பெற்ற வீர வரவேற்பில் பங்குகொண்ட தந்தை செல்வா அவர்களின் படம் மேலே இடம் பெறுகிறது. 'வல்வெட்டித்துறை - வரலாற்றுச்சுவடுகள்" நூலிலிருந்து**

இலங்கை 1948ம் ஆண்டு பெப்ரவரி 4 இல் சுதந்திரம் அடைந்தபோது கண்டி இராசதானியின் கடைசிமன்னன் விக்கிரமராஜசிங்கனின் வாளேந்திய சிங்கக்கொடியையே பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா இலங்கையின் தேசியக்கொடியாக அறிவித்தபோது யாழ்ப்பாண இராசதானியின் கடைசிமன்னன் சங்கிலியனின் நந்திக்கொடியைத் தமது மோட்டார் வண்டியில் பறக்க விட்டவாறு தலைநகர் கொழும்பிலே தானே வீதிவலம் வந்து தேசியக்கொடிக்கான தமது எதிர்ப்பைக் காட்டியவர் தந்தை செல்வா.

தமிழ்காங்கிரஸ் தலைமைப்பீடம் மலையக தோட்ட தொழிலாளர்களது குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்த மசோதாக்களை ஆதரித்து சோரம் போன காரணத்தால் அதிலிருந்து விலகி தந்தை அவர்கள் டிசம்பர் 18, 1949 தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார்

சிலாபம், நீர்கொழும்பு தமிழர்களுக்கு நேரிட்டது போன்று இத்தீவின் ஏனைய தமிழ் மக்களும் இனமாற்றத்திற்கு உள்ளாக அனுமதியாது காக்கும் பொருட்டாக வடக்கு, கிழக்கை இணைத்து ஒரு தமிழரசை நிறுவுவதையே தந்தை செல்வாவின் தமிழரசுக் கட்சி அதனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

1951ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13, 14, 15ம் திகதிகளில் திருகோணமலையில் கட்சியின் முதலாவது மாநாடு நடை பெற்றது. அம் மாநாட்டில் தந்தை செல்வநாயகம் அவர்கள் ஆற்றிய சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த உரையில் நம் தலைமுறையிலேயே நமது கோரிக்கை கைக்கூடுமென்று விசுவாசிக்கிறோம். எம்தலைமுறையிற் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடத்தி எமக்குப் பின்வரும் சந்ததியாரின் கையிற் கொடுப்பது எமது கடன். எம்பின்னே அரும்பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்த பட்சத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாகவாகிலும் நாம் இருப்போமாக எனக் குறிப்பிட்டிருந்தார்.

1952ம் ஆண்டு தமிழரசுக்கட்சி போட்டியிட்ட முதலாவது பொதுத்தேர்தலில் திருமலையில் திரு. இராஜவரோதயம் அவர்களும், கோப்பாயில் திரு வன்னியசிங்கம் அவர்களும் வெற்றி பெற தந்தை செல்வா உட்பட ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியடைந்தனர்.

1956ம் ஆண்டு ஏப்ரல் 5,7,10ம் திகதிகளில் நடந்த

www.tamilarangam.net

பொதுத்தேர்தலில் செல்வா உட்பட பத்து பேர் வெற்றி பெற்று வடக்கு கிழககு மாகாணங்களில் தமிழ்பேசும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்ற இயக்கம் ஆக தமிழரசுக்கட்சி நிலைநிறுத்தப்பட்டது.

1956ம் ஆண்டு யூன் மாதம் 5ம் திகதி திரு. பண்டாரநாயக்கா சிங்களத்தை தனி அரச கருமமொழியாக்குவதற்கு சட்டம் கொண்டுவந்த போது அதனை எதிர்த்து காலிமுகத்திடலில் தந்தை செல்வா தலைமையில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்பட்டது. இதன் காரணமாக தந்தை செல்வா, நாகநாதன், வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

16-8-56 அன்று ஆரம்பித்து பாதயாத்திரையாக திருமலை சென்று அங்கு நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாட்டில் அரசிற்கு 57ம் ஆண்டு ஆவணி மாதம் 20ம் திகதிக்கிடையில் சமஷ்டி அரசு நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறின் சாத்வீகப் போராட்டங்களில் கட்சி ஈடுபடும் எனத் தந்தை காலக்கெடு விதித்தார்.

1957 ஜனவரி மாதம் 19ம் திகதி சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டமைக்காக மட்டக்களப்பு சிறையில் அடைக்கப்பட்டார்.

1957 யூலை 26 நள்ளிரவில் பிராந்திய சபைகளுக்காக இடைக்கால தீர்வாக செல்வா பண்டாரநாயக்கா அவர்களோடு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். இது பற்றி செல்வா குறிப்பிடுகையில் வெற்றியும் அல்ல தோல்வியும் அல்ல வெற்றிக்கான முதற்படி என்றார்.

1958 ஆம் ஆண்டு 8ம் திகதி பிரதமர் பண்டாரநாயக்காவின் றோஸ்மிட்பிளேசில் உள்ள அவரது இல்லத்தின் முன்பு புத்த பிக்குகள் சத்தியாக்கிரகம் செய்தனர். அதன் விளைவாக பண்டா அவர்கள் திரு. செல்வநாயகம் அவர்களோடு பேசாது ஒரு தலைப்பட்சமாக ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்ததோடு அன்றே பாராளுமன்றத்திலும் அதுபற்றி அறிவித்ததோடு சிங்கள சிறி பொறித்த பஸ்வண்டிகள் மீண்டும் தமிழ்ப்பிரதேசத்தில் ஓடுமென்றும் தெரிவித்தார்.

1958 நவம்பர் 24ம் திகதி தொடக்கம் ஒரு வாரம் தீண்டாமை ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தி சாதி ஒழிப்புப் பிரச்சாரம், சமபந்திப் போசனம் போன்றவற்றை நடாத்தி இருந்தார்.

1960 மார்ச், யூலை மாதங்களில் இடம்பெற்ற தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சி வென்று மூன்றாவது பெரிய கட்சியாகி இலங்கையின் தமிழர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தும் தகமை பெற்றது.

1961ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம்திகதி தந்தை செல்வநாயகம் தலைமையில் சட்டமறுப்பு இயக்கமாக வடக்கு கிழக்கு மாகாண கச்சேரிகளின் முன் சத்தியாக்கிரகம் ஆரம்பம் ஆகியது. இரண்டரை மாதங்கள் அரசு நிர்வாகம் நடைபெறாத நிலையில் மேலும் போராட்டத்தை தீவிரப்படுத்த தமிழரசு தபால் தலைகளை செல்வா அவர்கள் பாவனைக்கு விட்டார்.

1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டு தலைவர்கள் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் சிறையில் அடைக்கப்பட்டனர். கடும் நோய்வாய்ப்பட்ட செல்வா அவர்கள் பிரதமரின் விசேட அனுமதியுடன் வைத்திய சிகிச்சைக்காக இராணுவமுகாமில் இருந்து நேரடியாகவே இலண்டன் பயணமானார்.

1965ல் டட்லி சேனநாயக்கா அரசுடன் இணைந்த தந்தை அவர்கள் டட்லி-செல்வா ஒப்பந்தத்தை உருவாக்கி பிரதேச வாரியான நிர்வாகம், மொழியுரிமை ஆகியவற்றைப் பெறும் எத்தனங்களில் ஈடுபட்டார். ஆனால் முதுகெலும்பற்ற சிங்கள அரசியல் தலைவரால் ஏமாற்றப்பட்டு 1968 செப்டம்பரில் அரசில் இருந்து தனது கட்சி உறுப்பினர்களுடன் வெளியேறினார்.

1970ம் ஆண்டு தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. தேர்தல் முடிவுகள் வெளிவந்தவுடன் "தமிழ்மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார் தந்தை.

தமிழினத்தின் அடிமைச் சாசனமான குடியரசு அரசியல் அமைப்பை முற்று முழுதாக பகிஷ்கரித்ததோடு அரசியல் நிர்ணயசபையிலிருந்தும் வெளியேறினார் தந்தை செல்வா. குடியரசு அரசியல் சட்டமூலத்தை வண்ணார்பண்ணை ஆச்சிரம மண்டபத்தில் பல்லாயிரம் மக்கள் முன் தீக்கிரையாக்கினார்.

2-2-1972 அன்று வல்வெட்டித்துறையில் நடந்த தமிழரசுக் கட்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளை தமிழர்களின் குறைந்த பட்சக் கோரிக்கையாக அனுப்பி வைத்து அரசிடம் இருந்து பதில் வராத நிலையில் அரசியல் அமைப்பை தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதைக் காட்ட ஒரு இடைத்தேர்தல் மூலம் அரசுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

1972 ல் எமது பிரச்சினைகள் பற்றி, ஈழத்தமிழ் வரலாறு பற்றி எடுத்துரைக்க செல்வாவும் தலைவர் அமிர்தலிங்கமும் தமிழ்நாட்டுக்குச் சென்றனர். அங்கு தந்தை செல்வா அவர்கள் டாக்டர் ஜனார்த்தனம் மறைந்த ஈழத்து நேதாஜி ஆ. இராசரெத்தினம், திரு மணவைத்தம்பி ஆகியோருடன் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி உட்படப் பல அமைச்சர்களையும், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், ம. பொ. சிவஞானம், காயிதேமில்லத், அன்று தி.மு.க. பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். மற்றும் பத்திரிகையாளர்கள் அனைவரையும் சந்தித்து எமது பிரச்சினையை சர்வதேச மட்டத்தில் கொண்டுவரப்பட

www.tamilarangam.net

வழிகோலினார்.

1973ம் ஆண்டின் முற்பகுதியில் புத்தூர் பௌத்த சிங்கள பாடசாலைக்கு சிங்களத் தலைமை ஆசிரியரையும் உதவி ஆசிரியரையும் அனுப்பி தமிழ்க்குழந்தைகளுக்கு சிங்களத்தில் கல்வி புகட்ட அரசாங்கம் முற்பட்டது. செல்வா அவர்கள் 1973 ஏப்ரல் 6ம் திகதி அந்தப் பாடசாலை அருகில் சட்டத்தை மீறி பிரத்தியேகமான தமிழ்ப் பாடசாலை நிறுவி, நடத்தி அதில் பரிபூரண வெற்றியும் கண்டார்

1974ம் ஆண்டன்று டிசம்பர் மாதம் 18ம் திகதி அன்று கொழும்பு இராமகிருஷ்ணன் மண்டபத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்ட தமிழரசுக்கட்சியின் வெள்ளிவிழாவில் தந்தை செல்வா அவர்கட்கு முதறிஞர் என்ற பட்டம் சூட்டப்பட்டது.

1975ம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் தந்தை செல்வநாயகம் 16000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிவாகை சூடினார். இந்த வெற்றி சுதந்திரத் தமிழீழத்துக்கான ஆணை, இந்த ஆணையை நிறைவேற்றியே தீருவோம் என்ற உறுதியை நான் உங்களுக்கு வழங்குகின்றேன் எனத் தேர்தலில் வெற்றிபெற்ற தந்தை செல்வா அறிவித்தார்.

1976ம் ஆண்டு பெப்ரவரி மாதம் புத்தளம் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம்கள் மீது பொலிசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆறு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அன்று அரசில் அங்கம் வகித்த மற்றும் எதிர்க்கட்சியில் இருந்த முஸ்லிம் பா. உ. கள் இந்த அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கத் துணிவின்றி இருக்க அப் படுகொலைகளைக் கண்டித்துக் குரல் கொடுத்தவர் தந்தை செல்வா ஒருவர் தான்.

1976ம் ஆண்டு மே மாதம் 13, 14ம் திகதிகளில் தமிழர் கூட்டணி தந்தை செல்வா தலைமையில் பண்ணாகத்தில் நடத்திய முதலாவது மாநில மாநாடு சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்படையில் சுதந்திர இறைமையுள்ள மதசார்பற்ற தமிழீழத்தை மீளமைப்போம் எனப் பிரகடனம் செய்தது.

1976ம் ஆண்டு தமிழீழக் கோரிக்கைகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தமைக்காக அ.அமிர்தலிங்கம், வி.என். நவரத்தினம் ஆகியோர் கைது செய்யபட்டனர். அவர்களுக்கு எதிராக ஜுரிமார்கள் அற்ற ரயல்அற்பார் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட பொழுது தந்தை செல்வா தலைமையில் திரு ஜீ.ஜீ. பொன்னம்பலம், திரு. மு.திருச்செல்வம் இன்றைய கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் உட்பட சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்டு வெற்றியும் கண்டனர்.

நோயினால் பாதிக்கப்பட்டிருந்த தந்தை அவர்கள் அவரது தெல்லிப்பழை இல்லத்தில் விழுந்ததால் அறிவு மயங்கிய நிலையில் யாழ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்

தந்தைக்கு சிகிச்சை செய்வதற்கு தமிழ்நாடு நரம்பியல் நிபுணர் திரு. ராமமூர்த்தி அவர்களை கடவுச்சீட்டு இல்லாமலேயே பலாலி விமானநிலையம் வர பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அனுமதி அளிக்கிறார்.

சத்திரசிகிச்சை சரிவராத நிலையில் நினைவு திரும்ப தந்தை செல்வாவுக்கு பிடித்தமான நாதஸ்வர ஓசை யாழ். வைத்தியசாலையில் ஒலிபரப்பப்படுகிறது.

26-04-1977 அன்று தந்தை செல்வா, ஈழத்துக்காந்தி, ஈழத்தமிழர்களின் காவல் தெய்வம் எனப் போற்றப்பட்ட பெரியார் செல்வநாயகம் அவர்கள் இறைபதம் அடைந்தார் எனினும் ஈழத்தமிழர் இதயங்களில் இன்றும் நீக்கமற நிறைந்து வாழ்கின்றார்.



**அமரர் சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் 1948ல் இராசாவின் அத்துவக்காத்தாகச் சத்தியப் பிரமாணம் எடுப்பதை மேலே காண்கிறீர்கள்**

## ஆணவமான வினாவும் அடக்கமான விடையும்!!

**1961ம் ஆண்டு சத்தியாக்கிரகம் நடைபெற்ற வேளையில் அன்றைய பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ அம்மையார் தந்தையை விழித்து "சத்தியாக்கிரகிகள் மீது நான் இராணுவத்தை ஏவினால் என்ன செய்வீர்கள்?" என்ற ஆணவமான வினாவை பத்திரிகைகளில் பகிரங்கமாகக் கேட்டிருந்தார்.**

**அதற்கு ஈழத்துக் காந்தி அளித்த அடக்கமான பதில் "துப்பாக்கியுடன் தன் முன் தோன்றிய கொலைஞன் முன் உங்கள் கணவர் எந்த நிலையில் நின்றிருப்பாரோ அதே நிலையில் நாமும் நிற்கக் கூடும்"**

**இந்தச் சிந்தனைச் சிற்பியின் பதில் அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோவைச் சிந்திக்க வைக்கவில்லை. இரத்தக்களரிகள் இடம் பெற்றுக் கொண்டு இருக்கும் இன்றைய நிலையில் இன்றும் பிரதமராக இருக்கும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா சிந்திக்கக் கூடும்.**

www.tamilarangam.net

# ஒரு சுதந்திர தமிழீழத்திற்கு முகவுரை எழுதியவர் தந்தை செல்வநாயகம் ! -(நக்கீரன்)

'மெல்லிய ஆனால் நெடுத்த உருவம். நேர்க்கோடு வகுத்து வாரிய தலை. சற்றுப் பெரிய காது. கவர்ச்சிகரமான முகம். சந்தன நிறம். பட்டுவேட்டி, சட்டை. வயது ஐம்பதைத் தாண்டிவிட்டாலும் இளமை மாறாத தோற்றம்.

ஐம்பதுகளின் முற்பகுதியில் யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் தமிழரசுக் கட்சி மேடைகளில் நான் பார்த்த தந்தை செல்வாவின் கம்பீரமான தோற்றத்தைத்தான் நினைவுத் திரைக்குக் கொண்டு வந்துள்ளேன். அப்போது நான் பள்ளி மாணவன். 1947இல் இருந்தே அரசியலில் கொஞ்சம் ஈடுபாடு எனக்கிருந்தது.

யாழ்ப்பாணத் தொகுதியில் சேர். அருணாசலம் மகாதேவாவோடு போட்டி போட்ட திருவாளர் ஜி.ஜி. பொன்னம்பலத்தை ஆதரித்து 'தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா! கந்தசாமியைக் கொன்ற துரோகி மகாதேவா ஒழிக!' என்று கோஷித்துக் கொண்டு அதன் தாற்பரியம் விளங்கியதோ இல்லையோ, காங்கிரஸ் கட்சியின் மூவர்ணக் கொடியைப் பிடித்துக் கொண்டு கொழும்புத்துறையில் இருந்து முற்றவெளி மைதானத் துக்கு ஊர்வலம் போனதுதான் என் மனத்திரையில் கால் பதிந்த முதல் அரசியல் நிகழ்வு.

இந்தத் தோற்றத்துக்கும் தந்தை செல்வாவின் அறுபதுகளில் இருந்த தோற்றத்துக்கும் பெரிய வித்தியாசம். அவரைப் பிடித்த பிணி அவரது உடல் நலத்தைக் கெடுத்து அவரது தோற்றத்தை முற்றாக மாற்றிவிட்டது.

தமிழ் அரசுக் கட்சி 1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் நாள் தொடக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்சிப் பிரசாரக் கூட்டங்கள் யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சியின் முதல் பிரசாரக் கூட்டம் முத்திரைச் சந்தை மைதானத்தில் இடம்பெற்றது. அதற்கு முன்னர் இடம்பெற்ற ஊர்வலத்தில் கலந்து கொண்ட எல்லோரும் பளபளப்பான துணியில் செய்த இடபக் கொடியை கையில் ஏந்திக் கொண்டு போனது எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது.

இடபக் கொடியைத் தேர்ந்தெடுத்ததற்கு காரணம் இருக்கிறது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள், மன்னர்களது கொடி இடபக் கொடியாகும்.

அந்தக் காலத்தில் தமிழ் அரசுக் கட்சி மேடைகளில் தந்தை செல்வநாயகத்தோடு இன்னும் இரண்டு கட்சித் தூண்கள் காட்சி அளிப்பாளர்கள். இரும்பு மனிதர் என்று பலராலும் அழைக்கப்பட்ட டாக்டர் இ.எம்.வி.நாகநாதன் ஒருவர். மற்றவர் கோப்பாய் கோமான் ஆகிய திரு.சி. வன்னியசிங்கம். இவர்கள் இரண்டு பேரும் தந்தையின் வலது, இடது கரங்களாக விளங்கினார்கள்.

வீரகாளி அம்மன் கோவில் அருகே நடந்த தமிழ் அரசுக் கட்சிப்பிரசாரக்கூட்டத்தைத் திட்டமிட்டு ஜி.ஜி.பொன்னம்பலத்தின் ஆதரவாளர்கள் குழப்பினார்கள். மேடையில் பேசிக் கொண்டிருந்த நாகநாதன் மீது தாக்குதல் நடந்தது. நெஞ்சில் விழுந்த அடியைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து நாகநாதன் அவருக்கே உரித்தான செல்லத் தமிழில் மிகவும் தர்ம ஆவேசத்தோடு முழங்கினார்.

எட்ட இருந்து இடையிடையே பார்த்த தந்தை செல்வநாயகத்தோடு கிட்ட இருந்து பழகும் சந்தர்ப்பம் 1959ம் ஆண்டு தொடக்கம் எனக்குக் கிட்டியது. 1966ம் ஆண்டுக்குப் பின் இந்த தொடர்பு சிறிது விட்டுப் போய் மீண்டும் 1973 தொடங்கி அவர் மறையும் மட்டும் (1977) நீடித்தது.

இந்தக் காலங்களில் அவரோடு பேசவும், பழகவும் நிறையச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது இல.17. அல்பிரட் கவுஸ் தோட்ட வீடு ஈழவேந்தன், மறைந்த இராசரத்தினம், மறைந்த சிவானந்தசுந்தரம், கோடீஸ்வரன் மற்றும் என்போன்ற பலருக்கும் இரண்டாவது வீடாக இருந்தது. தமிழ் அரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் கூட்டங்கள் கட்சி ஆதரவளார்கள், தொண்டர்கள், அரசியல் பிரமுகர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், சமயகுரவர்கள் இவர்களது சந்திப்புக்கள் அவர்வீட்டில் அடிக்கடி இடம்பெறும்.

இந்த இடத்தில் கொழும்பு இலக்கம் 17 அல்பிரட் கவுஸ் தோட்ட வீட்டைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். தந்தை செல்வநாயகம் அவரை நான் அறிந்த காலம் தொட்டு இந்த வீட்டில்தான் வசித்து வந்தார். இதனால் இந்த வீடு அவரது சொந்த வீடு என்றுதான் முதலில் நினைத்தேன். என்னைப் போலவே மற்றவர்களும் அப்படித்தான் நினைத்தார்கள். உண்மையில் அதுவும் வாடகை வீடு. கொழும்பு செல்லமுத்து குடும்பத்துக்குச் சொந்தமானது.

தந்தை செல்வநாயகம் பிரபல சிவில் வழக்கறிஞர். கைநிறையச் சம்பாதித்தவர். கொழும்பில் உள்ள ஏ.பீ.சி.டி. நீதிமன்றங்களில் நிறைய வழக்குகள் இருக்கும். மாறி மாறி இந்தக் கோடுகளுக்குப் போவார். வழக்கு விசாரணைக்கு எடுக்கும்போது அவர் இல்லாவிட்டால் அவர் வரும்வரை நீதிபதிகள் அந்த வழக்குகளைப் பிற்போட்டு அவருக்காகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காத்திருப்பார்கள். அப்படியான செல்வாக்கும் மரியாதையும் நீதிபதிகள் மற்றும் சக சட்டத்தரணிகள் மத்தியில் அவருக்கு இருந்தது.

தந்தை செல்வநாயகம் நினைத்திருந்தால் கொழும்பில் ஒன்றல்ல ஒன்பது வீடுகள் அவரால் வாங்கியிருக்க முடியும். ஆனால் அதை அவர் செய்யவில்லை. சாதாரண எழுது வினைஞர்களே ஆளுக்கொரு வீடு கொழும்பில் வைத்திருந்தார்கள். தந்தை உழைத்த பணத்தை தண்ணீராகக் கட்சிக்கே செலவழித்தார்.

கொழும்பு தமிழர்களுக்கு அந்நியமான இடம் என்பது தந்தையின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். பிறந்த மண்தான் சொந்த மண் என்பது அவரது கோட்பாடாகும். இதனால் அவர் கடைசிவரை வாடகை வீட்டில் இருந்து விட்டார்.

தனது பிள்ளைகள் தாங்கள் பிறந்த மண்ணை விடக் கூடாது என்பதற்காக பள்ளி விடுமுறை வந்ததும் தெல்லிப்பளைக்கு அவர்களை அனுப்பி வைத்து விடுவார்.

தந்தை செல்வநாயகத்திடம் தான் பெரிய தலைவர் என்ற எண்ணமோ, புகழ் பெற்ற கியூ.சி. என்ற தலைக்கனமோ எள்ளத்தனையும் இருந்ததில்லை. காட்சிக்கு எளியவரென்று சொல்வோமே அதற்கு தந்தை செல்வநாயகம் இலக்கணமாக இருந்தார். யார் எதைச் சொன்னாலும், சொல்பவர் எவ்வளவு சாதாரணமானவராக இருந்தாலும் கூட சொல்பவரை இடைமறித்து அவரது பேச்சில் குறுக்கிடாமல் மணித்தியாலக் கணக்கில் பொறுமையோடு செவிமடுப்பார். வேறு யாராவது குறுக்கிட்டு 'சொன்னது போதும், ஐயாவுக்கு எல்லாம் விளங்கும்' என்று சொன்னாலும் இல்லையென்று அவரைப் பேசவிடுங்கள் என்று சொல்லிவிடுவார்.

பல சமயங்களில் கட்சித் தலைவர்களையிட்டு முறைப்பாடு செய்து குறைபட்டுக் கொள்பவர்களைப் பார்த்து அவர் கேட்கும் கேள்வி 'சரி நோயைச் சொல்லிவிட்டீர்கள். உங்களுக்குத் தெரிந்த மருந்தையும் சொல்லுங்கள்.'

கட்சித் தொண்டர்கள் பாராளுமன்றத்திற்கு ஒழுங்காகப் போகாமலோ, அல்லது தங்கள் தொகுதிக்குப் போகாமல் தங்கள் சட்டத்தரணித் தொழிலைப் பார்த்துக் காலத்தைப் போக்கும் பா.உ.க்கள் பற்றி குறைகூறினால் அதற்கு தந்தை செல்வநாயகம் இறுக்கும் பதில் ' ஆட்களை இழக்க முடியாது. உள்ளதை வைத்துத்தான் சமாளிக்க வேண்டும்.'

1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் அரசாங்க ஊழியர்கள் தொழில் ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப் பட்டனர். இரவோடு இரவாக அவர்கள் 'தற்குறியர்கள்' ஆக்கப்பட்டார்கள்.!

சிங்களம் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தப் பட்டார்கள். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சிங்களத்தில் புலமை இல்லாவிட்டால் வேலை இழக்க வேண்டுமென்று புதிய ஊழியர்களும் சம்பள உயர்வில்லை என்று பழைய ஊழியர்களும் பயமுறுத்தப்பட்டனர்.

தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தை ஆயிரக்கணக்கான தமிழரசாங்க ஊழியர்கள் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமையில் நடத்தினார்கள். மூவாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சங்கத்தில் 1959இல் ஆரம்பித்த 9 பேரில் நானும் ஒருவன். சங்கத்தின் உத்தியோகப் பத்திரிகையான 'எழுச்சி' யின் ஆசிரியராகவும், இரண்டு ஆண்டுகள் (1965-66) அதன் பொதுச் செயலாளராகவும் பணியாற்றவும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது சங்கத்தின் தலைவராக நண்பர் திரு. செ.கோடீசுவரன் இருந்தார்.

அரசாங்கமும் சிங்கள தீவிரவாதிகளும் எப்படியும் சிங்களத்தை தமிழர்களின் தொண்டைக்குழி வழியாக திணிக்க கங்கணம் கட்டி நின்றனர். இதனால் நாளாந்தம் ஏகப்பட்ட பிரச்சினைகள். அவற்றுக்குப் பரிகாரம் தேட எல்லோரும் இலக்கம் 17 அல்பேட் கவுஸ் தோட்ட வீட்டுக்கே அடிக்கடி படையெடுத்தார்கள். எல்லா முறைப பாடுகளையும் எங்கள் பெரியவர் அசாதாரண பொறுமையோடு செவிமடுத்தார். அவ்வப்போது விரக்தியின் விளிம்பில் நிற்பவர்களுக்கு தைரியம் ஏற்படுகிற மாதிரி தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களைக் கூறி தேறுதல் சொல்வார்.

ஒருமுறை ஒரு சிக்கலான வழக்கு. தந்தையின் கட்சிக்காரர் சாட்சிக்கூண்டில் ஏறி சாட்சியமளித்தார். எதிர் தரப்பு வழக்கறிஞர் தொடுத்த கேள்விகளின் பொருளும் நுட்பமும் விளங்காமல் கட்சிக்காரர் தனக்குப் பாதகமான பதில்களை வெகு உற்சாகமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். தந்தையின் உதவிச் சட்டத்தரணி திரு. நவரத்தினராஜா (பின்பு கியூ.சி) தங்கள் பக்கவாதம் தங்கள் கண்முன்னே சுக்குநூறாக உடைபடுவதைப் பார்த்துவிட்டு மேசைக்குக் கீழே தலையைக் கவிழ்த்தார்.

நீதிமன்றம் மதிய இடைவேளைக்கு ஒத்திப்போடப்பட்டபோது கட்சிக்காரர் தான் மிகவும் கெட்டித்தனமாக பதில் சொல்லிவிட்டார் என்ற நினைப்பில் 'எப்படி ஐயா எனது சாட்சியம்' என்று தந்தையைப் பார்த்துக் கேட்டார். அவரது முதுகில் தட்டிக்கொடுத்த தந்தை 'மிகவும் கெட்டித்தனமாக எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொன்னீர்கள் ' என்றார்.

இந்த இக்கட்டான நிலையிலும் தைரியத்தை கைவிடக்கூடாது என்பதற்காக தந்தை தனது அனுபவத்தின் அடிப்படையில் எடுத்துச் சொன்ன உதாரணம் இது.

தந்தை செல்வநாயகம் அரசியல் மேடைகளிலும் சரி

www.tamilarangam.net

நீதிமன்றங்களிலும் சரி அதிகம் பேசுவதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். நீதிமன்றங்களில் தேவைக்கு அதிகமான ஒரு வார்த்தை தானும் பேசமாட்டார். 'எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறோம். மனிதர் இவ்வளவு சுருக்கமாக பேசிவிட்டு உட்கார்ந்துவிட்டார். வழக்கு வென்றமாதிரித்தான் என்று' ஏங்கிய கட்சிக்காரர் நிறையப்பேர்.

அவருக்கு வாலாயமான சில தமிழ் சொற்றொடர்களை தந்தை செல்வநாயகம் தனது பேச்சில் தாராளமாக உபயோகிப்பார். 'துலம்பாரமாகத் தெரிகிறது' 'இது ஒரு வில்லங்கமான காரியம்', 'இல்லாவிட்டால் அழிந்து போவோம்' போன்ற சொற்தொடர்களைக் குறிப்பிடலாம்.

தந்தை செல்வநாயகம் மதத்தால் கிறிஸ்தவராக இருந்தாலும் தமிழ் பண்பாட்டை கட்டிக் காப்பதில் முன்னுக்கு நின்றவர். கர்நாடக இசை, நாதஸ்வர இசையில் அவருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. வெள்ளவத்தை பிள்ளையார் கோவில் திருவிழாக் காலங்களில் இடம்பெறும் நாதஸ்வர இசைக் கச்சேரிகளை ஆடாமல் அசையாமல் மணித்தியாலக் கணக்கில் கேட்டு இரசிப்பார்.

தமிழ் பண்பாடு காப்பதில் அவருக்கு இருந்த ஈடுபாட்டை எடுத்துக் காட்டுவதற்கு அவரே சொன்ன ஒரு சம்பவத்தை இங்கு கூற ஆசைப்படுகின்றேன். திருமணமான நாலாம் நாள் சடங்கு. அவரது மாமனார் சொந்த பந்துக்கள் நண்பர்களை அழைத்து பெரிய விருந்து வைக்க ஏற்பாடு செய்தார். தந்தை செல்வநாயகம் அதற்கு ஒரு நிபந்தனை விதித்தார். எல்லோருக்கும் தரையில் தலைவாழை இலை போட்டு சைவச் சாப்பாடு. மருமகன் பெரிய பிடிவாதக்காரன் என்பதை உணராத மாமனார் பிரச்சனை இல்லையென்று அப்போதைக்கு தலையாட்டிவிட்டார். மனைவியோடு மாமனார் வீட்டு விருந்துக்குப் போன புதுமாப்பிள்ளைக்கு ஏமாற்றம் காத்திருந்தது. எல்லோருக்கும் மேற்கத்தைய பாணியில் மேசையில் பீங்கான் கோப்பாய் முள்ளுக்கரண்டி சகிதம் சாப்பாடு ஏற்பாடாகியிருந்தது.

தனது அதிருப்தியை மிக உறைப்பாக மாமனாருக்கு தெரிவிக்க விரும்பிய தந்தை செல்வநாயகம் வந்த அதேவீச்சில் தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு தனது வீடு திரும்பிவிட்டார். தந்தையின் இந்தப் பிடிவாதம் அரசியலிலும் இருந்தது. யாருக்கும் வளைந்து கொடுக்க மாட்டார். சந்தர்ப்பவாதம் அவர் அரசியல் அகராதியில் இல்லாத வார்த்தை.

இப்படித்தான் ஆசிரிய வேலைக்கு சேர்ந்த புதிதில் யாழ்ப்பாணத்தில் சுகயீனமுற்றிருந்த தனது தாயைப் போய்ப் பார்க்க சென் தோமஸ் அதிபர் அனுமதி மறுத்த அடுத்த வினாடி அந்த இடத்திலேயே விலகல் கடிதத்தை எழுதிக் கொடுத்துவிட்டு யாழ்ப்பாணம் பயணமானார்.

பாராளுமன்றப் பதிவேடுகளை அழகாக தேதி, ஆண்டு, வாரியாக 'பைன்ட்' செய்து தனது அலுவலக அறையில் வைத்திருந்தார். ஒவ்வொன்றாக வீட்டுக்கு எடுத்துச் சென்று அவற்றையெல்லாம் வாசித்துவிட்டு பின் பத்திரமாக திருப்பி ஒப்படைத்து விடுவேன். 1964-65ம் ஆண்டுகளில் எமது வரலாறு என்ற தலைப்பில் வாரா வாரம் சுதந்திரனில் நான் தொடர் கட்டுரை எழுதுவதற்கு இந்தப் பதிவேடுகள் பெரிதும் கைகொடுத்தன.

தந்தை செல்வநாயகம் அரசியலுக்கு வந்திராது தானுண்டு தன் தொழில் உண்டு, குடும்பம் உண்டு என்று இருந்து பின்னர் தன்னைத் தேடி வந்த உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியை ஏற்று ஓய்வு பெற்றிருந்தால் தமிழினத்தின் அரசியல் வரலாறு நிச்சயமாக திசை மாறிப் போயிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. சுயநலத் தலைவர்களுக்கு பணம் , பதவி, பட்டங்கள் கொடுத்து முழுத் தமிழினத்தையுமே என்றோ சிங்கள ஆட்சியாளர்கள் விலைக்கு வாங்கியிருப்பார்கள். அதன் பின் தாலாட்டுப் பாடி தூங்கவைத்து கழுத்தை அறுத்திருப்பார்கள். தமிழினம் மீளமுடியாத அடிமைத்தளையில் கட்டுண்டு அழிந்து போயிருக்கும்.

இதைத் தடுத்து நிறுத்தி தான்தேடிய வான்பொருட்குன்றம் தொலைத்து, உடல் நலத்தை இழந்து தமிழ் தேசியத்துக்கு நீர் வார்த்து, உரம் ஊட்டி, தமிழ் மக்களை விடுதலைப் பாதையில் அழைத்துச் சென்று சுதந்திரத் தமிழீழமே தமிழினத்தின் முடிந்த முடிவு அதுவே தமிழர்களுக்கு விடிவு என்று கடைசி உயில் எழுதி வைத்து விட்டு மறைந்தவர் தந்தை செல்வநாயகம்.

தந்தை செல்வநாயகத்தின் சுதந்திரத் தமிழ் ஈழ இலட்சியக் கனவை நினைவாக்குவதே நாங்கள் அவருக்கு இன்று ஆற்றக்கூடிய மிகப் பெரிய நினைவஞ்சலியாகும். அவரது நினைவாக எடுக்கப்படும் விழாக்கள் வெறுமனே சடங்குகளாக இருந்து விடாமல் அவரது இறுதி இலட்சியத்தை அடைவதற்குப் போடப்படும் படிக்கற்களாக அமைய வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தந்தை செல்வாவிற்கு கோப்பாய் தொகுதி மக்கள் அஞ்சலி
# நீங்காத நினைவு அலைகள்

ஆ. வேலுப்பிள்ளை (வேல்) முன்னாள் துணைச் செயலாளர், தமிழர் விடுதலைக் கூட்டணி (கோப்பாய் தொகுதி)

'தமிழனுக்கு தனி அரசு வேண்டும்'
தமிழன் தன்னைத்தானே ஆழவேண்டும்'
'தமிழனின் தனிக்கொடி பறக்க வேண்டும்'
'தமிழன் இழந்த தாயகத்தை மீட்க வேண்டும்'

என்னும் கொள்கையை தமிழரிடம் தீவிரமாக உண்டாக்கிய தமிழ்த் தலைவனாம், தமிழ் தந்தை செல்வாவிற்கு கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம் அவர்களின் தொகுதி மக்கள் சார்பில் அஞ்சலி செலுத்து கின்றோம்.

நான் விமானப்படையில் சேவையில் இருக்கும் பொழுது, ஒருமுறை பலாலி விமான நிலையத்தில் சீருடையில் கடமையாற்ற வேண்டியிருந்தது. அன்று அமைச்சராக இருந்த திரு. இலங்கரத்தின, பலாலி விமான நிலையம் வந்திருந்தார். ஏற்பாடுகள் தடல்புடல். தந்தை செல்வா, அப்பொழுது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இல்லை. சாதாரண ஒரு பிரஜையாக கொழும்பு செல்வதற்காக விமான நிலையம் வந்திருந்தார். தள்ளாடும் வயோதிகராகவும்,நோயாளியாகவும் இருந்த அவரை விமானநிலையத்திற்குள் நுழையக் காவற்றுறையினர் அனுமதிக்கவில்லை. எனவே வெளியில் அவர் நின்று கொண்டு இருந்தார். மற்றத் தமிழர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தார்கள்.

தற்செயலாக நான் கண்டுவிட்டேன். அவர் என்னைப் பார்த்தார். நான் அயர்ந்து போனேன். ஓடிச்சென்று ஐயா! தயவுசெய்து உள்ளே வாருங்கள் என்று பணிவுடன் உள்ளே கூட்டிவந்தேன். கதிரை ஒன்று ஒழுங்கு செய்து அமரவைத்தேன். காவல் துறையில் ஈடுபட்டிருந்த பொலிசார் வெகுண்டனர். ஆனாலும் நான் சீருடையில் இருந்தபடியால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

அவருக்கு உதவியாக வந்தவர் ஐயா! சாப்பிடவில்லை. களைப்பு. சாப்பிட வேண்டும். பாண் கொண்டு வந்துள்ளேன். சாப்பிடக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, கொண்டு வந்த பாண்துண்டுகளை தந்தையிடம் கொடுத்தார். தந்தையும் மிகவும் கஷ்டப்பட்டு உணவருந்திக் கொண்டிருந்தார். கட்சி அலுவலாகக் கொழும்பு போவதாகச் சொன்னார் பெரியவர். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. சுகயீனமான நிலையிலும் தமிழினத் துக்காகப் பாடுபடுகின்றார் என்று நினைத்துக் கண்ணீர் முட்டிய நிலையில் இருந்தேன்.

பலாலி விமான நிலையம் ஒரு திறந்த அரங்கு. ஞாபகம் இருக்கலாம். அப்பொழுது விமானம் வந்திறங்கியது. உள்ளிருந்து அமைச்சர் இலங்கரத்தின வெளியே வந்தார். வரும் பொழுது மண்டபத்தின் ஒரு ஓரத்தில் தந்தை செல்வா சாப்பிட்டுக் கொண்டிருந்ததை அவர் அவதானித்துவிட்டார். தனக்கு மரியாதை, மாலை அணிவிக்க வந்தவர்களை அலட்சியம் செய்துவிட்டு, ஓடோடி வந்து தந்தை செல்வாவின் கைகளைப் பிடித்து மரியாதை செய்து சம்பாஷித்து குசலம் விசாரித்து விட்டுத்தான் அமைச்சர் மற்ற ஒழுங்குகளுக்குச் சம்மதித்தார்.

தந்தையை உள்வரவிடாது காவல்புரிந்த காவல் துறையினரின் முகங்கள் என்ன நிலையில் இருந்திருக்கும் என்று நீங்களே எண்ணிப் பாருங்கள். பாவம் அவர்கள் என்ன செய்ய முடியும். பணிக்கப்பட்டவர்கள் மீற முடியுமா? எல்லோரும் அகன்றபின் கொழும்பு செல்வதற்காக விமானம் தயாராகும் நிலையில் தந்தை செல்வா விமானம் ஏறுவதற்காக ஆயத்தம் செய்த பொழுதும், விமானப் பணிப்பாளர்கள் முதலில் தந்தை செல்வாவை விமானத்தில் ஏற்றிய பின்தான் மற்றப் பிரயாணிகளை ஏறுவதற்கு அனுமதித்தார்கள்.

அரசமந்திரிக்கு இல்லாத மதிப்பு அந்தக் காலத்திலும் தந்தைக்கு மாற்றின மக்கள் அளித்தார்கள்.

'சிங்கள மக்கள் நல்லவர்கள்'
'முஸ்லிம் மக்கள் நல்லவர்கள்'
'தமிழ் மக்களும் நல்லவர்கள்'

என்று எப்பொழுதும் சொல்லுபவர் தந்தை செல்வா.

'தனித்தமிழ் ஈழம்' என்னும் அழகிய பெயரை நமக்கு அளித்தவர் தந்தை செல்வா. அவர் எமக்கு கூறிய புத்திமதி, 'ஒரு உயிருக்கும் ஒரு உடமைக்கும், அழிவுவராமல் பார்த்துக்கொள்'. இதுதான் அவர் எங்களுக்கு தந்த முழுமையான பொன் அமிர்தம்.

'வாக்கினில் வாய்மை, சொல்லில் மிக எளிமை, வார்த்தையில் நாணயம், போக்கில் நேர்மை' இவைதான் தந்தையின் ஆயுதங்கள். அவர் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழ் மக்களுக்கு அளித்த மாமேதை.

1949ம் ஆண்டு மலைநாட்டு தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிபோனதால் உண்டாகிய வேதனை இவரைப் போராட வைத்து தனித் தமிழ்த் தலைவன் ஆக்கிற்று. அன்று தமிழ் காத்த சி.வை. தாமோதரம்பிள்ளை முழுக்க, முழுக்க தமிழராக இருந்தார். இந்து மதத்த வனாகவும் இருந்தார். அதேபோல் இன்று தந்தை செல்வநாயகமும், மதத்தால் கிறிஸ்தவர். ஆனால் பண்பாட்டில் முழுமைத் தன்மை உள்ள தனித்தமிழன். தமிழினத்துக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த

www.tamilarangam.net

உத்தமன்.

சிறுப்பிட்டியில் வருடா வருடம் நடைபெறும் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் விழாவிற்கு ஒருமுறை தந்தையை அழைத்திருந்தோம். அவர் சுகவீனம் காரணமாக வரமுடியவில்லை. அவரின் செய்தி அவ்விழாவில் வாசிக்கப்பட்டது. 'தமிழ் காத்து, தமிழ் வளர்த்த இராவ்பகதூர் சிறுப்பிட்டி வயிரவநாத பிள்ளை தாமோதரம்பிள்ளை அவர்கள் அவதரித்த புண்ணியபூமியில் நான் காலடி எடுத்து வைத்து அவரின் விழாவில் பங்குகொள்ள சுகவீனம் தடுத்துவிட்ட நிலையையிட்டு வேதனைப்படுகிறேன், என்று குறிப்பிட்டிருந்தார். தமிழ்ப் பெரியார்களை எப்படி தந்தை மதித்தார் என்பது இவ்வாக்கியங்களில் இருந்து தெளிவாகின்றது.

இணையாட்சி மூலம் தமிழருக்கு ஒரு தனி அரசை உருவாக்க மிகவும் பாடுபட்டார். 1972மேல் இணைப்பாட்சியில் நம்பிக்கை இழந்த நிலையில் தான் தனித் தமிழ் நாடு 'தமிழ் ஈழப்' பிரகடனம் செய்தார்.

இந்தியத் தமிழன், யாழ்ப்பாணத்தமிழன், மலைநாட்டுத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன், வன்னிநாட்டுத் தமிழன், மன்னார்த்தமிழன், திருகோணமலைத் தமிழன், அம்பாறைத் தமிழன், முஸ்லிம் தமிழன், இந்துமதத் தமிழன், கிறிஸ்தவத் தமிழன், சிங்கள நாட்டுத் தமிழன் என்று வேறுபட்டிருந்த எல்லா வகைத் தமிழர்களையும் ஒன்று சேர்த்தவர் தந்தை செல்வாவைவிட வேறு யாருமாக இருந்திருக்க முடியாது. இனியாவது வேற்றுமையை அகற்றி இந்நந்நாளில் ஒன்று சேர்வோமாக. அப்பொழுது எமது இலட்சியம் நிறைவேறும்.

இப்பெரியார் ஒரு மாமேதை, தமிழ் இனத்தின் தலைசிறந்த ஒப்பார் இல்லாத தலைவன். அவர் இறைவன் அடி எய்திய இறுதி மரியாதையை செலுத்த வந்திருந்த அன்று எதிர்க்கட்சியில் இருந்த திரு. பிரேமதாசா, கண்ணீர் மல்க கூறிய வார்த்தை- தமிழருள் ஒரு மாணிக்கம் மறைந்து விட்டது' என்பது தான். அப்போது பிரேமதாசா எதிர்க்கட்சியில் இருந்தார்.

சிங்கள மக்களும், ஏன், சகல அரசியல்வாதிகளும் தந்தையை மதித்தார்கள் என்பதை நம்மில் சிலர் ஏன் இன்னும் உணரவில்லை? இறக்குமுன் 'தமிழர்களை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்' என்று சொல்லியுள்ளார்.

தந்தை செல்வாவின் 100வது ஆண்டு கொண்டாட்டங்களில் அவர்களது தூய்மையான வாழ்வை நினைத்து அஞ்சலி செலுத்துவோம்

வாழ்க் தந்தை செல்வா நாமம்.



ஈழத்துக் காந்தி திரு. செல்வநாயகம் அவர்கள் 1972ல் மேற்கொண்ட தனது இந்திய விஜயத்தின்போது திருவாளர் எம்.ஜி. ராமச்சந்திரனுடன் காணப்படுகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் பெற்ற செல்வ நாயகம் ஞாலம் ஏற்ற தங்க நாணயம்

**கனக. மனோகரன் (சட்டத்தரணி)**

தமிழர்களின் தனிப் பெரும் குணங்களில் ஒன்று அவர்கள் இலகுவில் எதையும் ஏற்பதும் இல்லை; எவர் சொல்லையும் கேட்பதும் இல்லை; அமிலத்தில் தோய்த்துப் பார்த்தே பத்தரை மாற்றுப் பொன்னை ஏற்பார்கள்; தோற்றுவாய்த் தோம்பைப் பார்த்தே மருமகப் பெண்ணை எடுப்பார்கள்; தோண்டிப் பார்த்த பின்தான் தோட்ட மண்ணை வாங்க முடிவு எடுப்பார்கள்.

தந்தை செல்வா அவர்களோ பிறப்பினால் வேற்று நாட்டினன்; வாழிடத்தால் கொழும்புநகரினன்; மதத்தினால் ஈழத்தமிழரிடையே மூன்று வீதத்தினரை மட்டுமே கொண்டிருக்கும் அங்கிலிக்கன் பிரிவினர்.

இருப்பினும் அவரை இந்துசமுத்திரத்தின் முத்தான இலங்கை வாழ் தமிழர்கள் தங்கள் இணையிலாச் சொத்தாக நினைத்தார்கள்; வாராதோ என வந்த மாமணியாய் மதித்தார்கள்; பெறலரும் பேறு என்று பெருமித்தோடு கதைத்தார்கள்.

அந்த அளவிற்கு எந்த ஒரு தலைவனும் பெற்றிராத ஆகாசிப்புத் திறனை - ஆளுமைக் கவர்ச்சியை எங்கள் தந்தை சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் பெற்றிருந்தார்கள். அது ஏன்? எப்படி?

## வசீகரனைப் பெற்றவர்! வசீகரமும் மிக்கவர்!!

தமிழ் அன்னையின் தலைமகனாகிய தந்தை அவர்களைத் தன் தந்தையாகப் பெற்ற தலைமகன் பேர் வசீகரன். அன்னார் வசீகரனை மட்டும் பெற்றவரல்ல. அடுத்த தலைவர்கள் எவருமே பெற்றிராத வசீகரத்தையும் காந்தக் கவர்ச்சியையும் பெற்றிருந்தார்.

இல்லையெனில் ..... செல்வா அவர்கள் “செல்” என்றபோது சென்றும், “நில்” என்றபோது அவர் கீறிய கோட்டினில் நின்றும், “நட” என்றபோது அவர் காட்டிய பாதையில் நடந்தும், “கட” என்றபோது (1956ல் திருமலை யாத்திரை நடந்த வேளையில்) காட்டை, மேட்டை, கட்டாற்றை - சிங்கள நாட்டை கடந்தும், “கிட” என்றபோது (1961ம் ஆண்டில் சத்தியாக்கிரகம் நடக்கையில் மாதக்கணக்கில் மனச்சலிப்பின்றி மறியல்) கிடந்தும், இப்பொக்குவாய்க் கிழவன் திக்குவாய் திறந்து “போர்” என்று சொன்னால் பேதம் மறந்து பேரணி திரண்டும், ஈழம் வாழ் தமிழினம் இவர் ஆணைக்கு அடங்கி, ஆட்பட்டு இருந்திருக்கிறது. இந்த தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று கொண்டு வாழ்ந்திருக்கிறது.இது ஏன்? எதற்காக?

## நூற்றாண்டு விழா எடுக்கிறார்கள்! நுவல் கடனை முடிக்கிறார்கள்!!

சாசுவதம் உறாத, சாகாவரம் பெறாத, சாமான்யர்கள் இறக்கவே பிறக்கிறார்கள். அவர்கள் இறப்பதும் இறந்தபின் அவர்களை இவ்வுலகம் மறப்பதும் இயற்கையின் நியதி. தந்தை அவர்கள் எழுதிக் கொண்டிருந்த தன்னேரில்லாத தன் வரலாற்று இலக்கியம் முற்றுப் பெற்றது 1977ல். எனின் மூவேழு ஆண்டுகளின் பின்னரும் இப்பெருமகன் பற்றிய விமர்சனங்களும் அவரது எழுத்துக்கள், பேச்சுக்கள் பற்றிய விளக்கங்களும் வியாக்கியானங்களும் இன்றும் தொடர்கின்றனவே. இது ஏன்? எப்படி?

இழவு கண்டு கொண்டிருக்கும் நிலையிலும் ஈழத்தமிழினம் இப்பெருந்தகைக்கு உலகளாவிய விதத்தில் நூற்றாண்டு விழவுகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. கொழும்பு மாநகரில் அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் பெருவிழா எடுத்து இப்பெரியவருக்கு மேன்மேலும் பெருமை சேர்த்திருக் கிறது. போர்முனைப்புகளால் ஏர் முனைப்பட்ட பயிர்நிலம் போல் காட்சி தரும் யாழ் நகரில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் இன்னோர் திருவிழாவே இடம்பெற்றிருக்கிறது. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இந்த அறிவுக் களஞ்சியம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றோம். இவரது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை நீட்டுங்கள் இன்னொரு ஆண்டுக்கென்ற கோரிக்கையை நீட்டியிருக்கிறார்கள். எங்கள் விழா தொடர்பாக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பத்மநாதன் அவர்களை நான் தொடர்புகொண்டபோது அன்னார் தலைமையில் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் “நூற்தொகுப்பு” தயார் நிலையை அடைந்திருக்கும் உவகை மிகு செய்தியை என் செவிகளில் ஏற்றினார். நிகரிலாத் தலைவர் செல்வா அவர்கள் நினைவை நிலைநிறுத்தச் சிலை ஒன்று யாழ்நகரில் செய்யப்பட்டிருப்பது இன்னோர் இதந்தரும் தகவல். இவை எல்லாம் ஏன்? எதற்காக?

## நினைவுத்தூண் நிற்கிறது! நின்றும் நிலைக்கிறது!!

மதமாச்சரியங்களுக்கு ஆளாகி மசூதிகளையும், கோவில்களில் கோபுரங்களையும், இயேசுவின் திருவுருவங்களையும் உயர்த்திக்கட்டுவதில் போட்டி இட்ட - பொறாமை மிக்க ஈழத் தமிழினம் இன்று ஒன்றுபட்டு தங்கள் மத்தியில் எண்பது ஆண்டுகள்

www.tamilarangam.net

வாழ்ந்த ஒரு தனிமனிதனுக்கு எண்பது அடி உயரத்தில் ஒரு நினைவு ஸ்தூபியை எழுப்பினார்களே. இது ஏன்? எதற்காக?

நம் வாழிடமான ரொறன்டோ நகரின் நடுநாயகமாக அமைந்து அனைவரையும் கவரும் ஒரு கட்டிடம் சீ என் கோபுரம். அஃதே யாழ் நகரின் மையப்பகுதியில் அமைந்து, அண்ணாந்து பார்க்கும் விதத்தில் விண்ணார்ந்து நின்று இப்பிதாமகர் பெருமையைப் பிறருக்குச் சொல்லிக் கொண்டிருப்பது அன்னவர் பேரில் அமைந்திருக்கும் அந்த நினைவு ஸ்தூபி. இது ஏன்? எதற்காக?

காந்தி அடிகளை ஆத்ம சாந்தியடைய வைத்தவன் கோட்சே. அடிமைத்தளை அறுத்த அண்ணல் ஆபிரகாம் லிங்கனை அடியற்ற மரம்போலச் சரித்தவன் வில்லிபூத். அமெரிக்கக் காந்தி மார்ட்டின் லூதர் கிங்" கை அமரிக்கச் செய்தவன் ரே. பாரதத் தலைவி இந்திரா காந்தி பூரதம் ஏறக் காரணர்கள் ஆனவர்கள் சற்வான்சீங், பீம்சிங் போன்றவர்கள். இயேசுபிரான் காட்டிக் கொடுக்கப்படவும், சாட்டையடிகள் பெறவும் சாசுவதம் பெறவும் காரணமானவன் யூதாஸ். எங்கள் தந்தை செல்வா அவர்களை ஈழத்துக் காந்தி என்கிறோம். எனின் அவர் கோட்சேயும் நெருங்காத காந்தி. அவரது நிஜத்தை, நிழலை மட்டுமல்ல நினைவையும் (நினைவு ஸ்தூபியையும்) கொலைஞர்கள் நெருங்கியதில்லை.

அதன் அருகில் கோட்டையில் குடிகொண்டிருந்த அரசபடைகள் செய்திட்ட அனர்த்தங்கள் அனந்தம்; அனந்தம். பட்டான தமிழுயிர்களைப் பறித்திருக் கிறார்கள்; அல்லும்பகலும் "ஷெல்கள்" அடித்து அல்லல்கள் செய்திருக்கிறார்கள். அருகில் அமைந்திருந்த அறிவுப் பொக்கிஷமாம் நூல் நிலையத்தை எரித்துச் சாம்பலாக்கி அங்கே எருக்கும் ஆம்பலும் வளர வழி செய்தார்கள். சந்திரிகா பண்டாரநாயக்கா ஆட்சியில் காலிமுகத்தில் அமைந்திருக்கும் பண்டாரநாயக்காவின் சிலையைப் பாதுகாப்புப் படையினர் பாதுகாக்கும் அவலநிலை. ஆயினும் பாதுகாப்புப் படையாலும் பாதுகாப்புகள் அறவே அற்றிருக்கும் செல்வா சிலைக்கு பங்கம் ஏற்பட்டிலதே ஏன்? எதற்காக?

## அவரை மதித்தனர்! அமைதி காத்தனர்!!

திரைப்படம் பார்க்கப் போகிறோம். ஒரு சில விநாடிகட்கு ஒலியோ, ஒளியோ தடைப்படட்டும். ரசிகர் எழுப்பும் வீணாரவாரத்தில் வெட்டிக் கூச்சலில் விசிலடியில் காதடைத்துவிடும்; சிலவேளை செவிப்பறைகள் வெடித்துவிடும். ஆனால்.....

செல்வநாயகம் அவர்களின் நாடாளுமன்ற இறுதி உரைகளில் ஒன்றை நான் கேட்டிருக்கிறேன். அவர் வாய் திறக்கவே கஷ்டப்படுகிறார். வார்த்தைகள் வர இஷ்டப்படவில்லை. ஒலிபெருக்கி இருந்தது. அதற்கு வரும் ஒலியை பெருக்கத் தெரியும். ஒலியை உருவாக்கத் தெரியாதே! நாதஸ்வரத்தில் நாட்டம் மிக்க பெரியவர் குரல் ஈனஸ்வரத்தில் ஒலிக்கிறது. பெரும்பான்மைச் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினருக்கு புரியாத, விரும்பாத பாஷையில் அவர் பேச விளைந்திருப்பது அவர்கட்குப் புரியாமலா? எனினும் சபையில் பேரமைதி; பூரண நிசப்தம். பலரும் உணர்ச்சிவயப்படுகிறார்கள். பாசங் கலந்த பரிவில் சிலர் கண்கள் பனிக்கவும் செய்கின்றன. மாற்றினத்தின் தலைவன் மாட்டு அவர்கள் கொண்டிருந்த அபிமானம் - மனிதாபிமானம் அத்தகையது!

இத்தனைக்கும் அவர்களில் பலரும் சத்தம் போடத் தெரியாதவர்களோ அல்லது சாந்த சொரூபிகளோ அல்ல. பரிகள் நரிகள் ஆகி ஊளையிட்டது மணிவாசகப் பெருமானின் சரிதத்தில் ஒரு பிரதான நிகழ்வு. ஆனால் பா. உ.கள் நரிகள் ஆக "ஆ" "ஊ" "புலி" என்று ஊளையிடுவது இலங்கைப் பாராளுமன்றத்தில் சர்வசாதாரண நிகழ்வு; சராசரிச சம்பவம்.

## தந்தையாய் ஏற்றார்கள்! மங்கையரும் மாலையிட்டார்!!

ஈழத்துக் காந்தியாம் எங்கள் செல்வாவிற்கு முந்தைய எந்த வடபகுதித் தலைவரையும் மட்டுநகர் மக்கள் ஏற்றதும் இல்லை. அவர்கள் செப்பியதைச் செவிமடுத்துக் கேட்டதும் இல்லை.

தந்தையில் மட்டும் அவர்கள் தனிமதிப்புக் கொண்டிருந்தார்கள். தந்தையும் மட்டுநகர் மக்களின் மாட்டு வைத்திருந்த மதிப்பு தனித்தன்மை வாய்ந்தது. 1956ல் மட்டுநகர் மக்களுடன் இணைந்து கொண்டு தான் இத்திருமகன் திருமலைப் பாதயாத்திரையை ஆரம்பித்தார். சட்ட மாமேதையான செல்வா அவர்கள் சட்டவிளைவுகளைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டும் சிங்களச் சிறீ எதிர்ப்பில் பங்குகொண்டு "சிறீ"யை அழித்ததுவும், குற்றவாளியாகக் காணப்பட்டு சீருடை அணிந்து ஒரு வாரம் சிறைப்பறவையாக இருந்ததுவும் அதே மீன்பாடும் தேனாட்டில்த் தான்.

அடுத்த வருடத்தில் மட்டக்களப்பு வாழ் கட்சி தொண்டர்கள் வற்புறுத்தி தந்தை அவர்களை இணங்கவைத்து அவரது பிறந்தநாள் விழாவினை வெகுவிமரிசையாக மட்டுநகரில் கொண்டாடினர். அந்த வைபவத்தில் மணாளன் அல்லாத ஆடவர் கழுத்தில் மாலையிடாத தமிழ் மங்கையர்களின் அறுபத்து நான்மர் அணிவகுத்து வந்து மாலையிட்டு தந்தை அவர்கட்கு மவுசு சேர்த்தார்கள்.

கிழக்கின் எல்லையில் அமைந்த, இன்று தொல்லைகள் மலிந்த ஒரு குக்கிராமம் கோமாரி. 75ம் ஆண்டில் மாசி மாதத்தில் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற பெரியவர்க்கு இருவாரங்களுள், கோமாரி, பண்டிருப்பு, மட்டக்களப்புப்

www.tamilarangam.net

பகுதிகளில் வரவேற்புக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

கோமாரிக் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர் சிவஞானக் குருக்கள். தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான அப்பெருமகன் இன்று கனடாவில் குடியிருக்கிறார். ஸ்ரீதரக்குருக்களின் மாமனார் அவர்களைக் குறிப்பிடுகிறேன். கனகச்சிதமாகக் கூட்ட ஏற்பாடுகளை குருக்கள் ஐயா செய்திருந்தார். வழிபாடு இடம்பெறுகிறது. முடிந்து வெளியே வந்த நாங்கள் திகைக்கிறோம். ஏறக்குறைய இருநூறு மாதுளம் பிஞ்சுகள் கடதாசிகளால் ஆன மூவர்ணக் கொடிகளைப் பிடித்தபடி அணிவகுத்து நிற்கிறார்கள்; ஆண்களும் பெண்களும் பெரியவர் கால்களில் விழுகிறார்கள்; தொழுகிறார்கள். இவற்றை இம்மியத்தனையும் விரும்பாத பெரியவர் தடுமாறுகிறார்; தடுக்க முற்படுகிறார். அவர்கள் அன்பிற்கு அடைக்குந் தாழ் இட முடியவில்லை. இத்தனைக்கும் அது ஒரு அதிசயத் தன்மை வாய்ந்த ஓர் அர்த்தநாதீஸ்வரக் கிராமம். பெரும்பாலான தமிழ் ஆண்களும் பெண்களும் சிங்களப் பெண்களையும் ஆண்களையும் மணந்திருந்தார்கள். ஆனால் அங்கு அப்போது சிங்களப் பாடசாலை இருக்கவில்லை. பிள்ளைகள் அனைவர்க்கும் போதனை மொழியாக இருந்தது எங்கள் சாதனை மொழிதான். இன்றைய நிலையை யான் அறியேன்! மாலையிட்டும் மண்டியிட்டும் தந்தை அவர்கட்கு அந்த மக்கள் மரியாதை செய்தது ஏன்? எதற்காக?

## ஈழவர்கள் துதித்தனர்
## இந்தியரும் மதித்தார்கள்

காங்கேசன்துறை இடைத்தேர்தல் இடம்பெற்றது. 6-2-75 இல் என நினைவு. மாசி மாதம் 15, 16ம் திகதிகளில் கிழக்கிலங்கையில் பெரியவருக்குப் பெருவிழாக்கள் எடுக்கிறார்கள். இவ்விழாக்களை முடித்துக்கொண்டு வல்வைக்குத் நான் திரும்புகிறேன். ஒரு திருமண அழைப்பிதழ் எனக்காக காத்திருக்கிறது. உடைத்துப் பார்த்த எனக்கு இன்னொரு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி (Pleasant Shock). 1974 தையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் எனக்கு பரிச்சயமாயிருந்த டாக்டர் இரா. ஜனார்த்தனம் ஒரு திருமண அழைப்பிதழை எனக்கு அனுப்பியிருந்தார். அட்டையில் மூன்று முக்கியஸ்தர்களின் வண்ணப்படங்கள்; அவற்றைச் சூழச் சின்ன வாசகங்கள். படங்களில் இடம் பிடித்திருந்தவர்கள் முறையே பேரறிஞர் அண்ணா, அறிஞர் வரதராஜன், மூதறிஞர் செல்வா. வாசகங்கள் வரிசைக் கிரமத்தில் “அறிவு தந்த அண்ணல்”, தமிழ் தந்த தங்கம்”, “ஈழம் தந்த செல்வம்” அந்தத் தமிழ்க் கலாநிதி தனது தாய்தந்தையர்க்கோ, தன்நாட்டில் வாழும் தவசிகள், ஞானிகள், யோகிகள், அரசியல்வாதிகள் அறிவியல் மேதைகட்கோ இடந்தராமல் தனது இறந்துபட்ட அரசியல் தலைவனுக்கும், பல்கலைக்கழகப் பேராசிரியனிற்கும் இணையான இடத்தைக் கொடுக்கின்ற அளவிற்கு காந்தக் கவர்ச்சியை இந்தப் பக்கத்து நாட்டுப் பாட்டா எப்படிப் பெற்றார் என்று அதிசயிக்கிறேன். இது ஏன்? எப்படி?

## தந்தை என்ற சொற்பதம்
## தனி மவுசு பெற்ற அற்புதம்

தமிழகத்தில் அரசியல் அரங்குகளிலும், சமூக மட்டங்களிலும், இலக்கிய வட்டங்களிலும் தந்தை, என்ற பதம் பகுத்தறிவாளர் ஈ.வே.ராமசாமி அவர்களையும் பேரறிஞர் என்ற பதம் சி.என். அண்ணாத்துரை அவர்களையும் மூதறிஞர் என்ற பதம் ராஜகோபாலாச்சாரியர் அவர்களையும் சுட்டப் பயன்பட்டன. ஆனால் ஈழமணித்திருநாட்டில் செல்வா எனப்படும் தனிப்பெருந்தலைவர் இந்த முப்பதங்கள் தன்னையே தொட்டணைக்கின்ற அளவிற்கு தகைமைகள், பெருமைகளைப் பெற்றிருந்தார்.

முன்னாள் அமைச்சரான க. இராசாராம் அவர்கள் எங்களுக்கு அனுப்பியுள்ள பிரத்தியேகமான வாழ்த்துச் செய்தியில் ஈழத்துத் தந்தை செல்வா உலகில் உள்ள தமிழர்கள் எல்லவர்க்குத் தந்தை என்று குறிப்பிட்டுள்ளார்.

**"வயதில் இளையோரே மூத்தோரை வாய் திறந்து**
**அண்ணா என் றழைப் பார்கள்**
**வயதில் மூத்தாரும் அண்ணா என உனை**
**அழைத்ததனால்**
**தமிழில் ஒரு சொல்லு தனியழகு பெற்ற தண்ணா"**

இது, அறிஞர் அண்ணா இறப்பை ஒட்டி ஓர் ஈழப்புலவன் எழுப்பிய வாதை ஒலியின் வார்த்தை வடிவம். அண்ணா என்ற சொற்பதம் தமிழில் அற்புதம் உற - நற்பெயர் பெற அறிஞர் அண்ணா காரணர் ஆனார்.

அங்ஙனே, தந்தை என்ற தனிச்சொல் தமிழில் தனிப் பவுசும் மவுசும் பெற தந்தை காரணகர்த்தா ஆகிவிட்டிருக்கிறார். இது ஏன்? எப்படி?

## மரஇலையின் உதிர்வல்ல
## மா மலையின் சரிவு

தந்தை அவர்கள் உருவத்தில் ஒட்டி உலர்ந்த சருகை ஒத்திருந்த ஒருவர். ஒரு சமயம் அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில் ... இலங்கையின் முதலாவது முதலமைச்சரான டி.எஸ்.சேனநாயக்கா தான் மெலிந்த பசித்த தோற்றம் உடைய அவருக்குத்தான் பயப்படுவதாகச் சொன்னதுண்டு. கொளுத்த பிரபுக்களிடம் இல்லாத பயத்தை தான் பஞ்சை பராரிகளிடம் கொண்டிருப்பதாகச் சொன்ன ஜூலியஸ் சீசரின் வரிகளை சேனநாயக்கா மேற்கோள் காட்டி இருந்தார்.

ஆனால் இப்பெருமகன் பிரிவு ஒரு இலையின் உதிர்வாக அல்ல மிகப்பெரிய மேரு மலையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிவாகவே அனைவரையும் அவல வைத்தது. இந்த சட்ட மாமலையான இராணி அப்புக்காத்து சரிந்த வேளையில் இலங்கையின் பிரதம நீதியசராக இருந்த விக்டர் தென்னக்கோன் என்ற இன்னோர் இராணி அப்புக்காத்து இலங்கை உயர்நீதிமன்றத்தில் இவருக்கென விசேடமாக நிகழ்த்திய இரங்கலுரையில் ஒரு விருட்சம் விழுந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்.

கம்பன் இறந்தபோது "பூமகள் நூலிழந்தாள்" எனப் பாடிவைத்தான் ஒரு பொய்யறியாப் புலவன். செல்வா அவர்கள் செகவாழ்வை நீத்த வேளையில் ஈழத்தாயும் விதவைக் கோலமே கொண்டிருந்தாள்.

கம்பன் காட்டிடும்,

**ஆவும் அழுத அதன் கன்றழுத அன்றலர்ந்த ஆவும் அழுத புனற்புள்ளழுத**

சோகநிலைதான் எங்கணும் விரவிக் கிடந்தது. இலட்சக் கணக்கில் மக்கள் திரண்டு வில்லிபுத்தூரார் பாரதத்து பார்த்தன் பாணியில்,

**'அன்ன நெடுந்துவசன் இவற்கு ஆயுள் மிகக் கொடுத்திலனே"**

என்று அழுது அரட்டினார்கள். அன்னாரின் இறுதிக்கிரிகை இடம்பெற்ற வேளையில் யாழ். நகரின் மண்ணே ஜனக்கடலுள் புதைந்து மறைந்து கிடந்தது. அந்த நாட்களில் கொழும்பில் குடியிருந்த எனது நண்பனான ஒரு தமிழ்ச் சட்டத்தரணி தன் மனைவியை அழைத்துக்கொண்டு பக்கத்தில் குடியிருந்த சிங்கள அயலவரிடம் அடிக்கடி போக வேண்டியிருந்தது. அழும் அவர்களை ஆசுவாசப்படுத்த. இத்தனைக்கும் அவர்கள் பெரியவர் செல்வாவுடன் பழகும் பெருவாய்ப்பையே பெற்றதில்லையாம். இவையெல்லாம் ஏன்? எதற்காக?

தந்தை அவர்களைப் பார்த்துப் பரவசிக்கின்ற அவர் பேசுவதைக் கண்டு, கேட்டு, கவனித்து பலனடைகின்ற பரவலான வாய்ப்புகளை நான் பெற்றதுண்டு. எனினும் இம்மலர்க்குழுவில் இடம்பெற்ற பின்னர் நான் இப்பெருமனிதன் பற்றிய புதுப்புது விடயங்களையும் புரிந்து கொண்டேன். நான் எடை போட்டதையும், எதிர்பார்த்ததையும் விட அதிக படிக வெட்டுகளைக் கொண்ட பளிங்கு இவர் எனத் தெரிந்து கொண்டேன்.

இவரது விவேகத்தோடு கூடிய விடாமுயற்சி, வாக்குத்தூய்மையோடு கூடிய வாதத்திறமை, அருங்குணங்களுடன் கலந்த அறிவுவளம், நெஞ்சுரத்துடன் கூடிய நேர்மைத்திறன், தன்னல மறுப்போடியைந்த தமிழ் விருப்பு இவைதாம் செல்வநாயகம் என்ற சிறு மகவை பெருமலை ஆக்கிவிட்டிருக்கிறது.

**ஈப்போ மண்ணின் வித்து!**
**இப்போ(து) உலகின் சொத்து!!**

"பிறக்க ஒரு நாடு; பிழைக்க ஒரு நாடு" இது பராசக்தி படத்துக் குணசேகரன் கூற்று. எங்கள் குணசாகரன் தந்தை பிழைக்கப் போன மண்ணில் பிறக்கிறார். ஆனால் அன்னவரின் அன்னை மண்ணின் ஆகர்ஷிப்பு அன்னாரை அவரின் ஐந்தாம் அகவையில் அன்னையோடும் மூன்று சகோதரர்களோடும் இலங்கைக்கு ஈர்த்து இழுத்து வந்துவிடுகிறது.

இன்று மலேசியாவில் இருக்கும் அண்ணன் சொல்லின் செல்வர் இராஜதுரை அவர்கள் தந்தை அவர்களைத் "தமிழரின் தவப்பயன்" என்று குறிப்பிடக் கேட்டிருக்கிறேன். (பலமுயற்சிகள் செய்தும் நூற்றாண்டு விழாக் குழுவினரால் அன்னாரைத் தொடர்புகொள்ள முடிந்திலது) மலேசியாவில் பிறந்த அவர் இலங்கை மீளக் காரணமும் நிச்சயம் தமிழர் தவப்பயன்தான். இல்லையெனில் தந்தை செல்வா அவர்கள் வசதிமிகு மலேசியா (அன்று மலாயா) நாட்டின் வனப்பு மிகு ஈப்போ நகரை விட்டு வரண்ட ஈழ வடமண்ணிற்கு வந்திருக்க முடியுமா? வடக்கு வாழ்கிறது; தெற்கு வரள்கிறது (North Flourishes ; South Perishes) என்று அறிஞர் அண்ணா பேசினார். இது இலங்கைக்குப் பொருந்தாது. ஆங்கே தெற்கு திகழ்கிறது; வடக்கே வரள்கிறது. வடக்கு வாசிகள் இறையோர்களாலும் இயற்கை அன்னையாலும் கைவிடப்பட்டவர்கள்.

உந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய உன்நாட்டைப் பொன்னாடு ஆக்கு என்ற பணிப்புடன் தந்தை அவர்கள் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தந்தையோ வீட்டு வறுமையைப் போக்க மலாயா போனார். மைந்தரோ இல்லின் வறுமையை அல்ல இனத்தின் சிறுமையைப் போக்க மலாயாவால் திரும்பி வந்தார்.

**நீதித் துறையினை அலங்கரித்தார்**
**நீதியரசர் ஆகிட மறுத்தார்**

படித்தார்; பட்டம் பெற்றார். படிப்பிக்க லானர். பின்னர் சட்டம் பயின்றார்; சட்டவாதியானான். சட்டத்துறையில் மின்னுமோர் நட்சத்திரமும் ஆயினார். இராசாவின் அப்புக்காத்தும் ஆகி இணையிலாக் கௌரவம் பெற்றார். இராணி அரியணை ஏற இராணி அப்புக்காத்து என்ற பேர் மாற்றம் பெற்றார். தந்தை அவர்கள் எமைப் பிரிந்த வேளையில் உயர்நீதிமன்றில் இரங்கலுரை நிகழ்த்திய விக்டர் தென்னக்கோன் செல்வநாயகம் அவர்கள் சட்டவல்லுனர்களின் சட்ட வல்லுனராகத் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டு அன்னாரது சட்ட மகத்துவத்தையும் தகைமைத்துவத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

உயர்நீதிமன்ற நீதியரசர் பதவி வலிந்து வர மீண்டும் மீண்டும் அதை ஏற்க மறுத்தார். தன் தமிழ்மக்கள் துயர்கள் நினைந்தார். அவற்றைக் களைந்தும் பணிக்குத் தன்னையே அர்ப்பணித்தார்.

**உறைவினால் கொழும்பான்**
**உணர்வினால் செம்பாட்டான்**

பிந்நாளில் தந்தை அவர்களை அவர்தம் தொண்டர்கள் ஈழத்துக் காந்தி என்று ஏற்றிப் போற்ற ஆரம்பித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையில் அதுகண்டு பொறுக்காத அவரது அரசியல் எதிரிகள் அவரை காற்சட்டைக்காந்தி, பப்பா செல்வா என்றெல்லாம் பகிடி பண்ணியதுண்டு. எனின், உணர்வு குன்றாத ஒரு தமிழனாகவே தந்தை அவர்கள் இருந்தார்கள் என்பது மறுக்க, மறைக்க, மறுக்க படமுடியாத பேருண்மையாகும்.

மாம்பழத்திற்குப் பேர்பெற்ற மண் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் என்றால் கொழும்பார் நாவில் ஜலம் ஊறும். வெள்ளைக் கொழும்பான் என்பது வேறோர் ரகம். செம்பாட்டானும் சிறந்த ரக மாம்பழந்தான். தந்தை அவர்கள் வாழிடமாக - தொழிலிடமாகக் கொழும்பைக் கொண்டிருந்தாலும் சிந்தனைகளால் - செயற்பாட்டால் வளர்ந்த தெல்லிப்பளை செம்பாட்டு மண்ணின் மைந்தனாகவே இருந்தார். பிரித்தானியர் ஆண்ட காலத்திலேயே தமிழ் வைபவங்களில் பங்குகொள்கையில் எல்லாம் சரிகை வேட்டி சரசரக்க நடந்து பரபரப்பை ஏற்படுத்தினராம். அரசியலுக்காக அவர் போட்ட வேடம் என்று அவசர முடிவெடுத்துவிடாதீர்கள். அன்னார் அரசியலில் புகுந்தது 1945ம் ஆண்டினில். எனின் 1929ல் இடம்பெற்ற திருமணத்திலே பட்டு வேட்டி பளபளக்கக் காட்சி தருவதை இம்மலரிலேயே உங்களால் காணமுடியும்.

கர்னாடக இசையைத் தானும் பயின்றதோடு பிரத்தியேக ஆசிரியர்களை ஒழுங்கு செய்து தனது பிள்ளைகட்கு தமிழ் வாத்தியப் பயிற்சிகளை தந்தை அளித்ததுண்டு. அண்மையில் அன்னாரது சிரேஷ்ட பிள்ளையும் ஏகபுதல்வியுமான சுசிலி வில்சன் அவர்களை (டாக்டா A.J. வில்சன் அவர்கள் பாரியாரை) பேட்டி காணப்போன வேளையில் கலைமகள் கைப்பொருளாம் வீணையை அவர்களது ரொறன்ரோ வீட்டில் கண்டேன்; வீணை பயின்றிருக்கிறேன் என்று அந்த அம்மையார் சொன்னார்.

### சாமான்யனாக நடந்தார்
### சாம்ராஜ்ய பதியாய் உயர்ந்தார்

அரசியலில் நுழைந்த செல்வா அவர்கள் முடிக்குரிய இளவரசனோ கவசகுண்டலங்களோடு கூடிய கர்ணனோ அல்லர். சாத்வீக உணர்வோடும், சராசரி மனிதர் உறவோடும், சாமான்யன் என்ற நினைவோடும் தன் அரசியல் வாழ்வில் அரிச்சுவடி ஆரம்பித்தார்; அடிச்சுவடுகள் பதித்தார்.

பாகிஸ்தான் ஜின்னாவும் பாரிஸ்டர் பொன்னாவும் நடத்திய அரசியலை விட பாரதத்து அண்ணா நடத்திய அரசியல் மாறுபட்டது. ஜின்னாவும் பொன்னாவும் அடிமட்டத் தொண்டர்களையும் பொதுமக்களையும் மதித்தும் இல்லை ; காரைவிட்டு இறங்கி வந்து கதைத்ததும் இல்லை. அறிஞர்அண்ணா அவர்களோ நான் ஒரு சாமான்யன் என்று அடிக்கடி உரைத்தார். தமிழக சாம்ராஜ்ஜியத்தின் தலைமைத் தவிசையே பிடித்தார்.

தந்தையும் அதே ரகத்தவர் தான். ஒழுக்கம், நேர்மை, உண்மை இவற்றைக் கடைப்பிடிப்பதில் உயர்ந்த தரத்தவர். இலங்கை அரசியலிலும் பதவி, பவுசுகளுக்காக மதம் மாறியவர்கள், குணம் மாறியவர்கள், கொள்கை மாற்றியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தந்தை அவர்கள் கொள்கை விடயங்கள் அழுங்குப்பிடியை ஆருக்கும் தளர்த்தியவர் அல்ல. காகக் கூட்டில் பொரித்தாலும் கத்தி வாழத் தயாரில்லாத கூவும் குயில்க்குஞ்சின் குணத்தினர் எங்கள் செல்வா.

### தொண்டுளம் படைத்தவர்
### தொண்டரை மதித்தவர்

தந்தை அவர்கள் அடிமட்டத்தில் இருந்த அன்பர்களையும் நெஞ்சார நேசித்தார். ஏழமையோடும் தோழமை பூண்டார். அடைக்கலம் தேடுபவர்களுக்கு இரட்சகம் புரிந்தார். இவரது இல்லம் இறுதி நாட்கள் வரையில் அடையாத கதவிருக்கும் சன்னிதானமாகவே இருந்தது. ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் மாலையில் தொண்டர்கள் அவர் வீட்டில் கூடுவார்கள். 1971ம் ஆண்டில் நான் சட்டப்படிப்பை ஆரம்பித்த நாளிலிருந்து பெரும்பாலான புதன்கிழமைத் தரிசனத்திற்குப் போவதுண்டு. 1975ம், 1976ம் ஆண்டுகளில் தந்தை மிகத் தளர்ந்திருந்தார். எனினும் தள்ளாத வயதிலும் தமிழ்ப் பணியை - பொதுச் சேவையைத் தள்ளாது இருந்தார். இயேசு பிரான் ஒரு சமயம் 'Spirit is willing: but the flesh is weak' என்று குறிப்பிட்டிருந்தார். அந்நிலையில் இருந்தபோதும் இடையிடையே வந்து எங்களுடன் அமர்ந்து கொள்வார்: ஆலோசனைகள் சொல்வார். 1975ல் அணிசேரா மாநாடு கொழும்பில் நடந்த வேளையில் அதில் பங்கெடுத்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பெரியவர் அறிக்கை ஒன்றை அனுப்பி எங்கள் பிரச்சினைகளை உலக அரங்கிற்கு இட்டு வந்தமை வயதால் முதிர்ந்த வாசகர்கட்கு நினைவிருக்கும்.

அந்த நாட்களில் பெரியவர் வெளிப்படுத்திய அரும்பெருங் குணங்களில் ஒன்று இருக்கைகள் இல்லாது இளசுகள் நின்று கொண்டிருந்தாலும் முற்றிப் பழுத்த இந்த பழசுக்கு கால் நோகும். கஷ்டப்பட்டு கதிரையை இழுத்து வந்து தந்த சந்தர்ப்பங்களும் பலவுண்டு.

என்றுமே அவர் அவரது தொண்டர்களை ஆனது ஆட்டத்திற்கு தாயக்கட்டையாகவோ - ஓட்டத்திற்கு குதிரையாகவோ - ஏற்றத்திற்கு ஏணியாகவோ பயன் படுத்தியவர் அல்லர். தானே இறுதி நாட்கள் வரை ஏணியாகப் பயன்பட்டமையை அவரது பித்தனான ஒரு பக்தன் பாட்டில் குறிப்பிடுகிறான்,

**'சத்தியமே உருவெடுத்த ஞானி - அவர்**
**தளர்ந்த உடல்**
**ஈழத்திலே தமிழருக் கேணி----'**

www.tamilarangam.net

## ஈட்டி என முன் சென்றார் இனப்பகையை எதிர் கொண்டார்

செல்வா என்றும் "ஓட்டு" வாங்க மட்டும் நினைத்தவரல்ல, "வேட்டு" தாங்கவும் துணிந்தவர்! தனது தொகுதிக்குள் அவர் உறைந்தவரும் இல்லை. தொகுதி மக்கள் சேவையுடன் அமைந்தவரும் அல்ல. அவர் களம் கண்ட இடங்களை எண்ணிப்பாருங்கள். மட்டுநகர் தான் அவர் "சிறீ" அழித்து சிறை போகக் காரணமான போர்க்களம். வீட்டுச் சிறையில் இருந்த இடம் கொழும்பு.

மலையகத் தமிழருக்காக முதற் போர்ப் பிரகடனம் செய்தார். திருமலைச் சிங்களம் குடியேற்றம் கண்டும் சீறி எழுந்தவர் செல்வா. புத்தளம் பள்ளிவாசல் முஸ்லீம் படுகொலையை எதிர்த்துத் துள்ளி எழுந்தவர் செல்வா அவர்களே தான்! அமெரிக்கப் படை தளகார்த்தனாக உலகப்பேர் பெற்ற பற்றன் (PATON) போல் எங்கள் செல்வா படையணியின் முன் செல்வதையே தன் பழக்கமாக - வழக்கமாக கொண்டிருந்தார். தொண்டர்களை ஈடுபடுத்துவதில் அவருக்கு உடன்பாடு இருப்பதில்லை.

**'நெஞ்சத்துக் காதலராக"** என்ற குறளில் காதல் வயப்பட்ட பேதை ஒருத்தி நான் சுடு பதார்த்தங்களை உண்ணமாட்டேன். என் இதயத்தில் இருக்கின்ற என் காதலன் வெந்து விடுவான் என்கிறாள்.

காதலுக்கு அடிமையாகி விடுகின்ற காதலன் மட்டும் மேதையா என்ன? என் காதலியின் மென்மலர்ப் பாதங்களுக்கு அனிச்சம்பூவும் அன்னத்தின் சிறகும் நெருஞ்சி முள்ளாகக் குத்தும் என்று கவலை கொள்கிறான்.

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும்**

என ஆரம்பிக்கிறது அடுத்த திருக்குறள் ... இத்தகைய காதலன்பை தன் தூய தொண்டரில் கொண்டிருந்தவர் தந்தை செல்வா. 1956 ஆவணியில் இடம் பெற்ற பாதயாத்திரை பற்றி முடிவெடுக்க தமிழரசுக் கட்சிப் பொதுச்சபை கூடிய வேளையில் தொண்டர்களை கஷ்டப்படுத்த வேண்டியிருக்கும். அவரது பாதங்கள் நோகும் என்ற காரணங்கள் காட்டி இறுதிவரை உறுதியாக எதிர்க்கிறார் செல்வா. பின்னர் பெரும்பான்மையினர் முடிவை ஏற்கிறார். பின்னர் பாதயாத்திரையில் முதல் ஆளாய் பங்கு கொள்கிறார்.

ஈழத்துக்காந்தி அவர்கள் இறுதிக் காலம் வரை பைந்தமிழ்க்கான களம் என்றால் பழம் என்று கொண்டார், முன் சென்றார்.. இதற்கும் இரண்டு மேற்கோள் காட்டுகின்றேன்.

## நீதி மன்றுள் துணிந்து சென்றார்! நீதிபதி எழுந்து நின்றார்!!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகாரபீடமாக இருந்த தீர்மானக் குழு (DECISION COMMITTEE). அதனை அண்ணன் அமிர் அவர்கள் போராட்டக் குழு (war council) என்று தான் குறிப்பிடுவது வழக்கம். அதற்கு அக்காலத்தில் பாராளுமன்றக் குழுவிற்கும் பொதுச்சபைக்கும் இல்லாத அதிகாரம் தரப்பட்டிருந்தது. அதிலிருந்த ஒன்பதின்மரில் நால்வர் மட்டுமே பா.உ.கள். எஞ்சிய ஐவரில் அமிர்தண்ணர், M. சிவா அவர்கள் சாம் தம்பிமுத்து ஆகியோருடன் இரு இளைஞர் பேரவை பிரதிநிதிகளும் இருந்தோம். அக்காலத்தில் இருந்தவர்கள் ரகுபதிபாலசிறீதரனும் யானும். இளைஞர் பேரவை நீதிமன்றங்களில் தமிழீழக் கோரிக்கை அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வழங்குவதன் மூலம் சட்ட மறுப்புப் போராட்டத்தை நடத்துவது என்று முடிவெடுக்கிறது. நாம் இருவரும் இதற்கு போராட்டக்குழுவின் அங்கீகாரம் பெற்றுவிடுகிறோம். போராட்ட தினத்தை நாம் பகிரங்கப்படுத்தவில்லை. பருத்தித்துறையில் இடம் பெற்ற போராட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைச் செயலாளர்களில் ஒருவராக அன்று இருந்த சிவசிதம்பரம் அவர்களின் நெறியாள்கையில் இடம் பெறுகிறது.

இப் போராட்டம் பற்றித் தெரியவர தந்தை அவர்கள் கவலை கொள்கிறார். தானும் புறப்பட்டு வந்து விடுகிறார். அப்போது யாழ். நீதவானாக இருந்தவர் திரு. கே.வி. நவரத்தினம் அவர்கள். கையில் துண்டுப் பிரசுரத்துடன் தந்தை அவர்கள் யாழ் நீதி மன்றத்தினுள் அனுங்கி அனுங்கிச் சென்ற காட்சி "றோபோ" எனப்படும் இயந்திர மனிதனின் இயக்கத்தை எனக்கு நினைவூட்டியது. தந்தையைக் கண்டதும் நீதிபதி தன்னை அறியாமல் எழுந்து நிற்கிறார். சட்டவாதிகள் எழுகிறார்கள், பார்வையாளர்கள் எழுகிறார்கள், எதிராளிகள் எழுகிறார்கள்; வழக்காளிகளான காவல் துறையினரும் வகையறியாது எழுந்து கைபிசைந்து நிற்கிறார்கள்.

தந்தை துண்டுப் பிரசுரத்தைக் கொடுக்கிறார். நீதிபதி பணிந்து குனிந்து வாங்குகிறார். தந்தை "நான் சட்டத்தை அவமதிக்கிறேன். என்னைக் கைது செய்யுங்கள்" என்று மீண்டும் மீண்டும் முணுமுணுக்கிறார். நீதிபதி கூடி வந்தவர்களைக் அவரைக் கூட்டிப் போகச் சொல்லிக் கெஞ்சுகிறார். அவர்கள் அந்தச் "சட்ட விரோதி"யை அழைத்துக் கொண்டு வெளியே போகிறார்கள்.

அப்போது ஒரு சட்டத்தரணி (வேடிக்கையாக) "ஐயா...நீங்கள் எழுந்து நின்றிருக்கக் கூடாது. அவரைக் கைது செய்து கூண்டில் நிற்க வைத்திருக்க வேண்டும்." அதற்கு நீதிவான் சொன்ன பதில்... புல்லரிப்பை ஏற்படுத்துகிறது.

"அவர் ஒரு வழிபடப்படும் தலைவர். சட்டத்தில் ஒரு சமுத்திரம். அவரை நான் எப்படிக் கைது செய்யமுடியும்.?"

இச்சம்பவம் 1976ஆடி அல்லது ஆவணியில்

www.tamilarangam.net

நிகழ்ந்ததாக நினைவு. அப்போது அவருக்கு 79 வயது,

## இயேசு தட்டுங்கள் திறக்கும் என்றார் செல்வா தட்டினார் திறக்க விலலை

மேலே இடம் பெற்ற போராட்டம் நடைபெற்று சில நாட்களில் சொத்துப் பறிமுதல், ஆயுட் தண்டணை, குடியியல் உரிமைகள் பறிப்பு ஆகிய பயங்கர விளைவுகட்குத் தயாராக சட்டவிரோதமான துண்டுப் பிரசுரங்களை வழங்கிய காரணத்தால் திருவாளர்கள் க. துரைரத்தினம், வி.என். நவரத்தினம், கா.பொ.இரத்தினம் ஆகிய மூன்று இரத்தினங்களும் நல்முத்தினம் ஆன அமரர் அமிர்தலிங்கம் அவர்களும் கைதானதும், சிறைப்பட்டதும், விடே ரயல் அற் பார் (விசேட) நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டதும் நாமும் நாடும் அறிந்த உண்மைகள்.

ஆனால் பலரும் அறியாத - பகிரங்கத்திற்கு வராத உண்மை அன்று அவர்களுடன் ஐந்தாம் ஆளாக எங்கள் செல்வா அவர்களும் வெங்களம் புகுந்திருந்தார். துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். பொலிசார் மற்றவர்களைக் கைது செய்த வேளையில் அவர்களைத் தட்டி துண்டுப் பிரசுரங்களை கொடுத்தார். அவரை கைது செய்யக்கூடாது எனப் பொலிஸ் மேலிடம் உத்தரவு போட்டிருந்ததோ தெரியவில்லை. அன்று அவர் தட்டியும் சிறைக் கதவம் திறந்திலது!

## படைக்கு முந்தியவர்! பதவிக்கு பிந்தியவர்!

"பந்திக்கு முந்து, படைக்கு பிந்து" என்ற பழமொழி இந்தப் பழம்பெரும் தலைவருக்குப் பொருந்தாது. இந்தக் கிழம் களம் என்றால் பழம் என்று இறுதி வரை வாழ்ந்ததை அறியத் தந்துவிட்டேன்.

செல்வா அவர்களோ ஒரு பவித்திரத் தன்மை வாய்ந்த ஒரு பாத்திர வார்ப்பு. பதவி ஆசை காட்டி இவருக்கு வலை வீசவும் விலை பேசவும் முற்பட்டவர்கள் இருக்கிறார்கள்; எனின் வெற்றி பெற்றவர் இலர். பதவிக்கும் பவுசிற்கும் தவிசிற்கும் ஆசைப்படாத காரணத்தால் தந்தை அவர்கள் கனடாக் கடுங்குளிருக்கு ஈடுகொடுத்து இலைகளுடன் நின்று நிலைக்கும் "கிறிஸ்மஸ்" மரம் போல அரசியல் அரங்கிலும் தனித்துவம் பேணி இறுதிவரை நின்று நிலைத்தவர்.

முடிமன்னர் காலத்தில் முக்கிய மூன்று பதவிகளை வகித்தவர்கள் அரசன், அமைச்சர், சேனாதிபதி. இந்த மூன்று பதவிகளையும் எங்கள் ஈழத்துக்காந்தி ஏற்றவர் அல்லர். நீதியரசர் பதவியை மீண்டும் மீண்டும் நிராகரித்தார். ஆளும் இனத்தவர் தரும் மந்திரிப் பதவிகளை ஏற்று மண்டியிட மறுத்தார். தனது தமிழரசுக் கட்சியின் தளபதிப் பதவியை வாலிப மிடுக்கும், வரலாறு படைக்கும் துடிப்பும், வாளோச்சக் கண்ணிமையாத் துணிவும் கொண்டிருந்த அடலேறு அமிர்தலிங்கம் அவர்களிடம் கூப்பிட்டுக் கொடுத்திருந்தார்.

## நினைத்தவர் நிலைத்திலர் நிலைத்தவர் நினைத்திலர்

தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களை தனிப் பெரும் தலைவர் என்றழைத்தார்கள். அவர் தான் சார்ந்த அமைப்பின் ஆயுட்காலத் தலைவராக இருந்தார். எனின் அவரால் இனத்தின் ஏகோத்த தலைவனாக நெடுநாட்கள் நின்றும், நீண்டும் நிலைக்க முடிந்திலது.

செல்வா என்ற பெருந்தன்மை மிக்க பெருமகனோ தலைமையைத் தன் தளகார்த்தர்களுடன் உளப்பூர்வமாகப் பகிர்ந்து கொண்டார். தந்தை அவர்களின் தமிழரசுக்கட்சி அவர் உயிர் வாழ்ந்த காலத்திலேயே அமரர்கள் கு. வன்னியசிங்கம், என்.ஆர்.இராஜவரோதயம், சி.மூ. இராசமாணிக்கம், டாக்டர்.இ.மு.வி. நாகநாதன், அ.அமிர்தலிங்கம் ஆகிய ஐவரைத் தலைவராகக் கொண்டு இயங்கியுள்ளது.

தந்தை அவர்களின் பரந்த விரிந்த மனப்பான்மையாலும், பலரையும் அணைத்துச் சென்ற பாசமிகு செயற்பாட்டாலும் கட்சி கனங்காத்திரத்தைப் பெற செல்வா பலரதும் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். இவரால் இனத்தின் தலைவராக நின்று நிலைக்க முடிந்தது.

## இரு துறைகளைத் தொட்டார்! இரண்டிலும் துலங்கினார்!!

"இலங்கைத் தேசிய காங்கிரஸ்" இன் தலைவனாக இருந்த சேர். பொன். அருணாசலத்தைப் பார்த்து அவரது அண்ணன் சேர் பொன்.இராமநாதன்...."விரைவில் ஒரு இனவெறிப் புயல் வீசும். அது உன்னை இந்த ஆசனத்திலிருந்து அகற்றும்" என்று சொன்ன கூற்று தீர்க்கதரிசமாக அதிக காலம் எடுத்திலது...... செல்வா வாழ்வில் எந்தப் புயலும் அடித்ததும் இல்லை; ஈழத் தமிழரின் தலைமைப் தவிசிலிருந்து என்றுமே அவரை அகற்றியதும் இல்லை.

தனிப்பெரும் தலைவனாயிருந்த பொன்னா அவர்களே தனது இறுதி நாட்களில் இடம்பெற்ற "ரயல் அற் பார்" வழக்கில் செல்வா அவர்கள் தலைமையின் கீழ் முகமளித்து வாதாட முன்வந்தார். அன்னவரின் தலைமை ஏற்று கூட்டணியில் ஓர் இணைத் தலைவராக இணைந்து கொண்டார்.

எங்கள் தலைவர் சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் சட்டம், அரசியல் என்னும் இரு துறைகளையும் தொட்டார்; இரண்டிலும் துலங்கினார்.

சட்டத்துறையில், இலங்கையின் பிரதம நீதியரசரான விக்டர் தென்னக்கோன் கியூ.சி. அவர்கள் வாயால் "சட்டவல்லுநர்களின் சட்ட வல்லுநர்" என்ற பாராட்டைப்பெற்றமை வசிட்டர் வாயால் பிரமரிஷிப் பட்டம் பெற்றமையை நிகர்ந்தது.

அரசியலிலும் அவர் தலைவனாக ஏற்றிருந்த தனிப் பெருந் தலைவனே பிந்நாளில் அவரைத் தலைவனாக

www.tamilarangam.net

ஏற்றமையால் பெறலரிய கௌரவத்தைப் இப் பெருமகன் பெற்றார்.

அந்த நாட்களில் புதன்கிழமைகளில் பெரியவரின் கொழும்பு வீட்டுக்கு வாரா வார வழிபாட்டுக்குப் போகின்ற பலரும் அறிந்த இன்னோர் விடயம்.... அவர் இரவு 7 மணியளவில் சிரசாசனம் செய்வது... ஒரு பாயை மண்டபத்தில் விரித்த பின்னர் தொண்டர் இருக்கும் பக்கம் திரும்பிப் பார்ப்பார்; வாய் திறந்து கேட்கமாட்டார். குறிப்பறிந்து எங்களில் யாராவது ஒருவர் அவரது கால்களை உயர்த்தி அவர் சிரசாசனம் செய்திட உதவுவோம். பின்னர் எம் இனத்தையே பாதுகாத்த பெரியவர் விழாது பாதுகாக்கப் பக்கத்தில் நிற்போம்.

ஈழத்தமிழர் நாம் ஏற்றி வைத்திருந்த அரியாசனத்திலிருந்து என்றுமே விழாத செல்வா அவர்கள் நான் அறிந்தவரை சிரசாசனத்திலிருந்தும் விழுந்தவரல்ல.

## மொழுகுவர்த்தி அல்லர்! ஊது பத்திகள்!!

தந்தை அவர்கள் தன் இனத்திற்காக தன்னை - தன் தொழிலை - தொழிலால் தேடிய "பெரும் பொருட் குன்றத்தை" எல்லாம் இழந்தவர். எனின், அவர் உதிரியாகத் தன்னை ஒரு மொழுகுவர்த்தியாக எரித்தார் என்பது தவறு. ஊது பத்திகள் போல அவருடன் இணைந்து தங்களை இன வேள்வித் தீயில் எரித்த அடுத்த பட்சத் தலைவர்கள் சிலரும் தந்தை அவர்களின் அரசியல் வெற்றிகட்கு வித்திட்டுள்ளார்கள். தந்தைக்கு தோழோடு தோள் கொடுத்த திண்ணியன் "வன்னியர்" என்ற வன்னியசிங்கம், அடியுண்டு, அடையுண்டு 1958 ஆனி 5 முதல் சிறையிருந்த வேளையில் நோய்கண்டு, பாய்கண்டு பிரிந்தவர்.

4-3-1961 அன்று சத்தியாக்கிரக வேளையில் விழுப்புண் தாங்கி வீழ்ந்து பட்டு வீரகாவியம் படைத்தவர் வி.ஏ.கந்தையா என்ற வீரத் திருமகன்.

குண்டாந்தடி இரண்டாக முறிய அடிவாங்கிய டாக்டர் நாகநாதன் என்ற இரும்பு மனிதர் இனத்திற்காக உழைப்பை விட்டார். உடல் நலத்தையும் கெடுத்தார். அவர் பிரிவு கண்டு பொறுக்காத ஒரு ஈழத்து எழுச்சிப் பாவலன் பாடினான்,

**மருத்துவன் ஒருவன் நோயாளி ஆனான்**
**மணித் தமிழ்க்காக என்னும்**
**கருத்தொன்றே நின்னைக் காலங்கள் கோடி**
**காவியத் தலைவனாய் காட்டும்**

ஒப்பரிய உண்மை இது. தந்தை வழி நின்று "இரத்தமும் தசையும் இனிய பொன் உயிரும்" இனத்திற்கே தந்து காவியத் தலைவர்களாக - சரித்திர புருசர்களாக மாறிய வேறு தலைவர்களும் தொண்டர்களும் இருக்கவே செய்கிறார்கள். ஐயாவு, பிரான்சிஸ் என்ற இரு மலையக வாலிபர்கள் பைந்தமிழ் எழுத்தழிப்பை எதிர்த்து உயிர் கொடுத்து அழியாத காவியம் ஆனார்கள். திருமலைத் தீரன் நடராசா தியாகிகள் பட்டியலில் தனைச் சேர்த்தான்.

## அமைதிக் கடலும் வேகப் புயலும்

உமையொருபாகன் என அழைபெறுபவன் சிவன். அவன் உள் நின்று அவனை உஞற்றும் சக்கி உமை. இந்த சக்தி இல்லையேல் சிவம் இல்லை சிவம் இல்லையேல் சக்தி இல்லை என்பது சைவஞானிகள் கூற்று.

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் காந்திஜி அவர்களுடன் நேருஜீயும் இணைந்த காரணத்தாற்றான் அது காற்றோடு கலந்த தீ போல் கொந்தாரழலையும் கரை புரண்டு ஓடும் காட்டாற்று வெள்ளத்தின் வேகத்தையும் பெற்றது என்பர்

**அங்ஙனே, ஈழவிடுதலைப் போராட்டத்திலும் செல்வா என்கின்ற அமைதிக்கடலும் அமிர்தலிங்கம் எனும் வேகப் புயலும் இணைந்ததாற்தான் எங்கள் போராட்டம்வீறும், விறுவிறுப்பும் வேகவளர்ச்சியும் பெற்றது. அமிர்தர் என்ற அதிசக்தி வாய்ந்த மாமனிதர் ஓய்வு, ஒழிவற்று ஒல்லும் வகையிலெல்லாம் உழைத்ததாற்றான் செல்வா உருவாக்கிய இயக்கம் வளர்ந்தது; வரலாறு படைத்தது.**

செல்வா அவர்கள் ஒலி வாங்கி முன் நின்ற வேளையிலெல்லாம் அமிர்தர் தான் அருகில் நின்று ஒலியைப் பெருக்கி உதவினார். அவர் சார்பில் பேசும் வாயாக மட்டுமல்ல கேட்கும் செவியாகவும் உரிமைகள் உரத்துக் கேட்கும் சக்தியாகவும் செயற்பட்டார்.

சிவசக்தி பகு பதந்தான். எனின் இவ்விரண்டும் அத்துவிதக் கலப்பை கொண்டிருப்பவை. செல்வாவை அமிர்தரை விட்டுப் பிரித்துப் பார்ப்பது பெரும் தவறு. அவர்கட்கு இடையிலான பிணைப்பும் இணைப்பும் இறுதிவரை இதமாகவும் இறுக்கமாகவும் இருந்து வந்தமையும் கண்கூட்டு.

## பத்திரமாய் வளர்த்தார் பத்திரமும் கொடுத்தார்

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடுகள் பேணி, சாதிச் சழக்குகள் - மதமாச்சரியங்கள் - வட்டார வாதங்கள் - பிரதேச பேதங்களுக்கு இடந்தராது கவனமொடு கட்சியை வளர்த்தவர் தந்தை செல்வா. அது, அவர் மறைந்த பின்னர் 1977ம் ஆண்டு ஆடிப் பொதுத் தேர்தலில்தான் முன்னெப்பொழுதும் பெற்றிராத பெரும் அறுவடையைப் பெற்றது. உடுப்பிட்டித் தொகுதியில் அமரர் த. இராசலிங்கம் பெற்ற பெருவெற்றி தந்தை உருவாக்கிய இயக்கத்துக்கு எடுப்பையும் மிடுக்கையும் கொடுத்தது.

தந்தை அவர்களின் வாரிசான அமிர்தண்ணரும் ஒழுக்கம், நேர்மைகளை ஓம்பி தந்தையின் வழியில் அவரது அமைப்பை வழி நடத்தினர்.

ஊழல் பேர்வழிகட்கு ஒரு காலத்தில் இலங்கையின்

www.tamilarangam.net

இலஞ்ச ஆணையாளர் இயன் விக்கிரமநாயக்கா பேரைக் கேட்டால் உதறல் எடுக்கும்; உதிரம் உறையும். "இயன்" அவர்களால் "எமன்" எனக் கருதப்பட்டவன். இயனிடம் நேர்மைத் திறத்தோடு நெஞ்சுரமும் நிறையவே இருந்தது. அவனது அதிரடி நடவடிக்கைகளால் அமைச்சர் ஈ.எல்.சேனநாயக்கா பதவி இழந்தார். பாராளுமன்ற உறுப்பினர் ஜலான்டீன் சிறையை அடைந்தார்.

அதே இயன் 1981, 82ம் ஆண்டளவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டது.... இலஞ்சக் குற்றச்சாட்டு எதற்கும் ஆளாகாத ஒரே அரசியல் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்று மட்டுமே.

தந்தை அவர்களின் அடியொற்றி வளர்ந்த அடுத்தபட்ச அரசியற் தலைவர்கள் அவர் பத்திரமாய் வளர்த்த கட்சிக்கு அவர் மறைந்து 4, 5 ஆண்டுகளின் பின்னர் நற்சான்றுப் பத்திரம் பெறறுக் கொடுத்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**ஈழம் பெற்ற செல்வ நாயகம்**
**ஞாலம் ஏற்ற தங்க நாயகம்!**
**'கற்பெனப் படுவது சொற்றிரம்பாமை"**

ஔவையின் இந்த அமுத வரிகள் சொற் பிழைப்பவன் கற்பிழப்பதையே சொல்கின்றது. இலங்கையில் ஆட்சி பீடம் ஏறும் சிங்கள இனவாதக் கட்சிகள் பலவும் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை மறுத்ததோடு, தாங்கள் செய்கின்ற உடன்படிக்கைகட்கு உடன்பட மறுத்தும், வாக்குறுதிகளை வானில் பறக்கவிட்டும் தங்கள் நாணயத்தை ஏளனத்திற்கும் எள்ளி நகைக்கும் இலக்காக்கி வருகிறார்கள்.

அரசியல் யாப்பு என்பது சட்டங்களின் சட்டம்; தாய்ச் சட்டம்; சட்டங்களுக்கே சட்ட வலுவைக் கொடுக்கின்ற சட்டம். மாறும் அரசுகளாலும் இலகுவில் மாற்றப்பட முடியாத - மாற்றப்படவும் கூடாத சட்டம்.!

இலங்கையில் இன்றைய நிலையில் வாழ்வு பெற்றிருக்கும் அரசியற்சட்டமோ இதுவரை 19 திருத்தங்களுக்கு இலக்காகி இருக்கிறது. இன்று நேற்று 20வது திருத்தம் வந்திருக்குமோ தெரியவில்லை. சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கவும், தங்கள் பேரினவாத நலன்களை பாது காக்கவும் ஆளும் இனத்தவர்கள் அரசியல் யாப்பில் திருத்தங்கள் கொண்டு வருவது அவர்கட்கு கைவந்த கலை.

இது தொடர்பாகன பகிடி ஒன்று பிரசித்தம் பெற்றது. ஓர் அரசியல் மாணவன் இங்கிலாந்தில் பிரபல்யம் பெற்ற ஒரு புத்தகசாலைக்குப் போய் ஒரு இலங்கை அரசியல் யாப்பின் பிரதியைக் கேட்டிருக்கிறான். கடைக்காரர் சொன்ன பதில் "WE DON'T DEAL WITH PERIODICALS" (நாங்கள் பருவகால வெளியீடுகளை விற்பதில்லை) வார, மாதச் சஞ்சிகைகளையே 'PERIODICALS" என்பார்கள்.

இலங்கை ஆளுநர்களின் வாக்கு நாணயம் மட்டுமல்ல அவர்கள் வார்க்கும் நாணயமும் வரவேற்பிற்குரிய ஒன்றல்ல. அடிக்கடி "மதிப்பிறக்கம்" பெறுவதால் வேற்றவர் அதை ஏற்பதும் இல்லை; ஏறெடுத்துப் பார்ப்பதுமில்லை. அயல் நாட்டு வங்கிகளும் இலங்கை நோட்டுகளில் நோட்டம் விடுவதும் இல்லை; நாட்டம் கொள்வதும் இல்லை.

ஆங்கில நாணயமான "ஸ்ரேலிங்"க்குஅதிக வரவேற்பு உண்டு. ஸ்ரேலிங், என்ற ஆங்கிலப் பதத்திற்கே "உயர்ந்த", "மெச்சுதற்குரிய" போன்ற பொருள்களும் உண்டு. இங்கிலாந்து "ஸ்ரேலிங்" பண நோட்டிற்கும் இல்லாத மதிப்பும் மகத்துவமும் இங்கிலாந்து இராணியின் இலச்சினை பொறிக்கப்பட்ட பவுணுக்கு உண்டு.

எங்கள் நூற்றாண்டு விழா நாயகன் திரு. சா.ஜே.வே . செல்வநாயகம் அவர்கள் இங்கிலாந்து இராணியின் அப்புக்காத்து என்ற அதியுயர் கௌரவம் பெற்றவர். அதுமட்டுமல்ல; இங்கிலாந்து இராணிப் பவுண் போல உலகளாவிய கீர்த்தி,கியாதி, கித்தாப்பைப் பெற்றவர்.

# பெரியார் வாழ்வினில்.....

1956ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி முதன் முறையாகப் பெருவெற்றி பெறுகிறது. அந்நிலையில் திரு. செல்வநாயகம் அவர்களை நேரில் வந்து வாழ்த்த முடிவெடுத்தார் அன்றைய இலங்கைக்கான பிரித்தானிய ஸ்தானிகர். (திரு மைக்கல் வோக்கர் என நினைவு). அப்போதும் தந்தை கொழும்பில் வாழ்ந்த வீடு வாடகை வீடுதான். அதோடு பழையது.

எனவே திருமதி. செல்வநாயகம் இச்சந்திப்பை தனது சகோதரனான பிரபல சட்டத்தரணி திரு. பார்.குமாரகுலசிங்கம் வீட்டில் வைக்க முடிவெடுத்து கணவரிடம் சொல்ல வந்தார். கட்சிக்காரர்கள் சூழ இருப்பதைக் கண்டு தயங்கி உள்ளார். பெரியவர் "இவர்கள் வெளியாட்கள் அல்ல. விசயத்தை சொல்லுங்கள்" என்று சொல்லியுள்ளார். அவர் தயங்கித் தயங்கி தனது விருப்பத்தைச் சொன்னார்....

"அவர் வீட்டைப் பார்க்க வரவில்லை: என்னைத்தான் பார்க்க வருகிறார். இந்த வீட்டில் அவரைச் சந்திப்போம்" என்று அடித்துச் சொல்லி விட்டார் திரு. செல்வநாயம்

(இந்தத் தகவலைத் தந்தவர் சட்டத்தரணி தில்லையம்பலம்.நவரத்தினம். பெரியவரின் நீண்டகால நண்பர். அவரது சுதந்திரன் பத்திரிகைக்கு முகவராகவும் நீண்ட காலம் கடமையாற்றியவர். இன்று கனடாநாட்டில் இலை மறை காயாக வாழும் அவரிடம் பெரியவர் பற்றிய தகவல்கள், அவர் கைப்பட எழுதப்பட்ட கடிதங்கள் நிறைய உண்டு.)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெரியார்

**நமு. பொன்னம்பலம்**

பெரியவர் அவர்களைப்பற்றி எழுத நினைத்த போது எதிலிருந்து ஆரம்பிக்கலாம் என்று எனக்குள் ஓர் தயக்கம். எங்கள் குடும்பத்திற்கும், பெரியவருக்கும் தொடர்பில்லாத பல தொடர்புகள். அகவையில் சிறியவனான நான் பெரியவரை நேரில் பார்த்தவற்றில் நினைவில் உள்ளவை மூன்றே மூன்று சந்தர்ப்பங்கள் தான். ஆனால் அவரைப்பற்றி, என் தந்தை கொண்டிருந்த கருத்துக்கள், எண்ணங்கள் போன்றவை எனக்கு அவரைப் படிப்பதற்கு ஒரு புத்தகமாயிற்று.

அரசியலில் எதிரும் புதிருமாகச் செயற்பட்ட என் தந்தையும், பெரியவரும் மேடைகளில் தனிப்பட்ட ரீதியில் விமர்சனம் செய்ததாக நான் அறியவில்லை. என் தந்தையின் ஆரம்ப கால அரசியல், பெரியவரின் அரசியலை ஒட்டித்தான் ஆரம்பமாயிற்று. என் தந்தையின் பெரிய தகப்பனின் வீடு, பெரியவரின் அரசியல் அலுவலகங்களில் ஒன்றாக விளங்கிற்று.

இடதுசாரித் சித்தாந்தத்தின் வழி நின்ற என் தந்தை அரசியல் ரீதியாகப் பெரியவரை எதிர்த்துச் செயற்பட வேண்டி வந்தது. இந்நிலையிலும் அரசியல் போக்கிலித்தனத்துள் வீழ்ந்து விடாமல் இருவரும் செயற்பட்டமை உற்று நோக்கத்தக்கது.

எம் சமுகத்தின் வாழ்வில் அரசியல் பலருக்கு அவரவர் வாழ்வின் பெரும் பகுதியாயிற்று. எம் நாட்டிலும் சரி, இதர நாடுகளிலும் சரி, மக்கள் தலைவர்கள் என்று போற்றப்பட்டோர், தம் தனிப்பட்ட சுயலாபங்களுக்காக அரசியலைப் பயன்படுத்தி மண் கவ்வியதுண்டு. ஆனால் என் தந்தையின் பாணியில் சொல்வதானால் "பெரியவர் மிகவும் கைச் சுத்தமானவர்"

என் தந்தையுடன் பல அரசியல் கூட்டங்களைச் சென்று பார்த்திருக்கின்றேன். ஆனால் பெரியவரின் ஒரே ஒரு கூட்டத்தைத்தான் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1975 காங்கேசன்துறை இடைத்தேர்தற் பிரச்சாரம் நடக்கும் மல்லாகம் நீதிமன்றப் பகுதியில் பெரியவருக் காக ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் அது. மேடையேறிய பலர் தனிப்பட்ட தாக்குதலில் ஈடுபட, பெரியவர் மட்டும் அரசியல் மட்டும் பேசிவிட்டுச் சென்றார். பல வருடங்கள் கழிந்தபின் என் தந்தையிடம் இதைப்பற்றிக் கேட்டேன். அவர் கூறிய பதில் இதுதான், கொள்கைத் தெளிவு உள்ளவன் அரசியல் மட்டும் பேசுவான்; மற்றவர்கள் கொள்கைத் தட்டுப்பாடு காரணமாக எதையும் பேசுவார்கள்.

எமது பகுதிக் கிராமசபைக்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் தெரிவு செய்யப்பட்ட தலைவராக இருந்த என் தந்தைக்கும், அதே தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக கடமை செய்த பெரியவருக்கும் இடையே அவர்களின் அரசியல் பகைமைகள் ஒரு போதும் தடையாக இருந்ததில்லை. அளவெட்டி, மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகம் எமது கிராமத்தில் திறக்கப்பட்டபோது பெரியவரே திறந்து வைத்தார். எமது கிராமத்திற்கு மின்சார இணைப்புக் கிடைத்தபோது என் தந்தையோடு ஆலோசனை கலந்து கொண்ட பலரும் வெவ்வேறு பிரமுகர்களை அழைக்கும்படி கேட்டனர். கிராம சபையின் தலைவர் என்ற முறையில் என் தந்தை அழைக்க, அத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் பெரியவர் வந்ததும் மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்ததும் இன்றும் என் நினைவில் நிற்கிறது.

பெரியவர் நோய்வாய்ப்பட்டு அமரத்துவம் அடைவதற்குச் சில மாதங்களுக்கு முன், அமரர் ஜி.ஜி.யின் அஸ்தி மல்லாகம் வழியாக எடுத்துவரப் படுகையில் கிராமசபையின் சார்பில் அஞ்சலியை எனது தந்தை செலுத்துகையில் இறுதியாகப் பெரியவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

ஐக்கியப்பட்ட ஒரே நாட்டில் இரு இனங்களும் பூரணமான சுயாட்சியின் அடிப்படையில் தொடர்ந்து வாழலாம் என்ற என் தந்தையின் கனவிற்கும். தமிழர்க்கு ஒரே வழி தனிநாடுதான் என்று கூறிச் சென்ற பெரியவரின் அரசியல் சித்தாந்தத்திற்கும் இடையே ஓர் ஒற்றுமையைக் காண்கின்றேன். அதாவது பெரியவர் அவர்கள் அகிம்சாவாதி. அவர் எம் போராட்டமானது அகிம்சை வழியிலேயே வெற்றி பெறும் அதுவே ஒரே வழி என்று நம்பினார். என் தந்தையும் தான் நம்பிய சோசலிச சித்தாந்தத்தின் வழியில் நின்று ஒரு சிறுபான்மைத் தேசிய இனமானது ஆயுதம் ஏந்தித் தனது இனவிடுதலையை மட்டும் பெறுவது முடியாது என நம்பினார். எனவே தான் நாட்டில் வர்க்க ரீதியான போரை முன்னெடுப்பதன் மூலம் சிறுபான்மை இனம் இனவிடுதலையையும் இணைத்துச் சென்று வெற்றி பெறலாம் எனக் கருதினார். இந்நிலையில் இருவருமே, ஆயுத வழியல்லாத வேறு வழிகளிலேயே தனியான இனவிடுதலைப் போராட்டமானது வெற்றிபெறும் என நம்பினர்

அரசியலில் பேச்சுச் சுதந்திரம் இருக்க வேண்டும். போராட்டங்களில் தார்மீக நெறிகள் பின்பற்றப்பட வேண்டும் என்பவற்றில் இறுதிவரையில் இறுக்கமான நம்பிக்கை கொண்டிருந்த இப்பெரியார் இன்று எம்மிடையே இல்லாத பெருங்குறை இன்று பரவலாக உணரப்படுகிறது!

www.tamilarangam.net

# மீண்டும் பிறந்திங்கு வாருமையா!

திருமகன்

ஒரு நேரிய
நடு வகுடெடுத்து
உச்சி வாரிய தலையும்
கூரிய நுதலும்
சீரிய புத்தியும்
குளுமைமிகு கண்களும்
குமுதம் விரிந்ததுபோன்ற
அழகிய சிரிப்பும்
அண்ணலின் தனிச்சிறப்பு

புல்லும் சிலும்பா
மெல்லவே நடந்து
வெல்லம் போல
கனிவாய்ப் பேசி
அல்லல் துடைத்த வள்ளல்
கையில்
வில்லும் அம்பும் எடுக்காமலே
ஒரு புனிதப் போரை
தொடங்கிய வித்தகன்

உரிமை என்பது
வெந்தயமா? வெங்காயமா?
மளிகைக் கடையில் கேட்டு வாங்க
இடைத் தரகர்
விலைபேசி விற்க
இது என்ன சந்தையில்
விற்கும் ஆடா? மாடா?
உதிரத்தில் சூடேற்றி
உள்ளத்தில் உணர்வூட்டி
நேர்மைத் திறனோடும்
தன்மானத் துடிப்போடும்
அஞ்சா நெஞ்சுடனும்
போராடிப் பெறுவதுதான்
சுதந்திரம்
என்றுரைத்த சுந்தர புருஷன்.

மீன்கூடப் பாடியது தேன்நாட்டில்
யாழ்மீட்டிப் பெற்றதுதான் யாழ்ப்பாணம்
இறை புகழ்பாடி மணம் பரப்பும் மாதோட்டம்
இறை புகழும்
துறைமுகமும்
ஒன்று சேர்ந்ததன்றோ
திருக்கோணமலை
இத்தரைகள் மட்டும் அல்ல
இன்னும் பல
முத்திரைகள்
பதித்த மண்ணின்
மைந்தருக்கு
எம் தந்தை சொந்தமடி
அவருக்கு அவன்
அழியாப் பந்தமடி

பட்டம் பெற்றவன்
சட்டம் கற்றவன்
செல்வச் சீமான்
அந்தச் சரித்திர நாயகன்
தரித்திரம் பிடித்த தமிழனைக் காக்க
நால் பத்து ஆண்டுகளுக்கு முன்பே
தமிழீழ மண்ணில்
காடு மேடெல்லாம்
செருப்பின்றி நடந்தான்
படுக்கை விரிப்பின்றி
வெறும் புழுதியில் கிடந்தான்
நாயும் பேயும் ஊளையிடும்
நடு இராத்திரியிலும்
நம்மை நினைத்து
நம் மண்ணை நினைத்து
நம் விதியினை நொந்து
கண் விழித்துக் கிடந்தான்
கண்ணீர் வடித்தான்
வரவில்லை விடிவு
அதனால் எடுத்தான்
ஒரு முடிவு

குட்டக் குட்டக் குனிபவன் கோழை
குனிந்தது போதும்
உணர்ந்திடு உன் நிலை
எழுந்திடு தமிழா
இனி நிமிர்ந்திடுவாய் என
எழுபத்தி ஆறினில்

www.tamilarangam.net

வட்டுக்கோட்டையில்
திட்டமாய் சொன்னான்

எட்டாக் கனியல்ல
உன் தமிழ் ஈழம்
கொட்டுக பேரிகை
கொடுமுடி வீழ்க
எட்டுக எண்டிசை
எங்கள் கோரிக்கை
என்று சூழ் உரைத்தான்

சத்தியம் தோற்றதாய்
சரித்திரம் இல்லை
சபதம் எடுத்தான்
தமிழ் மண்ணை மீட்க
அந்தக் காவிய நாயகன்
முன்னே நடக்க
அவனுடன் துணையாய்
வணங்கா முடியும்
இறைவனை
வணங்கும் துறவியும்
துடுக்குள இளைஞனும்
துடிப்புள மங்கையும்
பஞ்சினை விஞ்சும்
சிறுவனும் சிறுமியும்
இப்படிப்
பெரிசும் சிறிசுமாய்
அவனுடன்
கை கோர்த்து நடக்க
அது
ஒன்றாகி
பத்தாகி
நூறாகி
அது
ஆறாகி
பெரும் மக்கள்
கடல் அலையாகி
இவனுடன்
இணைந்து நடந்தது

முடிந்ததா
இவனின் போராட்டம்
இவன் விதைத்த
சுதந்திர வித்து
வெடித்து

அது முளை விட்டபோது
முடிந்ததே
இவனின்
உயிர் மூச்சு

அதன் பின்பு
விடிந்ததா
தமிழனின் இருள் வானம்
மறைந்ததோ சூரியன் அடிவானம்

வண்டிசைத்த
வண்ணத் தமிழ்ச் சோலை
உமது அன்பு வெள்ளம் வற்றி
வரண்டுபோய்க் கிடக்குதையா

தமிழ்க் குமரிகள்
கும்மியடித்த குபேர பூமி
கற்பிழந்து
அவமானத்தால்
குனிந்துபோய் நிற்குதய்யா

என் அயலும்
அட்டமும்
அண்ணனும் தங்கையும்
அம்மையும் அப்பனும்
இருந்து
சோறுண்ட பூமி
இரத்தச் சேறாகிக் கிடக்குதையா

அந்த தூய தமிழ்ப் பூமி
துச்சாதனன்கள்
கால்கள் பட்டு
துவம்சமாய்ப் போனதையா
நாசம் அடைந்ததையா

நீர் செருக்குடனும்
மிடுக்குடனும்
கால் பதித்து நடந்த வயற்காடுகள்
இன்று எறிகணைகளினால்
ஏர் பூட்ட வழியின்றிக்
உருக்குலைந்து
எருக்கு முளைத்துப் பூக்குதையா

www.tamilarangam.net

அல்லியும் ஆம்பலும்
கொட்டிக் கிடந்த நிலம்
உமது மக்கள்
படுத்துறங்கும்
சவப்பெட்டிகளின்
சாம்ராச்சியம் ஆனதையா
வெறும்
சாம்பல் மேடாய் போனதையா

கெண்டையும் கெழுறும்
துள்ளிய பூமி
மான்களும் மயில்களும்
தங்கள் சோடிகளைத் தேடி
கூடிய பூமி
களியாட்டம் புரிந்த பூமி
இன்று குண்டடிபட்டு
குண்டும் குழியுமாய்ப் போனதையா
குரங்கு கை
பூமாலையாய் கிடக்குதையா

சித்தரும்
சீவன் முத்தரும்
பக்தரும்
பரதேசியும்
சுற்றித் திரிந்த
கோபுர வாசல்களும்
சுடர் அணையா
மாதா கோவில்களும்
இடர் களைந்த
பள்ளிவாசல்களும்
பாடம் தந்த
பள்ளிக் கூடங்களும்
மாடம் இழந்து
கூடம் விழுந்து
இன்று இவை எல்லாம்
சேடம் இழுத்துச்
செத்துக் கொண்டிருக்குதையா
வாருமையா
வந்து
இந்தப்
பழி பாவங்களைப்
பாருமையா
எங்கள் பரிதாபங்களை
கேளுமையா

அள்ளிக் கொடுத்த
தமிழினம்
கிள்ளித் தின்ன வழியின்றி
கஞ்சிக்கு அலையுதையா
வெறும் மந்தைபோல்
உடுக்கக் கந்தைக்கும்
வழியின்றி
உருக்குலைந்து போனதையா
இப்போ காடுகளில்
உறங்குதையா

பந்திவைத்துப்
பரிமாறிய
பழந்தமிச் சாதி
குந்தி இருக்க இடம்
குடிக்கவும் கஞ்சியின்றி
சந்தியில் நிற்கும் ஒரு
சந்ததியாய் போச்சுதையா
உமது இனம் சாகுதையா
பட்டினியால் மாளுதையா

வண்டமிழ் காப்பதற்காய்
செருக்களம் புகுந்த
அன்னையரும் தந்தையரும்
கன்னியரும் காளையரும்
பிஞ்சுகளும் குஞ்சுகளும்
இன்று
வன் சிறையில் வாடுதையா
வனப்பிழந்து சாகுதையா
நீர் வாருமையா
வந்து
இந்தக் கொடுமைகளை
பாருமையா

முல்லைக்கு தேர் கொடுத்த சாதி
தொல்லையால் வாடுதையா
புறாவுக்கு உயிர் ஈந்த சாதி
தன் உறவைத் தேடி
பலதேசம் அலையுதையா
'ஆ'வுக்கு நீதி சொன்ன சாதி
இன்று
நாடுவிட்டு நாடு
நாயாய் அலையுதையா
மயிலுக்கு போர்வை தந்த சாதி
உயில் எழுதத் துடிக்குதையா

www.tamilarangam.net

ஏனென்றால்
உமது மண்ணில்
உயிருக்கு
உத்தரவாதம் இல்லையையா
உயிர் பிரிந்த
தன் உறவை
மடியில் வைத்து
கதறவும் சக்தியின்றி
கடமை செய்யவும் வழியுமின்றி
கண்ணிலே நீருமின்றி
ஊமையாய் அழுகுதையா
உண்மையையா
இது மிகப் கொடுமையையா
உமது பூமி பற்றி எரியுதையா

இப்போ
நான் கேட்கிறேன்
ஆண்டவனடியில்
உமக்கென்ன வேலை?
வெயிலுக்குத் தானே
நிழல் மரம் தேவை

கடவுள் தான்
தமிழ் இனத்தை
காப்பாற்றவேண்டும் என்றீர்
கையெடுத்துக் கும்பிட்டீர்
காப்பாற்றினானா கடவுள்?
அவன்
கல் நெஞ்சுக் காரனையா

இப்போ
நான் கேட்கிறேன்
உரிமையோடு கேட்கிறேன்
உம்மை உளமாரக் கேட்கிறேன்
மீண்டும் ஒரு தடவை
பிறந்திங்கு
வாருமையா

நீர் கொழுத்திய
அந்த
சுதந்திரத் தீ
இன்று
தமிழீழ மண்ணில்
கொழுந்துவிட்டு எரியுதையா
எமக்கொரு மண் கிடைக்கும் வரை
அத்தீப் பிழம்பு அடங்காதையா
அடக்க முடியாதையா
அதை யாராலும்
அணைக்க முடியாதையா

மீண்டும்
உமது மண்ணில்
திக்கின்றித் திசையின்றி
ஒரு நோக்கின்றி
பிரிந்து சிதறிப் போய்
பாழ்பட்டுக் கிடக்கும்
தமிழ்ச் சாதியை
உமது
திருக்கரத்தால்
ஆர அரவணைத்து
ஒன்று சேர்த்துத் தாருமையா
உமது
திருவாக்கில்
கருவான
அந்த
சுதந்திரத் தமிழீழத்தை
உருவாக்க
ஆத்மபலம் தாருமையா
மீண்டும்
பிறந்து
இங்கு வாருமையா!

www.tamilarangam.net


செந்தமிழர் எல்லவரும் சொந்தம் எனக் கொண்டார்
நந்தமிழர் உள்ளமதில் "செல்வா" உறை கின்றார்
எம் "தமிழர் செந்தாமரை" இதழாளும் பணி கின்றாள்
விந்தியப் புகழருக்குப் பாமாலை புனை கின்றாள்!

**வியாழன் தோறும் உங்கள் கையில் மலரும்**

கனடாவின் முன்னணி முத்தமிழ் ஏடு

**தமிழர் செந்தாமரை**

**THAMILAR SENTHAMARAI**

**EDITOR: KANAGA ARASARATNAM**

*சூடான செய்திகள், சுவையான கட்டுரைகள், அரசியல் விமர்சனக் கட்டுரைகள், தொடர் கதைகள், சிறுகதைகள் இன்னும் பல.........*

பொது விளம்பரங்கள், விற்பனை நிலைய
விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள்,
மரண அறிவித்தல்கள் மற்றும் சகல விளம்பரத் தேவைகளுக்கும்

**"தமிழர் செந்தாமரை"**

**பிரதம ஆசிரியர்**

**கனக. அரசரத்தினம்**

**தொடர்புகளுக்கு:**

**தொலைபேசி: (416) 439-0747**
**(416) 804-9438**
**தொலைநகல்: (416) 439-5720**

**காலை 10:00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை**
**'தமிழர் செந்தாமரை'க் காரியாலயம் திறந்திருக்கும்.**

www.tamilarangam.net


வேத பாராயணத் தோடு வெண்சங்கு முழங்க
காத லோ டோதுவார் பண்ணிசை விளங்க
சோதனை மிகுந்துள்ள தமிழ் மண்ணை மீட்க
நாதனே நந் தமிழ் நாயகனே மீண்டு வருக!

தந்தை செல்வா அவர்கட்கு
கனேடியத் தமிழர் எடுக்கும் விழா
கவினுற நிகழ்ந்திட
வாழ்த்துவது

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராசக் குருக்கள்

கனேடிய திருமண பதிவு அதிகாரி, மிஸிஸாகா ஜெயதுர்க்கா தேவஸ்தான பிரதம குருக்கள்
(புங்குடுதீவு -10 இலங்கை)



**5576 CORTINA CRESCENT**
**MISSISSAUGA, ON. L4Z 3R2**
(Matheson / Hurontario)
**TEL: (905) 501 -0011**

www.tamilarangam.net

இறைபுகழ் பாடும் தமிழ்மொழி சிறக்க
நிறைவுறு பெருமைகள் தமிழினம் சேர்க்க
குறையறத் தமிழர் எங்களைக் காத்த
பொறைமிகு செல்வா புகழது நிலைக்கும்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** ( ஐயாமணி)

(புங்குடுதீவு - 10)



**628 E BIRCHMOUNT ROAD,**
**SCARBOROUGH, ONTARIO M1K 1P9**
**TEL: (416) 266-3333**

www.tamilarangam.net

வானத்தில் தவழ்ந்து வருவது கீதவாணி
ஈழவர் வாழ இனியது 'தந்தை' பாணி
ஏழு நாட்களும் இருப்பது எங்கள் சேவை
ஈழ நாட்டினில் மாளட்டும் தமிழர் வாதை!

**தந்தை செல்வா**

**நூற்றாண்டு விழா**

**சிறப்புற**

**வாழ்த்துவது**

# கீதவாணி

# A.M 1430
# F.M 88.9

**வாரத்தில் ஏழு நாட்களும்**

# கீதவாணி

**தொடர்புகளுக்கு:**

**தொலைபேசி: 751-9077**

**தொலைநகல்: 751-8646**

www.tamilarangam.net

# LAW OFFICE



## T. JEGATHEESAN

உங்கள் சட்டப் பிரச்சனைகள் எதுவாயினும்
தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும்,
சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**REAL ESTATE - Purchase, Sale, Mortgage**

காணி, நிலம், வீடு | வாங்கல், விற்றல், அடமானம் வைத்தல்

**FAMILY LAW - Divorce, Separation**

குடும்பம் தொடர்பான வழக்குகள் | விவாகரத்து, பிரிவு

**BUSINESS - Purchase, Sale, Incorporation**

வர்த்தக ஸ்தாபனங்கள் | கொள்முதல், விற்பனை

**IMMIGRATION - Refugee Matters, Sponsorship, Appeal**

குடிவரவு | அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை, மேன் முறையீடு

**POWER OF ATTORNEY - Affidavits, Statutory Declarations, Last Will**

தத்துவப் பத்திரம் | சத்தியக் கடதாசி, உயில்

இலங்கை, இங்கிலாந்து, ஆகிய நாடுகளில் இருபது
ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட
வல்லுனராகப் பயிற்சி பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்.

**தி. ஜெகதீசன்**

BARRISTER, SOLICITOR AND NOTARY PUBLIC (ONTARIO)

**TEL: OFF- (416) 266-6154**
**RES: (416) 449-0358**
**FAX: (416) 266-4677**

**16 Bimbrok Road 2nd Floor Scarborough, Ontario. M1K 4T7 (Eglinton Ave. E. & Midland)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தன்பால் இலாத அக்கறையை - செல்வா
தமிழ் பால் மிகைபடக் காட்டியவர்!
‘அம்பாள்’ அருள்‘நகை’ பொழிந் திடுவாள் - ஈழம்
அமைந்திட நாங்கள் மகிழ்ந்திடு வோம்



# அம்பாள்ஸ் ஜுவலறி

**3415 DIXIE ROAD, UNIT 1**
**MISSISSAUGA, ON. L4Y 2B1**
**TEL: (905) 602-9059**

www.tamilarangam.net

நீதிக்கும் தமிழ் சாதிக்கும் சோதனை வந்தால்
பாதிக்கும் பைந்தமிழர் எம் பண்பாடு என்று
வாதிட்ட தந்தை செல்வா வழி நின்று
ஓதிட்ட வழியில் நாம் உயர்வோம்; வாழ்வோம்


தந்தையின் நாமம் வாழ,
அவரின் நூற்றாண்டு விழா சிறக்க
வாழ்த்தி நிற்கும்

**யசோ சின்னத்துரை**

பரிஸ்டர், சொலிசிற்றர் & நொத்தாரிஸ்

Scarborough Office
2555 Eglinton Ave. East, Suite 204
Scarborough, ON M1K 5J1
(Eglinton at Midland)
Tel: (416) 265-3456

Mississauga Office
3038 Hurontario St. Suite 203
Mississauga, ON L5B 3B9
(North of Hwy 5 on Hwy 10)
Tel: (905) 306-1100


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பாதத்தில் பரதத்தில் சதங்கை கொஞ்சும்
நாதத்தில் நர்த்தனத்தில் நளினம் விஞ்சும்
பேதத்தில் பிரிவுகளில் துயரம் விஞ்சும்
ஏதமிலாச் செல்வா நினைவுகள் எங்ஙனம் துஞ்சும்?

**செல்வா நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துவது**

# வெள்ளி விழாக் கண்ட "நாட்டிய கலாலயா"

## இயக்குனர்
## திருமதி. வசந்தா டானியல்

## TEL: (416)- 531-0602

www.tamilarangam.net

கான இன்பம் மிகையாய் தரும் கருவி மிரு தங்கம்
ஊன நிலையகல எமக் குழைத்த செல்வா ஒரு சிங்கம்
மான மதைக் காத்து நின்ற ஓர் மாசிலாத தங்கம்
வான மிசை ஏகினாலும் எம்வாழ்வில் அவர் அங்கம்

**பெரியவர் செல்வாவிற்கு**

**எடுக்கும்**

**பெருவிழா சிறக்க**

**வாழ்த்துவது**

# மிருதங்க சேஷ்திரம்

**இயக்குனர்: வாசுதேவன் ராஜலிங்கம்**

**2370, MIDLAND ROAD, UNIT #C9**
**SCARBOROUGH, ONTARIO M1S 1P8**
**TEL: (416) 750-1542**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தானைத் தலைவன் நாமம் வாழ்க
தமிழர்க்காய் வாழ்ந்த நாயகன் வாழ்க
எங்கள் மொழிக்காய் உன்வாழ்வு ஈந்தாய்
தங்கத் தமிழனே உன் புகழ் வாழ்க



# தந்தை செல்வா விழா இனிது நடைபெற வாழ்த்தும்

## மயில்வாகனம் இராஜகுலசூரியர்

www.tamilarangam.net

மெல்லவே நடந்தவர் மென்சொல் புகன்றவர்
அல்லல் அகற்றிட அல்பகல் உலைந்தவர்
எல்லையில் தொல்லைகள் களைந்திட முயன்றவர்
நல்ல செல்வ நாயகம் நாமம் நிலை பெறட்டும்

# Dr. A. Shan Shanmugavadivel

**RAINBOW VILLAGE
DENTAL OFFICE**

# டாக்டர் அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

**2466 Eglinton Avenue East, Unit 7
Scarborough, Ont. M1K 5J8**

**Tel: (416) 266-5161**

சப்வேயிலிருந்து நடந்துவரின் **Mid Scarborough Community Centre Exit** ஐ எடுக்கவும்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன் இனம் தலை நிமிரத் தன்னையே தந்த அண்ணல்
தன் பணம் பொருளை எல்லாம் தமிழுக்கு ஈந்த வள்ளல்
திண்ணிய சட்ட அறிவில் திகழ்ந்த ஓர் ஒளி மின்னல்
நுண்ணியன் செல்வா நாமம் பன்னூறாண்டுகள் வாழும்! வாழ்க!

# I. FRANCIS XAVIER

**Barrister & Solicitor**

**2401 Eglinton Ave. East, Suite 210**
**Scarborough, Ontario, Canada M1K 2M5**
**Tel: (416) 288-8701**
**Fax: (416) 288-8633**

www.tamilarangam.net

பல் துறை தேர் 'செல்வா' சீர்களை நினைக்கிறேன்!
பல் வைத்தியர் யானும் பாராட்டுகள் சேர்க்கிறேன்!!
அல் பகல் தமிழர்க் குழைத்த அண்ணலை மதிக்கிறேன்!
பல் லாண்டவர் நாமம் வாழப் பரமனைத் துதிக்கிறேன்!!

*Dr. Athi. K. Somasundaram*

**Dental Surgeon**
**Scarborough Dental Office**

**2155 Lawrence Ave. East, Suite 10&11**
**Scarborough, ON. M1R 5G9**
**Tel: (416) 750-9969**
**Fax: (416) 750-9856**

www.tamilarangam.net

புல்லும் நோகாது இப் புனிதர் நடந்தார்
அல்லும் பகலும் அவரை நாம் தொடர்ந்தோம்
வெல்லத் தமிழர்கள் படும் வேதனை பகிர்ந்தார்
விண்ணில் இறையாய் எம் செல்லா உறைந்தார்

தந்தை செல்வா அவர்கட்கு
கனேடியத் தமிழர் எடுக்கும் விழா
கவினுற நிகழ்ந்திட
வாழ்த்துவது

# P. KAYILASANATHAN

**B.A. (CEY) LLB. (CEY)**

***Barrister & Solicitor***

**2401 EGLINTON AVENUE EAST, SUITE 302**
**SCARBOROUGH, ON. M1K 2M5**

**TEL: (416) 752 - 9561**
**FAX: (416) 752 - 7262**

www.tamilarangam.net

நடுநடுங்கும் கைகால்கள்; நடுங்காக் கொள்கை
நாவெடுத்துப் பேசும் நலன்கள் கெட்டும்
சிடுசிடுப்பு இல்லாத சீர் நேர் மிக்க
செந்தமிழர் வாழ்விற்கே சேர்த்த சொற்கள்
அடுத்தடுத்து வருவதனை அழகு ஈழம்
ஆர்வத்தோ டெதிர் பார்க்கும்; அதனைக் கேட்கும்!
நடுநிலைமை தவறாத நல்ல நோக்கு
நம் தமிழர் மூதறிஞர் செல்வா நாக்கு
பஞ்சடைத்த இரு கண்கள்; ஆனால் அந்தப்
பார்வையால் தான் பைந்தமிழன் பலவான் ஆனான்.

# பூரணா வீடியோ

**M.V. KUMARAN** (குமரன்)

## 4673, JANE STREET, # 523
## DOWNS VIEW, ONTARIO M3N 2T6
## TEL: (416) 650 - 5995

www.tamilarangam.net

பைந்தமிழர் படுந்துயரைப் படம் பிடித்துக் காட்டியவன்
செந்தமிழின் விடிவிற்காய் தன் செல்வ மெலாம் ஓட்டியவன்
நைந்திருக்கும் நாம் நிமிர நாளும் தனை வாட்டியவன்
தந்தை செல்வா தன் பணியால் தனிப்புகழை நாட்டியவன்

# DEENAA
## VIDEO PRODUCTION

**2347 C, EGLINGTON AVENUE EAST,**
**SCARBOROUGH, ONTARIO M1K 2M5**
**TEL: (416) 759-3566 / 293-5378**
**FAX: (416) 759-4085**

www.tamilarangam.net


Necto

**முத்தமிழ்**
'இயல்' 'இசை' 'நாடகம்'

**மூவேந்தர்**
'சேரர்' 'சோழர்' 'பாண்டியர்'

**முச்சுவைக்கு**
'நெக்ரோ' 'ஒறேஞ்' 'கிறீம்'

**இல்லத்தரசிகளின்**
**முதற்தரமான தெரிவு**
**லீலா தயாரிப்புக்கள்**




**416-293-1391**
**LEELAS TRADERS INC.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


காலம் எல்லாம் நின்றுழைக்கும் நாற் காலி தன்னை
ஞாலம் உள்ளார் செய்து வைப்பா கருஞ்காலி தன்னில்
சீலத்தால் சீர்மை மிகு செயற்பாட்டால் சிறந்த அண்ணல்
ஈழவர்க் காய் சிறைப்பட்ட செல்வா உயர்ந்த செம்மல்

**தந்தை செல்வா அவர்கட்கு**
**கனேடியத் தமிழர் எடுக்கும் விழா**
**கவினுற நிகழ்ந்திட**
**வாழ்த்துவது**

# Ebony Fine Furniture Ltd

**904 A, MARKHAM ROAD**
**SCARBOROUGH, ONTARIO M1H 2Y2 CANADA**
**TEL/FAX: (416) 289-9345**

www.tamilarangam.net

# ANDY THIRUCHELVAM

(செல்வம்)

(Sales & Leasing Consultant)

**(416) 740-8111 OR**
**(905) 850-8111**



# 1998 MODELS ARE HERE

| | | |
|---|---|---|
| MAZDA PROTEGE | MPV ALL SPORT | MILLENIA |
| ALL NEW 626 | PICK UP TRUCKS | MIATA 99 |

**OVER 50 QUALITY USED CARS IN STOCK**

**Mazda** வாகனங்களை மட்டுமல்ல
உங்களிற்குத் தேவையான **TOYOTA, HONDA, NISSAN** போன்ற வாகனங்களையும்
ஒரே இடத்தில் பார்வையிட்டு தமிழில் பேசி
குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

**3.9 FINANCING**




AM/FM CD PLAYER, MOST INTERIOR ROOM IN ITS CLASS, DUAL AIR BAGS, 14' WHEELS, PWR STEERING, 60/40 SPLIT SEATS

மாதாந்தத் தவணை முறையில்
கடனுதவிகள் தாமதமின்றிச் செய்து
தருவதுடன் குறைந்த விலையில்
வாகனக் காப்புறுதி ஒழுங்கு செய்து
தரப்படும்

**BAD CREDIT
NO PROBLEM
WE CAN HELP YOU
TO RE ESTABLISH
YOUR CREDIT**

*"One of the best warranties in the business"*

Octopus mazda

*HAS PASSION FOR THE ROAD*

*7635 MARTIN GROVE ROAD.*



www.tamilarangam.net

பகை யோரும் மதித்திட பண்பின் குன்றம்
தகை சான்ற தமிழாளின் தலைமைத் தொண்டன்
வகை யின்றி நின்றார்க்கு வழிகாட்டி நின்றோன்
நகை அன்ன செல்வாவை நாம் வாழ்த்து கின்றோம்!



# செல்வசேகரா நகை மாளிகை

2347 EGLINTON AVENUE EAST,
SCARBOROUGH, ON CANADA M1K 2M5

**TEL: (416) 285-7269**
**FAX: (416) 285-6361**

www.tamilarangam.net


திட்டம் மிகுந்த உளம் கொண்டோன்
தீந் தமிழுக்காய் களம் கண்டோன்
உடம் புழைக்கும் நாள் வரைக்கும்
எமக் குழைத்து உயர்ந்த செல்வா

**செல்வா நாமம் நிலைக்க**
**நூற்றாண்டு விழா சிறக்க**
**வாழ்த்துகிறோம்**

*Meenakxy Take Out*

**மீனாட்சி**

**3419 FIELDGATE DRIVE,**
**MISSISSAUGA L4X 2J4**
**TEL: (905) 238-6114**

www.tamilarangam.net


மெல்லிய உருவம் வெண்மையான உடை
துல்லியமான பேச்சு துணிவான பீடு நடை
அல்லி மல்லிகை ஒத்த புன்னகை
சொல்லி முடியுமா செல்வா அழகினை!

# Vijaya's Silk

தமிழ் மக்களின் முதல் தரமான புடவை மாளிகை

**27, Dundas Street East,**
**Mississauga, ON. Canada. L5A 1V9**
**TEL: (905) 273-7997**
**FAX: (905) 273-7323**

www.tamilarangam.net

# JOHN M. GUOBA

## BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC



**All Legal Matters Specializing in**

- IMMIGRATION
  (Including Refugee Claims, Sponsorships & Appeals)
- CRIMINAL LAW
- REAL ESTATE
- FAMILY LAW
- MOTOR TRAFFIC ACT

## LEGAL AID ACCEPTED

குடிவரவு - குற்றவியல் - குடும்பவியல் - மோட்டார் வாகனங்கள் தொடர்பான வழக்குகள்
மேன்முறையீடுகள் - வீடுகள், வர்த்தக நிலையங்கள் வாங்குதல் - விற்றல்
ஆகியவற்றில் அனுபவம் நிறைந்த சிரேஷ்ட சட்ட வல்லுநர்.

**Tel: (416) 923 - 7002**
**Fax: (416) 923 - 7590**

**1, St. Clair Avenue East, Suite # 802**
**Toronto, Ontario M4T 2V7**

இங்குள்ள தமிழ் அலுவலருடன் தமிழில் பேசி
சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்

www.tamilarangam.net

# சட்ட அலுவலகம்

## நாதன் சிறீதரன்

Barrister, Solicitor & Notary Public (Ontario)



- Family Law
- Criminal Law
- Real Estate & Commercial Law
- Power of Attorney
- Immigration Law

- குடும்பச்சட்டம்
- குற்றவியல் சட்டம்
- வீடு, காணி வர்த்தகச் சட்டம்
- தத்துவப்பத்திரம் தயாரித்தல்
- குடிவரவுச் சட்டம்

# LAW OFFICE

## *NATHAN SRITHARAN*

Barrister, Solicitor & Notary Public (Ontario)

## *LEGAL AID CERTIFICATE ACCEPTED*

**Tel: (416) 499-2760 - Fax: (416) 499-6534**

**2190 Warden Ave., #208 Scarborough, Ontario M1V 1T6**

**(Warden & Sheppard)**

www.tamilarangam.net

அமிழ்தான தந்தை என்ற பெயரும் பெற்றார்
தமிழர் உணர்வாகி உயிராகி உயர்வு உற்றார்



# TOP BREAD

**TOP BREAD** பண்டங்களை
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்

**3251 KENNEDY ROAD, UNIT #3,**
**SCARBOROUGH, ON**
**TEL: (416) 298-1561**

ஊற்றெடுக்கும் வெள்ளம் போல் உவகை பொங்கும்
காற்றடிக்கும் திசை எல்லாம் தமிழ் மணக்க
நாற்று முளைத்தது போல் தமிழ் செழிக்க
தோற்றுவரோ தந்தை செல்வா மீண்டும் இங்கே

# J.A.P. PLUMBING & BASEMENT

**J.ANTON**
**(905) 629-0289**

www.tamilarangam.net


'நிர்ம'லமான மனமொடு செயலுங் கொண்டோன்
அாப்பணம் தன்னுட லுயிர் தமிழுக் கென்றோன்
சொாப்பனத்திலும் இன நினைவே கொண்டோன்
சா்வதேய புகழ்ச் செல்வா சாகா நிலை கொண்டோன்!

# நிர்மா பாஷன்ஸ்

**சேலைகளின் சோலை!**

**1481 GERRARD STREET EAST**
**TORONTO, ONTARIO M4I 2A1**
**TEL: (416) 465-9716**

செய்தி ஒன்று பல தேசம் பரவிச் சென்று
செந்தமிழா் செவிகளிலே நுழைந்த தின்று
முந்தை வினை அகல் எம்மினம் மகிழ
வந்த ஒளிஞாயிறு நம் செல்வா! நன்று!!

# UNIVERSAL TEX

# யூனிவேர்சல் ரெக்ஸ்

**2529 PHARMACY AVENUE, SCARBOROUGH**
**(Finch & Pharmacy)**
**TEL/FAX: (416) 492-7973**

www.tamilarangam.net

நாதனாய் நாம் நினைத்தோம் - நீ
நாளும் எமக் குழைத்தாய் - தேவ
தூதனாய்த் துணை இருந்தாய் - செல்வ
நாயகா! நின் நாமம் வாழ்க!

# Happy Learners Drivers Training School

*Nathan*

2541 Pharmacy Avenue
Scarborough, Ont

Tel: (416) 498-9336
(416) 490-7703
Fax: (416) 490-6461
Cell: 518-4483

தெய்வமாய் வாழ்ந்து ஈழத்
தெருவெலாம் நடந்து மக்கள்
உய்யவே நின்றாய் தமிழன்
உயர்ந்திடச் சேவை செய்தாய்
பையவே நடந்த மேதை
பகுத்தறி வுள்ள சோலை
ஐயனாம் செல்வா நாமம்
ஐயமில்லை! வாழும்! வாழும்!

# FAST ROADWAY AUTO INC

**140 MIDWEST RD, UNIT 25& 26,**
**SCARBOROUGH, ONT. M1P 3B3**

**TEL: (416) 755-9191** **FAX: (416) 755-0990**

www.tamilarangam.net


அரசியல் நடத்திச் சென்றாய்
அமைதியாய் எதிலும் வென்றாய்
உரசியே பார்த்த பல்லோர்
உத்தமன் உன்வழி நின்றார்

# SAMY & SONS
# சாமி அன் சன்ஸ்

**WHOLE SALERS & RETAILERS**

**1884 B KENNEDY ROAD**
**(at Ellesmere)**
**Scarborough, Ontario**
**M1P 2L8**

**Call:**
**Nada or Suntha**
**TEL: (416) 298-1598**
**FAX: (416) 298-2849**



ஈழத்துத் தமிழர் தந்தை
ஆழத்தில் அறிவு சந்தை
காலத்தை வென்று வாழும்
நாத! உன் நாமம் வாழும்!!

DN

# *Daily Needs*

**Convenience & Grocery**

**2543 PHARMACY AVENUE**
**SCARBOROUGH, ON. M1W 2K2**
**(Finch & Pharmacy)**

**TEL: (416) 490-7703**

ஏமாறாது இனத்தைக் காத்தார்
பூமாதேவியின் பெரும் புகழ் பெற்றார்
சீமாட்டியை மணந்த சீமான் செல்வாவை
பாமாலை சூட்டிப் பணிவோம் மகிழ்ந்து

# சீமாட்டி சில்க்

*Textiles and Fancy Goods*
*Wholesale & Retail*

**3415 UNIT A, DIXIE ROAD**
**MISSISSAUGA, ON. L4Y 3X4**
**(High Point Mall)**
**TEL: (905) 206-1882**

www.tamilarangam.net


அதிசக்தி கொண்ட அவர் அகிம்சை காத்தார்
அடுக் கடுக்காய் இடுக்கண்கள் எமக்காய்க் கொண்டார்
சிவசக்தி அருள் எமக்கு மிகையாய் இருக்கும்
செல்வா கனவுகளை கடிதில் நனவாய்க் காண்போம்!

# SRI SAKTHY Jewellery

*Specializing Fine Custom Made Jewellery and Repairs*

**Siva Ramiah Pather**

2525 PHARMACY AVENUE
SCARBOROUGH, ON M1W 2K2
**TEL: (416) 499-4070**
**FAX: (416) 499-6945**

www.tamilarangam.net


காவியமாய் ஓவியமாய் கருங் கல்லில் எழுத் தாகி
தாவிவரும் கன்றணைத்த நல்ல தாயகி நின்ற யோகி
படம்பிடித்து அவர் நினைவை நிலைநிறுத்தி வைக்கின்றோம்!
தடம்புரளா படைகொண்ட தலைவன் தாள் பணிகின்றோம்!!

தந்தை செல்வா அவர்கட்கு
கனேடியத் தமிழர் எடுக்கும் விழா
கவினுற நிகழ்ந்திட
வாழ்த்துவது

# GNANAMS STUDIOS

Professional Photographers
& videographers

**KATHIR SUBRAMANIAM, B.Sc. (Eng)**
**President**

**2425 Eglinton Avenue East, Unit #3**
**Scarborough, Ontario M1K 5G8**
**Bus: (416) 750-8118**
**Res: (416) 285-9477**

www.tamilarangam.net


இன்னல் உறும் தமிழ் அன்னை துயர்
பஞ்சினைப் போல் பறக்க
தன்னேரில் தந்தை செல்வா பெயர்
தரணி தன்னில் நிலைக்க
கண்ணியத் தலைவன் கனடியத் தமிழ் விழா
பெருவிழா என்னும்படி சிறக்க

தந்தை செல்வா அவர்கட்கு
கனேடியத் தமிழர் எடுக்கும் விழா
கவினுற நிகழ்ந்திட
வாழ்த்துவது

SANKAR INTERNATIONAL

• Importers • Wholesalers • Retailers

2425 Eglinton Ave. East, Unit 6
Scarborough, Ontario M1K 5G8

TEL: (416) 759-5100
(416) 759-4916

www.tamilarangam.net

புத்தம் புதுமலர் போல்
பொலிவு மிகுந்த தந்தை
நித்தம் தமிழ் நினைவே
நெஞ்சில் சுமந்த தந்தை

Fancy Florist

**The Indian Wedding Specialists**



**Northtown Plaza**
**3059 Sheridan Dr.**
**Amherst, N.Y. 1426,**
**U.S.A**
**(716) 838-0844**

**Princess Plaza**
**1668 Victoria Park Ave.**
**North York, ON.**
**Canada L3R 6M7**
**(416) 288-1419**

ஈழத்தின் தமிழின் தந்தை
இந்தியக் காந்தி போல
ஆழத்தில் மனதில் உண்மை
ஆயிரம் தெளிவின் தன்மை
வேழத்தின் அசைவு போல
விளைவுகள் நோக்கும் தன்மை
நாளத்தில் நரம்பில் கொண்ட
நாயகன் நாமம் வாழ்க

**SRI VALLI**

**TEXTILES & FANCY**

**1660 Victoria Park Ave.**
**Scarborough, ON.**

**Tel: (416) 285-9412**
**Fax: (416) 285-0896**

www.tamilarangam.net

கலங்கி நின்ற தமிழர் எமக்கு
கலங்கரை விளக்கம் ஆகி நின்ற
துலங்கு புகழ் தூய செல்வா
இலங்கு நாமம் இனிது வாழும்!

தந்தை செல்வா அவர்கட்கு
கனேடியத் தமிழர் எடுக்கும் விழா
கவினுற நிகழ்ந்திட
வாழ்த்துவது

Neelam SILK

மூகூர்த்தப் பட்டுப்படவைகளுக்கு இராசியான இடம்

1453 GERRARD STREET EAST
TORONTO, ONTARIO
**TEL: (416) 778-7455**
**FAX: (416)0 778-8484**

www.tamilarangam.net

அச்சகப் பணிதனில் "விவேகா அச்சகத்தவர்" நாம் அனுபவம் உடையவர்
மெச்சிடு பணியினில் பெறு(ம்) பாராட்டினில் சுகா னுபவம் கொள்பவர்
இச்செக வாழ்வினில் எம்துயர் களையத் "தந்தை செல்வா" அனுதினம் உலைந்தவர்
கச்சிதப் பணியால் அர்ப்பணிப் பினால் கடவுள் நிலைக்கவர் உயர்ந்தவர்!

**தமிழர் மத்தியில் பலவர்ண அச்சுக்கலையில் விவேகம், அதிதிறமை, கவர்ச்சி**

# Viveka PRINTERS

**SPECIALIZING IN 1-4 COLOUR QUALITY PRINTING**

Tel.: (416) 264-2715, 269-1994,
Fax: (416) 269-2135, 264-5595

## விவேகா அச்சகம்

**60 BARBADOS BLVD. # 6, SCARBOROUGH**
**(ON EGLINTON AVENUE BETWEEN McCOWAN & DANFORTH)**

Wedding Cards, Rich Cake Boxes, Memory Cards
பலபலவடிவங்களில், பலவர்ண அச்சு வேலைகள்
(4Colour Printing) அச்சகங்களுக்கு மொத்த விலையில்
செய்து கொடுக்கின்றோம். பரதநாட்டிய அரங்கேற்ற
நிகழ்ச்சி நிரல், Magazine, Flyers மற்றும் சகலவிதமான
Colour வேலைகளை மிகக்குறைந்த விலையில்
அச்சுப்பதிப்பித்துக் கொள்வதற்கு நாடுங்கள்.

திருமண அழைப்பிதழ்கள், பைகள், றிச்கேக் பெட்டிகள், றிச்கேக்குகள் ஒருமித்து ஓடர் செய்பவர்களுக்கு அதிவிசேட கழிவுகளுடன் இலவச இணைப்புக்களும் காத்திருக்கின்றன

**எங்களது ஏனைய சேவைகள்**

*Numbering, Die Cutting, Scoring, Labels, NCR, 19X25 Posters*

*Full Colour Designing, Colour Separation,*
*1-4 Colour Printing*
அனைத்திற்கும் நீங்கள் அங்கும் இங்கும் அலையத்தேவையில்லை.
ஒரே இடத்தில் நாங்களாவே செய்து தருகின்றோம்.

## SHANKAR PRINT

(PRINTING DIVISION OF BABA PUBLICATIONS INC.)

## சங்கர் அச்சகம்

கவர்ச்சிமிகு அச்சுத் தேவைகள் அனைத்தையும்
பூர்த்தி செய்ய நாடுங்கள்

**60 BARBADOS BLVD. # 6, SCARBOROUGH**
**(ON EGLINTON AVENUE BETWEEN McCOWAN & DANFORTH)**




**Tel.: (416) 264-2715, 269-1994, Fax: (416) 269-2135, 264-5595**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதருள் மாணிக்கம் என திகழ்ந்தான்
இனிவரும் பகையெல்லாம் துச்சம் என்றான்
கனிமொழி கற்கண்டு தமிழே என்றான்
பனியிலும் மென்மொழி தனையே பகர்ந்தவன்

# Tea Time

**24 HOURS COFFE, TEA & DONUTS**

*Tea Time is all the time!*

**HUMBERVIEW PLAZA**
**(Kipling & Steeles)**
**5010 STEELES AVENUE WEST**
**TEL: 416-745-0514**

**JANE & FINCH MALL**
**TEL: 416-636-8301**

www.tamilarangam.net

# கனகாம்பிகை தங்க மாளிகை



புன்னகையால் ஈழத்தமிழருக்கு
புத்துயிர் ஊட்டிய
ஈழத்துக் காந்தி செல்வாவின் விழா சிறக்க

பொன்னகையால் வாடிக்கையாளருக்குப்
புதுப்பொலிவு சேர்க்கும்
நாங்களும் வாழ்த்துகின்றோம்

**Kanagambikai Gold House & Textile**

**3160 Eglinton Ave. East, Unit 3, Scarborough, ON. MIJ 2H3**

**Tel: (416) 269-7198**

---

மண்ணுக்குள் புதைந்தால் என்ன
விண்ணுக்குள் மறைந்தால் என்ன
என்னுயிர் தமிழோடும் தமிழனோடும்
என்றுரைத்த செல்வா வாழி !

சுவைமிகு உணவுகளைச் சுத்தமாய் படைத்திடும்



**LUXMY INC.**

**Lawrence Ave. East, Scarborough**

**TEL: (416) 288 - 8177**

www.tamilarangam.net


அன்பு காட்டிய பெருந் தலைவன்
அன்னை தமிழாள் பெரும் புதல்வன்
தந்தை செல்வா தனிப்பெருந் தலைவன்
தமிழர் நாமும் அவரை நினைவோம்

விழா சிறக்க
விநயமுடன் வேண்டுவது

அன்பு ரெக்ஸ்

**Importers & Wholesalers**
**Fashion Textiles & Gift**

**3246 Eglinton Ave. East**
**Scarborough, ON. M1J 2H6**
**(Eglinton &Markham)**

**TEL: (416) 269-5684**
**FAX: (416) 269-0887**



ஆதவன் போல் ஒளி காட்டியவன்
அகிம்சைப் போர் வழி காட்டியவன்
மாதவள் தமிழ் மகள் துயர் களைய
மாதலைவன் செல்வா தனை வாட்டியவன்

*Life Insurance from many companies including*

**Sun Life**

***Mutual Funds, RRSP's & Children Education Plans from***

* Fidelity Investments
* Spectrum United
* Mackenzie Financial
* Trimark

***For sales & service please call:***
**Logan Velumailum, B.Sc.**
***Representative***

**3601 Victoria Park Ave, Suite # 201A**
**Scarborough, Ontario M1W 3Y3**

**Tel: (416) 410 1620**
**Email: logan.sunlife@sympatico.ca**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழம் அமைத்திட

இனத்தை இணைத்தவர்

## தந்தை செல்வா

இல்லம் அமைத்திட

உங்களை அழைப்பவர்

**Neel Surendran**

Sales Representative

**ROYAL LEPAGE**

Royal LePage Real Estare Services Ltd. Broker

**BUS: (416) 560-4728**
**(905) 793-5000**
**RES: (905) 678-7343**
**FAX: (905) 793-5020**

---

கனடா வாழ் தமிழர்கள் ஓரணி திரண்டு

**பெருந்தகை சா.ஜே.வே செல்வநாயகம் அவர்களுக்கு**

எடுக்கும் பெருவிழா
எடுப்பு மிகு திருவிழாவாக
வாழ்த்துவது

## அபிராமி ABBIRAMI CATERING

**TEL: (416) 266-5372**
**RES: (416) 266-6480**
**2619 EGLINTON AVENUE EAST**
**SCARBOROUGH, ONTARIO**

www.tamilarangam.net


மெல்ல மெல்லப் பணி புரிந்த
மேதை செல்வ நாயகம்
சொல்லிய வழியில் செல்வோம்
வெல்வோம் இனிது; வாழ்வோம்

# HAPPY TEXT

*Textiles & Money Transfer*

**Rainbow Village**
**2466 Eglinton Ave, East, Unit 12B**
**Scarborough, Ontario Canada.**
**M1K 5J7**

**TEL: (416) 269-5040**
**(416) 266-1877**
**FAX: (416) 269-5163**



கலைமகள் அவள் தான் கலைகளின் நாயகி
தலைமகன் 'செல்வா' தமிழர் எம் நாயகன்
தமிழராம் எமக்கவர் நம்பிக்கை நாயகம்
தமிழர் நாம் விரைவில் காண்போம் தாயகம்

# கலைமகள் புத்தக நிலையம்

**TORONTO** வில்
**PARLIAMENT & WELLESLEY**
**595 Parliament Street (Five Star** உள்ளே**)**
**TEL: (416) 944-1818**
**FAX: (416) 944-3424**

**MISSISSAUGA** வில்
**2580 Sheppard Ave. #9**
**Newin Centre Mall**
**Mississauga, ON.**
**TEL: (905) 306-0494**

**SCARBOROUGH**வில்
**3850 Finch Ave. East #Go1A**
**Scarborough**
**(Kennedy & Finch)**
**TEL: (416) 292-9319**

www.tamilarangam.net

# இப்போதும் நீதான் கைவிளக்கு..........

ஒன்ராறியோ நுண்கலைக் கூடம்

ONTARIO ACADEMY OF FINE ARTS

1996



Consultant
Mr. K.P. Kanagasabapathy
(Former Principal of Mahajana College)

**1240 Ellesmere Road,**
**Unit #209**
**Scarborough, Ont.**

ஈழத்தின்
ஒவ்வொரு தமிழனுக்கும்,
"உனக்கும்
உயிரும் உரிமையும் உண்டு"
என்றுணர்த்திய முதல் தலைவன் நீ

எமது
உரிமைச் சூரியன்
சூறையாடப்பட்ட உண்மையை
உலகிற்கு
கண்டு பிடித்துச் சொன்னவனும்
நீதான்!

காலை வருடியும்
காலை வாரியும்
வாழப் பழக்கப்பட்ட அரசியலில்
நீ,
விலக்கப்பட்ட வித்தியாசமான மனிதன்!

கிழக்கைத் தேடும்
எம் பயணத்தில்
இப்போதும்
நீதான் கைவிளக்கு!

**ஒன்ராறியோ நுண்கலைக் கூட**
**நிருவாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள்**

**1240, எல்ஸ்மெயர் வீதி**
**அறை இல: 209, ஸ்காபரோ,**
**ஒன்ராறியோ, M1P 2XP கனடா**
**(416) 609 8314**

www.tamilarangam.net

தாழ்வுறு வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டுக் கிடக்கும் இந்தப்
பைந்தமிழ்த் தேசம் தன்னை
வாழ்விக்க வந்த எங்கள்
வண்டமிழ்த் தமிழர் தலைவர்
ஈழத்துக் காந்தி நாமம்
என்றென்றும் வாழும்! வாழும்!

**தெல்லிப்பளை வீமன்காமம்**
**மக்கள் சார்பில்**
**விழா விமரிசையாக நிகழ்ந்தேற**
**வாழ்த்துவது**

# HOPPER HUT

**880 ELLESMERE ROAD. UNIT #215 -217**
**SCARBOROUGH, ON. M1P 2W6**
**TEL: (416) 299-4311**
**FAX: (416) 299-7330**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தந்தை அமரர் செல்வநாயகம் அவர்கள்
தமிழன் அடிமை நோய் களைய வந்த
நன் மருந்து

எம்மை நாடி வருபவர்கள்
நாவினிக்க நாம் தருவது

கிராமத்து விருந்து

**Kiramathoo Virunthoo**

**Restaurant, Take out & Catering**

**603 Kennedy Road, Scarborough, ON.**
**(Kennedy & Eglinton)**

**TEL: (416) 266-4240 TEL: (416) 424-2164**



*With The Best Compliments From*

**VIJAYAN MARKET**

**விஜயன் மார்க்கட்**



சகல இலங்கை, இந்திய உணவு
வகைகளும் பல சரக்கு வகைகளும்
மலிவாக பெற்றுக் கொள்ளலாம்

**3160 Eglinton Ave. East, Scarborough, ON.**
**TEL: (416) 269-6120**

www.tamilarangam.net



# நன்றி மலர்

இந்த மலர் பூப்பதற்கு
நந்தவனம் அமைத்தவர்கள்
சொந்தம் எமக்கென்று
சொன்னால் மிகையில்லை

சென்ற இடமெல்லாம்
சிறப்பான வரவேற்பு
வர்த்தகப் பிரமுகர்கள்
அன்பர்கள் நண்பர்கள்
அண்ணல் விழாவுக்கு
நிதி தந்தார்
நெஞ்சார வாழ்த்தி நின்றார்

கற்றோரும் மற்றோரும்
மாண்புமிகு
இந்த மலருக்கு
ஆக்கங்கள் பல தந்தார்
தந்தையின் நோக்கமதை
தரணிக்குச் சொல்லி வைத்தார்

எழுத்துக்கு
கணனியில் உடல் அமைத்தவர்
தந்தை படத்திற்கு
கணனியில் உயிர் கொடுத்தவர்
இவற்றை ஒன்றிணைத்து
அச்சமைத்தவர்
பூ ஒன்று
பூக்குதென்று பூவுலகுக்கு
சேதி சொல்லி
அறியவைத்தவர்

மணத்தோடு மலர்
முகிழ்க்க வேண்டுமென்று
சீரிய நோக்கதனில்
மொட்டு மலராகி
விரிந்து வரும்வரையும்
முகம் கோணாமல்
குணம் குன்றாமல்
பொறுமை காத்து
பெருமை சேர்த்து
உழைத்த உத்தமத் தொண்டர்கள்

இவர்கள் அனைவரையும்
நெஞ்சம் மிக நிறைந்து
வாஞ்சையுடன் நன்றி சொன்னோம்
மெத்தப் பணிந்து

**மலர்க் குழு**

www.tamilarangam.net


# Eastown

*Restaurants & Banquet Halls*

**பிறந்ததின விழாக்களிலும்,**
**திருமண வைபவங்களிலும்**
**உங்களுக்கு**
**அறுசுவை உணவு அளித்து**
**மகிழ்ந்த**



**Eastown**

**நிறுவனத்தினர்**
**எம் தாயக**
**உணவுகளைத்**
**தினந்தோறும்**
**சுவைத்து**
**இன்புற அழைக்கின்றனர்**






**2648 EGLINTON AVENUE EAST**
**SCARBOROUGH, ONTARIO**
**TEL: (416) 266-3841 / 265-3333**

www.tamilarangam.net



"வீரத்தாலும் தியாகத்தாலும்
விடாமுயற்சியாலும், மக்கள்
அடையும் உன்னத நிலைதான்
சுதந்திரம். விடுதலையடைந்த
ஒவ்வோர் இனத்தின்
சரித்திரத்தையும் ஆராய்ந்தால்,
அவ்வவ்வினம் தம்
மனோதிடத்தினாலேயே
வெற்றியடைந்தது."

- தந்தை செல்வா 14. 04. 1951 திருகோணமலையில்
ஆற்றிய பேருரையிலிருந்து, ஓர் சிறு துளி. -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Cover Design by: digi Graphics & Studios (416) 467 4952
Printed by: Viveka Printers (416) 269 1994